
வண்ணச்சரபம்

தண்டபாணி சுவாமிகளின் படைப்புகள்


ஆய்வுப்பதிப்பு




தொகுதி - 4

அந்தாதி

பகுதி - 3



பதிப்பு
அ. சதீஷ்



வண்ணச்சரபம்

தண்டபாணி சுவாமிகள்

(28.11.1839 – 05.07.1898)

இயற்பெயர்: சங்கரலிங்கம்.

பெற்றோர் : செந்தில்நாயகம் பிள்ளை – பேச்சிமுத்தம்மை.

ஊர் : திருநெல்வேலி நகரம் / சுரண்டை.

இளமைக் கல்வியை திண்ணைப் பள்ளியிலும் சமயக் கல்வியையும் உலகியல் கல்வியையும் சீதாராம நாயுடு என்பவரிடமும் பயின்றார். எட்டு வயது முதலே கவிபுனையும் பயிற்சி பெற்றிருந்தார். அருணகிரிநாதரின் மறுபிறவியாகத் தன்னைக் கருதிக் கொண்டு மிகுதியான சந்தப்பாடல்களை இயற்றினார். தமிழகத்தின் பல்வேறு பகுதிகளுக்கும் பயணம் செய்ததுடன் இலங்கைக்கும் பயணம் செய்து அந்தந்த ஊர்களில் பாடல்கள் இயற்றியுள்ளார்.

அறுவகை இலக்கணம், ஏழாம் இலக்கணம், வண்ணத்தியல்பு ஆகிய மூன்று இலக்கண நூல்களை எழுதியுள்ள சுவாமிகள், பிள்ளைத்தமிழ், கலம்பகம், தூது, அந்தாதி, உலா, சதகம், பதிகம் என்று பிரபந்த வகைகள் பலவற்றிலும் பாடல்களைப் புனைந்துள்ளார். தமிழ்ப் புலவர்கள் வரலாற்றினைத் தொகுத்து புலவர் புராணம் என்னும் நூலை இயற்றியதுடன் தன்னுடைய வரலாற்றையும் குருபரத் தத்துவம் என்னும் நூலாக இயற்றியுள்ளார்.

– தொடர்ச்சி பின் அட்டை மடக்கில்

வண்ணச்சரபம்

தண்டபாணி சுவாமிகளின் படைப்புகள்

ஆய்வுப் பதிப்பு

தொகுதி – 4

அந்தாதி

பகுதி – 3

பதிப்பு
அ. சதீஷ்

வெளியீடு
தாமரை பிரதர்ஸ் மீடியா பிரைவேட் லிமிடெட்
21, 'லட்சுமி' சத்யசாய் நகர்,
மதுரை - 625 003.

தாமரை பிரதர்ஸ்
மீடியா பிரைவேட் லிமிடெட்

தலைப்பு
வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகளின் படைப்புகள் - ஆய்வுப் பதிப்பு

வகை
அந்தாதி

பதிப்பாசிரியர்
அ. சதீஷ்

பதிப்பு
முதல் பதிப்பு: ஆனி, குரோதி, கலி - 5125 / ஜூன் - 2024

அளவு & பக்கங்கள்
B5 (17.6 cm x 25 cm) - 337

ISBN
9789392601804

புத்தக எண்
TB0304

நூல் வடிவமைப்பு
கதிர் & மு.சுந்தரலிங்கம்

அட்டை வடிவமைப்பு
ரெ. கார்த்திகேயன்

ஓவியம்
விஷ்ணு

விலை
ரூ. 460/-

வெளியீடு
தாமரை பிரதர்ஸ் மீடியா பிரைவேட் லிமிடெட்
21, ‘லட்சுமி’, சத்யசாய் நகர்,
மதுரை - 625 003.

தொடர்புக்கு
Toll Free 1800 425 7700 (7:00 am - 7:00 pm)
75500 09565 (whatsapp only)

பதிப்பு உருவாக்கக் குழு

ஆலோசகர்கள்

தவத்திரு குமரகுருபர சுவாமிகள்
தலைவர், சிரவை கௌமார மடாலயம், கோவை.

பேராசிரியர் சு. வேங்கடராமன்
மேனாள் தமிழ்த் துறைத்தலைவர், மதுரை காமராசர் பல்கலைக்கழகம்.

திரு. இரா. கிருஷ்ணமூர்த்தி
இணையாசிரியர், தினமலர்.

திரு. சௌந்திர. சொக்கலிங்கம்
உதவியாசிரியர், தினமலர்.

முனைவர் கி. ஜெயகுமார்
சுவடியியல் அறிஞர்.

பதிப்பாசிரியர்

அ. சதீஷ்

ஆய்வாளர்கள்

ஈ. உமா
மு. சுந்தரலிங்கம்
வே. தமிழரசு
வி. அகிலா

கணினி அச்சு

ச. வாசுகி

நூல் மற்றும் அட்டை வடிவமைப்பு

மு. சுந்தரலிங்கம் - ரெ. கார்த்திகேயன்

பொருளடக்கம்

பதிப்பாளர் உரை

தமிழ் சமய, இலக்கிய, அரசியல் வரலாற்றில் பத்தொன்பதாம் நூற்றாண்டு மிக மிக முக்கியமான காலகட்டம். ஆங்கிலேயர் எழுச்சி, தீவிரமான மதமாற்றம், சமயவாதிகளின் கருத்துப் போர், அடுத்தடுத்து ஏற்பட்ட பஞ்சங்கள், கடும் வறுமை, அறத்தின் வீழ்ச்சி, தமிழை விட வடமொழியே உயர்ந்தது என்ற ஒரு தரப்பினரின் செல்வாக்கான தொடர் பிரசாரம், பழைய வாழ்க்கை முறை முற்றிலும் மறைந்து புதிய வாழ்க்கை முறை தோன்றியமை எனப் பல பிரச்னைகள் சமூகத்தை ஆட்டிப் படைத்துக் கொண்டிருந்தன.

அச்சுக் கருவி கண்டுபிடிக்கப்பட்டு அது பயன்பாட்டுக்கு வந்தபின், கிழக்கிந்திய கம்பெனி மூலம், கிறிஸ்தவ மிஷனரிகள் நூல்கள் வெளியிட்டு வந்தனர். 1835ம் ஆண்டுதான் சுதேசிகளும் அச்சகங்கள் அமைத்து நூல்களை அச்சிடலாம் என அனுமதி அளிக்கப்பட்டது. அதன்பின் ஏற்பட்ட மாற்றங்கள், தமிழ்ச் சமூகத்தையே புரட்டிப் போட்டன. நூல்கள், துண்டுப் பிரசுரங்கள், வெளியீடுகள் மூலம் மக்களிடையே விழிப்புணர்வு தோன்றியது.

இக்காலகட்டத்தில், ஆறுமுக நாவலர் (1822 - 1879), மகாவித்வான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை (1815 - 1876), வள்ளல் இராமலிங்க அடிகள் (1823 - 1874), சூளை சோமசுந்தர நாயகர் (1846 - 1901), வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் (1839 - 1898) ஆகிய ஐந்து ஆளுமைகள் தோன்றி, சமூகத்தின் போக்கையே மாற்றினர்.

ஆறுமுக நாவலர், கிறிஸ்தவ மிஷனரிகளோடு இருந்து கல்வி பயின்றதாலும் அவர்களுடன் பணியாற்றியதாலும் சமகாலப் பிரச்னையான மதமாற்றத்தை எப்படித் தடுப்பது என்பதை அவர்களிடமிருந்தே கற்றுக் கொண்டார். அதோடு பள்ளிகள் நிறுவி பொதுக்கல்வியையும் சைவ சமயக் கல்வியையும் பரப்பும் தொண்டிலும் ஈடுபட்டார். இவரது தொண்டு சமூகம் மற்றும் சைவ சமய நோக்கில் அமைந்தது.

'பத்து கம்பர்' எனப் போற்றப்பட்ட மகாவித்வான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை, புலவர்கள் பலரை உருவாக்கினார். அவர்களில் சிறந்தோராக, தியாகராசச் செட்டியார், தமிழ்த் தாத்தா உ.வே.சாமிநாதையர்

உள்ளிட்டோர் வெளிப்பட்டனர். சமகாலத் தமிழ்க் கல்வி உலகையும் இவர்கள் இயக்கினர். இவர்கள் மூலம் தமிழ் இலக்கிய உலகம் புத்தெழுச்சி பெற்றது. பிள்ளையின் தொண்டு தமிழ் இலக்கிய உலகத்தில் அமைந்தது.

வள்ளல் இராமலிங்க அடிகள், ஜீவகாருண்யம், சோதி வழிபாடு ஆகியவற்றைப் பரப்பினார். தமது 6ம் திருமுறைப் பாடல்கள் மூலம், புனித நூல்கள், சமயக் கட்டமைப்புகள், உருவ வழிபாடு ஆகியவற்றின் மீது விமர்சன பூர்வமான கருத்துகளை முன்வைத்தார். அவை பெரும் விவாதத்தை உருவாக்கின. அவற்றின் தாக்கம் இன்றளவும் தொடர்கிறது. இவரது தொண்டு, சமூகம் மற்றும் ஆன்மிக நோக்கில் அமைந்தது.

சூளை சோமசுந்தர நாயகர், சமய உலகில் ஒப்பற்ற சிங்கமாகத் திகழ்ந்தார். தமிழகம் முழுவதும் பல சைவ சபைகளை உருவாக்கியதும், நால்வர் குருபூஜைகளைக் கொண்டாடியதும் அவற்றின் மூலம் சைவ சமய உலகம் புத்தெழுச்சியை அடைந்ததும் இவரது பெருந்தொண்டுகள். இவரது மாணவரான மறைமலையடிகள் பிற்காலத்தில் தனித்தமிழ் இயக்கம் உருவாக்கியதற்கு இவரது கருத்துகளே அடிப்படையாக அமைந்தன. இவரது தொண்டு சைவ சமய உலகில் அமைந்தது.

இவர்களின் சமகாலத்தவரான வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள், இவர்களை விட வேறுபட்டு சிந்தித்து சமூகத் தொண்டாற்றினார். இவர் ஆங்கிலக் கல்வி பெறவில்லை. இவருக்கு ஆங்கில நாகரிகப்படி அமைந்த கல்வி நிறுவனங்களோடு தொடர்பில்லை. அரசு அதிகாரிகளோடு பழக்கமில்லை. ஆயினும் தனது முற்போக்கு கருத்துகளை மேற்கண்ட நான்கு பேரை விட ஆணித்தரமாக முன்வைத்தார்.

வறுமையாலும் பஞ்சத்தாலும் ஏற்பட்ட பொருளாதாரச் சிக்கல் அறத்தின் வீழ்ச்சிக்கு வழிவகுத்ததைக் கண்ட சுவாமிகள், ஜீவகாருண்யத்தையும் வாழ்வியல் அறத்தையும் தொடர்ந்து வலியுறுத்தி வந்தார்.

சுவாமிகள் தமிழ் இலக்கிய உலகில் வேறு எவரும் அதுவரை செய்திராத புதிய நூல்களைப் படைத்தார்.

1. ஆங்கிலேயரின் கொடூர ஆட்சியை எதிர்த்து 100 பாடல்கள் கொண்ட 'ஆங்கிலியர் அந்தாதி' என்ற நூலைப் பாடினார். அதில், ஆங்கிலேயர், எவ்வளவு கொடுமையானவர்கள், அவர்களால் மக்கள்

படும் துயரங்கள் என்ன என்பதை விவரித்திருப்பார். அவர்களை அழிப்பதை மட்டுமே வரமாகத் தர வேண்டும் என இறைவனிடம் கேட்டார். அதேபோல் ஒரு கீர்த்தனையையும் பாடினார்

2. வாய்மொழிக் கதைகளின் அடிப்படையில், புலவர்களின் வரலாறு களைத் தொகுத்து, 'புலவர் புராணம்' பாடினார்

3. அறுவகை இலக்கணம், ஏழாம் இலக்கணம், வண்ணத்தியல்பு ஆகிய மூன்று இலக்கண நூல்களை இயற்றினார்

4. பல்வேறு புதுமைக் கவிகளை - குறிப்பாக - எண்கூற்றிருக்கை, ஒன்பது கூற்றிருக்கை, தசாங்கக் கூற்றிருக்கை - பாடினார்

5. தமிழின் உயர்வை நிருபிப்பதற்காகவே, 'தமிழ் அலங்காரம்' பாடினார்

6. கௌமார நெறிக்கு உரிய நூல்களை எழுதினார்

7. தன் வரலாறாக, 'குருபரதத்துவம்' என்ற நூல் பாடினார்

8. சமகாலத்திற்கேற்ப, அரசியல் கருத்துகளைப் பதிவு செய்யும் 'அரசாட்சி' என்ற நூலை எழுதினார்

9. திருக்குறள் அடிப்படையில் வாழ்வியல் அமைய வேண்டும் என்ற எண்ணத்தில், 'மனுநெறித் திருநூல்' இயற்றினார்

10. ஆயிரம் பாடல்களாகக் கொண்ட நூல்கள் இயற்றினார்

11. தேவார மூவருக்குப் பின் அதிகளவில் தலங்களைத் தரிசித்து பாடல்கள் பாடினார்

அதேபோல் வேறு எவரும் பேசியிராத கருத்துகளையும் சமகால நிகழ்வுகளின் மீதான விமர்சனங்களையும் தம் நூல்களில் பதிவு செய்தார்.

1. உயிர்ப்பலி இடப்படும் வேத வேள்விகளை மிகமிகக் கடுமையாக எதிர்த்தார்

2. எத்தகைய மகான்களாக இருந்தாலும் விமர்சன நோக்கோடு அவர்களின் வாழ்க்கை வரலாற்றில் கேள்விகள் எழுப்பினார் (புலவர் புராணம்)

3. வண்ணம் எனப்படும் சந்தப் பாடல்களில் வடமொழி கலந்தால் அதன் இனிமை குன்றும் எனவும் வடமொழி கலந்திடாத தமிழ் எனவும் முதன்முதலில் தனித்தமிழ் பற்றிப் பேசினார்

4. வைணவர்களின் தென்கலை, வடகலை இடையிலான மோதல்களைப் பதிவு செய்து அவை வேண்டாம் என வெளிப்படையாகக் கூறினார்

5. தமிழ்ப் புலவர்கள் வெறும் அறிவாளிகளாக மட்டும் நின்றுவிடாமல் உபாசனை மூலம் தெய்வ சக்திகளையும் பெற வேண்டும் என்று வலியுறுத்தினார்

6. புதிய இலக்கண நூல்களில் பழமையைப் போற்றியதோடு காலத்திற்கு ஏற்ற வகையில் புதிய கருத்துகளையும் பதிவு செய்தார்

இவரது பாடல்கள் மொத்தம் 49 ஆயிரத்திற்கும் மேற்பட்டவை. கடந்த நூற்றாண்டில், அவற்றில் சில நூல்களே அச்சாகியுள்ளன. மீதமுள்ளவற்றை திருத்தமான பாடத்துடன் கூடிய ஆய்வுப் பதிப்பாக கொண்டு வரும் திட்டம், கடந்த 2019ம் ஆண்டு தொடங்கப்பட்டது.

அதன் முதற்கட்டமாக சென்னை தரமணியில் இயங்கிவரும் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனமும் கோவை சிரவணபுரம் கௌமார மடாலயமும் இணைந்து, சுவாமிகள் எழுதிய பிள்ளைத்தமிழ் இலக்கியங்களை முதல் தொகுதியாகவும், கலம்பகங்களை இரண்டாவது தொகுதியாகவும் வெளியிட்டன.

அதையடுத்து இத்திட்டத்தில், 'தாமரை பிரதர்ஸ் மீடியா பிரைவேட் லிமிடெட்' நிறுவனம் மிக்க மகிழ்ச்சியுடன் ஈடுபட்டுள்ளது. இந்நிறுவனம் வாயிலாக, சுவாமிகளின் அந்தாதி நூல்கள் திரட்டப்பட்டு 4வது தொகுதி வெளியாகிறது. இந்த நான்காவது தொகுதியில் 5 பகுதிகள் அடங்கியுள்ளது. ஐந்து பகுதிகளில் 57 அந்தாதி நூல்கள் வெளியிடப்படுகின்றன. இதனைத் தமிழன்னைக்கு செய்யும் பெருந்தொண்டாகவும் இந்நிறுவனம் கருதுகிறது.

இந்நிறுவனம் மூலம், வண்ணச்சரபம் சுவாமிகளின் நூல்களை வெளிக் கொண்டு வர நிதியுதவி அளித்த புண்ணியச் செல்வர்கள்:

1. இரா. ஸ்ரீநிவாஸன், தினமலர்
2. ஸ்ரீவித்யா கி. அர்ஜுன், சென்னை
3. அ. ஸுந்தரம் ஐயர், சென்னை
4. ஸு. ஸ்வாமிநாதன், சென்னை
5. ஆ. லட்சுமிபதி, தினமலர்
6. ஹேமா ராமசுப்பு, சென்னை

7. ல. ஆதிமூலம், தினமலர்

8. செந்தூர்வேலன், ஜி.எம்.எஸ் கன்ஸ்ட்ரக்ஷன்

9. டாக்டர். பொன்ராஜ் ஷண்முகநாதன், சென்னை

10. ஓம் எனர்ஜி மேனேஜ்மென்ட் ஸிஸ்டம்ஸ்

11. டாக்டர். தி. பெருங்கோ, சென்னை

12. இரா. கிருஷ்ணமூர்த்தி, தினமலர்

தமிழுக்கும் சமயத்திற்கும் இவர்கள் செய்துள்ள இந்த ஒப்பற்ற தொண்டு, உலகம் முழுவதும் பரந்து வாழும் தமிழ்ச் சமூகத்தால் போற்றப்பட வேண்டிய ஒன்று. தமிழ் உள்ளளவும் இவர்களின் பெயர்களும் இந்தத் தொண்டும் நிலைத்து நிற்கும் என்பதில் ஐயமில்லை.

தமிழ் அறிஞர்களும், ஆய்வாளர்களும், இலக்கண வல்லார்களும் வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகளின் இந்நூல்களைப் பயன்படுத்தி பலகட்ட ஆய்வுகளை வெளிக்கொணர வேண்டும். அதன்மூலம் 19ம் நூற்றாண்டில் தமிழ்ச் சமூகத்தின் வாழ்வியல் தொடர்பான ஆய்வுகளில் மேலும் புதிய வெளிச்சத்தைப் பாய்ச்ச முடியும் என நம்புகிறோம். நன்றி!

தாமரை பிரதர்ஸ் மீடியா பிரைவேட் லிமிடெட்

பதிப்புரை

பத்தொன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்த பெரும்புலமையாளர்களில் ஒருவர் வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள். இலக்கியம், இலக்கணம், சமயம், தத்துவம் முதலிய பல துறைகளில் அழுத்தமான பங்களிப்பினை நிகழ்த்தியுள்ளார். இவர்தம் படைப்புகளில் சில, இவர் வாழ்ந்த காலத்திலேயே அச்சு வாகனம் ஏறின. காகிதங்கள் மிகுதியான புழக்கத்திற்கு வந்திருந்த பொழுதும் இறுதிவரை ஓலைச்சுவடிகளிலேயே தம் படைப்புகளைப் பதிவு செய்துள்ளார். தம்முடைய காலத்தில் நிலவிய இலக்கிய வகைமைகள் அனைத்திலும் பாடல்களைப் புனைந்துள்ளதுடன் பழங்காலத்தில் நிலவிய அரிதான சில இலக்கிய வகைகளிலும் பாடல்களைப் புனைந்துள்ளார். யாப்பும், இசையும், பொருளும் இவரது பாடல்களில் இழைகின்றன. நுட்பமான, அரிதான யாப்பு வடிவங்களை மீட்டெடுத்து கவிபுனைந்துள்ளதுடன் தமக்கு முந்தைய அறிவு மரபுகள் அனைத்தையும் ஆவணப்படுத்தவேண்டும் என்ற வரலாற்று ஓர்மையுடனும் செயல்பட்டுள்ளார்.

தண்டபாணி சுவாமிகளின் படைப்புகளில் அறுவகை இலக்கணம், புலவர் புராணம் முதலான சில நூல்களே மீண்டும் மீண்டும் அச்சாகியுள்ளன. பல நூல்கள் ஒருமுறை மட்டுமே அச்சாகியுள்ளன. இவ்வாறு அச்சான நூல்களில் சில தற்பொழுது எங்குமே கிடைக்காத நிலையிலுமுள்ளன. இன்னும் பல்லாயிரக்கணக்கான பாடல்கள் பதிப்பிக்கப்படாமல் ஓலைச்சுவடிகளிலேயே உள்ளன. இதுவரை அச்சாகாத படைப்புகளைப் பதிப்பிக்க வேண்டும் என்பதுடன் அச்சான படைப்புகளையும் சுவடியுடன் ஒப்பு நோக்கித் திருத்தமான பாடத்துடன் கூடிய ஆய்வுப் பதிப்பு கொண்டு வரவேண்டியது அவசியமான பணியாகிறது. அச்சான படைப்புகள் பலவும் பல்வேறு சிக்கல் நிறைந்தனவாக உள்ளன. மூலத்திற்கு நெருக்கமான பதிப்புகளாக அவைகள் அமையவில்லை.

இந்நிலையில் தற்பொழுது கிடைக்கும் தண்டபாணி சுவாமிகள் படைப்புகள் அனைத்தும் (சில சுவடிகள் நீங்கலாக) அவர்தம் கைப்பட எழுதிய ஓலைச்சுவடிகளில் உள்ளன. இச்சுவடிகள் கோவை கௌமார மடாலயத்திலும் திருவாமாத்தூர் கௌமார மடாலயத்திலும் முறையாகப் பாதுகாக்கப்படுகின்றன. ஆசிரியர் எழுதிய மூலச்சுவடியே கிடைத்துள்ளது. இச்சுவடி எழுதி முடிக்கப்பட்ட பின்னர் மீண்டும் இவரால் சில

திருத்தங்களும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. எனவே இவரது படைப்புகளுக்குப் பாடவேறுபாடுகள் கிடையாது. என்றாலும் சுவடியை வாசித்தவர்களிடையே சிற்சில மாறுபாடுகள் உருவாகியுள்ளன. சந்தி பிரித்துப் பல படைப்புகள் பதிப்பிக்கப்பட்டுள்ளன. அவற்றுள்ளும் ஒரு சீரான முறையியல் பின்பற்றப்படவில்லை.

பதிப்பு முறையியல்கள்

ஒரு படைப்புக்கு ஒன்றுக்கும் மேற்பட்ட முறையியல்களில் பதிப்புகள் வரவேண்டியது அவசியமாகும். எந்தவொரு பதிப்பும் தற்காலிகத் தன்மை கொண்டவை என்பதோடு பதிப்பாசிரியரின் புலமைப் பின்புலச் சார்பும் கொண்டவை என்பதைக் கவனத்தில் கொள்ளவேண்டியுள்ளது.

தமிழ்ப் பயில்வு மரபில் நிகழ்ந்த சில விவாதங்கள் மரபான பயில்வுமுறையில் சில மாற்றங்களை உருவாக்கின. குறிப்பாகச் சந்தி பிரிக்காமலும் சீர் முதலிய யாப்பமைதி குன்றாமலும் அமைந்த பதிப்புகள் வெளியாகின. இப்பதிப்புகள் இசை ஒழுங்கு கொண்டவை என்பதோடு நினைவில் நிறுத்துவதற்கு எளிதானவை. மற்றொருபுறம் பொருள் புரிதலுக்கு எளிதாகச் சந்தி பிரித்த பதிப்புகள் வெளியாகின. இரண்டும் இரு வேறு வாசகத் தளத்திற்கானவை என்பதாக அடையாளப்படுத்தப்பட்டன. நவீனக் கல்வி பொருளுக்கு மட்டுமே முதன்மை அளித்தது. எனவே சந்தி பிரித்த பதிப்புகளே வாசகருக்கு எளிமையானவை என்னும் கருத்து முதன்மைப்பட்டது. இதனால் பழம்பனுவல்களை அவற்றின் மூல வடிவில் புரிந்துகொள்ளும் பயிற்சி தமிழ் மாணவர்களுக்குக் கிடைக்கும் வாய்ப்பு அருகிவிட்டது.

காலனிய ஆட்சியிலிருந்து விடுதலை அடைந்த அனைத்து நாடுகளும் தங்களுக்கான கல்வி மரபுகளை விவாதித்து முன்னெடுக்க வேண்டியதன் அவசியம் இன்று உருவாகியுள்ளது. நமது பாரம்பரிய மரபில் உள்ள அனைத்து அறிவுமரபுகளையும் மீட்டு எடுக்க வேண்டியது அவசியமான பணியாகிறது.

இச்சூழலில் பத்தொன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்த தண்டபாணி சுவாமிகளின் படைப்புகள் மரபான பழம் பண்பாட்டுச் சூழலின் அறிவு மரபுகளைத் தாங்கி நிற்கும் படைப்புகள் ஆகும். அச்சு ஊடகம் விரைவாகப் பரவத் தொடங்கிய காலத்தில், காகிதம் புழக்கத்தில் வந்துவிட்ட காலத்தில், தம் படைப்புகள் தம் காலத்திலேயே அச்சு வாகனம் ஏறிய பொழுதும் ஓலை என்னும் ஆற்றல் வாய்ந்த ஊடகத்தையே இறுதிவரை பயன்படுத்திய பண்பாட்டுத் தொடர்பாளராகத் தண்டபாணி சுவாமிகள் விளங்குகின்றார்.

இவரது படைப்புகள் பல்வேறு அடுக்கு நிலைகளில் அமைந்துள்ளன. மிகக் கடினமான சந்தத்தில் அமைந்துள்ளது போன்றே மிக எளிமையான நடையிலும் அமைந்துள்ளன. இவரது படைப்புகளை வெவ்வேறு பதிப்பு முறைகளில் வெளியிட முடியும். குறிப்பாகச் சந்தி பிரித்துப் பதிப்பித்தல், உரை எழுதிப் பதிப்பித்தல், வரலாற்றுக் குறிப்புகள் கொடுத்துப் பிற நூல்களோடு ஒப்பு நோக்கிப் பதிப்பித்தல், ஒரு நூலுக்குள்ளேயே சந்தி பிரிக்காமலும் சந்தி பிரித்தும் பதிப்பித்தல் என்று பல்வேறு பதிப்புகளைக் கொண்டுவர வேண்டியுள்ளது.

இவற்றுக்கெல்லாம் அடிப்படையாகச் சுவடியை மூலமாகக் கொண்டு உருவாக்கப்பட்ட திருத்தப் பதிப்பு வெளிவர வேண்டியது முதன்மையான பணியாகும். இந்த அடிப்படையான பதிப்பைக் கொண்டு வெவ்வேறு வடிவங்களில் வெவ்வேறு முறையியல்களில் பலப்பல பதிப்புகளைக் கொண்டுவர முடியும். அந்த அடிப்படையில் தண்டபாணி சுவாமிகள் கைப்பட எழுதிய சுவடிகளில் இருந்து இவரது படைப்புகளை முறையாகப் பதிப்பித்து வெளியிடும் நோக்கில் இத்திட்டம் தொடங்கப்பட்டது.

முந்தைய பதிப்பு முயற்சிகள்

இதுவரை அச்சான தண்டபாணி சுவாமிகளின் படைப்புகளைத் தொகுத்தும் ஓலைச்சுவடிகளில் இருந்தவற்றை கௌமார ஆதீனப் புலவர் கிருஷ்ணய்யர் அவர்கள் பிரதி செய்து வைத்திருந்த கையெழுத்துப் பிரதியைக் கொண்டும் தட்டச்சு செய்யப்பட்டது. அவைகள் பெரும்பாலும் சந்தி பிரிக்கப்பட்டு இருந்ததன் காரணமாகவும் யாப்பு இயைபு இல்லாமல் இருந்ததாலும் அவற்றை மூலச்சுவடியைக் கொண்டு ஒப்பு நோக்கி இப்பதிப்பு அமைக்கப்பட்டது. இதன் காரணமாக அதிக காலமும் கடும் உழைப்பும் இதற்குத் தேவைப்பட்டது. அச்சாகாத, கையெழுத்துப் பிரதி இல்லாத படைப்புகள் மூலச் சுவடியிலிருந்து நேரடியாகவே எழுதப்பட்டதுடன் மீண்டும் மீண்டும் மூலச்சுவடியுடன் ஒப்பு நோக்கப்பட்டன. இவற்றின் காரணமாகச் சுவடி வாசிப்பில் இயல்பாக நேரும் பிழைகள் பெருமளவு குறைந்தன. யாப்பு நோக்கி அமைக்கும் போது பிழைகள் சரிசெய்யப்பட்டன. இதன் காரணமாகத்தான் ஆதாரப் பதிப்பு அல்லது மூலப்பதிப்பு என்பது சீர் முதலிய யாப்பமைதியோடு கூடிய பதிப்பாக அமைவதே சிறந்த பதிப்பாகிறது. இதிலிருந்து அடுத்த கட்ட பதிப்புகளுக்குச் செல்லலாம். எனவே பின்னர் வெளிவரவுள்ள பல்வேறு வகையான பதிப்புகளுக்கான மூலப் பதிப்பாக இதனைக் கொண்டுவர வேண்டும் என்று திட்டமிடப்பட்டு இப்பதிப்பு கொண்டுவரப்படுகிறது.

தண்டபாணி சுவாமிகள் இலக்கணம், இலக்கியம், சமயம், தத்துவம், உரை எனப் பல தளங்களில் படைப்புகளை உருவாக்கியுள்ளதால் இவரது பாடல்களின் தொகையை அறுதியிட்டுக் கூற இயலாத சூழல் உருவாகியுள்ளது. இவரது பாடல்களின் தொகையைக் கூறிய அனைத்து அட்டவணைகளும் முன்முயற்சிகளும் போதாமை நிறைந்தவையாகவே உள்ளன. சுவடிகளில் சில தவறியமை, சுவடிகள் இடம்பெயர்ந்தமை, சுருள் வடிவச் சுவடிகளில் (ஓரிரு ஓலைகள்) சில இன்னும் வாசிக்கப்படாமை ஆகிய காரணங்களால் இப்பணி முழுமை அடையவில்லை. இப்பதிப்பு வரிசை நிறைவடையும் பொழுதே இவரது பாடல்களின் தொகையைத் துல்லியமாகக் கூறமுடியும்.

தண்டபாணி சுவாமிகள் தமிழகம் முழுவதும் பயணம் செய்துள்ளார். பல்வேறு ஊர்களில் உள்ள கடவுளர்கள் மீது பாடல் புனைந்துள்ளார். சில ஊர்களில் மிகுதியான பாடல்களும் சில ஊர்களில் குறைவான பாடல்களும் பாடியுள்ளார். ஊரோடு தொடர்பு இல்லாத பொதுநூல்கள் பலவும் பாடியுள்ளார். எனவே ஊர்ப்பெயர் அடிப்படையிலான பதிப்பு என்பது சரியான முறையியலில் அமையவில்லை. மேலும் கால வரிசையிலான பதிப்பும் இவரது படைப்புகளுக்கு சாத்தியமில்லை. சில முதன்மையான நூல்களை மட்டும் இவை முன், பின் என அறியமுடிகிறதே அன்றி அனைத்து நூல்களுக்கும் கால வரிசை அமைக்க முடிவதில்லை. இதன் காரணமாக இலக்கிய வகைமை அடிப்படையில் - பிள்ளைத்தமிழ், கலம்பகம், தூது, அந்தாதி, கோவை, மாலை, அலங்காரம், சதகம், பதிகம், இலக்கணம், புராணம், நீதிநூல் என - இவரது படைப்புகளை வெளியிடலாம் என முடிவு செய்யப்பட்டது.

அந்த அடிப்படையில் தண்டபாணி சுவாமிகள் இயற்றிய ஐந்து பிள்ளைத்தமிழ் நூல்கள் முதல் தொகுதியாகவும் ஆறு கலம்பக நூல்கள் இரண்டாம் தொகுதியாகவும் 2019ஆம் ஆண்டு உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் வழி பதிப்பிக்கப்பட்டன. மூன்றாம் தொகுதியில் ஐந்து கோவை நூல்கள் பதிப்பிக்கப்பட்டன. இந்நூலினை தாமரை பிரதர்ஸ் மீடியா பிரைவேட் லிமிடெட் வெளியிட்டது. இந்த நான்காம் தொகுதியில் தண்டபாணி சுவாமிகள் இயற்றிய அந்தாதி நூல்கள் இடம்பெறுகின்றன.

அந்தாதி

அந்தாதி என்பது அந்தம், ஆதி ஆகிய இரு சொற்களால் ஆன வடமொழித் தொடர் ஆகும். இத்தொடரில் உள்ள அந்தம் என்பது “முடிவு”

என்றும் ஆதி என்பது "முதல்" என்றும் பொருள்படும். ஒரு பாடலின் ஈற்றிலுள்ள எழுத்தோ, அசையோ, சீரோ, அடியோ அடுத்த பாடற்கண் முதலாக அமையப் பாடுவது அந்தாதித் தொடை எனப்படும். நூல் முழுமையும் இம்முறை கையாளப்பட்டிருக்குமானால் அது அந்தாதி என்னும் நூல் வகையைச் சாரும். வெண்பா அல்லது கட்டளைக் கலித்துறைச் செய்யுட்கள் நூறு அந்தாதித் தொடையில் பாடப் பெறுவது அந்தாதி இலக்கிய வகையின் பொது இலக்கணமாகும்.

சங்க இலக்கியத்தில் பதிற்றுப்பத்தின் நான்காம் பத்திலும் ஐங்குறுநூற்றின் தொண்டிப்பத்திலும் அந்தாதி அமைப்பைக் காண முடிகிறது. சிலப்பதிகாரத்தின் இந்திரவிழவூரெடுத்த காதையில் அந்தாதித் தொடை அமைந்துள்ளது. பக்தி இலக்கியங்கள், அந்தாதியை ஓர் தனி இலக்கியமாக வளர்ச்சியடையச் செய்தன. சைவத்தில் காலத்தால் முற்பட்டவராக விளங்கும் காரைக்கால் அம்மையார் அற்புதத் திருவந்தாதியையும், முதலாழ்வார்களான பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார் ஆகிய மூவரும் அந்தாதி நூலைப் பாடியுள்ளனர். பாட்டியல் நூல்கள் பல்வேறு சிற்றிலக்கிய வகைகளைக் குறிப்பிட்டு இலக்கணம் வகுத்தபோதும், அந்தாதி சிறப்பிடம் பெற்றுள்ளது.

சுவாமிகள் எழுதிய இலக்கிய வகையில் பதிகத்தினை அடுத்து மிகுதியாக அமைந்தவை அந்தாதி என்னும் இலக்கிய வகையாகும். இவர் எழுதியதில் தற்பொழுது ஐம்பத்தேழு அந்தாதி நூல்கள் கிடைக்கின்றன. தமிழ் இலக்கிய மரபில் இவ்வளவு அந்தாதி நூல்களை இயற்றியவர் இவர் ஒருவராகத்தான் இருக்க முடியும். இவரியற்றிய ஐம்பத்தேழு அந்தாதிகளையும் பொருண்மை அடிப்படையில்,

- முருகன் தொடர்பானவை
- சிவன் தொடர்பானவை
- திருமால் தொடர்பானவை
- பொதுவானவை

எனப் பாகுபடுத்தி இதில் முருகன் தொடர்பான இருபத்தி நான்கு அந்தாதிகளை இரண்டு பகுதிகளாகவும் ஏனையவை ஒவ்வொரு பகுதியாகவும் அமைத்து, ஐம்பத்தேழு அந்தாதி நூல்கள் அடங்கிய நான்காம் தொகுதி ஐந்து பகுதிகளாக வெளியிடப்படுகின்றன.

இந்த நூலில்...

நான்காம் தொகுதியின் இம்மூன்றாம் பகுதியில் சிவன் தொடர்பான 13 அந்தாதி நூல்கள் இடம்பெற்றுள்ளன. அவற்றுள் தில்லை வெண்பாவந்தாதி நூல் வெண்பா யாப்பில் அமைந்துள்ளது.

யமக அந்தாதி வகையில் நெல்லை யமகவந்தாதி, திருவாமாத்தூர் யமகவந்தாதி, திருவானைக்காவியமகவந்தாதி ஆகிய மூன்று நூல்கள் இடம்பெற்றுள்ளன. யமகம் என்பது ஒரு பாடலின் நான்கு அடிகளிலும் முதலடியின் முதற் சீரே ஏனைய மூன்றடிகளுக்கும் முதற் சீராக அமைந்து பொருள் வேறுபடுவது ஆகும்.

திரிபு அமைப்பில் திருச்சிரகிரித் திரிவந்தாதி, திருவாமாத்தூர் திரிவந்தாதி ஆகிய இரண்டு நூல்கள் இடம்பெற்றுள்ளன. பாடலின் நான்கடிகளிலும் முதலெழுத்து மட்டும் திரிந்து (மாறுபட்டு) ஏனைய பலவெழுத்துக்கள் ஒத்து நின்று பொருள் வேறுபட்டு அமைவது திரிவந்தாதி ஆகும்.

பதிற்றுப்பத்தந்தாதி வகைமையில் தில்லைப் பதிற்றுப்பத்தந்தாதி, திருவருணைப் பதிற்றுப்பத்தந்தாதி, வில்லிப்பாக்கம் பதிற்றுப்பத்தந்தாதி, ஆகிய மூன்று நூல்கள் இடம்பெற்றுள்ளன. பத்துப் பத்துப் பாடல்களாக அந்தாதி தொடையில் நூறு பாடல்கள் பாடுவது பதிற்றுப்பத்தந்தாதி ஆகும்.

இதழகலந்தாதி வகையைச் சார்ந்த நெல்லை இதழகலந்தாதி, தில்லை இதழகலந்தாதி ஆகிய இரண்டு நூல்கள் இத்தொகுப்பில் இடம்பெறுகின்றன. இதழ் கூடி வராத எழுத்துக்களைக் கொண்டு அமைவது இதழகல் அந்தாதி ஆகும். இதனை வடமொழியில் நிரோட்டகம் என்று கூறுவர்.

இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ள தில்லைக் கட்டளைக் கலித்துறையந்தாதி கட்டளை கலித்துறை யாப்பில் அமைந்துள்ளது. எழுத்து எண்ணிப் பாடப்பெறும் பா வகை கட்டளைக் கலித்துறையாகும்.

ஏகபாத அமைப்பில் சிவனேகபாதத்தந்தாதி எனும் நூல் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளது. ஒரு பாடலின் நான்கடியிலும் முதலடியும் அடி முழுவதும் இடம்பெற்ற சொற்கள், மற்றைய மூன்று அடிகளிலும் அவ்வாறே இடம்பெற்று அடிதோறும் பொருள் வேறுபடவருவது ஏகபாதம் ஆகும். (நான்கு அடிகளும் ஒரே போன்று வருவது)

25. நெல்லை யமகவந்தாதி

கோவை கௌமார மடாலய சுவடிக் கட்டு எண் 24இல் 15ஆம் ஏடு தொடங்கி 22ஆம் ஏடு வரையான 8 ஏடுகளில் இந்நூல் அமைந்துள்ளது. 40.1 செ.மீ நீளமும் 4.2 செ.மீ அகலமும் கொண்ட ஏடுகளில் எழுதப்பட்டுள்ள இவ்வந்தாதியில் காப்பு மற்றும் நூற்பயன் உட்பட 102 பாடல்கள் இடம்பெற்றுள்ளன.

26. நெல்லையிதழகலந்தாதி

கோவை கௌமார மடாலய சுவடிக் கட்டு எண் 24இல் 22ஆம் ஏடு தொடங்கி 24ஆம் ஏடு வரையான 3 ஏடுகளில் இந்நூல் அமைந்துள்ளது. 40.1 செ.மீ நீளமும் 4.2 செ.மீ அகலமும் கொண்ட ஏடுகளில் எழுதப்பட்டுள்ள இவ்வந்தாதியில் காப்பு மற்றும் நூற்பயன் உட்பட 32 பாடல்கள் இடம்பெற்றுள்ளன.

திருநெல்வேலித் தலத்திற்காகப் பாடப்பட்ட இவ்விரு அந்தாதி நூற்களுமே ஸ்ரீ ஐயம்பேட்டை நெல்லையப்ப முதலியாரவர்கள் குமாரர் சிவகுருநாத மூர்த்திகளால் சென்னையில் ஸ்ரீ ஊ.புஷ்பரதச் செட்டியாரவர்களுடைய கலாரத்நாகரம் என்னும் அச்சுக்கூடத்திற் 1880 (பிரமாதி - பங்குனி) ஆம் ஆண்டு பதிப்பிக்கப்பட்டுள்ளது. இவ்விரண்டு அந்தாதி நூல்களோடு சேர்த்து நெல்லைக் காந்திமதியம்மன் மீது பாடப்பட்ட பதிகம் ஒன்றும் இணைத்துப் பதிப்பிக்கப்பட்டுள்ளது. இந்நூல் சோழவந்தானூர் அருளானந்த சுவாமிகளாதீனம் ஸ்ரீமத் கந்தசாமி சுவாமிகளின் சாத்துகவியுடன் பதிப்பாகியுள்ளது. இப்பதிப்பில் முருகதாச சுவாமிகள், திருப்புகழ் சுவாமிகள் என்னும் அடைமொழிகள் கொடுத்துப் பின்னர் திருநெல்வேலித் தண்டபாணி சுவாமிகள் என்று நூலாசிரியர் பெயர் பதிவு செய்யப்பட்டுள்ளது.

நெல்லை இதழகலந்தாதி, நெல்லை யமகவந்தாதி ஆகிய இரண்டு நூற்களுமே 1880ஆம் ஆண்டிற்கு பிறகு 2018 ஆம் ஆண்டு வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் இயற்றிய நெல்லை இலக்கியங்கள் என்னும் தொகுப்பு நூலில் வெளிவந்துள்ளது. சிரவைக் கௌமார மடாலய வெளியீடாக பதிப்பாகி வந்துள்ள இந்நூலினைப் ப.வெ.நாகராஜன், அ.சதீஷ் ஆகிய இருவரும் சேர்ந்து பதிப்பித்துள்ளனர்.

27. தில்லை வெண்பாவந்தாதி, 28. தில்லைக் கட்டளைக் கலித்துறையந்தாதி, 29. தில்லைப் பதிற்றுப்பத்தந்தாதி

இம்மூன்று அந்தாதி நூல்களும் தில்லைத் திருவாயிரம் என்னும் நூலில் இடம்பெற்றுள்ளன. கோவை கௌமார மடாலயச் சுவடிக்கட்டு எண் 10இல் தில்லைத் திருவாயிரம் முழுமையாக உள்ளது. இச்சுவடி 34.5 செ.மீ நீளமும் 3.5 செ.மீ அகலமும் கொண்டுள்ளது. இதில் வெண்பா அந்தாதி 12ஆம் ஏடு தொடங்கி 21ஆம் ஏடு வரையும், கட்டளைக்கலித்துறையந்தாதி 21ஆம் ஏடு தொடங்கி 33ஆம் ஏடு வரையும், பதிற்றுப்பத்தந்தாதி 33ஆம் ஏடு தொடங்கி 46ஆம் ஏடு வரையும் அமைந்துள்ளன.

தில்லைத் திருவாயிரம் என்னும் நூலில் இம்மூன்று அந்தாதிகளும் அமைந்துள்ளதால் ஒவ்வொரு அந்தாதிக்கும் தனித்தனியான காப்புச் செய்யுளும் நூற்பயன் செய்யுளும் இடம்பெறவில்லை. இதனுள் இடம்பெற்றுள்ள மூன்று அந்தாதி நூல்களுமே 100 பாடல்கள் வீதம் மொத்தம் 300 பாடல்களைக் கொண்டுள்ளன.

தில்லைத் திருவாயிரம் நூலின் முதல் பதிப்பினை, வளவனூர்க் குமாரபுரி மடாலயம் ஸ்ரீமத் சண்முக சுவாமிகளது விருப்பமும் பொய்கைப்பாக்கம் அப்பாசாமி உபாத்தியாயர் முதலான சிலரின் வேண்டுகோளினையும் நிமித்தமாகக் கொண்டு சென்னை ஊ. புஷ்பரதச் செட்டியாரவர்களது கலாரத்நாகர அச்சுக்கூடத்திற் 1888 (சருவதாரி)ஆம் ஆண்டு இந்நூல் பதிப்பிக்கப்பட்டுள்ளது. நூலாசிரியரின் பெயராக முருகதாச சுவாமிகள், திருப்புகழ்ச் சுவாமிகள், ஸ்ரீமத் தண்டபாணி சுவாமிகள் என்று தரப்பட்டுள்ளது.

இந்நூலிற்கு வளவனூர்க் குமாரபுரி மாடாலயம் ஸ்ரீமத் சண்முக சுவாமிகள், சோழவந்தானூர் கிண்ணிமங்கல மடம் ஸ்ரீமத் கந்தசாமி சுவாமிகள், திருவாவடுதுறை ஆதீனந் திருவாமாத்தூர் வாசம் ஸ்ரீமத் சுப்பிரமணியத் தம்பிரான் சுவாமிகள், பொய்கைப்பாக்கம் அப்பாசாமி உபாத்தியாயர், அஷ்டாவதானம் பூவைக் கல்யாண சுந்தர முதலியார், வல்லை சண்முகசுந்தர முதலியார், காஞ்சி நாகலிங்க முதலியார், அரன்வயல் தங்கவேலுப் பிள்ளை, திருமழிசை கந்தசாமி முதலியாரவர்கள் குமாரரும் சொர்க்கபுரம் இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகள் மாணாக்கருமான வடிவேலு முதலியார், ஆயுள் வேதியர் ஆலந்தூர் முத்துசாமி முதலியார் ஆகியோர் தனித்தனியே எழுதிய சாத்துகவிகளுடன் பதிப்பிக்கப் பட்டுள்ளது.

30. தில்லையிதழகலந்தாதி

கோவை கௌமார மடாலய சுவடிக் கட்டு எண் 3இல் 49ஆம் ஏடு தொடங்கி 54ஆம் ஏடு வரையான 6 ஏடுகளில் இந்நூல் அமைந்துள்ளது. 20.5 செ.மீ நீளமும் 3.5 செ.மீ அகலமும் கொண்ட ஏடுகளில் எழுதப்பட்டுள்ள இவ்வந்தாதியில் காப்பு மற்றும் நூற்பயன் உட்பட 32 பாடல்கள் இடம்பெற்றுள்ளன.

தில்லை இதழகலந்தாதி - சந்தக்கலித்துறையந்தாதி - திருவரங்கம் இதழகலந்தாதி ஆகிய மூன்று அந்தாதி நூல்களுடன் பழனி, சென்னை மற்றும் திருவல்லிக்கேணி ஆகிய தலங்களின் மீது பாடப்பட்ட பதிகங்களையும் உடன் சேர்த்து 1880இல் பதிப்பிக்கப்பட்டுள்ளது. இந்நூல் அமரம்பேடு சுப்புராய செட்டியாரவர்களால் ஸ்ரீ ஊ. புஷ்பரதச் செட்டியாரவர்களுடைய கலாரத்நாகரம் என்னும் அச்சுக்கூடத்திற் முதல் பதிப்பாக வெளிவந்துள்ளது. இப்பதிப்பில் முருகதாச சுவாமிகள், திருப்புகழ் சுவாமிகள் என்னும் அடைமொழிகள் கொடுத்துப் பின்னர் திருநெல்வேலித் தண்டபாணி சுவாமிகள் என்று நூல் இயற்றியவரின் பெயர் பதிவு செய்யப்பட்டுள்ளது. இப்பதிப்பிற்கு சோழவந்தானூர் அருளானந்த சுவாமிகளாதீனம் ஸ்ரீமத் கந்தசாமி சுவாமிகள் அவர்கள் சாத்துகவி எழுதியுள்ளார்.

31. திருச்சிரகிரித் திரிவந்தாதி

கோவை கௌமார மடாலய சுவடிக் கட்டு எண் 19இல் 46ஆம் ஏடு தொடங்கி 56ஆம் ஏடு வரையான 11 ஏடுகளில் இந்நூல் அமைந்துள்ளது. 20 செ.மீ நீளமும் 3.5 செ.மீ அகலமும் கொண்ட ஏடுகளில் எழுதப்பட்டுள்ள இவ்வந்தாதியில் காப்பு மற்றும் நூற்பயன் உட்பட 102 பாடல்கள் இடம்பெற்றுள்ளன.

1888 ஆம் ஆண்டு திரிசிரபுரம் பா.சி.முருகேச முதலியார் மற்றும் மதுரை ஜில்லா இருளைப் பிள்ளை ஆகிய இருவரும் இணைந்து இந்நூலினை பதிப்பித்துள்ளனர்.

32. திருவாமாத்தூர் திரிவந்தாதி

கோவை கௌமார மடாலய சுவடிக் கட்டு எண் 46இல் 11ஆம் ஏடு தொடங்கி 21ஆம் ஏடு வரையான 11 ஏடுகளில் இந்நூல் அமைந்துள்ளது. 41 செ.மீ நீளமும் 3.4 செ.மீ அகலமும் கொண்ட ஏடுகளில் எழுதப்பட்டுள்ள

இவ்வந்தாதியில் காப்பு மற்றும் நூற்பயன் உட்பட 104 பாடல்கள் இடம்பெற்றுள்ளன.

இந்நூல் இதுவரையிலும் பதிப்பானதாக அறியமுடியவில்லை.

33. திருவாமாத்தூர் யமகவந்தாதி

கோவை கௌமார மடாலய சுவடிக் கட்டு எண் 46இல் 1ஆம் ஏடு தொடங்கி 10ஆம் ஏடு வரையான 10 ஏடுகளில் இந்நூல் அமைந்துள்ளது. 41 செ.மீ நீளமும் 3.4 செ.மீ அகலமும் கொண்ட ஏடுகளில் எழுதப்பட்டுள்ள இவ்வந்தாதியில் காப்பு மற்றும் நூற்பயன் உட்பட 106 பாடல்கள் இடம்பெற்றுள்ளன.

இந்நூல் உரையுடன் உலகத் தமிழாராய்ச்சி நிறுவன சுவடியியல் மற்றும் பதிப்பியல் பட்டயப் பேற்றிற்காக 2000ஆம் ஆண்டு தா.முருகதாஸ் என்பவரால் பதிப்பிக்கப்பட்டுள்ளது.

34. திருவானைக்கா வியமகவந்தாதி

கோவை கௌமார மடாலய சுவடிக் கட்டு எண் 19இல் 11ஆம் ஏடு தொடங்கி 21ஆம் ஏடு வரையான 11 ஏடுகளில் இந்நூல் அமைந்துள்ளது. 35 செ.மீ நீளமும் 3.2 செ.மீ அகலமும் கொண்ட ஏடுகளில் எழுதப்பட்டுள்ள இவ்வந்தாதியில் காப்பு மற்றும் நூற்பயன் உட்பட 102 பாடல்கள் இடம்பெற்றுள்ளன.

சுவாமிகள் திருவானைக்கா என்கின்ற தலத்திற்குச் சென்று பாடிய பதிகங்கள் மற்றும் யமகவந்தாதி, வண்ணப்பாமாலை, திருப்புகழ் ஆகியவை அடங்கிய ஒரு தொகுப்பு நூலாக 1888 (சருவதாரி)ஆம் ஆண்டு இந்நூல் பதிப்பிக்கப்பட்டு வெளிவந்துள்ளது. மண்ணெச்ச நல்லூர் ஐயாப்பிள்ளை அவர்கள் வேண்டுகோளின்படி அவர் தமையனார் ஸ்ரீ முத்துசாமி பிள்ளை அவர்களால் சென்னை ஊ.புஷ்பரதச் செட்டியாரவர்களது கலாரத்நாகர அச்சுக்கூடத்தில் இந்நூல் பதிப்பிக்கப்பட்டுள்ளது.

இந்நூலிற்கு திரிசிரிபுரம் மகாவித்வான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் மாணாக்கருள் ஒருவராகிய திருவானைக்கா முத்தையா பிள்ளையவர்கள் குமாரர் சோமசுந்தரம் பிள்ளையவர்கள் மற்றும் ஊற்றுமலை சமஸ்தான வித்வான் தி.கந்தசாமிப்புலவர், உறையூர் முத்துவீர உபாத்தியாயர், பொய்கைப்பாக்கம் அப்பாசாமி உபாத்தியார், அஷ்டாவதானம் பூவைக் கலியாணசுந்தர முதலியார், காஞ்சி நாகலிங்க

முதலியார், அரன்வயல் அ.தங்கவேலுப் பிள்ளை, பொய்கைப்பாக்கம் பொ.சுப்பராய முதலியார், வல்லை சண்முகசுந்தர முதலியார் ஆகியோர் தனித்தனியே எழுதிய சாத்துகவிகளைக் கொண்டு இந்நூல் பதிப்பிக்கப்பட்டுள்ளது.

35. திருவருணைப் பதிற்றுப்பத்தந்தாதி

கோவை கௌமார மடாலய சுவடிக் கட்டு எண் 14இல் 91ஆம் ஏடு தொடங்கி 97ஆம் ஏடு வரையான 7 ஏடுகளில் இந்நூல் அமைந்துள்ளது. 34.2 செ.மீ நீளமும் 3.4 செ.மீ அகலமும் கொண்ட ஏடுகளில் எழுதப்பட்டுள்ள இவ்வந்தாதியில் காப்பு மற்றும் நூற்பயன் உட்பட 104 பாடல்கள் இடம்பெற்றுள்ளன.

திருவருணைப் பாடற்றிரட்டு என்னும் தொகுப்பில் திருவருணைப் பதிற்றுப்பத்தந்தாதி நூலானது இடம்பெற்றுள்ளது. இந்நூலில் சுவாமிகள் திருவருணை தலத்திற்கு எழுதிய பதிகங்களும் இடம்பெற்றுள்ளன. இப்பதிப்பானது, அரி.அ.சுப்பையா நாடார் அவர்கள் நினைவு மலராக 1969 ஆம் ஆண்டு வெளிவந்துள்ளது. திருவாமாத்தூர் கௌமார மடாலயத் தலைவர் தி.செ. முருகதாச சுவாமிகள் எழுதிய பாராட்டுக் கவி இப்பதிப்பினில் இடம்பெற்றுள்ளது.

36. வில்லிப்பாக்கம் பதிற்றுப்பத்தந்தாதி

கோவை கௌமார மடாலய சுவடிக் கட்டு எண் 33இல் 23ஆம் ஏடு தொடங்கி 37ஆம் ஏடு வரையான 14 ஏடுகளில் இந்நூல் அமைந்துள்ளது. 34.5 செ.மீ நீளமும் 3.5 செ.மீ அகலமும் கொண்ட ஏடுகளில் எழுதப்பட்டுள்ள இவ்வந்தாதியில் காப்பு மற்றும் நூற்பயன் உட்பட 102 பாடல்கள் இடம்பெற்றுள்ளன.

இந்நூல் வில்வநல்லூர் பிரபந்தத் திரட்டு என்னும் தொகுப்பில் பதிப்பிக்கப் பெற்றுள்ளது. தண்டபாணி சுவாமிகள் வில்வநல்லூர் எனப்படும் தலத்திற்கு எழுதிய பதிகங்கள், பஞ்சகம் ஆகிய நூற்களோடு சேர்த்து வில்லிப்பாக்கம் பதிற்றுப்பத்தந்தாதி நூலும் பதிப்பிக்கப்பட்டுள்ளது. 1967 ஆம் ஆண்டு திருவாமாத்தூர் கௌமார சபை இந்நூலை வெளியிட்டுள்ளது. வில்லிப்பாக்கம் சிவபெருமான் பதிற்றுப்பத்தந்தாதி எனப் பதிப்பிக்கப்பட்ட இந்நூலிற்கு, சுவாமிகளின் பெயரர் தி.மு.முருகதாச சுவாமிகள் அவர்கள் எழுதிய முன்னுரையும் அவரது மகனார் சங்கரலிங்கம் எழுதிய பதிப்புப் பாயிரமும் இடம்

பெற்றுள்ளன. மயிலம் பொம்மபுர ஆதீனம், கோவை கௌமார மடாலயம், பேரூராதீனம், கிருபானந்த வாரியார், கி.வா.ஜகந்நாதன் ஆகியோர் இந்நூலின் பதிப்பிற்கு வாழ்த்துரை அளித்துள்ளனர்.

37. சிவனேகபாதத்தந்தாதி

கோவை கௌமார மடாலய சுவடிக் கட்டு எண் 20இல் 1ஆம் ஏடு தொடங்கி 37ஆம் ஏடு வரையான 37 ஏடுகளில் சுவாமிகள் எழுதிய உரையுடன் இந்நூல் அமைந்துள்ளது. 35.3 செ.மீ நீளமும் 2.9 செ.மீ அகலமும் கொண்ட ஏடுகளில் எழுதப்பட்டுள்ள இவ்வந்தாதியில் காப்பு மற்றும் நூற்பயன் உட்பட 32 பாடல்கள் இடம்பெற்றுள்ளன.

இந்நூல் இதுவரையிலும் பதிப்பானதாக அறியமுடியவில்லை.

நன்றி

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் உருவாக்கப்பட்டுள்ள ஓலைச்சுவடிகள் பாதுகாப்பு மையத்திற்குச் சுவடிகள் தேடும் பணியில் ஈடுபட்டிருந்தபொழுது பேராசிரியர் சு.வேங்கடராமன் அவர்கள் கோவை கௌமார மடாலயத்தின் தலைவர் தவத்திரு. குமரகுருபர சுவாமிகளிடம் என்னை அறிமுகப்படுத்தினார். மடாலயத்தில் உள்ள தண்டபாணி சுவாமிகளின் ஓலைச்சுவடிகளைப் பார்வையிட அனுமதித்ததுடன் மின் எண்மம் செய்யப்பட்டிருந்த சில சுவடிகளின் மென்படியையும் அளித்துதவினார்.

தண்டபாணி சுவாமிகளின் பதிப்பாகாத நூல்களை வெளிக்கொண்டு வரலாம் என்ற எண்ணத்துடன் இதுவரை பதிப்பான நூல்கள் குறித்த விவரங்களை முனைவர்பட்ட ஆய்வாளர் சு. கலைவாணி அவர்களைக் கொண்டு சேகரிக்கத் தொடங்கினோம். செம்பாதிக்கும் மேல் அவரது படைப்புகள் பதிப்பாகாமல் இருந்தன.

இந்நிலையில் கோவை கௌமார மடாலயத்தின் தலைவர் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்திற்கு வருகை புரிந்தார்கள். உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் அவரோடு நிகழ்த்திய உரையாடலில் தண்டபாணி சுவாமிகளின் படைப்புகள் அனைத்திற்கும் ஆய்வுப்பதிப்பு கொண்டு வருவதன் தேவை குறித்தும் முறையியல் குறித்தும் ஆலோசனை செய்யப்பட்டது. கௌமார மடாலயத்தின் உதவியால் சுவடியில் இருந்த படைப்புகள் பெயர்த்தெழுதப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டன.

இதன் விளைவாக உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின்வழி பிள்ளைத்தமிழ் நூல்கள் ஒரு தொகுதியாகவும் கலம்பகம் நூல்கள் ஒரு தொகுதியாகவும் வெளியிடப்பட்டன. எனவே இத்திட்டப்பணி தொடங்க முதற் காரணமாக அமைந்தவர் கௌமார மடாலயத்தின் தலைவர் **தவத்திரு குமரகுருபர சுவாமிகளாவார்.**

தற்பொழுது இத்திட்டப்பணி 'தாமரை பிரதர்ஸ் மீடியா பிரைவேட் லிமிடெட்' நிறுவனம் வழி புத்துயிர் பெறுகிறது. இதற்குக் காரணமாக அமைந்தவர் இந்நிறுவனத்தின் நிருவாக இயக்குநரும் 'தினமலர்' நாளிதழின் இணையாசிரியருமான **திரு. இரா.கிருஷ்ணமூர்த்தி** அவர்கள். ஆய்வுப் பதிப்பின் தேவையை உணர்ந்து இப்பணியை விரைவாக முடிக்க அனைத்து உதவிகளையும் நல்கினார். தொடர்ந்து நூல்களை வெளிக்கொணர அவரது ஊக்கமும் ஆலோசனையும் மிகுதி. **திரு.இரா.கிருஷ்ணமூர்த்தி** அவர்களிடம் இத்திட்டப்பணி குறித்து அறிமுகம் செய்து வைத்து இப்பணியைத் தொடர்ந்து நிகழ்த்த ஆலோசனைகளை வழங்கி வருபவர் 'தினமலர்' நாளிதழ் உதவியாசிரியர் **திரு. சௌந்திர. சொக்கலிங்கம்** அவர்கள்.

பேராசிரியர் **சு. வேங்கடராமன்** அவர்களின் வழிப்படுத்தலும் முதன்மையான இடத்தைப் பெறுவது. இப்பதிப்பு தொடர்பாக கோவை மடாலயத்தில் நடைபெற்ற அனைத்து ஆய்வுக் கூட்டங்களிலும் பங்கேற்று தக்க ஆலோசனைகளை வழங்கியவர் பேராசிரியர் **ஐ. கே. சுப்பிரமணியன்** அவர்கள். தமிழகத்திலுள்ள பல்வேறு நூலகங்களுக்கும் சென்று தண்டபாணி சுவாமிகளின் படைப்புகளில் பதிப்பான நூல்களைத் திரட்டியதுடன் இத்திட்டப்பணியின் முதன்மையாய்வாளராகச் செயல்பட்டு வருபவர் செல்வி **சு. கலைவாணி** அவர்கள். சுவடிகளை ஒப்புநோக்கும் பணியிலும் பாடல்களின் அமைப்பு முறைகளை ஒழுங்குபடுத்துவதிலும் இப்பணியில் ஈடுபட்டவர் முனைவர் **கி.ஜெயகுமார்.** சுவடியைப் பெயர்த்து எழுதுதல், பிழைதிருத்தம் மேற்கொள்ளுதல் எனப் பலநிலைகளில் உதவியவர்கள் திட்ட ஆய்வாளர்கள் கா. முரளி, ஈ. உமா, அ. வீரமணி, மு. சுந்தரலிங்கம், வே.தமிழரசு, வி. அகிலா மற்றும் ஆய்வு நண்பர்களான முனைவர் அ.சண்முகம், ச. கனகராஜ் ஆகியோர்; தட்டச்சு செய்துதவியவர்கள் ச.வாசுகி, மணிச்செல்வி ஆகியோர்; நூலினை வடிவமைப்பு செய்தவர் நண்பர் கதிர்.

இந்த ஒருங்கிணைந்த உழைப்பு தொடர்ந்து வருவதால் தண்டபாணி சுவாமிகளின் அனைத்து படைப்புகளுக்கும் ஆய்வுப் பதிப்பு அடுத்தடுத்து வெளிவருவது உறுதி. இப்பணியில் இவர்களோடு நானும் இணைந்து கொள்வதன்றி எவ்வாறு நவிலுவது நன்றி!

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை - 600 113.

அ. சதீஷ்
இணைப்பேராசிரியர்



வண்ணச்சரபம்

தண்டபாணி சுவாமிகள்

தோற்றம்: கார்த்திகை 16, விகாரி, கலி 4941 திருவருட்பேறு: ஆனி 23, விளம்பி, கலி 5000

குருபூசை: ஆனித் திருவோணம்

(28.11.1839 – 05.07.1898)

நூலாசிரியர் வரலாறு

செந்தமிழ் வளர்த்த புலவர்கள் பலர் தோன்றிய திருநெல்வேலி நகரத்தில் சைவ வேளாளர் மரபில் 22.11.1839 அன்று பிறந்தவர் வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள். இவரது இயற்பெயர் சங்கரலிங்கம். தந்தை பெயர் செந்தில்நாயகம் பிள்ளை. தாயார் பேச்சி முத்தம்மை. சிறு வயதிலேயே கவிதை புனையும் ஆற்றல் வாய்ந்தவர். தமது எட்டாவது வயதில் சுரண்டை என்னும் ஊரில் குடிகொண்டுள்ள பூமிகாத்தாள் என்னும் அம்மன் மீது வெண்பா யாப்பில் பாடல் பாடினார். இயல்பாகவே கவிதை பொழியும் இவருடைய ஆற்றல் கண்டு இவரது ஆசிரியர் சீதாராம நாயுடு இவருக்கு 'ஓயா மாரி' என்ற சிறப்புப் பெயரைச் சூட்டினார். வண்ணப்பாடல்களை மிகுதியாக எழுதிய தனித்துவத்தால் வண்ணச்சரபர் என்ற சிறப்புப் பெயர் பெற்றார். மேலும் திருப்புகழ் சுவாமிகள், முருகதாச சுவாமிகள், அபர அருணகிரி என்ற பெயர்களிலும் சுவாமிகள் அழைக்கப்பட்டார்.

மரபான கல்வி முறையில் இலக்கணம், இலக்கியம், சமயம், மருத்துவம் போன்ற பல்துறை நூல்களை முறையாக ஆசிரியர்களிடம் கற்றுத்தேர்ந்தார். நூல்களைக் கற்கும் இளம்வயதில் பாடல்களை இயற்றி அவற்றை பனை ஓலைகளில் எழுதிவந்தார். கல்விச்சாலை ஒன்றை அமைத்து மாணவர்களைப் பயிற்றுவித்தார். சோழவந்தான் கந்தசாமி பிள்ளை, சித்திரபுத்திர பிள்ளை, அழகிய சொக்கநாத பிள்ளை, அரன்வாயல் வேங்கடசுப்பு பிள்ளை, ஊற்றுமலை வித்வான் கந்தசாமி புலவர், நாடக மேதை தவத்திரு. சங்கரதாச சுவாமிகள், ஆரியூர் வரதராச பிள்ளை போன்றோர் சுவாமிகளிடம் இலக்கண இலக்கிய நூல்களைக் கற்றனர்.

தேவார மூவர் மற்றும் அருணகிரிநாதருக்குப் பிறகு அதிகமான தலங்களுக்குச் (222 தலங்கள்) சென்று வழிபாடு செய்து பதிகங்கள் பாடினார். மேலும் ஒரு தலத்திற்குச் சென்றால் அத்தலத்தில் குடிகொண்டுள்ள அனைத்து தெய்வங்களையும் பாடும் வழக்கம் கொண்டவராக இருந்தார்.

முருகப்பெருமான், விநாயகர், சிவன், அம்பிகை, திருமால், சூரியன், மற்றும் கிராமதெய்வங்கள் மீது சமயாதீத நிலையில் எண்ணற்ற பாடல்களை எழுதினார். இவர் ஒரு லட்சம் பாடல்களுக்கு மேல் எழுதியிருப்பினும் அவற்றுள் பாதிக்கும் மேற்பட்ட பாடல்கள் இயற்கை சீற்றத்தாலும் சுவாமிகளால் அழிக்கப்பட்டும் மறைந்து போயின. இன்று கிடைக்கக்கூடிய பாடல்கள் சுமார் 49,000 பாடல்கள் ஆகும்.

இவருடைய படைப்புக்கள் பெரும்பாலும் சிற்றிலக்கிய வகைமைச் சார்ந்தவைகளாக உள்ளன. அந்தாதி, கலம்பகம், உலா, சதகம், பதிகம், பிள்ளைத்தமிழ் என பல வகைமைகளைச் சார்ந்தும் பல்வேறு யாப்பு வடிவங்களைப் பயன்படுத்தியும் நூல்களைத் தந்தார்.

அறுவகை இலக்கணம், ஏழாம் இலக்கணம், வண்ணத்தியல்பு ஆகிய மூன்று இலக்கண நூல்களை இயற்றினார். மேலும் அறிவிற் சிறந்த பல்வேறு புலவர்களின் வரலாற்றினைத் தொகுத்து 3005 பாடல்களில் 'புலவர் புராணம்' என்ற நூலையும் தனது வரலாற்றினை 'குருபர தத்துவம்' என்னும் நூலாகவும் எழுதினார்.

ஊர்கள் தோறும் சென்று நூல்களை எழுதி வந்த சுவாமிகள் சிறிதுகாலம் பழனித்தலத்தில் தங்கி அங்கு ஒரு மடாலயம் அமைத்தார். 'பழனித் திருவாயிரம்' என்னும் நூலை அத்தருணத்தில் எழுதினார். இவ்வாறு ஆயிரம் என்னும் வகைமைச் சார்ந்து தில்லைத் திருவாயிரம், திருவரங்கத் திருவாயிரம், தெய்வத் திருவாயிரம் போன்ற நூற்களையும் எழுதினார்.

அருணகிரிநாதரின் மறுபிறவியாகத் தன்னைக் கருதிக்கொண்டு மிகுதியான சந்தப்பாடல்களை (வேல்விருத்தம், மயில்விருத்தம், ஆறெழுத்தலங்காரம், திருப்புகழ் பதிகங்கள் போன்றவை) இயற்றினார். மேலும் அருணகிரிநாதரின் வரலாற்றினையும் எழுதினார்.

மரபான செய்யுள் வடிவில் நூல்களை இயற்றி வந்த சுவாமிகள் உரைநடை வடிவில் 'சத்திய வாசகம்' என்னும் நூலை எழுதினார். மேலும் முசுகுந்தனின் வரலாற்றினை நாடக வடிவில் 'முசுகுந்த நாடகம்' என எழுதினார்.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் நிலவியிருந்த ஆங்கிலேய ஆட்சி மற்றும் ஆங்கிலக் கல்வியை எதிர்க்கும் விதமாக 'ஆங்கிலியர் அந்தாதி' என்னும் நூலை எழுதினார்.

தனது நூல்களை பனை ஓலைகளில் எழுதிவைப்பது மட்டுமின்றி அந்நூல்களை தனது சமகால புலமையாளர்கள் முன்னிலையில் அரங்கேற்றம் செய்து அவை குறித்து விவாதித்தும் வந்தார். தம்மிடம் வரும் புலவர்களின் நூல்களை வாசித்து அந்நூல்களுக்குச் சுவாமிகள் சாத்துகவிகள் எழுதிக் கொடுத்தார்.

மயிலம் முருகன் கோயிலில் உருத்திராக்க மாலையை திருமாங்கல்யமாக அணிவித்து சுந்தரத்தம்மையை தனது மனைவியாக ஏற்றுக்கொண்டார். அம்மையாருக்கு பல்வேறு நூல்களை சுவாமிகள் தாமே கற்பித்ததுடன், நூல்களை இயற்றவும் செய்தார். அவர் எழுதிய நூல் பெண்மாட்சி.

இவரது சமகாலப் புலவர்களாக விளங்கிய வடலூர் வள்ளலார், வளவனூர் சண்முக சுவாமிகள், ஆறுமுக நாவலர், மகாவித்வான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை, வண்ணக் களஞ்சியம் நாகலிங்க முதலியார், பூவை கல்யாண சுந்தர முதலியார், மாம்பழக் கவிசிங்க நாவலர் போன்றோருடன் நட்பு பாராட்டினார்.

தமிழகம் மட்டுமின்றி கேரளம், இலங்கை போன்ற பல்வேறு பகுதிகளுக்கும் பயணம் செய்து சமய பேதமின்றி எண்ணற்ற பாடல்களை தந்தவர் தண்டபாணி சுவாமிகள்.

இவர் உருவாக்கிய திருவாமாத்தூர் கௌமார மடாலயத்திலும் இவர் மாணவர் தவத்திரு இராமானந்த சுவாமிகள் உருவாக்கிய கோவை கௌமார மடாலயத்திலும் இவர் எழுதிய சுவடிகள் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. திருவாமாத்தூரில் தங்கி எல்லை தாண்டா விரதத்தை மேற்கொண்ட சுவாமிகள் 05.07.1898இல் முருகப் பெருமான் திருவடியில் இரண்டறக் கலந்தார். இவரது மகன் வழி பெயரனார் தற்பொழுது திருவாமாத்தூரில் வசித்து வருகிறார்.

25

நெல்லை யமகவந்தாதி

25

நெல்லை யமக வந்தாதி

தந்தா வளத்திலனஞ் சேர்வய னெல்லைச் சங்கரற்குத்
தந்தா வளக்கருஞ் சீராரிய மகவந்தாதி சொல்லத்
தந்தா வளம்பெறக்காத் தான்புகழவென் றன்னை வைக்குந்
தந்தா வளமுகச் சந்திவிநா யகன்றாட் டுணையே.

மணிகண் டனையநிறத் தானைநெல் லையில்வாழ் சிவனை
மணிகண் டனையருட் காந்திமதிப் பொன்மணா ளனைச்ச
மணிகண் டனையன்ன தென்பார்க் கெய்தானை வழுத்திலெஃக
மணிகண் டனையனொப் பாவிளை யாடும்வலி யெய்துமே. 1

வலியத் தடுத்தரு ணெல்வேலி நாதனை வாரணத்தில்
வலியத் தடுத்த பகையழித் தானை மருவுமக
வலியத் தடுத்தத் திருசேய்தந் தானை வணங்கியமால்
வலியத் தடுத்தத் தவுணர்தங் காலனில் வாழ்ந்தனனே. 2

தனந்தான னாவென நெல்லையிலா டுந்தலைவன் மெய்ச்சித்
தனந்தான னாதிநம் பாட்டாசை கொண்டதுசத் தியம்பொய்த்
தனந்தான னாகரிகந் தருமென்றெ ணித்தட் டழியேந்
தனந்தான னாகமொப் பாரேவல் கேட்டுத் தயங்கலமே. 3

தயங்கத் தயங்கமிடி நோய்சுடச் சுடச்சஞ் சலத்தி
தயங்கத் தயங்கத்தை யிட்டாய் செம்பம்பலந் தன்னிற்செய்கூத்
தயங்கத் தயங்கண் ணுதலோயென் றெண்ணற்ற ணந்ததுநிந்
தயங்கத் தயங்கடுத் தோலிட் டிரந்துத வித்தனமே. 4

தவியாத வாக்கிரன் போல்வாழ வேண்டுந் தமியனுக்கு
தவியாத வாறுதந் தாலன்றி வீட்டினுஞ் சார்கலன்வே
தவியாத வாக்கிய நம்பிநின் றேனெனைத் தள்ளலென்றுந்
தவியாத வாநெல்லைத் தாம்பிர மன்றுடைச் சங்கரனே. 5

சங்காரஞ் செய்ய செவியாய் நொடியிற் சகமுழுதுஞ்
சங்காரஞ் செய்ய வல்லாய் மிடியென்னுந் தழலினிற்க
சங்காரஞ் செய்ய திருநெல்லை யாயித்தமி யனன்னெஞ்
சங்காரஞ் செய்ய னங்கற் கஞ்சுறாத தவந்தந்திடே. 6

தந்திர வித்தை யுடையாரை வெல்லச் சருவசித்துந்
தந்திர வித்தைத் தணந்தாளொன் பான்விதச் சத்தவிதித்
தந்திர வித்தை யங்கத்திங் களோடு தடிந்தவநித்
தந்திர வித்தை யனேசாலி வாடியிற் றங்கினனே. 7

தங்கத் தடஞ்சிலைக் கையாய் திருநெல்லைச் சங்கரமா
தங்கத் தடஞ்சிலைக் கோளரியட் டனைசற்றெந் நெஞ்சந்
தங்கத் தடஞ்சிலைங் கோதையர் மாலைத்தணந் தருணித்
தங்கத் தடஞ்சிலை யங்கருதே நின்றனைத் துதித்தே. 8

தனையள வாயெனச் சொல்வாத வூரனைத் தாளிடைசேர்த்
தனையள வார்கடனஞ் சயின்றாய் நெல்லைத் தானமலைத்
தனையள வாவுடையா யென்னை யாண்டரு டாரணிநிந்
தனையள வாய்ப்புல்லில் வாடுறச் சூழ்ந்து தகிக்கின்றதே. 9

தகதக வென்னுடங்கப் பற்கொண்டாய் திக்கத்தக் கத்தித்தெய்
தகதக வென்னுநற் றாளத்தி லாடினை தண்வடப்போ
தகதக வென்னுதிச் சூலத்தெந் தாய்நெல்லைத் தானநமாந்
தகதக வென்னுளுந் தோய்தரற் காநலந் தந்தருளே. 10

தந்தானை யட்டகை நெல்வேலி நாதனற்றை யல்கொள்ளத்
தந்தானை யட்டமனை மான்முதலினர்ச் சாய்த்த வென்றித்
தந்தானை யட்டனி வாண்மழு வாளெனச் சாற்றுநர்க்கத்
தந்தானை யட்டவின் பாலன்ன மாதியின் றாகமின்றே. 11

தாகந் தணியக் கற்கூபந் தொட்டேனைத் தயங்கவிட்டாய்
தாகந் தணியக் கமாலிகையாய் நெல்லைச் சைவர்கணா
தாகந் தணியக் கயத்தேங்கிடா தின்றுதாங் கத்தத்த
தாகந் தணியக் கதேசத்த னாணித்தலை குன்றவே. 12

தலையாயிரத் தனைச்சத்தத் திற்காத்தனை தாழ்வி னெல்லைத்
தலையாயிரத் தனையமாக் கொண்டாய்நின் சடையிடைமோ

தலையாயிரத் தனையனத் தினேனைத் தவித்தி டச்செய்
தலையாயிரத் தனைத்தொண் டென்செய் வானெனத் தள்ளிடலே. 13

தள்ளிக் கதவடை யாளனுக் கஞ்சித் தனமிரந்துந்
தள்ளிக் கதவடை யார்வாயில் காண்கிலன் தாழ்ச்சிமுற்றுந்
தள்ளிக் கதவடை யாமணை நல்குந் தருமமல்கத்
தள்ளிக் கதவடை யார்வாய் கொணெல்லைத் தலத்தரசே. 14

தலத்தர சேதெய்வத் தானமென் புத்தருஞ் சையெனக்கா
தலத்தர சேதனமா தலென்றோ கழைத்தண்ண நெல்லைத்
தலத்தர சேயுலகீன் றாடிதலைத் தனம்பு ணர்கா
தலத்தர சேவின மாதியவா டித்தளர் கின்றவே. 15

தளங்காட்ட மாமலர்க்கண் ணருச்சித் தன்று சக்கரமா
தளங்காட்ட மால்பெற்ற தாளார்ந்த வேய்முத்தர் தானவர்தந்
தளங்காட்ட மாயெரியுஞ் சிரிப்பா ரிருட்டார் முயலைத்
தளங்காட்ட மாடினர் தந்தார் கனவிற் றரிசனையே. 16

தரிசன வேதிசெய்வா னெனநாடி நின்றாளைச் சென்னி
தரிசன வேதிலருந் தொழுமா றுதழலெ னுஞ்சு
தரிசன வேதிலுல களிப்பான் புகழ்தந் தினிதா
தரிசன வேதியரா தியர்வாழ் நெல்லைத் தாண்டவனே. 17

தாண்டவ மாடியப் பாடாவென் றேங்குமென் றன்னையினி
தாண்டவ மாடியக் கந்தணப்பாய் நெல்லைதன் னினித்தந்
தாண்டவ மாடியசம் போவஞ்ஞா னத்தமஞ் சுடுமார்த்
தாண்டவ மாடியல் கேதனத்தாய் சச்சிதா னந்தனே. 18

தானந்த மாதியுமாய் நெல்லை வேயடிதன் னின்முளைத்
தானந்த மாதியல் பாகத்தினான் மறைசாற்றுஞ் சச்சி
தானந்த மாதிரைநாள் சிந்துபூந் துறைதண் பொருனைத்
தானந்த மாதிடஞ் சேரப்பெற் றார்பெறுந் தாரகமே. 19

தாரக மானவஞ் சக்கரத் தோடுசொல் சற்சனர்க்கோர்
தாரக மானவ னெல்லையின் செப்புச்சபை யைநினைத்
தாரக மானவருள் வானவன் புனைதண் ணிதழித்
தாரக மானவக் கொங்கையில் வாசிக்குந் தன்மையென்னே. 20

தன்னந் தனியனென் பார்நெல்லை மேவியதா ணுவைநத்
தன்னந் தனியற்புதல் வர்வெள்ளே றன்னதார்க் களிறு
தன்னந் தனியமணிமத் தளத்திற் றழக்கு நர்சிந்
தன்னந் தனியனென் பூதர்க ளாதியர்சங் கத்தனே. 21

சங்கக் குழையணி காதுக்குச் செய்யசடைக் கரவச்
சங்கக் குழையணி யகைக்குமால் கொண்டதை யன்மெய்க
சங்கக் குழையணி லாச்சூடில் லாவிடிற்றண் மதுக்கஞ்
சங்கக் குழையணிச் சாலவய னெல்லையிற் சந்ததமே. 22

சந்தக் கவிதர வல்லநெல் வேலிச்சர பரென்னச்
சந்தக் கவிதரணத் தாற்றணந் திலர்தாழ் வுறுநெஞ்
சந்தக் கவிதரர் பொன்வேட் டுழன்றது தாரணிய
சந்தக் கவிதர ருட்பேறு நாடிச்சலிக் கின்றதே. 23

சலிக்கத் தகாதநலங் காட்டியாண் டிலைதக் கவரே
சலிக்கத் தகாதகனான் மெலிந்தே னண்டர் தானவரஞ்
சலிக்கத் தகாதணிசங் குடையாய் நெல்லைச் சங்கரவஞ்
சலிக்கத் தகாதவெல் லாம்பெறற் காமொர்சொற் சாற்றிடின்னே. 24

சாற்றணி யாரந்த ணெல்லைப் பிரானிருதங் கவெற்பாச்
சாற்றணி யாரமுலை வடிவாள் கொண்கன் றண்கனியின்
சாற்றணி யாரகந்தோறினிப் பானவன் றன்னை நன்னெஞ்
சாற்றணி யாரவி யூடேநினைக் குந்தவம் பெரிதே. 25

தவம்பல வாகமுய லேன்களிம் பற்றதாம் பிரஞ்செய்
தவம்பல வாவெனக் கூவுகிலேன் றொண்டர் சந்ததம்பெய்
தவம்பல வாதியவிர் சடையாயென் சொற்சற்று மொவ்வா
தவம்பல வாண்டுதர வேண்டுநின் னிருதண் கழலே. 26

கழகப் புலவரெலும் போடுவேதி யாக மணிந்தாய்
கழகப் புலவர்முன் வாதமிட்டாய் பல்கரியர் சொற்பு
கழகப் புலவருஞ் சூலம்வைத் தாய்தண்கழை வனத்தி
கழகப் புலவர்மிக் கொல்குறு மாறருட் கண்ணமையே. 27

கண்ணனை யாண்டண்டர் வந்தினிதா டுங்கவின் பொதியைக்
கண்ணனை யாண்டயர்ந் தோதரைப் பாட்டுங் கமலமலர்க்

கண்ணனை யாண்டநின் சார்பென்ற தாலென்சொற் கைக்குங்கொலோ
கண்ணனை யாண்டலை யாற்றந்துளாய்நெல்லைக் காரணனே. 28

காரணங் கூறிய லாதிடத் துய்த்தனை கண்ணியம்
காரணங் கூறியலா டத்திலா டினைகந்தன் வந்தோர்
காரணங் கூறியலா தனசெய் தனன்காத் தியென்ம
காரணங் கூறியலாற் றீர்த்திநெல் லைக்கழை முத்தனே. 29

கழையிடை யன்றுவரு மணியேவெட் டக்காமர் நெல்லைக்
கழையிடை யன்றுவரு மணியே சினர்க்காய்ந் துபல
கழையிடை யன்றுவரு மணியே ரதுகை யினிற்செங்
கழையிடை யன்றுவரு மணியேக் குங்கன லங்கியே. 30

கனலக் கனலக் கொடார்மனைக் கேகெனைக் கற்பகக்க
கனலக் கனலர் புலைமாற்றும் வாழ்வுறக் காண்ப தென்றோ
கனலக் கனல நவவீரர் போற்றியகந் தனைச்செய்
கனலக் கனலங் குறார்வாழ் திருநெல்லைக் காவலனே. 31

காவல ரஞ்சக் கரத்தார் பிரமாகயத் திவரைங்
காவல ரஞ்சக் கரணதண் டஞ்செய்து காசின்முத்திக்
காவல ரஞ்சக் கரங்கூறித் தூவிலங் கைவிட்டிடேல்
காவல ரஞ்சக் கராரடு நீர்நெல்லைக் கண்ணுதலே. 32

கண்ணு தலத்தர் கயிலைவெற் பாளர்கணக் கின்மறைக்
கண்ணு தலத்தமுழு தாயினார் முத்திக் காதலன்பர்
கண்ணு தலத்ததி கமாந்திரு நெல்லைக் காந்திமதிக்
கண்ணு தலத்தர வரேயனைத் துங்கடந் தவரே. 33

கடந்தந் தவாரண மொன்றுரித் தார்செங் கமலவிதி
கடந்தந் தவாரணத் தாலறியார் பல்கரு விகளுங்
கடந்தந் தவாரணவுஞ் சடைமுக் கண்கணிச் சிகளக்
கடந்தந் தவாரணலார் நெல்லை போற்றலங் காண்பரிதே. 34

காணங் கருதிக்கடைத் தலைதோறுங் கலங்கிச் சில்லோர்க்
காணங் கருதிக்குமெல் லோன்செந்தீ செக்கர்காந் தடுப்பிற்
காணங் கருதிரமால் பாற்பெற்றார் நெல்லைக்கத் தர்கண்டக்
காணங் கருதிரிநோய் தீர்க்குமென் னக்கழ றலரே. 35

கழங்காடி யற்கைமின் னார்தம் மைநாடிக் கலங்கலினி
கழங்காடி யதிற்சுணங் கலொத்தே நெல்லைக் காரணற்பு
கழங்காடி யலரி போல்வாழ வேண்டினங் காதகரி
கழங்காடி யன்னகுணங் காட்டு மூடமுங் கற்றுளமே. 36

கற்றன மங்கையர் சொற்கேட் டுருகுறுங் காதன்மிகக்
கற்றன மங்கையதி லேற்றருந் திலங்கா ணநந்தேங்
கற்றன மங்கையரு ளாய்மயி டனைக்காய்ந் துயிர
கற்றன மங்கையர்ச் செய்துளாய் நெல்லைக் கண்ணியனே. 37

கண்ணப் பனையதொண் டந்நாள் புரிந்துகருத் துருகுங்
கண்ணப் பனையளித் தாய்நெல்லை யப்பகங் காளவிரு
கண்ணப் பனையங்கை யானைத்தந் தாயெனைக் கையல்சடைக்
கண்ணப் பனையடியேன் கிணற்றே யுங்கவினச் செய்யே. 38

கவிகைக் குமாரமனம் பொல்லாப்புலை யன்னகாட் டுநர்கார்க்
கவிகைக் குமாண்புரைப் பாரொல்கி வாடுறக் காதலித்தேன்
கவிகைக் குமரநெல்லைக் கங்காள நாத கவுரிதன்கொண்
கவிகைக் குமாரன்கொண் டாளாமலிங் நன்கலக் கினனே. 39

கலங்கா தவாறுறுஞ் செஞ்சடையாய் தலைகா லறியாக்
கலங்கா தவாறுன்னு தேசிகநெல் லைக்கவிஞர் தம்பு
கலங்கா தவாறுமுக னைத்தந் தாயுனைக் கண்டினிநீங்
கலங்கா தவாறுய்ப் பதாங்கொடும் பரவக்கலி யறுத்தே. 40

கலியஞ் சவென்று களிகூ ருமாறு கருதினனார்
கலியஞ் சவென்றும் பரேத்தச் செய்தாணக ரமுதலாக்
கலியஞ் சவென்று மிறவாச் சிவாவிடங் கைச்சிலையாக்
கலியஞ் சவென்று புரைவாய் நெல்வேலிக் கங்காதரனே. 41

காதனந் தங்கொண் டலன்னா னமனவன் காலனைநீங்
காதனந் தங்கொண் டகையிடத் தானைக் கழைவனத்திற்
காதனந் தங்கொண் டமர்வானை நாடிக் கசிபவர்க்குக்
காதனந் தங்கொண் டலான்மணத் தாலுங் கசக்குமன்றே. 42

குமரனை யாண்டுவிழி யாற்றந்தா னைக்கொடை மிகநல்
குமரனை யாமைக் கழுதானை நெல்லையின் கோயிலிலோங்

குமரனை யானனத் தெந்தாயென் றேத்திடிற் கொங்கையின்குங்
குமரனை யாரெனத் தோற்று வார்முத்தர் கூறினரே. 43

கூறாக வந்தனை நீறாக்க நண்ணிற் குமரியுறுங்
கூறாக வந்தனையத் தமிழார் நெல்லைக் கொற்றவமி
கூறாக வந்தனையச் செய்த மாலுணர் கோலவென்னக்
கூறாக வந்தனைங் கோட்பொறிப் பாற்செய் குணங்கொ ணெஞ்சே. 44

குணங்களை யாயிரங் கோடிகொள் வீருட்குறித் திடச்ச
குணங்களை யாமெனத்தே நீரந்தோவென் சொற்கொண் மின்சற்றுங்
குணங்களை யார்ந்தவிடத் தாரைநெல்லை யிற்கும்பிடு
குணங்களை யார்புலைவோர் கெல்லும் வாழ்வுங்கை கூடுமன்றே. 45

கூடாரை யன்றுநகைத் தெரித்தார் நெல்லைக் கோயிலெய்தக்
கூடாரை யன்றுயரெய் தச்செய் வார்பெண் குடியிருந்த
கூடாரை யன்றுலங் கச்சிறுமோ கினிக்கோ தையினைக்
கூடாரை யன்றுமற் றொன்றைநம் பார்க்கோர் குறையுமின்றே. 46

குறையிரந் தேனையிவ் வாறலைத் தீர்நெல்லைக் கோயின்முதுக்
குறையிரந் தேனையச் சொல்லுமை வேண்டிலள் கொல்கொடும்பற்
குறையிரந் தேனைத்த நெல்லாயினேன் முல்லைக்கொட்டி விற்செய்
குறையிரந் தேனையன் மெச்சுநல் லாடற்கொடுந் தொகுத்தே. 47

கொடும்பாவ மாசெய்து ளேனல்ல நீரைக்குடிக்கு மிச்சை
கொடும்பாவ மாவெனக் கூவலிற் கூவினன் கோதிலருள்
கொடும்பாவ மானபடி வருவீரெனக் கூறல் பொய்யோ
கொடும்பாவ மாலைக்கு மீவீர்நெல் வேலிப்பொற் கோவின்மன்னே. 48

கோவி லனேகத்த னெல்லையின் மானமிகக் கொண்டுறைவான்
கோவி லனேகத்த விர்ந்தெட்டு மானவன் கும்பிடுவார்
கோவி லனேகத்த னென்பார்களுள் ளுங்குலாவு நன்முக்
கோவி லனேகத் தமிழ்தூதனுப் பற்குறித் துய்ம்மினே. 49

குறித்தகை வேடனிற் சென்றடியேற் றன்றொர்கோல் கொடுத்தோன்
குறித்தகை வேடமுள் ளார்க்கெளியா னெல்லைக் கோனெனிலேங்
குறித்தகை வேடன்முற் கொன்றையின் றெய்திலிக் கூர்ங்குறத்தி
குறித்தகை வேடயைபெற் றாள்சொற் கொப்படி கோல்வளையே. 50

கோலஞ் சமைந்தடியார் கனவூடு குலாவ வல்லாய்
கோலஞ் சமைந்தம தனையட்டாய் கரங்கொண்டு நித்தங்
கோலஞ் சமைந்தரு நாணீகை கண்டுகுளிர் நெல்லையாய்
கோலஞ் சமைந்தரைக் கொண்டேனு மெங்களைக் கொண்டுகொள்ளே. 51

கொண்டலங் காரன வீகையினார் மிகக்கூடு நெல்லை
கொண்டலங் காரமுலை யாடன்னோ டுங்குளிர் சிவனே
கொண்டலங் காரணத் தாற்பிறந் தார்மனங் கோலமறை
கொண்டலங் காரஞ்சகி நிகர்மா தர்குடி யிருப்பே. 52

இரும்பனை யன்னத் தினான்விதி யாலெய்தியிங் கிடைந்தேம்
இரும்பனை யன்னகை யான்குகன் போலவிலங் கலென்றோ
இரும்பனை யன்னக றைச்சூலத் தாய்நெல்லை யீசமிக்கொள்
இரும்பனை யன்னமுள் ளாயடியார்க் கொரெளி யவனே. 53

எளியவரா வணந்தோ றிரப்பார் நெல்லையேத் துநர்க்கோர்
எளியவரா வணக்கூந்த னல்லார் கற்பினீ டழித்தார்
எளியவரா வணவுஞ் சடையா ரொரெழில் விரலால்
எளியவரா வணன்வீ றழித்தா ரென்றி யம்பலென்னே. 54

இயம்பல வார்க்குந் திருநெல்லை யாய்மழு வேந்தியபாண்
இயம்பல வாவட்ட மூர்த்தியுமா வளரீச வென்றியான்
இயம்பல வாவறத் தீராதென் றெண்ணன்மினீன நெஞ்சீர்
இயம்பல வாதியிற் றாழ்ச்சியன் றென்றுமெறி வதன்றே. 55

எறிமணி யாரங்கள் பூண்டபஃ றேவரெலும் பணிந்தான்
எறிமணி யார்வளர் நெல்வேலி நாதனின்றிம் பருய்ய
எறிமணி யாயர்தம் மேற்சினஞ் செய்யிவ் வீனர்நித்தம்
எறிமணி யானின மாதியகோ டியினி துய்யுமே. 56

இனியது வரைகடலை யிற்சேர்த் துண்ணுமி யானையுடன்
இனியது வரையென் பானைத்தந் தார்நெல்லை யீசர்பல்லான்
இனியது வரையினா னென்னவென் னையியக்க லென்றோ
இனியது வரைசகிக் கறியே னிச்சை யேறியதே. 57

ஏறாய வாகனத் தேமக வேந்துமொ ரேழையுடன்
ஏறாய வாகனலர் கொன்றை நல்கற் கிரங்கிலனால்

ஏறாய வாகனம் விட்டாணெல் வேலியிலி யாவரும்வான்
ஏறாய வாகன நிந்தைசெய் தாரினியென் செய்வதே. 58

செய்ய கனலை யங்கைச் சிலையாக்கினற் றீய்த்தவிழிச்
செய்ய கனலை யகஞ்சமுஞ் சங்கமுஞ் சேலுமறாச்
செய்ய கனலை யநெல்வேலி நாதநின் சீரருளைச்
செய்ய கனலை யப்பல்லூர் கடேடித்திரி யெனக்கே. 59

திரியத் திரியட்ட கோன்முதலோ ரஞ்சச் சேணுலக
திரியத் திரியல ரானாலும் வெல்லுந் திறலருணீர்
திரியத் திரியவர் சேரா நெல்வேலிச் சிவாவரியத்
திரியத் திரியனையார் சூழும் வெள்ளிச் சிலம்பினனே. 60

சிலம்பக மாடயிலாதி யுள்ளாற் றந்துதீ யுமிழே
சிலம்பக மாடமலி நெல்லையூர தினந்தொ னிக்குஞ்
சிலம்பக மாடக வுள்ளாயென் றோலிட்டுன் சேவடிநச்
சிலம்பக மாடக மாதிய நாடித் தியங்கினமே. 61

தியங்கிய பாவம்பா தம்மினுந் தாழ்த்தலிற் சிந்தைநொந்து
தியங்கிய பாவம் பறித்தெறிந் தென்னைத் தினந்தினங்காத்
தியங்கிய பாவம் படத்தக்கன் வேள்வியிற் செற்றனைசத்
தியங்கிய பாவம் பரிப்பாய் நெல்வேலியிற் சேர்சிவனே. 62

சிவசிவ சங்கர வென்றொரு போதினுஞ் செப்பலனாச்
சிவசிவ சங்கரன் னாரையு மேசெனைச் சீற்றிடலா
சிவசிவ சங்கரறி யாத வாவுயிர்ச் சேர்க்கையிற்க
சிவசிவ சங்கரங் கூடுமுலா நெல்லைத் தேசிகனே. 63

சிகரம் பலதிகழ் வெற்பாம் வில்லாய ருட்சீர்தருதே
சிகரம் பலமெனக் கொண்டாய் நெல்வேலியின் செல்வமெய்த்தே
சிகரம் பலத்துறும் வாழ்வருள் வாய்பொன்பெண் செய்யிவைநச்
சிகரம் பலற விளையாடி வீட்டிற் றினமுறவே. 64

தினந்தினந் தான்பெருஞ் சீரையு மெள்ளி நின்சேவடிநத்
தினந்தினந் தாயகமென்றெண்ணி வாழுஞ் சிறப்பருடித்
தினந்தினந் தாவெனச் செம்பவை யாடுந்திரு நெல்லையாய்
தினந்தினந் தாரகத் தோடெழுத் தோரைந்துஞ் செப்பல்கண்டே. 65

செப்பந்த மானதிப் பாற்செப்பு மன்றத்திரு நெல்லையிற்
செப்பந்த மானதி யாடயிட்டா யின்னந் தேகமொடு
செப்பந்த மானதி யக்கநல்கேல் பண்டு செந்தமிழின்
செப்பந்த மானதிர்ந் தாங்கிசைத் தாருடன் சேர்த்தருளே. 66

சேரனைச் சுந்தரனை யத்தருந்தும் வெந்தீ யவரைச்
சேரனைச் சுந்தரனை யமின்னா ளொடுஞ்சேவி லெய்தீர்
சேரனைச் சுந்தரனை யனையீர் துதிசெய் யவல்ல
சேரனைச் சுந்தரனை யளித்தீர் நெல்லைச் சீர்ச்சித்தரே. 67

சீரனத் தன்றலையோட் டிலுண்பான் கும்பன் செய்ததமிழ்ச்
சீரனத் தன்றலை யாயநெல் வேலிச் சிவன்பரதச்
சீரனத் தன்றலை நீர்சுமந்தான் கடைத்திக் களகைச்
சிரனத் தன்றலைக் கூட்டுடை யானென்பர் சிற்சிலரே. 68

சிலந்திக் கருளிய நெல்வேலி நாதர்வன் சீயமொல்குஞ்
சிலந்திக் கருளியற் சீருட னீந்திலர் சேயிழையார்
சிலந்திக் கருளியமாவேட்டுள் ளேமவர் சேவடிநச்
சிலந்திக் கருளியளி யன்றிவ்வாறு வாடித் திகைத்தனமே. 69

திகையத்தி யஞ்சத்தி கொன்றுரித் தார்கடற் சேதுசெய்மூர்த்
திகையத்தி யஞ்சத்தி யாற்றணந் தாரலைச் சீர்திகழ்
திகையத்தி யஞ்சத்திக் குஞ்சடை யார்நெல்லைச் சித்தர்மிகத்
திகையத்தி யஞ்சத்தி யம்புவி காணத் தெரிப்பதென்றே. 70

தெரியலரஞ் சக்கரத் தாலிடே னக்கதீ யிடைதோய்ந்
தெரியலரஞ் சலியேற் றமைநாடி லன்சீர் நெல்லையாய்
தெரியலரஞ் சனக்கண் ணாருந் தூற்றினர் சிந்தைவென்றித்
தெரியலரஞ் சவிளை யாடலே மிகச்சிந் தித்ததே. 71

சிந்திய லாதிரையான் செப்பு மன்றிற்றின நடிப்போன்
சிந்திய லாதிதொடுப் பார்க்கெளி யன்றிரு நெல்லையே
சிந்திய லாதியை வில்லாதவூர் தொறுஞ்செல்ல னெஞ்சே
சிந்திய லாதினமோடும் வல்லோர் முத்தி சித்திக்குமே. 72

சித்திக் கலந்து பரதவிக் கின்ற சிறியனைவஞ்
சித்திக் கலந்துட்டன் போர்செய்கின் றானருட் சீருனல்லா

சித்திக் கலந்துவிளை யாடப் பார்கொலைத் தீயரைநச்
சித்திக் கலந்துணர்க் கொன்றையெந் தாய்நெல்லைத் திண்ணியனே. 73

திண்ணம் பிறந்துவெஞ் சூர்ச்செற்ற நின்மகன் செஞ்சொல்வினாய்த்
திண்ணம் பிறந்துமிவ் வாறுழல் வேற்கருள் செய்யநண்ணாய்
திண்ணம் பிறந்துணர்க் கண்ணனன் னாரறி சீர்ச்சிவனே
திண்ணம் பிறந்துகெடார் வாழு நெல்லைத் திகம்பரனே. 74

பரவப் பரவக்கடல் கடந்தப் புறம்பார்க் குடையாப்
பரவப் பரவப்பரவை யுந்திடப் பண்ணி னையாற்
பரவப் பரவந் தீர்க்குநெல்லை மெய்ப்பத் தர்தந்தா
பரவப் பரவமண் செற்றானுக் கீந்தசொற் பாலித்திடே. 75

பாலனஞ் செய்ய கனியா திகைத்தன பாவையரி
பாலனஞ் செய்யத் தளர்ந்தேங் கினாள்வந்துப யரவரம்பின்
பாலனஞ் செய்யதிற் றுஞ்சுநெல் வேலிப் பரம்பரநீ
பாலனஞ் செய்யச் சலித்தாலுய் யரண்மெய் பகர்ந்தனனே. 76

பகரண்டங் கோடி படைத்தான் றலையிற் பலியிரந்தாய்
பகரண்டங் கோடிய நீர்நெல்லை யூரத்த பாம்பனைய
பகரண்டங் கோடியம் பேசவொல் கேனையும் பார்த்தருள்பர்
பகரண்டங் கோடி யக்கப் பலவாறு பதைத்தனனே. 77

பதவாரி சங்கொண் டெமனை யட்டாயும்பர் பார்க்கரிய
பதவாரி சங்குமுலை வடிவா ளுறைபங்க பிச்சைப்
பதவாரி சங்கக்குழை யாய்நெல் வேலிப் பரவணியென்
பதவாரி சங்கடஞ் செய்யாத வாறு பணித்தருளே. 78

பணியப் பணியறு காதிய வாழ்சடைப் பண்ணவனைப்
பணியப் பணியறி யாதானை நால்வர் பழிச்சினவாம்
பணியப் பணியர்பலர் வாழு நெல்லைப் பதியிற்கண்டு
பணியப் பணியப்பர ஞானச் செல்வம் பலித்திடுமே. 79

பலிக்கலைந் தாரை யனையாரவர் நெல்லைப் பத்த ரெண்ணாற்
பலிக்கலைந் தாரைய ரென்பணிந் தார்மதன் பாழிருளும்
பலிக்கலைந் தாரையவை போலப் பார்த்தவர் பாசமின்றிப்
பலிக்கலைந் தாரையல் சேர்குறி கூறப் படுத்தினரே. 80

படமலி வாளரவம் புனைந்தா னும்பர பற்பலரும்
படமலி வாளரணீ றநக்கா னெல்லைப் பாவைசெய்க
படமலி வாளர நேர்விழி காட்டின பாழிலினிப்
படமலி வாளரந்தைக் கடல்வற்ற வும்பார்ப் பதுண்டே. 81

பாரதி வாதனை யெய்திடக் கண்டு பதைபதைத்துப்
பாரதி வாதனை முன்னாஞ்சில் லோர்பெறும்பண் பிச்சித்தேன்
பாரதி வாதனையந் தீரச் சேருங்கொல் பாண்டிநெல்லைப்
பாரதி வாதனை பல்லோரு நாணும் பரஞ்சுடரே. 82

பரசாயுதா சனப்புன் னெறியோரை வெல்பான் மைநச்சிற்
பரசாயுதாதி தென்றே னோர்க்கு ரைத்துப்பரிசு குன்றேல்
பரசாயுதா திருநெல் வேலி யாளும் பரமவெனப்
பரசாயுதா ரணநால்வர் கண்டா யென்றன் பாழ்மனமே. 83

பாழி யங்கைய மதவாதி காள்வம்பிற் பன்மகரப்
பாழி யங்கையதன் றென்பாரில வாதங்கள் பண்ணன்மினோ
பாழி யங்கை யகளி றார்க்குநெல்லைப் பதிச்சிவனைப்
பாழி யங்கைய ரொடுகாண வேண்டிப் பழிச்சுமினே. 84

பழிக்கஞ்சி யருந்தியா னாலும்வாழ் பெரும்பா சத்தராய்ப்
பழிக்கஞ்சி யற்கணைச் சீர்பலர்க் காநுவல் பாவலர்காள்
பழிக்கஞ்சி யதுமுதலா மோரைந்தும் பகர்ந்து தொண்டர்
பழிக்கஞ்சி யபெருமா னெல்லை யூரினைப் பாடுமினே. 85

பாடலம் பூத்த திருநெல் லையீசனைப் பைந்தமிழாற்
பாடலம் பூத்தடங் கையார்ப் பெய்கிலம் பாழ்மதன்செய்
பாடலம் பூத்தலை யெய்திநொந்தே மிச்சைப் பட்டனமேம்
பாடலம் பூத்தலைச் சேவலங் கேதனம் பல்படையே. 86

பல்லவந் தங்கிய செஞ்சடையாய் மதிள்பற் றநகும்
பல்லவந் தங்கிய ணியுடை யாய்தண் பணையி லன்னம்
பல்லவந் தங்கியல் பூவாரு நெல்லையப் பாவெனக்கம்
பல்லவந் தங்கியத் தேரானல் காதருட் பாங்கருளே. 87

அருளாடலைத் தந்து மெய்யடியா ரோடமைத்து நின்பால்
அருளாடலை வொழித்தா னென்ன வாழ்வித் தரியமுத்தி

அருளாடலைச் செப்புமன் றுடையாய் நெல்லையப்ப மிக்காம்
அருளாடலை மயங்குஞ் சிந்தையா யென்னை யாண்டவனே. 88

ஆண்டவ தாண்டவத்தார்க் கெளியாய் நெல்லை யம்பலமாம்
ஆண்டவ தாண்ட வயமா யரங்கமணிந் தவிர்பல்
ஆண்டவ தாண்ட வடுக்குடையாய் துதியாசித் தென்னை
ஆண்டவ தாண்டவங் காட்டாயைந் தொண்டரென் றாம்படியே. 89

ஆம்பல வாவியணி நெல்லை யாயயிலத் தனைங்கை
ஆம்பல வாவியதந் தாயிந்தார் சடையந் தண்மால்
ஆம்பல வாவியல் கேதனத்தாய் நின்னருளை நம்பின்
ஆம்பல வாவியற் பாட்டிசைத் தாமுன் னடைக்கலமே. 90

அடையல ரானிய மங்குலைந் தேனயிலா னெனப்பல்
அடையல ரானிய நாள்காண வேண்டியிட் டாதரிக்கும்
அடையல ரானிய யதிலூருந் தேர்நெல்லை யப்பர்களம்
அடையல ரானியல் கேதனத் தார்பதத்தார் தலென்றே. 91

ஆராதனஞ் செய்யணிக் களத்தார் நெல்லை யப்பர்வஞ்சம்
ஆராதனஞ் செய்யக் கொன்றளித் தாரிரங் காதமுரண்
ஆராதனஞ் செய்யசெங் கலிற்செய்து மன்றன் பற்கிட்டார்
ஆராதனஞ் செய்ய வேண்டு நெஞ்சேநின் னகத்தமைத்தே. 92

அகத்திய னாரைப்பொதி யாசலத் திலமர வைத்தார்
அகத்திய னாரைமுத லாயவற் றையு மாண்டுகொண்டார்
அகத்திய னாரையர் பான்மையர் தேக்கனை யார்தமதுள்
அகத்திய னாரையர் நெல்வேலியூர்க் கொரழகியரே. 93

அழலாகத் தாரையர்க்கே யெளியார் நெல்லை யம்பலத்தார்
அழலாகத் தாரையரென் பணிந்தா ரென்னை யாண்டுகொண்டால்
அழலாகத் தாரையன் வேளரி போன்றிகலட் டுயர்வேன்
அழலாகத் தாரையனூ னம்பி வாழு மறுவருமே. 94

வருந்த வருந்தத் துயர்செயும் பாழ்மிடி மாறிமெய்த்த
வருந்த வருந்தமிழ் குன்றாது மேலிடமண் ணின்மற்றெ
வருந்த வருந்தனி நூல்வழியே செல்ல வாய்த்தகடு
வருந்த வருந்தரு மத்தாயும் வாழ்நெல்லை வந்தனமே. 95

வந்தனந் தந்தவர்தம் மையெல்லா முன்புவாழ வைத்தாய்
வந்தனந் தந்தரங் கெஞ்சுகின் றேனைமறுக் கலென்னோ
வந்தனந் தந்தமொப் பார்பலர் சூழ மகிழ்மலய
வந்தனந் தந்தண் பொழிநெல்லை யூர்நடு வானவனே. 96

வானத்தி னானைக் குஞ்சிற் றெறும்பிற்கும் வரமளித்தாய்
வானத்தி னானை யொத்தே வாழவேண்டு மதிதந்ததார்
வானத்தி னானை கைகண்டிலை யோநெல்லை மாநகர்ச்சி
வானத்தி னானை வடிவாயி தன்னை மணந்தவனே. 97

மணந்த கராமலர்க் கூந்தலங் காந்திமதிப் பெணித்த
மணந்த கராம்புயத் தெந்தாய் நெல்வேலியில் வாழ்பரவிம்
மணந்த கரான்மெலிந் திட்ட தந்தோமுன் மதுரையிற்ச
மணந்த கராணவஞ் செற்றா னிலோங்கு மகிழ்ச்சிநல்கே. 98

மகிழடிக்கே கனமண் சுமந்தான் றமிழ்வா ணனுக்கா
மகிழடிக்கே கத்துணிந் தானெற் காத்தவரை வனத்தான்
மகிழடிக் கேகனைச் சுட்டான் விடையில் வரநினைத்து
மகிழடிக் கேகய மீதேறலா மென்றன் வாழிநெஞ்சே. 99

வாழிய வாழி தயத்தாரனே கரைவாழ் வித்தவா
வாழிய வாழி யினொன்னாரை வெல்லும் வரந்தருக
வாழிய வாழி யங்கையான் முன்னாம்பலர் வாழ்த்தெடுப்ப
வாழிய வாழி திருநெல்லை மேவு மணிகண்டனே. 100

நூற்பயன்

வல்லை யந்தாதியர் மான்மிடி யாதியமாறு மொன்னார்
தொல்லை யந்தா திரவும்பக லுந்தவிர்சூழ்ச் சியெய்துங்
குல்லை யந்தாதி னுக்கொப்பாம் பரமன் குளிர்பதந்தோய்
நெல்லை யந்தாதிக் கவிநூறுந் தேறிநிதஞ் சொன்மினே.

முற்றிற்று

26

நெல்லையிதழகலந்தாதி

26

நெல்லையிதழகலந்தாதி

கங்கை யணிய சடையாளர் நெல்லைக்கங் காளரயன்
கங்கை யணியத்தர தந்தா ளலாற்கதி காண்கிலஞ்சங்
கங்கை யணியதி நீக்கேலெந் நேரங் கசிந்திறைஞ்சிக்
கங்கை யணியடை யத்தக்க தாகக் கலக்கநெஞ்சே.

சங்கர னார்செய் யியலிசை நாடகந் தந்தநன்னே
சங்கர னார்தலை யாந்தலை யெய்தினன் றாணினைத்தாஞ்
சங்கர னார்கண்ணி யாகய னீர்த்தடஞ் சார்ந்தநெல்லைச்
சங்கர னார்க்கி தழகலந் தாதியென் றாரிடற்கே.

நிலஞ்சலந் தங்க நிறத்தீ கடையி னிலைகலக்க
நிலஞ்சலந் தங்கலி வாகாயந் தந்தந்த ணெல்லையத
னிலஞ்சலந் தங்கரங் காட்டநின் றாயெங்க ணெஞ்சகத்தி
னிலஞ்சலந் தங்கள்செய லேத்தியார்க் கின்றநீசர் கட்கே. 1

நீசத்த னத்தையன் றன்றாதை யென்கைநிசத் ததென்றா
னீசத்த னத்தைத் தணந்தறநீதி நிறீஇக் களியா
னீசத்த னத்தைத் தசகாத னேயெழினெல் லையிற்ற
னீசத்த னத்தைக் கிடனீந்த நாத நிராதரனே. 2

தரங்கக் கடலைக் கடந்தாற் கெளியர் சராசரநா
தரங்கக் கடலை யணிந்தார் கெடாநெல்லை தாங்கியநித்
தரங்கக் கடலைக் களத்தாரன் னாரடி சார்கலர்தந்
தரங்கக் கடலையிற் சிக்கீயென் றேயெண்ணத் தக்கதன்றே. 3

தக்கன லங்கத்தை யீனஞ்செய் தார்கழை தாங்கினனந்
தக்கன லங்கண்ணி னாலெரித் தார்நெல்லைச் சங்கரனார்
தக்கன லங்கண் ணிடார்க்கரி யார்சண்டன் றாழ்நலியெய்
தக்கன லங்கதத் தண்டையந் தாணற் சரணெனக்கே. 4

சரதந்தராத லநாரிநைந் தாளெனைத் தாங்கி நின்கைச்
சரதந்தராத லில்சக்கரஞ் சத்தித ரிக்கச்செய்தே
சரதந்தராத டையற்றே சக்காண் டிதடஞ் சிலையட்
சரதந்தராத னத்தேற்றி ணைதீர் நெல்லைச் சங்கரனே. 5

சங்கடந் தந்தன நேர்நடை காட்டிளந் தையலர்நே
சங்கடந் தந்தன ளிர்தனச் சேர்க்கை தணக்கலநற்
சங்கடந் தந்தன காதிசைத்தாய் நெல்லைத் தானசற்ற
சங்கடந் தந்தன னீரணைந் தாரைத்தகர்த் திடற்கே. 6

தகரேறி யசத்திச் சேய்தந்த கண்ணத்த சாரணநிந்
தகரேறி யலணிந் தாயடியேனி சைத்தள்ள னண்ணார்த்
தகரேறி யணிக்கே தனஞ்சேர் நெல்லைத் தானத்தினா
தகரேறி யண்டலில் லாத்தகை யாரிடைதங் கச்செய்யே. 7

தங்கக் கிரியணி கையாயெந் நெல்லைத் தலத்தினிடை
தங்கக் கிரியணிச் சக்கரனஞ் சத்த கேறதிரத்
தங்கக் கிரியணி லாங்கணிச் சிக்கைய டாழநடித்
தங்கக் கிரியணிச் சிந்தைநக் காய்நலந் தந்திடின்னே. 8

தந்தியை யட்டனை நெல்லையி லாடினை தானையணி
தந்தியை யட்டடங் கண்ணார நின்றனை சந்தத்தனந்
தந்தியை யட்டனி சேர்கரி யானைத்தணந் திலையெந்
தந்தியை யட்டநல் லாகத்தெந் தாய்தயைச் சாகரனே. 9

சாகந்தனை யழலிட்ட யிலீனர் தகைய ழித்தஞ்
சாகந்தனை யசெறானை யிற்காண்ட ரத்தாங் கெனையீ
சாகந்தனை யகழை யார்ந்த நெல்லைத்தலத் தாநீகேள்
சாகந்தனை யலராற் றந்தநீ யெஙன் றள்ள லன்றே. 10

அலங்காரத் தாளையிடத் தேற்ற நெல்லை யழகசெஞ்சீர்
அலங்காரத் தாளையலெங் களைச்சேர்க்கை யென்றா ரணத்தார்
அலங்காரத் தாளை நெஞ்சாழி யங்கையின ரல்லநையின்
அலங்காரத் தாளை யனீக்கலங் காத்திய கற்றிடலே. 11

அகலத்திற் கேழலந் தந்தந் தரித்ததி லான்றநிலை
அகலத்திற் கேயலைகின் றேனைக் காத்தினி தாளிடங்கை

அகலத்திற் கேடில யன்றலையேற் றனையாசி னெல்லை
அகலத்திற் கேளிநந் தாய்கதிர் காறிரியங் கண்ணனே. 12

அங்கணச் சேறன்ன கண்ணாரை நாடியயர் கையினால்
அங்கணச் சேறன்ன நெஞ்சினின் றாளென் றடியிடலல்
அங்கணச் சேறன்ன ணிநெல்லையா யெண்ணிலானி கல்சார்
அங்கணச் சேறன்ன லாரிலெற்சேர்த் தியறங் கண்ணியே. 13

அறங்கசக் காச்சில ரேங்கலி னேனையரார்க் கையின்றி
அறங்கசக் காதன்ன தீங்கறாற்காச் சற்றகத்தி லெண்ணாய்
அறங்கசக் கானதிற்கை யிட்டநங்கைய்க் கன்றத்தந் தந்தாய்
அறங்கசக் காரஞ்செறி நெல்லை யாய்தினத் தாடரசே. 14

ஆடகக் காசைத் தினந்தின நாடி யலைந்தனனின்
ஆடகக் காசையில் லார்நிந்தை யேற்றன னாரழலின்
ஆடகக் காசையர் தீரச்செய் தானிகராக் கநல்காய்
ஆடகக் காசையிலச் சிலையாய் நெல்லை யாளத்தனே. 15

அத்தக்கட கக்கையா ளிடத்தாடி யணிநெல் லையான்
அத்தக்கட கக்கையா னிடத்தாடி யனஞ்சென்னியில்
அத்தக்கட கக்கையா னிடத்தாடி யான்கணக்கில்
அத்தக்கட கக்கையா ளிடத்தாடி யலதில்லையே. 16

அலந்தலை யாதடி யேந்தனை நீக்கிய கிலத்திடை
அலந்தலை யாதயக் கத்தைத் தணக்கச் செயாரினணி
அலந்தலை யாதடந் தாளேகத் தாடை யனந்தனெல்லை
அலந்தலை யாதல்கண் டார்சிந்தை யாய்கதி யாதித்தனே. 17

ஆதித்த சந்திரரைத் தீயைக் கண்ணிற்றந் தாடகையீர்
ஆதித்த சந்திரரை ஞாணராக் கச்சை யாரநின்றீர்
ஆதித்த சந்திரரை யாயகாட்சி கண்டா லலதென்
ஆதித்த சந்திரரை யாக்கிடா நன்கறிந் தனனே. 18

தனதானி யந்தரத் தக்காரை யேத்தித்த யங்கிடநீ
தனதானி யந்தரந்தைக் கஞ்சி நின்னிசை சாற்றினன்றந்
தனதானி யந்தரத் தாடல்செய் தாய்நெல்லைச் சங்கரசந்
தனதானி யந்தரர் கண்டேங்கெண் சீரெய்தத் தந்தனையே. 19

தந்தான தானத்தன தான நாடகத் தான்சரதத்
தந்தான தானதலைக் கையினா னெல்லை தன்னிடைநித்
தந்தான தானக்களிற் றனநாதி தயித்தி யர்சாந்
தந்தான தானல்கென் கின்றார்க் கெல்லாந்தனிச் சந்திரனே. 20

திரத்தகனத் தநத்தா னெனநா னெண்டி சையினர
திரத்தகனத் தங்களையச் செய்தா ணெல்லைத் தேசிகதந்
திரத்தகனத் தழலட்ட னன்றக் கன்சிரந் தடிந்திந்
திரத்தகனத் தங்கதட்டி நின்றா யெண்ணில் சென்னியனே. 21

சென்னியஞ் சானசெஞ் சித்தர்தந் நெல்லையிற் றெண்டனிட்டார்
சென்னியஞ் சானலி தீர்க்கின்ற நாதர்செழி யற்கந்நாள்
சென்னியஞ் சானந்தந் தந்தாரெ னைநனிசேர்ந் திலரா
சென்னியஞ் சானல நீயிசைக்கின்ற தென்செல் செலங்கே. 22

செலங்கண்ட னயங்கட் சீர்காட் டணங்கினர்ச் சேர்ந்ததனாற்
செலங்கண்ட னந்திய செற்றையிற் றாழ்சிலர்த் தேடிக்கெஞ்சச்
செலங்கண்ட னஞ்செயற் கஞ்சேநின் சேயியஞ் செய்கிணற்றில்
செலங்கண்ட னற்றினந் தாரயெந் நெல்லையிற் செஞ்சித்தனே. 23

சித்தங் கழியநல்லார்க் கஞ்சி டாதிகழ் தீயாக்கர்
சித்தங் கழியச்செயத் தக்கதாந் திறற்சீ ரெய்தநே
சித்தங் கழியரந்தைக் கடற்றாழச் செயலென் னையா
சித்தங் கழியற்சிலர்க் கெளியாய் நெல்லைத் தேசிகனே. 24

சிகரத்தி கிரியை யேந்தியன் றானினஞ் சேர்த்தனனே
சிகரத்தி கிரியிற் சீர்த்தன்னை யாநிகழ்செஞ் சத்தித்தே
சிகரத்தி கிரிநிகரீ னர்க்கஞ்சச் செயேற லையாஞ்
சிகரத்தி கிரியடி யண்ணலே நெல்லைச் சீரியனே. 25

சீரியங் கத்தந்த ராதியர் சேர்நடஞ் செய்தனையாஞ்
சீரியங் கத்தந்த லேன்கேட் கின்றாயிலை செற்றயிலாச்
சீரியங் கத்தந்ததார் நீயன்றா தண்செழித்த நெல்லைச்
சீரியங் கத்தந்த நங்கைதந் தானறி சித்தியனே. 26

சித்தியனந் தந்த ராரணச் சீலர்சிலைச் சிறைதீர்
சித்தியனந் தந்தராதிய ரெண்ணத்திகழ் தரற்காஞ்

சித்தியனந் தந்தராதடி யேனைத்தியக்க னெல்லைச்
சித்தியனந் தந்தராகர் கட்கங்ங னஞ்செய் யரனே. 27

செய்ய னெல்லைக்கிறை யெய்தத்தந் தங்களை தீரனெஃகஞ்
செய்ய னெல்லைக்கிறை நீங்கானி ரண்டெழிற் சேயினனஞ்
செய்ய னெல்லைக்கிறை யாநீர் நனிநிறை சீரினதாஞ்
செய்ய னெல்லைக்கிறை தானேயென் றென்றிற்றிகழ் நித்தனே. 28

நித்தனஞ் சங்கரத்தா லேந்தி யார்ந்தநி ராதரகந்
நித்தனஞ் சங்கரயர சென்றாய் நிறைநீ ரெய்தித்த
நித்தனஞ் சங்கரநீங் காக்கடக நின்னெல் லையிற்ச
நித்தனஞ் சங்கரஞ் சாதார்க்கச் செய்தியிந் நேரத்திலே. 29

நேரத்தனே கத்தனந் தரிதழி நிலாச்செ யெண்ணில்
நேரத்தனே கத்த னேதனி நாடகனே நெல்லையா
நேரத்தனே கத்தனே ரநின்றா யென்ன நித்தநித்த
நேரத்தனே கத்தனீ ராடையார்ந் தநிலத்தி னர்க்கே. 30

நூற்பயன்

நல்லை யிதழகலந் தாதி தழியனா னத்தனக்
கல்லை யிதழகலந் தாதிரி தரக்கா ணளியான்
செல்லை யிதழகலந் தாதிணை யென்றசேச் சத்தத்தா
னெல்லை யிதழகலந் தாதிதேர்ந் தின்ன னீக்கனன்றே.

முற்றிற்று

27

தில்லை வெண்பாவந்தாதி

27

தில்லை வெண்பாவந்தாதி

சீர்குலவு தெய்வத் திருமன் றுடையானைக்
கார்குலவு கண்டத்தோர் காரணனை - நார்குலவு
நெஞ்சமொடு போற்று நெறியிற் புகுதாமன்
மிஞ்சநெடு நாட்கழித்தேன் மெய். 1

மெய்யனெனும் பேர்விரும்பிப் பரவு மென்னைப்
பொய்யனெனப் பல்லோர் புகல்கின்றா - ரைய
மறுத்தாள்வ தென்றுரையா யம்பலத்தி லென்றுங்
கறுத்தான்மே லாடுமழ கா. 2

அழகியசிற் றம்பலத்தி லாடல் புரியுங்
குழகனையே முற்றும்நம்பிக் கொண்டு - பழவினையைச்
சீறு மடியார் திருத்தாட்டு கள்புனையும்
பேறுபெற்றேற் குண்டோ பிழை. 3

பிழையனந்தம் செய்துமகிழ் பேயேன் றனையும்
விழையும் பெருங்கருணை மேயேன் - மழையுகைக்கு
மற்றங்கு வாரெலும்பு மாலையணிந் தாடுகின்ற
சிற்றம் பலத்துச் சிவன். 4

சிவனன்றி மற்றுமொரு தெய்வமுண்டென் றெண்ணுந்
தவறுண்ட நெஞ்சகத்தோர் தாமும் - பவவேலை
நீந்திப் பொதுவெளியி னின்மலமா வாழ்வரென்றி
யாந்திக் கனைத்தினுங்கே ளேம். 5

கேளாச் சுருதி கிளத்தும் பொருண்முடிவுந்
தாளாண்மை யின்றித் தருவானே - வாளாய
கண்ணா ளெதிரில் கவினார் கனகமன்றி
னுண்ணா டகம்தினஞ்செய் வோன். 6

செய்ய பவளத் திருமேனிச் சீர்குலவு
மையனைக்கண் டாகச்சிற் றம்பலத்தி - லுய்யப்

பிறந்தவரே மாதவத்தின் பேறடைந்தோர் மற்றோ
ரிறந்தவரிற் றாழ்ந்தவர்தா மே. 7

தாமக் குழலார் தவளத் தரளநகைக்
காமர்க் குருகிக் கழிந்தாலு - மீமத்தி
லாடினான் தில்லைமன்றத் தம்மா னருட்பெருக்கும்
பாடினா லுண்டே பயன். 8

பயனொன்று நாடாது பஞ்சாக் கரத்தை
நயமொன்றப் போற்றிசைக்கு நண்பர்க் - கயலொன்று
மில்லாதுதா னாயிலங்குவ தில்லை யம்பலத்து
வல்லானே நங்குலதெய் வம். 9

தெய்வம் பொதுவெனுஞ்சொற் றேயமெங்குஞ் செப்பிடினும்
பொய்வழியிற் சென்று புலர்கின்றோ - ரைவகைய
வாந்தொழிற்செய் தம்பலத்தி லாடுகின்ற தென்றறியார்
சாந்தொழிற்றே வைத்துதிப்பார் தாம். 10

தாம்பிரத்தை யன்னமனந் தங்கமொக்குந் தன்மையெய்திற்
பாம்பிருந்த சென்னிப் பரமனார் - காம்பிணைத்தோட்
கன்னியுட னாடுங் கனகமன்றின் சீர்குலவு
மென்னிதயஞ் சாட்சி யிதற்கு. 11

இதுவதென வாதமொழிந் தேமாந்து வீணே
சதுமுகனை வேலைகொள்ளுந் தன்மை - பொதுவி
லொருகாலில் நின்றாடு முத்தமனைப் போற்றி
யருகாகார்க் கெய்துகின்ற தாம். 12

ஆமாமென் றுள்ளநெறி யத்தனையு மொப்புமொரு
கோமாளி யானகுணங் கொண்டேனே - தாமாகிப்
பூசுரர்வாழ் தில்லைப் பொதுவினடிப் பானருளைப்
பேசுநலம் பெற்றமைந்த பின். 13

பின்னும் பிறவாத பேறடைதற் கானதவந்
துன்னு மனத்தோர்க்குத் தோன்றுமே - பன்னுமறை
யத்தனைக்கு மாதரமா யம்பலத்தி னின்றோனே
நித்த னெனச்சொல்லு நிசம். 14

நிசமறந்து பொய்வழியி னெஞ்சைவிட்டு மாயும்
பிசகுடையார்க் கெய்தரிய பேறே - கசமுரித்துப்
போர்த்தமரார் வாழ்த்தப் பொதுவி னடம்புரிவான்
சீர்த்தபுக ழேத்துஞ் செயல். 15

செயலனைத்துந் தில்லைநகர்ச் சிற்றம் பலத்தி
லியலுமவன் றன்ன தெனலா - மயல்போற்
படித்த மொழிவினவிப் பார்த்தனன்று வில்லா
லடித்தவடி பட்டதுணர்ந் தால். 16

ஆல நிழலி லருட்சற் குருவான
கோல மறந்தாலுங் கூத்தாடி - போலவொரு
மன்றினின்ற கோல மறவாரே மாதவத்தா
லொன்றி னிலைமையுணர்ந் தோர். 17

ஓராமல் பொய்சொற் றுலகிற் பொருள்விளைக்கு
நீராளர் போலநிகழ் வேற்கும் - பாராளு
மன்னரஞ்சத் தக்கபெரு வாழ்வளிக்க வல்லாயோ
பன்னருஞ்சிற் றம்பலத்தப் பா. 18

அப்ப மவலெள் ளரிசிமுத லாமவற்றைக்
கப்பவல்ல ஞானக் களிறொன்றும் - வைப்படைவேற்
சேயொன்று மீன்றருளிச் சிற்சபையி னின்றாயென்
வாயொன்றுஞ் சொற்கள் வினவாய். 19

வாயிலொரு தெய்வம் வசிக்கின்ற தென்கைபொய்யாய்ப்
போயிடினு நின்நிறைவும் பொய்யாமோ - யாயிலெனை
யாட்டுவது நீயன்றோ வம்பலவா வென்றமிழ்ச்சொற்
பாட்டு முனக்கே பரம். 20

பரமாய நீயிருக்கப் பல்சமயத் தோருந்
தரமாவெவ் வேறமைத்துத் தத்த - முரநாடிப்
போர்விளைக்குந் தீமையினைப் போக்கநினைத் தேனருளாய்
சீர்விளைக்குந் தில்லை யரசே. 21

அரசே சிவகாமி யம்மை மணவாளா
பரசார்க் கிரங்காப் பரனே - முரசார்க்கும்
வாயிற் றிருக்கோயின் மன்றுடையா னேயெனைநின்
சேயிற் றிகழ்வின்னே செய். 22

செய்ய நிறத்தினிரு சேயீன் றருள்சிவையோ
ரையனைப்பா னல்கிமக வாக்கினா - ளுய்ய
வெனையெடுத்தா லவ்விரண்டோ டிவ்விரண்டொப் பாமே
கனைகழற்சிற் றம்பலவா காண். 23

காணங் கருதுங் கலிநோய் வளைந்ததனா
னாணம் பெருத்து நலிவேற்கும் - வேணபடி
வானவர்க்கு மெய்தா வரமளிக்க வல்லாயோ
வீனமில்பொன் னம்பலத்தா னே. 24

ஏய வுயிர்த்திரள்கட் கின்பநல்க வெண்ணியெண்ணி
மாய விதித்தனையே யையகோ - தூயவருட்
சித்தியொன்று மீந்திலையே சிற்றம் பலவாவென்
பத்தியிற்பொய் யுண்டோ பகர். 25

பகலனைய நின்னருளென் பாவ விருள்டோ
யகவெளியி லென்றுதிக்கு மையா - மகரக்
குழையாகச் சங்கணிந்த கோமானே தில்லை
யுழையாடு வானே யுரை. 26

உரையுணர்வுக் கெட்டா துன்னருளென் றோர்ந்துங்
குரைஞமலி வென்னமிகக் கூவித் - தரையறியப்
பத்தனைப்போற் பாராட்டும் பாவியே னுய்வேனோ
வித்தகப்பொன் னம்பலவாழ் வே. 27

வாழ்வி லுயர்ச்சியெய்த வாஞ்சித்து மாநிலத்திற்
றாழ்வி லுயர்ச்சியெய்தித் தட்டழிந்தே - னாழ்வினைஞர்
தம்முடன்சேர்த் தாளாய் தமநியச்சிற் றம்பலத்தோர்
மைம்முயன்மே லாடுமுதல் வா. 28

முதல்வன் பொதுவிலெல்லா மூவாத வண்ணம்
பதமெடுத்து நின்றாடும் பண்பு - மதலைப்
பருவத்தோர் காண்பதென்று பத்திமுற்றும் ஞானத்
தருமத்தோர் காணத் தகும். 29

தகுவர் புரமெரிந்து சாம்பர்படச் சற்றே
நகுமொருவன் றன்னைமிக நம்பி - வெகுவிதமுந்
தீர்ந்ததில்லை யம்பலத்தின் சீரறிய வல்லாரே
யார்ந்த வுணர்வுடையோ ராம். 30

ஓரா முதற்சுருதி யுட்பயன்வந் துள்ளொளிர
வாராமை யெய்தி யழுதுருகுஞ் - சீராளர்க்
கெய்துங் கதியெனக்கு மீவானோ வென்றுமருள்
பெய்துமன்றி லாடும் பிரான். 31

பிரச மலர்க்கடுக்கைப் பிஞ்ஞகனைத் தில்லைக்
கரசனென வெண்ணி யடைந்தேன் - சரசநய
மேவுமத னீறா விளங்குகின்ற தெய்வங்களி
யாவுமவ னாகிநின்றா னே. 32

நின்ற மனத்தார் நினைவிற்கு மெட்டாத
தொன்றதனை நன்குற் றுணருங்கான் - மன்றகத்திற்
றிங்கட் சடையாடத் தேவியொரு பங்கினடித்
தெங்கட் குரிமைகொள்வ தே. 33

கொள்ளரும்புன் போகங் குறித்துப் பரதவிக்குங்
கள்ளமனஞ் சீர்திருந்தக் காட்டுவாய் - விள்ளரிதா
மானந்தக் கூத்தியற்றி வம்பலத்தி னின்றடியா
ரீனந் தவிர்க்கவல்லா னே. 34

வல்லை யெனையாண்டு மாயையென வாதிப்போர்
சொல்லை யடக்குந் தொழிலீவாய் - குல்லைவனம்
பூத்தா லெனச்சிறந்து பொன்னம் பலத்திலருட்
கூத்தாடல் செய்யெண் குணா. 35

குணமிறந்த சூனியமாக் கூறு மவர்தங்
கணமகிழ நான்வாடல் கண்டாய் - துணர்சொரிந்து
பூசித்தார் வாழ்ந்ததெல்லாம் பொய்யோ பொதுத்திருக்கூத்
தாசித்தா யின்னே யருள். 36

அருளாண்மைச் சித்திநல மாசித்த பின்னர்
மருளாளர் பாலிரக்க வைத்தா - யிருளார்
வினைபுகழ்ந்தார்க் கில்லையெனும் வேதமொழி பொய்யோ
நனைமலர்த்தா ளம்பலவா ணா. 37

அம்பலவா வென்னெதிர்நீ யாடென் றவன்மொழிகேட்
டும்பர் வியப்பெய்த வுஞற்றினாய் - நம்படிமை
துன்பக் கடலைத் தொடைத்தருளக் கூடாதோ
வின்பக் கனியனையா னே. 38

அனையா ரொருவருமி லம்பலவ னெஞ்சிற்
றினையா மளவெனினுஞ் சிந்தித் - தெனையாள்கைக்
கெண்ணுவனே லூனருந்தி யேப்பமிடு வார்பலர்க்கு
மண்ணுலகின் வாழ்க்கைமுடி வாம். 39

வாமத் தொருமகளை வைத்தானை வண்கடுக்கைத்
தாமத் தொடையற் சடையானை - யீமத்தி
லாடியெயனச் சொல்வார மூகியசிற் றம்பலத்தைத்
தேடி வணங்காச் சிலர். 40

சிலவா றொருவேளை சிந்திக்குஞ் சிந்தை
யலவா றமைவுறலொப் பாய - பலவாறு
முன்னருட்கூத் தன்றோ வுயர்புகழ்ச்சிற் றம்பலத்தின்
மன்னனென வாழ்முதற்றே வா. 41

தேவா திபருடற்பல் சின்ன மணிந்தானே
மூவாக் கனகசபை முன்னவனே - வாவாவென்
றெத்தனைநாட் கூவியிளைத்தே னிரங்காம
லித்தனைநா ளும்பொறுத்தா யே. 42

பொறுக்கரிய தீமைபல பூதலத்திற் கண்டு
மறுக்க முறுந்துயர மாற்றாய் - கறுக்கு
மிடற்றானே தில்லைநகர் வேதியனே யிந்த
வுடற்றானு முன்னதல்ல வோ. 43

அல்லற் கடலூ டமிழு மடிமையிந்த
மல்லற் புவியின் மகிழ்வேனோ - சொல்லரிய
ஞானானந் தப்பொருளா நற்றமிழ்ச்சிற் றம்பலத்தி
லானாது நின்றா யறை. 44

அறைகழற்றா ளொன்றூன்றி யம்பலத்தி லாடு
மறையவனை நாடா மனமே - பிறையனைய
பற்காட்டிக் கூற்றன் பகடூர்ந் தெதிராம
னிற்காப்பா ருண்டோ நிகழ்த்து. 45

நிகளம் படுங்களிற்றின் னெஞ்சயர்கை நீக்கி
யகளங்க ஞான மருளாய் - சகளமொடு
நிட்களமா யம்பலத்தி னின்றோனே நீலிமனம்
வெட்கநடித் தோனே விரைந்து. 46

விரையார் கடுக்கைநிகர் மிக்கதமிழ்ப் பாட
லுரையார் சிலருமுய்ந்த துண்டேற் - றிரையாழிப்
பாரிலென்னை யாளாயோ பம்புதில்லை யம்பலத்தோர்
நேரிழைமுன் னாடுகின்றோ னே. 47

நேய மறிய நிலவுந் திருவருளிம்
மாய வுலகில் வயங்காதோ - தூய
பொடியாடித் தில்லைநகர்ப் பொன்னம் பலத்தின்
மடியாமல் வாழுமிறை வா. 48

இறையளவு மெய்யுணர்ச்சி யில்லாதார் தாமுங்
குறைபகரக் கேட்டுக் கொதித்தே - னிறையு
மருளாண்மை யென்றருள்வா யம்பலத்தி லுண்மைப்
பொருளா கியசிவசம் போ. 49

சம்போ மகாதேவா சங்கரா வென்றுதின
மம்போதி நீரொத் தரற்றுவார் - செம்போதந்
தேடு மகிமை திகழ்திருச்சிற் றம்பலத்தைப்
பாடுமவர்க் கில்லை பயம். 50

பயன்வேண்டிப் போற்றிசைக்கும் பாவியேன் நெஞ்சின்
மயனீங்கச் செய்தருள வாராய் - கயல்போலுங்
கண்ணா ளெதிரிற் கனகமன்றிற் கூத்தாடு
மண்ணா மழுவணிதோ ளா. 51

தோளின் மறியைச் சுமந்தானைத் தோகையர்சூழ்
வேளிமைப்பி னீற விழித்தானைக் - காளியுடன்
வாதாடி வென்றானை மன்னுதில்லை யம்பலத்தி
னாதாந்த னென்றுணர்ந்தோ நாம். 52

நாமம் பலவு நவில்வார்க் கெளியபிரான்
வாமந் தனிற்குலவு மங்கையான் - றாமரைப்பூ
வாவிமலி தில்லைநகர் வாழ்வனையா னெவ்வுயிர்க்கு
மாவியென்ப தோர்வ தரிது. 53

அரியு மயனு மறியாம னின்ற
பெரிய பெருமான் பெருமை - தெரியுமிட
மெள்ளா நலம்பொலிவுற் றெச்சமயத் தோராலுந்
தள்ளாத தாஞ்சிற் சபை. 54

சபல மனக்குரங்காற் றட்டழிகின் றேனுக்
கபரிமித சித்தி யளித்தப்பா - லுபநிடதத்
துண்மையையுங் காட்டானோ வோங்குதிருத் தில்லைமன்றில்
வண்மைநட மாடுமொரு வன். 55

ஒருவரிய தூலவெளிக் குள்வெளியா நின்று
முருவமொடுந் தோன்றவல்லா னுண்டே - குருவழங்குஞ்
சொல்லைமிக நம்பித் துணிவார் மனம்போலுந்
தில்லைநகர்க் கோயிலிடத் தில். 56

தில்லைக் கனகமன்றிற் றேவர்குலஞ் சேர்ந்திறைஞ்ச
வல்லைப் பழிக்குமுலை மங்கையெதிர் - தொல்லைமறை
யோலிட்டுக் கெஞ்ச வொருவா நடம்புரிவான்
காலிற் புகலே கதி. 57

கதியளிக்கை மெய்மையெனிற் காசினியி லென்றன்
மதிவிருப்ப மெல்லாம் வழங்கித் - துதிபுனைவா
யன்றோ கனகமன்றத் தாடி யகண்டமென
நின்றோனே யாவும்வல்லா னே. 58

நேரிழையார் மோக நிகளத்துந் தீயதெனப்
பாரினரு மொப்பும் பசும்பொன்னாற் - சீரிழந்து
போகாம லென்னைப் புரந்தாள் பொதுவெளியி
லேகாந்த மாநடிப்போ னே. 59

ஏய வுனையன்றி யாவரையு மெண்ணேனின்
சேயவரோ டென்றனையுஞ் சேர்த்திடாய் - பாய
வருபுலியைக் கொன்றுரித்தாய் வானுலகும் போற்றுந்
திருமருவு தில்லையர சே. 60

அரனே சிதம்பரத்தி லாடல் பயிலும்
பரனே யுனைத்தமிழாற் பாடிக் - கரமலர்கள்
கூப்புநலந் தந்தாய் கொடியேன் குறித்தபல
கோப்பும்விரைந் தின்னே கொடு. 61

கொடுங்கோப மாமறலி குன்றமென வீழ
யடுங்கோ கனகமலர்க் காசைப் - படுங்கோலங்
காட்டினே னெஞ்சங் கரையேன் கனகமன்றத்
தாட்டினா னேயிரங்கி யாள். 62

ஆளாயென் றேத்து மடியேன் றனையிகழ்ந்தாற்
றோளார்ந்த முப்புரிநூற் சுந்தரன்பாற் - றாளா
னடந்தகதை மெய்யாமோ நாற்றிசையுஞ் சொல்சீர்
படர்ந்ததில்லை யானே பகர். 63

பகரம் பலகாட்டிப் பார்வையம்பு நெஞ்சிற்
புகவந்து நிற்பவர்பொய்ப் போக - மிகவேண்டும்
புன்மையென்று தீர்வேன் பொதுவி னடம்புரிந்து
நன்மைதரு மீசா நவில். 64

நவிலரிய நான்மறையு நால்வர் முறையுங்
கவிஞர்து தியும்கொள் கழலில் - குவியா
மனத்தினேன் சொல்லும் வனைவாயோ தில்லை
வனத்தினட மாடியதே வா. 65

வாரஞ் சிறிதேனும் வைத்திலையே லிந்தமட்டு
மீரந் தமியனேற் கெய்துமோ - கோரமடந்
தீர்க்குங் கருணையென்று செய்வாயோ தில்லைமன்றத்
தார்க்குங் கழலணிபா தா. 66

பாதச் சிலம்பலம்பப் பல்லியங்க ளார்ப்பரிக்கக்
கீதத் துதிமுழங்கக் கிள்ளையன்னாள் - போதக்
களிகூரச் செய்யுநடங் காட்டியென்னை யாளா
யளியார்சிற் றம்பலநா தா. 67

நாதங் கடந்த நலமேநின் மேனியென
வேதங்கள் கற்றோர் விளம்புவார் - நீத
மறிகிலேன் சேந்தன்கூழ்க் காசைகொண்டோ னென்பே
னெறிகதிர்ப்பொன் னம்பலத்தா னே. 68

தானந் தவமறியேன் சட்சமய வாதமன்றி
மோனஞ் சிறிது முயல்கிலேன் - ஞானமளித்
தாள்வாயோ தில்லை யரனே யளவில்பல
கோள்வாதை நீங்கற் குறித்து. 69

குறியிறந்த நிச்சயநின் கோல மெனவே
யறிஞர் பலர்சொற்றிடி னுமங்கை - மறிமழுவு
மாதியசீர் நான்மறவே னாடகச்சிற் றம்பலத்து
வேதியனே யென்னை விடேல். 70

விடங்கொண்ட கண்டத்து வித்தகா வென்றி
நடங்கொண்ட தில்லைவன நாதா - திடங்கொண்ட
மால்விடையிற் றேவியொடு மைந்தனொடு முன்னுமென்மேல்
கோல்விடலா மோமடவார் கோன். 71

கோனாகிப் பார்புரக்கும் கொள்கையினு மிச்சையின்றி
வானாட்டுக் காவலினும் வாஞ்சையற்றுப் - போனார்க்
கிரங்கி யருள்பெருமா னேதமில்சீர்த் தில்லை
யரங்கி னடிக்கும மலன். 72

அமலபர மானந்தத் தம்பல வாணன்
கமலமலர்த் தாளே கருதிற் - சமரசப்பே
ரின்பமெய்து மன்றி யிதுவதென வாதாடுந்
துன்பமொரு சற்றுந் தொடா. 73

தொடக்குக் குழியைச் சுகமென்று நாடிக்
கிடக்கு மனமயக்கங் கெட்டு - விடக்கு
முடையார்வா ரீடழிப்பார் முன்னுதிருத் தில்லை
யுடையானைப் போற்றுவதென் றோ. 74

என்று மதிமயங்கி யெனுமூன்றுங் கண்ணானார்
மன்றுவெளி யான வகைகண்டு - கொன்றுதின்னா
நோன்புற் றருந்தவஞ்செய் நுண்ணியரெல் லாமவர்தம்
வான்புத் திரரெனவாழ் வார். 75

வாரணியும் கொங்கை மடநல்லார் வாஞ்சையென்னுங்
கோரணிகொண் டேங்குநெஞ்சே கூறக்கே - டாரணியைத்
தேராக்கி யூர்ந்தபிரான் றில்லைச் சிதம்பரத்தை
யோராக் கிலேச மொழி. 76

ஒழியாப் பிறவி யொழித்துய்யு முபாய
வழியாதென் றாராயின் மன்றத் - துழியாடும்
பித்தன் கழலாம் பிரசக் கமலமலர்
நித்தங் கருது நெறி. 77

நெறியிழந்துன் றன்னருளை நித்தநித்த நாடுங்
குறியிழந்து நெஞ்சங் குலைந்தேன் - மறியணிந்த
கையானே தில்லைக் கனகமன்றத் துள்ளாடு
மையா வெனைத்திருத்தி யாள். 78

திருத்தி மயமாஞ் சிவஞான போதக்
கருத்தி லமைந்தவரே காண்பா - ரொருத்தியுடன்
கல்லைநிகர் நெஞ்சினருங் கண்டுருகக் காமர்மலி
தில்லைமன்றி னின்றோன் செயல். 79

செயலைத் தருவிழையுந் தீயரினுந் தீயா
ரியலைப் பழிப்பதற்பா னென்னை - முயலவிட்டு
வேறு மயலும் விளைக்கின்றோன் மிக்கமன்றி
லாறுபுனைந் தாடு மவன். 80

அவமறுத்து மெய்யடியார்க் காளாகி யுண்மைத்
தவமுயலு நல்லுணர்வைத் தாராய் - பவளவரை
யென்னக் கனகமன்றி லென்றுநடிப் பாயெனக்கிவ்
வின்னற் படமுடியா தே. 81

ஆதார நின்னருளை யன்றி யறிகில்லேன்
னீதா னிரங்காமை நீதமோ - வேதாவின்
சென்னியிலேற் றுண்டுமகிழ் சிற்றம் பலவாவிங்
கென்னினைப்பு முன்றனசை வே. 82

அசையா நிலையா லருணெறியைப் பற்றி
வசைதீர்ந்த பேராண்மை மன்னித் - திசையாவும்
வெல்ல முயலுவது மேதகுசிற் றம்பலத்து
வல்லவனை நாடு மனம். 83

மனம்போம் வழியேபோய் மாழ்குவேன் வல்லா
ரினம்போந் தவநெறியி லெய்தித் - தினம்போற்றி
யுன்னை யடைவேனோ வோங்குபுகழ்த் தில்லைமன்றந்
தன்னையிட மாக்கொளுமெந் தாய். 84

எந்தை கனகமன்றத் தீச னிருசெவிக்கு
நந்தை யணிந்து நடஞ்செய்வோன் - சந்தைநிக
ரிவ்வுலகத் தென்னை யெடுத்தாண்டா லெத்தகைத்தா
மெவ்வுலகும் போற்றிசைக்கு மே. 85

இசையாத வாற்றினையு மெண்ணியெண்ணி யேங்கி
வசைதோயப் பெற்ற மனமே - கசையேந்திக்
கோலவிடை யூர்வார் குலவுதில்லை யம்பலத்தைச்
சால நினைந்துருகிச் சார். 86

சார்ந்தவருக் கின்பந் தருந்திருச்சிற் றம்பலத்தை
நேர்ந்தவருக் கன்றி நிலவாதே - யார்ந்த
பலசமயப் போராட்டம் பாராட்டு கின்ற
கலகமறு முண்மைக் கருத்து. 87

கருத்தனெழிற் றில்லைக் கனகமன்றிற் செய்யு
நிருத்தனிரு பொற்றா ணிணையில் - வருத்தமுற்றுந்
திருமெனப் பன்மறையுஞ் சித்தந்தெளிந்த வல்லோ
ரியாரும் பகர்வதுண்டுண் டே. 88

உண்டுண் டுறங்கி யுலகப் பொருள்விழைந்து
வண்டுண்ட பூங்குழலார் வாய்மொழியாங் - கண்டுண்டு
நைவோ ருறவுதில்லை நாயகன்பொற் றாட்கடிமை
செய்வோருக் காகாத தே. 89

ஆகாரத் திச்சை யடக்கே னணிநகையார்
போகாந்த காரத்திற் புக்குழல்வே - னீகாவா
விட்டாலிங் குய்யேன் விளங்குதில்லை யம்பலத்திற்
றட்டாது நின்றபுனி தா. 90

புனிதத் தமிழுணராப் புல்லர் தமையு
மனிதரென நாடலற மாற்றாய் - பனிதருபொற்
றாளெடுத்துத் தில்லைநகர் தன்னினடிக் குந்தலைவா
வாளெடுத்த கண்ணுமைகேள் வா. 91

கேளி ரனையாருங் கெட்டானென் றேசுமென்னு
ளாளிநிகர் வீர மமைத்ததேன் - வாளியொன்று
வில்லடிக்கன் றீந்த விடைப்பாகா வீறுதில்லை
நல்லடிக ளாயமுக்கண் ணா. 92

முக்கட் பெருமானே மும்மூவர்ப் பார்த்தளவில்
கைக்கட்கத் தாருதிப்பக் கற்பித்தாய் - மிக்கட்ட
மூர்த்தியுமாந் தில்லை முதல்வா முதுகரித்தோல்
போர்த்தியவா வந்தருளிப் போது. 93

போதா லருச்சித்துப் போற்றிசைக்கும் பூசனைச்சீர்
மீதாவ லுற்றுமெலி வேனை - நீதா
னொருசிறிதும் பார்த்திலையே யொப்பில்புகழ்த் தில்லை
நிருமலனே சற்றே நினை. 94

நினைக்கின்ற நெஞ்சினுள்ளு நீயிருப்ப தோர்ந்தும்
வினைக்கும் பகைக்கும் வெருண்டேன் - சினைக்கொண்ட
லார்க்கும் பொழிற்றில்லை யம்பலவா தொண்டருடன்
சேர்க்கும் படிகருணை செய். 95

செய்ய பவளவரைச் சீரார்ந்த மேனிமுற்றுந்
துய்யதிரு நீறணியுஞ் சோதியே - வையம்
புகழ்ந்திசைக்கும் தில்லைநகர்ப் புண்ணியனே பல்லோ
ரிகழ்ந்திடநீர்த் தாண்டருள்வா யே. 96

அருள்வாய்ந்த மெய்யடியார்க் காட்பட் டிடாம
விருள்வாய்ந்த கூந்தனல்லார்க் கேங்கி - மருள்வாய்ந்த
கேடியல்வ தென்றொழிப்பாய் கீர்த்திமிகு தில்லையினின்
றாடியபொன் னம்ப லவா. 97

பொன்னம் பலத்தானே பூதகணஞ் சூழ்வானே
தன்னந் தனியான தத்துவனே - இன்னம்
பிறவாமற் காப்பதன்றிப் பேருலகி னோர்போன்
றிறவாதுங் காக்கைகட னே. 98

கடல்விட் டெழுந்தான்போற் காசினியில் வாழுந்
திடமிக் குதவியென்னைத் தேற்றி - நடனத்
திருவடியிற் சேர்த்தருள்வான் றில்லை நகரிற்
குருவடிவங் காட்டுமுதற் கோன். 99

கோனாகி யும்பர் குலம்புரப்பா ரென்பணிந்து
வானாய தில்லைமன்றில் வாழ்வானுக் - கானாத
பத்தி புரிந்து பசுந்தமிழ்ப்பாச் சூட்டுநர்க்கே
சித்தியொடு முத்திபெருஞ் சீர். 100

முற்றிற்று

28

தில்லைக் கட்டளைக் கலித்துறையந்தாதி

28

தில்லைக் கட்டளைக் கலித்துறையந்தாதி

ஆனை முகனைக் கதிர்வேற்
குகனை யளித்தருள்வான்
மேனைமின் னாள்மகள் கேள்வன்
திருத்தில்லை மேயபிரான்
தேனையொக் குந்தமிழ் பாடிய
நால்வரைத் தேற்றியவ
ருனையுந் தன்வடி வாக்கிய
வாறுல கோதிடுமே. *1*

ஓதிய வேதம் பலதேட
வாங்கவற் றுள்ளும்நின்ற
வேதியன் றன்னை விடையேறு
வானை விளங்குதில்லை
யாதியைப் பல்வித மாநினை
வார்களுள் ளம்பிகைப்பெண்
பாதிய னென்பவர்க் கேயுண்மை
ஞானம் பலித்திடுமே. *2*

பலிக்கென்றொ ரோடுகைக் கொண்டுவெண்
ணீறணி பான்மையராய்ப்
புலிக்கன் றுரியுடுத் திங்குவந்
தார்தில்லைப் புண்ணியனார்
கலிக்குஞ் சிலம்பணி காற்பேதை
போய்க்கண்டு கைகுவித்தாள்
வலிக்கொன்று கைக்கொடி யோன்றொடுத்
தான்மலர் வாளியையே. *3*

வாளிணைக் கண்மடவீரெனக் காடை
வயங்கு கொன்றைத்
தோளினர் தம்மைப்பொன் னம்பலத்
தேகண்டு தோய்ந்திடவே

வேளிகன் முற்றியுந் தாய்வசை
 மீறியு மெத்தநொந்தே
னாளிது நன்றவ ரோர்ந்திங்கு
 வந்திடி னன்றுநன்றே. 4

நன்றனைத் துந்தருந் தில்லைப்
 பிரானென நம்பு மன்பாற்
குன்றனைத் துங்கொளுஞ்சேய்போல்வைத்
 தாளெனக் கூவிக்கெஞ்சு
மென்றனைத் தொண்டரிற் கூட்டுங்
 கொலோவல்ல தேமன்கையால்
வென்றனை யாதனத் தான்படைப்
 பாகவிடுக்குங் கொலோ. 5

விடுக்கின்ற தூதனு மாய்த்தமிழ்ப்
 பாடல் விழைந்தணிந்தோ
னெடுக்கின்ற தாளுடைத் தில்லைப்
 பிரான்பொன் னிதழியெனத்
தொடுக்கின்ற வென்கவி சூடா
 திகழினுந் தோடமில்லை
யடுக்கின்ற மெய்யடி யாரினங்
 கேட்டுவப் பாகுமன்றே. 6

அன்றைக் கொருவ னொருபது
 பாடலுக் காடகமுங்
குன்றைப் பொருவுநெற் கோட்டையு
 மீந்த குணஞ்சிறிது
மின்றைக்குன் பாலில்லை யேற்றமி
 யேனுய்கை யேதையகோ
கொன்றைச் சடைத்தம் பிரானேதென்
 றில்லையிற் கூத்தினனே. 7

கூத்தாடு மீசனைத் தில்லையில்
 வாழுங் குணக்கடலைச்
சேத்தாள் வருந்தப் பரவைதன்
 பான்மிகச் செல்லவிட்ட
பாத்தானெவ் வாறந்த வாறென்ற
 னாவிற் பகரடியோ

நீத்தாரு மால்கொள வேண்டா
மரையி னிலவுமின்னே. 8

மின்நேருஞ் சிற்றிடை யாளிடந்
தூது விடுத்ததெண்ணிப்
பொன்னேர் தமிழ்ப்புல வோர்தங்க
ளாவலைப் போக்கினையோ
வென்நேய மப்படிச் செய்யாது
வந்தின்ப மீந்தருள்வாய்
நன்னேயத் தோர்க்கெளி யாயல்லை
யோதில்லை நாயகனே. 9

நாய்போலு நெஞ்சை மதவேழ
மாக்கிட நண்ணுகின்றேன்
றாய்போல்வந் தாண்டுமை யாண்முலைப்
பான்மிகத் தந்துனது
சேய்போ லொளிர்தரச் செய்யினல்
லாலிச்சை தீருங்கொலோ
காய்போலுந் தன்மையர்க் காகாச்சிற்
றம்பலங் காப்பவனே. 10

காப்புடன் முற்று மணிவாரைத்
தொண்டர்கணக் கிற்சொன்ன
பாப்புகழ் சத்திய மானாலுய்
வேனெனப் பாடுமிறு
மாப்புநின் றன்னரு ணல்கலன்
றோவல்லை வாழ்வித்திடாய்
கூப்புகை யார்க்கெளி யாய்தில்லை
வாழ்நங் குலதெய்வமே. 11

குலதெய்வ மாமெனப் பன்மதத்
தோர்களுங் கொள்ள வெண்ணில்
பலதெய்வ மாகி விளையாடல்
சிற்றம்பலத் தினிற்க
வலதெய்வ மேயெனத் தேர்ந்தெழுத்
தைந்தும் வழுத்துமவர்
சிலதெய்வ மாநிகழ் வாரிந்த
ஞாயந் தெரிவரிதே. 12

தெரியாத தத்துவன் சிற்றம்
பலத்துச் சிவனெனப்பல்
பெரியார்முன் னாளில் லுரைத்தாலு
மென்னது பேதைநெஞ்ச
நரியாங் குதிரையிற் றொண்டனுக்
காவந்த நாதனென்று
மெரியார்கைச் சித்தனென் றுந்தினந்
தோறும்மிக் கெண்ணியதே. 13

எண்ணில்பல் யோனியி னுட்போய்ப்
பிறக்கு மிழிவொழிய
நண்ணிய மேலவர்க் கெல்லாஞ்
சபையி னடம்புரிந்தும்
விண்ணினுந் தேறும் வெளியாயெண்
மூர்த்தி விளக்கமுமாம்
புண்ணியன் றன்கழ லல்லாது
வேறுபுக லில்லையே. 14

புகலிக் கவுணியன் போல்வா
னொருவன் புவியில்வந்து
பகலிற் றிகழ்தரச் செய்கெனப்
போற்றெனைப் பாருலகோர்
நகலிற் களிப்புனக் குண்டு
கொலோதில்லை நாயகனே
தகலிக் குணமல்ல வேலெனக்
காரன்று தந்தவரே. 15

தந்தக் கரியைப் புலியோ
டுரித்துத் தரித்தபிரான்
மந்தக் கருத்த ருணராச்சிற்
றம்பல வாணனெங்கு
மெந்தக் கலையினுந் தோய்ந்துநின்
றோனவ னேயெமது
சொந்தக் கடவுளல் லாற்பின்னை
வேறுதுணை யில்லையே. 16

இல்லையென் றேற்பவர் மேல்விழுந்
தேசிடு மீனருக்கென்
சொல்லைவில் லாதருட் பேறுநல்
காய்தமிழ்ச் சுந்தரன்பால்

வில்லையொப் பாமுடற் கொண்டேடொன்
றேந்தி விளங்கிடனீ
யல்லைகொல் லோசொல்லி டாய்தில்லை
வாழ்பர மானந்தனே. 17

ஆனந்த நாடகஞ் செய்வானைத்
தில்லையி லந்தணனை
வானந்த மாயு நிறைந்தானைச்
சந்ததம் வாழ்த்துகில்லீர்
பானந் தவிர்ந்துரு ளும்போ
தியமன் பகட்டில்வந்தா
லீனந் தணந்தும்மை யாளவல்
லாரில்லை யெண்ணுமினே. 18

எண்ணுங் கருத்தினுக் குள்ளுநின்
றானையிங் கெவ்வுயிர்க்குங்
கண்ணுங் கருத்துங் கொடுத்தானைத்
தில்லைக் கனகமன்றி
னண்ணுந் தொழும்பர்க் கெளியானை
நாடொறு நான்றுதித்தன்
மண்ணுங் ககனமுங் கொண்டாடும்
பேரின்ப வாழ்வுறவே. 19

வாழைக் கனியுகுந் தேன்பாய்
வயற்றில்லை மன்றிடத்தோ
ரேழைக் கெதிர்நடஞ் செய்வானைக்
கண்டபெண் ணேந்துமிரு
மாழைக் குவடுறழ் கொங்கைச்
சுணங்கு மலிந்துநொந்து
தாழைப் பனிமலர் வாளானை
வைது தவிக்கின்றதே. 20

தவிசிற் படைமன்னர் பல்லோர்
பராவத் தவளநிறக்
கவிகைத் தனிநிழற் கீழிருந்
தாலுங் கனகமன்றத்
தவிர்சிற் பரனைக் கருதார்க
ளாகி லடுத்தவுடல்
புவியிற் கடைப்படு புல்லாதி
யாகிப் புலர்வதுண்டே. 21

புலமைத் தொழிற்பெற் றிருந்தாலுந்
    தில்லைப் பொதுவினிடை
யிலகுற்ற நாதனை வாயார
    வாழ்த்தி யிகபரச் சீர்
குலவப் பெறாரெனிற் பாவிக
    ளேயெனக் கூறுமுண்மை
நலமிக் களிப்பதன் னோன்றொண்டர்
    தாளி னறுந்துகளே. 22

துகளறு முண்மைச் சமரச
    ஞானச் சுகம்விளைக்கு
நிகளமொப் பாம்வினை யெல்லா
    மறுக்குநன் னீதிதருஞ்
சகளமு நிட்கள முந்தா
    னெனத்தில்லை தன்னினின்றோ
னகள சரோருக மன்னமென்
    றாள்களி னன்பொன்றுமே. 23

அன்பொரு சற்று முறாதாசை
    யென்னு மலைகடலிற்
றுன்பொருங் கெய்திச் சுழன்றிடைந்
    தேனருட் டோற்றநல்கி
யின்பொருங் கெய்தப் புரிவாய்
    கொலோதில்லை யிற்சிவனே
மின்பொரு செஞ்சடை மேற்பிறைக்
    கீற்றணி வேதியனே. 24

வேதியர் வாழ்திருத் தில்லையி
    லாடல்விளைக் கும்பிரான்
மாதிர மெட்டுங் கரமாக
    நின்றவன் வானவர்க
ளாதிய ருக்கு மறிவரி
    யானென்னை யாண்டுகொண்டா
னீதிநன் னூல்முறை மாறா
    துலகி னிலைநிற்குமே. 25

நிலைநின்ற கீர்த்தி பலகோடி
    நாட்டிப்பி னெஞ்சகத்தி

லலைவின்றிக் கண்டு னடித்தா
மரையி லமையு மிச்சை
தலையென்ற மெய்யுணர் வீந்திலை
யோவரு டந்தருள்வாய்
கலையொன்று மந்தணர் வாழ்தில்லை
மேவிய காரணனே. 26

காரண மாயதன் காரிய
மாகிக் கலந்தபரி
பூரண மாய பொருளியாதென்
றாய்ந்திடிற் போதனுக்கும்
நாரண னுக்கு நடுவாகித்
தில்லை நகரிடத்தி
லாரண மாகமம் போற்றநின்
றானென் றவிர்தருமே. 27

அவியாப் பொறிகளோ ரைந்து
மனத்தி லடங்கியப்பாற்
குவியாமை நீங்கது கொண்டுநின்
கோலங் குறிப்பதென்றோ
புவியாதி யாமுல கெல்லாம்
பரவும் புகழ்த்தில்லையிற்
செவியார்ந்த சங்கொடு நின்றாடுஞ்
சற்குரு தேசிகனே. 28

தேசிகன் வேறருட் சீர்த்தெய்வம்
வேறெனச் சிந்தைசெய்து
மாசியன் றேங்குறு மானிட
ரேகங்கை மன்னும்வட
காசியிற் செத்திடி லெய்துமெய்ம்
முத்தியைக் காணினல்கிப்
பாசி படாதொளிர் பொன்னம்
பலத்தினிற் பார்த்துய்மினே. 29

பார்த்தனன் றங்கைவில் லாற்சடை
மீது பரித்திருக்குந்
தீர்த்தஞ் சிதற வடித்தற்
குவகை செயுங்கருணை

மூர்த்தம தாந்தில்லை யாண்டானென்
செஞ்சொன் முறையிகழ்ந்தாற்
சீர்த்தபன் னூல்களும் பொய்யெனச்
சிற்சிலர் செப்பன்மெய்யே. 30

செப்பன்ன கொங்கைச் சிவகாமி
தோள்புணர் சீரியர்தந்
துப்பன்ன மேனியுந் தூக்கிய
தாண்முதற் சொல்லுறுப்பும்
பைப்பன் னகப்பணி யாதிய
பொற்பும் பதிந்தநெஞ்சிற்
றப்பன்ன தோன்றுங்கொல் சொல்லாய்வெண்
டாமரைத் தாழ்குழலே. 31

தாழா விரகத் தகைதோய்ந்து
பற்பல தையனல்லா
ராழாழி யன்னகண் ணாலெழின்
மாந்தச்சென் றையமென்றார்
வாழா லயங்களிற் றில்லைமுன்
னாமென மாமறையும்
பாழாதி யென்றெண் ணிடாத்தொண்டர்
தாமும் பகர்வதுண்டே. 32

பகலன்ன பூணணங் கார்வலி
தேத்தினும் பாசமுறார்
திகழுமெய் வீட்டினின் மானா
ருருப்பொருஞ் சித்திரத்து
மிகமருள் வேனுற வேண்டுகின்
றேன்றரும் வீறுளதோ
வகலணி யாடக மன்றினின்
றாடு மருட்கொண்டலே. 33

கொண்டலைப் போலுங் குழலார்தம்
மோகக் குழியில்விழுந்
தெண்டரு நெஞ்சின னாத்திரி
வேனுய்ய வென்றருள்வா
யண்டரும் போற்றற் கரியாய்
திருத்தில்லை யம்பலத்தாய்
வண்டமிழ் நால்வர்க் கொருதஞ்ச
மாகிய மாமணியே. 34

மாமருந் தாயநின் பஞ்சாக்
　　கரத்தை மறந்துசில
தாமத நூல்வழி சென்றுபொய்ச்
　　சூனியந் தன்னில்விழேன்
காமரு சேவடி தந்தருள்
　　வாய்செங் கனகமன்றிற்
கோமளக் கோகில மன்னாண்மு
　　னாடுங் கொழுஞ்சுடரே. **35**

சுடராய முக்கட் பிரானும்ப
　　ராதியர் தோத்திரங்கொண்
டிடரா வனகளை யும்பல
　　செல்வரை யீன்றருள்வா
னடராய னாமன்றி னின்றில
　　னேற்பல நல்லுலகும்
படரா ருயிர்த்திர ளும்பொடி
　　யாகிப் பறந்திடுமே. **36**

பறந்தபுட் போலுருக் கொண்டொரு
　　சீயத்தின் பாடழித்துச்
சிறந்த வுலகமெல் லாம்புரந்
　　தோன்றிருத் தில்லையிடை
மறந்தரு கார்முயன் மீதுநின்
　　றாடிய வானவன்றான்
புறந்தனி லுள்ளிற் பொதுவா
　　விளங்கிய பூரணனே. **37**

பூரண மாகிப் பொதுவினின்
　　றாடிய புண்ணியனார்
காரண சற்குரு வாவரு
　　வார்சிவ காமவல்லி
வாரணக் கோடன்ன கொங்கையின்
　　மேலிச்சை வைத்திலரே
னாரண னாதியர்க் குந்திரு
　　வாதியர் நாட்ட மின்றே. **38**

நாட்டநின் பாதங்க ளென்னமுன்
　　னோர்பலர் நன்குரைத்தும்
வாட்டடங் கண்ணியர் மேற்றினம்
　　போய்மருள் வஞ்சநெஞ்சேன்

கோட்டவிர் சித்தியு முத்தியும்
வேட்டுள்ள கொள்கையர்போற்
பாட்டனந் தம்பகர் வேன்திருச்
சிற்றம் பலத்தண்ணலே. 39

அண்ணலைப் பொன்னம் பலத்தானைச்
சந்தத மஞ்செழுத்தா
லெண்ணவல் லார்க்குமற் றொன்றுள
தோவவ னெவ்வுலகுந்
தண்ணளி யாற்செய்து தானாகி
யாதினுந் தாக்குதலற்
றுண்ணரிக் கண்ணுமை யோடுவெள்
ளேறு முகைப்பவனே. 40

உகைக்குந் திறலயி ராவணத்
தானை யுலகமெல்லாம்
பகைக்குந் தகுவர் புரமூன்றும்
வெண்பொடி பட்டுவிழ
நகைக்கும் பரமனை யம்பரத்
தேவர நல்குகையிற்
றகைக்குந் தகையின ரின்றென
வேமறை சாற்றிடுமே. 41

சாற்றணி யார்திருத் தில்லைப்
பிரானருட் டன்மையினாற்
றோற்றலெல் லாமுண்மை யாமா
றெழுத்தைந்துஞ் சொற்றிறைஞ்சாய்
கூற்றனை முன்னொரு சேய்வெல்லல்
கேட்டிலை கொல்மனமே
நாற்றமெய் மாதர்மென் கொங்கையிற்
கொள்ளு நசையறுத்தே. 42

நசையனைத் துந்தண வாதெய்தி
யின்புற நாடுமென்னை
வசைமிகச் சூழ்ந்தது கண்டிலை
யோவருள் வாழ்க்கைநல்காய்
கசையெடுத் துத்தக ருய்ப்பான்ற
னாணையெற் கைவிட்டிடே

லசைவின்மெய்ச் சீர்திகழ் தில்லையி
லாடிய வற்புதனே. 43

அற்புதச் சித்தி பலவாறு
செய்வதற் காசைகொள்வேன்
புற்புதக் கொங்கைநல் லார்மைய
னோயிற்புலர் கைநன்றோ
கற்புடைப் பார்ப்பதி யாள்கணவா
மெய்க்கருணை யின்றோ
சொற்புகழ் வாய்ந்தசிற் றம்பலத்
தேநிகழ் தூயவனே. 44

தூயவெண் ணீறுடன் முற்றணி
வேற்கருட் டோற்றமின்றேன்
மாய வுலகின்மற் றாருய்க்கு
வாரென்றும் வாடுகின்றேன்
மேயநின் னால்வரொ டென்னையுஞ்
சேர்க்கும் விருப்புற்றிடா
யேயசிற் றம்பலத் தாடுமெந்
தாய்மிக் கிளைத்தனனே. 45

இளைக்கின்ற நுண்ணிடைப் பாவைய
ராவன்மிக் கெய்திநொந்து
களைக்கின்ற பாழ்விதி மட்டமை
யாதயன் காமர்வண்டை
வளைக்கின்ற கொன்றைச் சிற்றம்பலத்
தையனை வாழ்த்து மன்பிற்
றிளைக்கின்ற பேறும் வரைந்தானெண்
கைகளுஞ் சீர்பெறுமே. 46

சீரா னனங்களைந் துள்ளானைத்
தில்லைச் சிவனையருட்
பேரா யிரம்புனைந் தம்பலத்
தாடும் பிரானையன்றி
யாராதிக் குஞ்சில தெய்வங்க
ளுண்டென் றலமந்ததால்
வாராத துன்பங்கள் பல்கோடி
யென்னிடம் வந்தனவே. 47

வந்தனஞ் செய்பவர்க் கெல்லா
வரமும் வழங்கு மெந்தை
மந்தரக் கொங்கைக் கவுமாரி
நாயகன் வண்டமிழ்ச்சீர்ச்
சுந்தரத் தோழன் திருத்தில்லை
யானெனைத் தொல்லுலகிற்
சுந்தனைப் போலவைத் தாலன்றி
நெஞ்சங் களிப்பதன்றே. 48

களிவண் டிரையு மலர்க்கொன்றை
யார்செங் கனகமன்றி
லெளிவந்த தேசிகர் பன்னாம
ரூபமு மேற்றுப்பின்னர்
வெளியன்றி வேறின்மை காட்டியெல்
லாமென்றன் மீதெறிந்த
தொளியொன்று நெஞ்சின ரோர்வார்மற்
றோர்க ளுணர்வரிதே. 49

உணர்வுங் கடந்த நிலையம்
பலத்தி னொருவர் சொந்தம்
புணரும்பொய்ப் பாசமென் சொந்தமற்
றியாவும் பொதுவெனுஞ்சீர்
துணரொன்று பன்மல ரான்மிகப்
பூசித்துத் தொண்டுசெய்து
திணரும் படியெழு தேங்கிய
பின்னர் திகழ்ந்ததன்றே. 50

திகழா டகத்திரு மன்றினின்
றாடுஞ் சிவனையன்பிற்
புகழாமன் மற்றுஞ்சிலதேவ
ருண்டெனப் புண்படுநா
ளகழாழி சூழுல கோர்வெறுத்
தார்மெய் யறிந்துகொண்டே
னிகழா ரினிச்சித்தி யெட்டுமெய்
வீடும்வந் தெய்துமன்றே. 51

எய்துபொல் லார்தமைக் கொல்வது
நண்ணி யெரியநகை
செய்துவென் றார்தில்லை நாடகத்
தார்தந் திருவருளைப்

பெய்துமெய்ப் பேறிரண் டுந்தரல்
வேட்டுள்ள பெட்பினருக்
கைதுத வுந்துணை யாதெனத்
தேர்ந்திடி னஞ்செழுத்தே. 52

அஞ்சக் கரம்புணை யாமெனத்
தேறு மவன்கவியை
நஞ்சக் கறைக்கண்ட னார்திருத்
தில்லை நகரினிடை
செஞ்சக் கரச்சிலைக் கையால்
வரைந்திடற் றேர்ந்துய்மினோ
வஞ்சக் கருத்தினர் பொய்ந்நூலிற்
கட்டுண்டு மாழ்குநரே. 53

மாழைப் பெருவரை தாங்கிய
பாகத்தை மையல்கொள்ளு
மேழைக் குதவுசிற் றம்பலத்
தார்தம்மை யேத்திமனக்
கோழைத் தனங்கெட்டு வேலேந்துஞ்
சேயிற் குலாவுமன்ப
ரூழைப் பொருளெனச் சற்றுமெண்
ணாருண்மை யுண்மையிதே. 54

உண்மைப் பரந்தில்லை யம்பலத்
தாரென் றுணர்ந்தவர்கள்
பெண்மைக் கவுரி கணநாதன்
வேண்முதற் பேசரிய
வண்மைக் கடவுளா ரெல்லோருந்
தாஞ்செய்த மாதவத்தாற்
றிண்மைப் பொலிவுபெற் றோரென்னு
ஞாயந் தெரிந்தவரே. 55

தெரிக்கின்ற வேயுணர் கின்றவென்
னெஞ்சொரு சிற்சபையா
யரிக்கிண் கிணித்திருத் தாட்டில்லை
யீசனின் றாடிடினும்
விரிக்கின்ற தோகை மயில்வா
கனமும்வை வேற்படையும்
பரிக்கின்ற பேறு விரும்பா
திரேனண்டர் பார்த்தொல்கவே. 56

ஒல்கித் தகுவர்தங் குற்றேவல்
செய்துழ லும்பர்சிலர்க்
கல்கிளர் கண்ட முதலாய
கோலமமை யும்வண்ண
நல்கிய சிற்றம் பலத்தா
ரெனக்கவர் நன்மகவாம்
பல்கிரி யானுரு நல்கார்
கொலோதமிழ்ப் பாரதியே. 57

பாரவர் வேண்டும் வடிவங்க
ளியாவும் பரிந்தெடுத்துச்
சீரனந் தஞ்செய்து கொல்லாமை
நாட்டிநின் சேவடியி
னாரண னொல்கப் புகுமாட்சி
வேட்கைநரர் தன்மையோ
வாரண நூன்முழங் குந்தில்லை
யூர்ச்சச்சி தானந்தனே. 58

நந்தன் மனையில் வளர்ந்தா
னடைந்த நலத்துமுயர்
செந்தகை வேட்டுத் தமிழ்ப்பாட
லாலுந் தெரிக்குமென்னை
யிந்த வுலகு மிகழ்ந்தோத
விட்டு விடேலிமையார்
வந்தனை கொண்டுவந் தாய்வரை
நேர்செம்பொன் மன்றத்தனே. 59

மன்றற் கடுக்கைச் சடைத்தம்
பிரான்றில்லை வாழ்பரமன்
றென்றற் கிரிமுனிக் கோர்மொழி
யாற்புகழ் சேரச்செய்தோ
னென்றற் கொரற்புத வாழ்வளிப்
பானெனி லிவ்வுலகத்
தொன்றற்கொன் றொவ்வுத லில்லாச்
சமய மொருங்கஞ்சுமே. 60

ஒருங்கொரு தன்வடி வேயெனத்
தேறு முணர்ச்சிநல்கிப்
பருங்கழு கன்னபொல் லார்பகை
மேலிடப் பார்த்தருளி

னெருங்கு மடியவர் தங்கூட்டத்
தாசையு நீடச்செய்தோன்
மருங்குறை வாளொடு மன்றினின்
றாடிய வானவனே. 61

வானாளும் வாழ்க்கையி னின்னாணை
யாதொன்றும் வாஞ்சையில்லை
யானாலு மம்புவி யிற்கொலை
நீக்கு மதனிமித்தம்
வேனாரெண் சித்தியி லாசையுற்
றேன்பின்னின் வீட்டிச்சையே
தானாகி யொன்றினுந் தோயாது
மன்றிற் றழைத்தவனே. 62

தழையேந்துங் கையினர் தம்மினுந்
தீயர் தயங்கவெல்சீர்
விழைவேன்ற னுள்ள மறியாய்
கோலோமழ வெள்விடைமேற்
குழைதாங்கும் வால்வளை யாதிய
கோலங் குலவவந்து
பிழைதீர்ந்த பேறருள் வாய்தில்லை
மன்றிற் பிறங்கண்ணலே. 63

பிறங்கற் குவடு தொறுமாட
நீதரும் பிள்ளையென
நிறங்கட் டழகு மயில்வேன்
முதற்கொடிந் நீணிலத்தின்
மறங்கட் களைந்திட வல்லா
னொருவன் வரச்செய்திடா
யறங்கற்ற வந்தணர் வாழ்தில்லை
மாநக ராள்பவனே. 64

ஆளாமென் றென்னையுங் கொள்வாயென்
றெண்ணி யடிபணிந்தேன்
வாளாய கண்ணியர் மோகக்
கடலில் வருந்தவிடேன்
மாளா முனிவரும் வானவர்
தாமு மகிழ்ந்திறைஞ்சக்
கோளாளர் காணருஞ் சிற்றம்
பலத்திற் குதிப்பவனே. 65

குதிக்கின்ற நினரு ளென்ற
னளவினுங் குன்றியதோ
மதிக்கின்ற தற்கரி தாம்வினைப்
பேயின் வலிகொடிதோ
விதிக்கின்ற வன்றலை யோட்டிரந்
தாய்விடம் வேண்டியுண்டாய்
துதிக்கின்ற வர்க்கெளி யாய்தில்லை
வாழருட் சோதியனே. 66

சோதிக்க வேண்டுங்கொ லன்ப
ருளத்தின் றுணிவதனைப்
பேதிக் கவும்வல்லை யல்லைகொல்
லோநின் பெருந்தகைய
நீதிக்கொவ் வாவிதஞ் செய்யா
திரங்கிமுன் னின்றருளா
யாதிக் கனக சபைநாத
னேவிரைந் தஞ்சலென்றே. 67

அஞ்சனக் குன்றொக்கு மால்வேழ
மொன்றுரித் தார்க்கும்பிரான்
வஞ்சனைச் சிந்தையொர் சற்றுமெய்
தாது வரங்கொடுப்போன்
பஞ்சன்ன மெல்லடிப் பாவைய
ரேங்கப் பலிகவர்ந்தோ
னஞ்சன்ம வாதனை தீர்த்தாள
மன்றி னடிக்கின்றதே. 68

நடிக்குந் திருவடிச் சீர்கரு
தாதவர் நாணும்வண்ணம்
படிக்குந் தமிழ்ச்சுவை சற்றளித்
தாய்பல பாதகர்மே
லிடிக்கும் படியரு ளீட்டிதந்
தாயிலை யென்செய்குவேன்
வெடிக்கும் பல்பூ மணமோவாத
தில்லையின் மேயவனே. 69

மேயும் பசுமரை யாடன்ன
வற்றை வெருட்டிக்கொன்றுண்
டேயுங் களியடை வார்தமக்
கஞ்சிமற் றேனையர்தாம்

வாயும் புதைக்கின்ற நாளெனைப்
பாரில் வரச்செய்ததேன்
காயுங் கொலைமழு வேந்திமன்
றாடிய கண்ணுதலே. 70

கண்ணானை என்னுண்மை யீதேயென்
னென்னிற் கனகமன்றில்
விண்ணாகிச் சற்குரு நாதனு
மாகி விளங்கும்பிரான்
றண்ணா ரருள்பெற் றுலகிற்
குதவுந் தருமத்தினு
மெண்ணாத நெஞ்சுமின் மெய்வீட்டு
வாழ்க்கை யெளிதென்பதே. 71

என்பது பெண்ணுரு வாகச்செய்
தான்றனக் கீந்தவரு
ளின்பமென் பாலுறத் தில்லைப்
பிரான்றரி னிக்கணமே
மன்பதை முற்றுங் கொலையும்
புலையு மறக்கச்செய்து
பின்பவன் றன்பதம் சேர்வே
னதனிற் பெரிதிதன்றே. 72

பெரிதாய முத்தியைப் பல்லோர்க்
குதவுநற் பிள்ளைபெற்று
மரிதாய பொன்கொண்டுஞ் சீகாழி
யந்தண னாங்கிழவன்
பரிதாப மின்றிப் பசுவதைத்
தானென்ன பாவ மந்தோ
வெரிதாங்கிப் பொன்னம் பலத்தேநின்
றாடிடு மென்னப்பனே. 73

என்னப்ப னென்றொரு மானிடன்
பாரி லிருக்கு மந்நாள்
பன்னப் படாதநின் மெய்யரு
ளாடல் பலிப்புறினும்
பொன்னப் படிக்கொலைக் காவிழைந்
தானல்கப் போதுவனோ
வுன்னப் படு மனத் துந்தில்லை
மன்றத்து முற்றவனே. 74

உற்றறி தற்கரி தாமெய்
யுணர்ச்சி யுதவியநின்
னற்றயைக் கியான்செயுங் கைம்மாறுண்
டோவரு ணல்கியெண்ணம்
முற்றவுஞ் செய்தலு நின்கட
னேதமிழ் மூன்றுநன்கு
கற்றவர் வாழ்திருத் தில்லையி
லாடிய கற்பகமே. 75

கற்பனைப் பாடல் கழறுஞ்
சிலர்க்கும் கருணைசெய்யுந்
தற்பரன் மேவிய தில்லைச்
சிதம்பரம் தன்னிற்சென்று
பொற்பவி ருஞ்சிவ கங்கையின்
மூழ்கிய புண்ணியரைச்
சொற்பனத் துங்கரு தாரெம
னோடவன் றூதருமே. 76

தூதாகிச் சுந்தரற் காச்சென்ற
தேனவன் சொன்னதுதி
காதாரக் கேட்டதற் கென்றொப்
பிடேனெது காரணமோ
நீதா னறிவை யதைப்பகர்ந்
தாலந் நெறியி னிற்பேன்
போதார் பொழிற் றில்லை யம்பலத்
தாடிய புண்ணியனே. 77

புண்ணிய நாவலர் பற்பலர்
வேண்டல் புரிந்துளநீ
யெண்ணிய வாறெனக் கியாதொன்று
நல்கிலை யேனுனது
கண்ணியங் குன்றிய தோவிந்த
நாள்கவி கைக்கின்றதோ
திண்ணியர் போற்றப் பொதுவினின்
றாடல் செயும்சிவனே. 78

சிவனேபொன் னம்பலம் தன்னினின்
றாடிய தேசிகனே
தவமார்க்க மொன்றுமில் லேன்கூழை
மோனைசொற் சாரமின்மை

யவமீறுங் கன்மிக ளாசாரங்
கைக்கொள லாதியதீர்
நவமாய செந்தமிழ்ப் பாடில
னோவரு ணல்கெனக்கே. 79

எனக்கின் றொருவரம் நீதர
வேண்டும தென்னவென்னிற்
கனக்கும் புவித்தலை மானிட
ரியாவருங் காதுதல்விட்
டுனக்கன்ப ராதல்செய் தேமுத்தி
வேண்டு முறுதிகண்டாய்
வனக்குஞ் சரத்துரி போர்த்துப்பொன்
மன்றில் வளர்தெய்வமே. 80

வளங்கெழு நின்னருட் பெற்றுஞ்சில்
கோயிலில் வாய்மென்றிடா
விளங்கன்றைக் கொல்லலை யானாலு
நீக்கில ரேய்ந்தமுத்தி
களங்கம தேயெனச் சொல்லுமென்
னாண்மையைக் கற்பித்தார்
விளங்குங் கனகமன் றிற்றின
மாடிய விப்பிரனே. 81

விப்பிரர் வேள்விக் கொலையுந்
தகாதென்றோர் மெய்ப்புலவன்
செப்பின னப்படி யிவ்வுல
கத்தைத் திருத்தவல்ல
கைப்பிர சண்டத்தனி வீரன்றோன்
றக்கருணை செய்வாய்
தப்பிலி யென்றிகழ்ந் தாற்புரந்
தாய்தில்லைச் சங்கரனே. 82

சங்கர மாமுனி யாதிய
வுண்மைச் சமரசத்தோர்
தங்களுக் கும்பொருந் தாவிச்சை
யன்னவர் தாண்மலராஞ்
செங்கம லத்துகள் சூடுமென்
சிந்தையில் சேர்த்தபிரா

னங்கன கந்திகழ் மன்றா
னவன்செய லாய்வரிதே. 83

ஆயும் புகழ்த்திருத் தொண்டத்
தொகையி லருண்மிகையா
னியு மெழுதுந் தமிழ்ப்பா
வலனை நிகழ்த்திலதா
லேயு மொருவனைக் கொண்டவன்
றன்னைமட் டேத்தச்செய்தாய்
சாயுங் கழற்றனித் தாண்டவ
னேதில்லைத் தானத்தனே. 84

தானவர் முப்புரஞ் சுட்டானைத்
தொண்டன் றமிழ்விரும்பி
மீனவன் கையடி பட்டானைத்
தில்லையில் வேதியனைக்
கானவ னாகியோர் பன்றிபின்
னேகிய காரணனை
வானவ லாரியின் மிக்கோ
ரலார்ச்சற்றும் வாழ்த்தலரே. 85

வாழ்த்தலை யன்றிமற் றோர்பணி
செய்யும் வகையறியேன்
காழ்த்தநெஞ் சாளர் பகைகோடி
கொண்டு கலங்குகின்றேன்
பாழ்த்தலை யுந்துயர் தீர்ந்தரு
ணாட்டம் பழகச்செய்வாய்
வீழ்த்தசெஞ் சீர்ச்சடைக் கற்றைய
னாந்தில்லை மெய்ப்பொருளே. 86

மெய்ப்பொரு ணீயெனத் தேறார்கள்
போல மெலிந்தடியேன்
பொய்ப்பொரு ளேதுணை யென்றுல
கூடுழல் பூரியர்தங்
கைப்பொரு ணாடுவ தென்றொழிப்
பாய்செங் கனகமன்றி
னைப்பொரு ளாங்குர வாபர
வாருக் கரியவனே. 87

அரியயன் தேடற் கரியானை
யீடில்சிற் றம்பலத்துப்
பெரியவன் றன்னைப் பெறற்கரி
தாமகர்ப் பெற்றவனைக்
கிரியரை யன்றரு கன்னிதன்
கேள்வனைக் கேட்டவர்க
ளுரியவர் தாமென மற்றொரு
தேவரை யுன்னலரே. 88

உன்னுங் கதிர்மதி யங்கிகண்
ணாகி யுலகமுண்டோன்
றன்னந் தரங்க மனையாட்டி
யாகித் தனிவெளியாம்
பொன்னுந்து சிற்சபை யேயிட
மாகிய பூரணன்போ
லின்னங் கடவுளர் வேறுள
ராகி லியம்புமினே. 89

இயமான னைவகைப் பூதங்
கதிர்மதி யென்னுமெட்டிற்
கயலாவ தொன்றுமில் லாமை
யறிந்து மவைகளுந்தன்
மயமான சிற்றம் பலத்தானை
போற்றி வணங்குகிலா
ருயவேறு மார்க்கங்க ளில்லையென்
றேமறை யோதிடுமே. 90

ஓதியங் கற்றை மடமா
னனையவர்க் குள்ளுருகுந்
தீதியன் றுள்ளவ ரானாலுந்
தில்லையிற் செம்பொன்மன்றத்
தாதியைப் போற்றுந ரானாலென்
மட்டுக்கு மன்னவர்தாம்
வேதியன் றன்னைப் புடைத்தோனு
மைந்துகை வேழமுமே. 91

வேழ முகன்முத லாம்பல
தேவரை வேண்டுநரே
யாழறி வில்லவ னென்றென்னை
யெள்ளன்மி னாறுநெறி

வீழறி ஞர்க்கும் பொதுவாய
    வெட்ட வெளிதிகழ்ந்தா
னூழுதன் றன்வழி நீர்நாடுந்
    தெய்வங்க ளுமுயிரே. 92

உயிரு முடலுந் தனதாகக்
    கொண்டன்ப ரூழ்வினைப்பேய்ச்
செயிரொழித் தாண்டருள் சிற்றம்
    பலத்துச் சிவபெருமான்
பயிரிடு வாரொத்து நின்றா
    னவனருட் பாங்கெளிதோ
மயிர்நுனி யத்தனை யும்பிரி
    யாதெங்கும் வாய்ந்ததுண்டே. 93

வாய்ந்த மறையனந் தந்தொழு
    தேத்திட வானமுற்று
மேய்ந்த பொருளெதென் றாராய்ந்
    தறியி னெழிற்சடையிற்
றேய்ந்த மதியணிந் தம்பலத்
    தாடிய சித்தனென்றே
யோய்ந்த வினையுடை யார்சிந்தை
    தோறு மொளிருமன்றே. 94

ஒளிக்கின்ற தன்மைநிற் கேனெங்கும்
    நீநிறைந் துற்றனையென்
றளிக்குணத் தொண்டரும் பன்னூற்
    றிரளு மறைகைபொய்யோ
விளிக்குமென் றன்னுள்ளு நீயில்லை
    யோவந்து வேண்ட னல்காய்
களிக்கரு வண்டிசைக் கொன்றை
    குலாந்தில்லைக் காவலனே. 95

காவல்செய் யென்றறிக் கன்றீந்த
    சக்கரங் காமர்குன்றி
யேவலொன் றும்புரி யாக்குணந்
    தோய்ந்ததென் றெண்ணுகின்றேன்
பூவல யம்படும் பாடுண்மை
    யாளர் பொறுக்கரிதென்

னாவலிற் சற்றரு ளாய்தில்லை
மன்றத் தமர்ந்தவனே. 96

அமரர்தஞ் சேகர மானானைத்
தானவ ரற்றொழியக்
குமரனை யீன்றரு ளிச்செங்கை
வேலுங் கொடுத்தவனைப்
பமர மறாமலர்க் கொன்றையி
னானைப்பசும் பொன்விற்கைச்
சமரனைத் தில்லையிற் கண்டு
தொழார்தந் தவம்பழுதே. 97

தவம்புரி யாம விளமுலை
மாதர் தமக்குருகி
யவம்பல நாடுந் தமியேன்
கவியைப்பொன் னம்பலத்துச்
சிவம்புனைந் துள்ளிற் சிறிதார்வ
மெய்திடிற் றேவர்மெச்சு
நவம்பகி ரண்டத்துஞ் செய்துமெய்
வீட்டினு நண்ணுவனே. 98

நண்ணுந் தவத்தினர்க் கோர்தஞ்ச
மாந்தில்லை நன்னகர்க்கோன்
கண்ணுங் கருத்துங் கொடுத்தாண்ட
நன்றி கருதுகில்லேன்
விண்ணும் புவியும் வியந்தோது
மாண்மை விரைந்தருளென்
றெண்ணுங் கவலையி னாற்சில
வேளை யிகழ்வதுண்டே. 99

இகழ்வார்க்கு மில்லையென் பார்க்கெய்
திடாநல மீந்தருளும்
புகழ்வாய்ந்த தில்லைப் பிரான்றொண்டர்
போலும் பொருளுரைக்கி
னிகழ்வார் மருப்பிரண் டாயிர
மேந்தி நிலவையொப்பா
யகழ்வாரி நேர்மத மூற்றயி
ராவண வனையொன்றே. 100

முற்றிற்று

29

தில்லைப் பதிற்றுப்பத்தந்தாதி

29

தில்லைப் பதிற்றுப்பத்தந்தாதி

சீர்மருவு செங்கனகத் திருச்சிற் றம்பல மேவி
நீர்மருவு சடையாட நிருத்த மிடச்சலி யானைப்
பேர்மருவு துதிபாடிப் பிரசம லர்ப்பதம் போற்று
நார்மருவு மனத்தின ரைநம வாதையணு காதே. 1

காதில விர்குழை யாகக்கவின் சங்கமணி வானை
யேதிலர் மட்டில னாகியிலங்கு பொதுநிலை யானைப்
பாதி மதிச்சடை யானைப்பசும்பொ னெடுஞ்சபை யானை
வேதிய ரிலொருவனென விளம்பலு ணர்வரி தன்றே. 2

அன்றடியார் விரும்பிய பேற னைத்துமளித் தருள்பெம்மான்
மன்றகத் திற்றேவி யெதிர்மாறா தநடஞ் செய்வோ
னின்றமிழ்ப் பாட்டாயிரம் சொற்றிடு வேனென் றிடச்செய்
தின்றளி கூர்தரற் கரியசிற் றுண்டி யளித்தானே. 3

தானவரிற் கொடியோ னாஞ்சலந் தரன்றனுடல் கீன்ற
வானவனைத் திருத்தில் லைமன்ற கத்தினடிப் போனைக்
கானமறை யுணர்வரிய கடவு ளெனப்பலர் சொல்வார்
நானறி யத்தமிழ் பாடனயந் தமைசத்தியம் தானே. 4

இயங்கு மிளமுலை மாதரினித்த மொழிச்சுவை வேண்டிக்
கயங்குறு மென்றமிழ் விரும்புங் கனகசபைப் பெருமான்றான்
மயங்கலறு மொருநால்வர் வனந்த துதிக்கவ் வாறு
செயங்கொ டுத்ததருமை யெனைச்சிறி தேனு மொழியேனே. 5

மொழிக்கரும்புச் சுவைகாட்டு முருந்து நகைக்கனி வாயார்
விழிக்கணை யிற்படும் பாடுவிலக்கி யருள்புரி வாயோ
பழிக்கருஞ் சீர்ப்பல் லுலகும் படைத்தருளிப் புரந்தப்பா
லழிக்க வுஞ்சற் றுளங்கொள்வா யம்பலத்தி லமர்வானே. 6

வானாதி யைம்பூத மலர்வ தனநிரை யாகத்
தானாகி நின்றா னைத்தமநியச் சிற்றம் பலத்தி

லூனா ருங்கறைச் சூலத் துடனாடு முத்தமனை
நானாக விழைந்தில் லேனண்ணி யெனைக்கவர்ந் தானே. 7

கவலை யெனுங்கட னீத்துக் கரையேற்றிக் கலங்காமெய்த்
தவமுயல் வார்பெறும் பேறு தரினலது மகிழ்வேனோ
புவனமுழு தயின்றாளைப் புணர்ந்தொரு புத்திர னீன்றாய்
சிவசமயத் தலையா கித்திகழ் கனக சபையானே. 8

யானென விங்கெழு மாயவிருண சியத்தடுத் தாண்டு
தானென நின்றொளி ருண்மைதனை விளக்குந்தின மியாதோ
தேனெனச் செந்தமிழ் பாடுந் திருவாத வூரனுணர்
கோனெனப்பொன் னம்பலத்திற் குலவுபுக மூடையானே. 9

உடையாய் நிற்கய லெங்குமொரு சிறிது மிலையாகிற்
கடையேன் மட்டிவ் வாறு கலங்கி நிற்கத்தகுங் கொல்லோ
விடைதோ யுங்கொடிச் சீலமிளிர் தில்லைப் பதியானே
படைவேற் கைக்குகன் போலும் பரிசுறத்தந் தருள்வாயே. 10

அருள்கு லாவிய திருவுளத் தமலநா யகனை
யிருள்கு லாவிய தகுவர்மூ வெயிலெரித் தவனைப்
பொருள்கு லாவிய தமிழ்கொடு பொதுவினிற் புகழின்
மருள்கு லாவிய வினைகெடு மென்னும்நம் மறையே. 11

மறையெ லாமுநன் குணர்ந்தவர் மருவிய தில்லைக்
கிறைய வன்றனை யிறைஞ்சுநரி யாவரே யெனினுந்
தறையும் வானமு மதிப்பவ ரன்னவர் தடந்தாள்
கறையி லாமனத் தினர்தலைக் கணிதரு கலனே. 12

கலங்கு நெஞ்சகக் கள்வனேன் றன்னையுங் கருணை
துலங்கு மாறெடுத் தாண்டுகொண் டருள்செயத் துணிந்தோ
னிலங்கு சீர்த்திருக் கனகமன் றிடத்தினின் றாடி
விலங்கு மூன்றுரித் தணிந்துள விகிர்த வேதியனே. 13

வேதி யன்றலை யோட்டிலேற் றருந்தியு மேனிப்
பாதி யம்பிகைக் குதவினா னெனுமறைப் பாட
லோதி னான்சரித் திரமுல குரைத்திடக் கேட்டு
மாதி யம்பலத் தாடுவா னருளறிந் திலனே. 14

இலவி லின்சுவை நறுங்கனி விழையினு மீயும்
வலவர் வாழ்திருக் கனகமன் றினைமிக வழுத்தும்

புலமை யாளரைப் போற்றுதி யநுதினம் பொல்லாக்
கலக மங்கையர்க் குருகிய காமநோய்க் கருத்தே. 15

கருத்த னம்பிகை காவலன் றில்லையிற் கவின்ற
நிருத்த னின்மல னெடியமாற் கரியவ னென்னத்
திருத்த மார்தமிழ்க் கவிகொடு துதிக்குமெய்ச் செல்வர்
பொருத்த மெய்திய புண்ணியத் திணைவட பொருப்பே. 16

பொருப்பு வில்லுடைப் புனிதனைப் பூமழை பொழியுங்
கருப்பு வில்லியைப் பொடித்தருள் கண்ணு தற்பரனைத்
திருப்ப தங்குனித் தம்பலத் தாடியைச் சிறியே
னிருப்பு நெஞ்சகங் கருதிடற் கிசைந்தநா ளின்றே. 17

இன்று நாளையென் றுன்மக னிசைத்தவா றெண்ணிக்
குன்று நேர்மனங் குறுகிய தறிகிலாய் கொல்லோ
நன்று நீயொரு மெய்ம்மொழி யென்னொடு நவிலாய்
மன்று ளாடியென் மனத்தினும் வருங்குரு மணியே. 18

குருவுந் தெய்வமு நீயல திலையெனக் குறிக்கும்
பருவ மெய்துமுன் பட்டபா டின்னமும் படவோ
திருவ ருட்கடற் றிவலையொன் றென்மிசை தெறியாய்
சருவ தாரக மாகிமன் றாடிய தனியே. 19

தனிய னென்றுனைத் தேறுமுன் றயங்குமென் மனத்தி
லனிய வானவ ராகியும விர்ந்தனை யன்றோ
யினியவ் வாதனை யெனைத்தொடா தின்னருள் வழங்காய்
பனிய றாமலர்ப் பொழிற்றிருத் தில்லையம் பரனே. 20

வேறு

பரவு வார்க்கருள் பரமன் றன்னையெண
கரவி னோதனைக் கனக மன்றிடத்
தரனை யாதியை யறியு மன்பர்பொற்
சரணமி யாவுமென் றலையிற் சார்பவே. 21

சாரு வாகனன் றடங்கைக் கன்னலம்
போருண் மாழ்கிய புன்மை யேன்றமி
ழாருங் கொன்றையு மனைய தாகுமோ
சீரு லாவுமன் றுடைய தெய்வமே. 22

தெய்வ நான்முகன் குடுமிச் சென்னிகொள்
கைவ லார்தமைக் கனக மன்றில்வாழ்
சைவ மூர்த்தியைத் தமிழிற் போற்றுவா
ரைவர் வாதனைக் கடங்கி டார்களே. 23

அடங்க யாவுநின் னருளென் றோர்ந்தமெய்த்
திடங்கு லாவிய சிலரிற் சேர்த்திடாய்
படங்கொள் பாம்பணிப் பகவ மன்றிடை
நடங்கண் டார்தமை நயக்கு நாதனே. 24

நாத தத்துவ முடிவி னண்ணிய
பாத பங்கயத் துணைகள் பற்றிலே
னேத முற்றொழிந் தெவ்வ னுய்குவேன்
சீத நீர்ச்சடைச் சிதம்ப ரேசனே. 25

ஏசு முற்றொழித் துய்கைக் கேற்றசொற்
பேசு வாயெனப் பெரிது நம்பினேன்
வீசு தாட்சிலம் பொலிப்ப விண்ணிடை
யாசு தீர்நடம் புரியு மையனே. 26

ஐய மின்றிமெய் யடியர் பற்பல
ருய்ய மால்விடை யுகைத்துந் தோன்றுநீ
பொய்ய னேன்றனைப் புழுக்கல் பொன்னிகர்
செய்ய னேதிருத் தில்லைச் சித்தனே. 27

சித்தர் தங்கணத் தொருவன் சிந்தையிற்
சுத்த நீற்றணி துலங்கச் செய்திடற்
கொத்த மெய்யுணர் வுதிக்கச் செய்திலா
யத்த மன்றினின் றாடு மார்வனே. 28

ஆரு நின்வடி வறியொ ணாதெனப்
பாரும் வானமும் பகரக் கேட்டுநீ
நேரும் வாழ்வினை நினைந்து ளேனரு
டேரு லாம்புலி யூரிற் றெய்வமே. 29

தெய்யென் றாடிய திருப்பொற் றாணினைத்
துய்யென் றோர்கர முணர்த்தல் பொய்கொலோ
மெய்யென் பார்க்கருள் விளைத்து மன்றிடை
பொய்யென் றண்டமுற் றுதவு மீசனே. 30

வேறு

ஈசனெழிற் றில்லைமன்றத் திறைவனல
　　தொருபொருள்வே றிலையென் றெண்ணி
மாசகன்ற பெரியோர்தந் திருக்கூட்டத்
　　தென்னையெந்நாள் வைப்பா யையா
பாசமலம் பெருத்துழலுந் தமியனேற்
　　கருள்புரிந்தாற் பாவங் கொல்லோ
தேசனந்தங் கோடிபொருந் திருமேனி
　　கொடுநடிக்குஞ் சிவபி ரானே. 31

சிவசிவவென் றெனையறியா தென்னதுவா
　　யிசைக்குநலஞ் செய்தா யுண்மைத்
தவமுயல்கைக் கிடையூறு வாராமற்
　　புரந்தருளுந் தயையில் லாயோ
பவளவரை யனையானே பார்ப்பதிகண்
　　களிப்பநடம் பயிலு மெந்தா
யவலமற்றோர் மனம்போலுங் கனகசபை
　　யிடைநாளு மமர்ந்துள் ளானே. 32

அமரர்பிரான் பெற்றுளபே றத்தனையுங்
　　கசக்குநல மடைந்த பின்னர்
சமரநெடு வேல்விழியார் மொழியினிக்கும்
　　பெருங்கொடுமை தவிர்த்தென் றாள்வாய்
குமரனையம் பிகைவருந்த மலர்விழியாற்
　　பயந்தருளுங் குன்றே பைம்பொற்
பமரமுரல் கொன்றையணிந் தம்பலத்தி
　　னடம்புரியும் பதத்தம் மானே. 33

மானனையார் தருமயலிற் றவமுதிர்பே
　　றொருவனுக்கு வழங்கும் பான்மை
பானன்மலர்த் தடத்திடங்க ரருந்துமகன்
　　வளர்ந்துவரப் பகுவாய் தன்னா
லீனல்வெளிப் படுத்தியதா லியாவும்வல்லாய்
　　நீயேயன் றிசைந்தே னாள்வாய்
கானமறைத் தொனியகலாக் கனகசபைக்
　　காரணனாங் கருணை வாழ்வே. 34

கருணையொரு சிறிதுமிலார் கடைவாயிற்
படிதோறுங் கலங்கு வேனுக்
கருணையினீ றளித்ததுபொய்த் திடலாமோ
திருவருள்சற் றமையச் செய்வாய்
தருணமர கதக்கொடிமுற் றமனியச்சிற்
றம்பலத்திற் றாளொன் றூன்றி
யிருணிறத்து முயலகன்மேற் றினமுநடம்
புரிந்துவக்கு மெம்பி ரானே. 35

எம்பிரா னீயெனநன் குணர்ந்துற்றே
னாதலினீ யிரங்கி யின்னே
தம்பிரா னெனத்தமையே மதிக்கின்றார்
மதமொழிக்கத் தகும்பே றீந்தாள்
செம்பிரா னாமவரிற் றலையாய
முழுமுதலே தில்லை மன்றி
னம்பிரான் னெனப்பணியப் பலர்க்குமொரு
பொதுவாகி நடிக்கின் றானே. 36

நடிக்குமிரு பதத்தானை நாரணனுக்
கரியானை நகுவெண் டிங்கண்
முடிக்குநெடுஞ் சடையானை முப்புரங்க
ளெரித்தானை முனிவோர் முற்றும்
படிக்குமியற் புகழானைப் பழுதில்சிற்றம்
பலத்தானைப் பரவு கில்லீ
ரிடிக்குரற்கார் மறலிவரி னென்செய்வீ
ரவன்கொடுமை யியம்பொண் ணாதே. 37

இயமனொருக் காலுமனத் தினுமெண்ணான்
மலரவன்றொட் டெழுத மாட்டான்
வயமதனன் கைக்கரும்புச் சிலைவளையான்
வீட்டினும்போய் வாழ லாகுங்
கயமுரித்துப் போர்த்தானைக் கனகமன்றி
னின்றவண்ணங் கருத்தா னாடி
வியனுறப்போற் றிசைத்துமலர்ப் பூசனைசெய்
தவனருட்சீர் மேவி னாலே. 38

மேவியநன் னலமறந்து கிடையாமை
சிறிதெனினு மேலா நாடி
யாவியுட லெனுமிரண்டுந் தளர்வேனைத்
திருவருட்கா ளாக்கொண் ணாதோ

பாவிமதன் பொடியாகப் பார்த்தவிழி
யுடையானே பசும்பொன் மன்றிற்
றாவிநடம் பயில்வானே சகுணமுநிர்க்
குணப்பொருளுந் தானா னானே. 39

தானாகி நிறைந்தபர தத்துவனைப்
பத்திநெறி தனைக்கொண் டோர்க்கே
யானாத பேறுதவும் பெருமானைத்
தில்லைமன்றி லாடு வானை
யூனாரு மூவிலைவே லுடையானைக்
கடையேனு முணரப் பெற்றாற்
றேனார்முத் தமிழ்விரகன் றனையிகழ்வோர்
குலநடுங்குஞ் செயலுண் டாமே. 40

வேறு

செயன்ம விந்த திருவெழுத் தைந்துமே
மயலு றாது வழுத்திடு வார்க்கெலாம்
புயலி லங்கு பொழிற்றிருத் தில்லையி
லயலொன் றின்றி யரன்றிகழ் வானரோ. 41

வான நாடரும் வந்து வணங்குசீ
ரான பொன்னம் பலத்தி லாடல்கூர்
ஞான மூர்த்தியை நாடிடு நற்குண
மீன நெஞ்சத் தினர்க்கினி தல்லவே. 42

அல்லன் முற்று மழித்தரு ளாண்மையிற்
செல்ல வுய்க்குந் திறத்தனைத் தேடுவீர்
நல்ல தில்லை நகர்க்கிடை நால்வருஞ்
சொல்ல நின்ற துடித்தொனித் தோளனே. 43

தோளி லென்பு சுமந்துநின் றாடுவான்
வாளி லங்குகண் மங்கைபங் குள்ளவன்
வேளி னுக்குரு மீளவு நல்கினோ
னாளி டந்தனி யம்பல மாமதே. 44

ஆமை தன்னுறுப் பைந்து மடக்கல்போ
லூமை யாகி யுனையுணர்ந் துய்ந்திலேன்
றீமை தீர்திருத் தில்லையிற் றேசிகா
வாய்மை ஞானம் வழங்கிமுன் னின்றிடே. 45

நின்றி டத்தகு நெஞ்சில னின்னிடத்
தொன்றி வாழு மொருதின முள்ளதோ
தென்றி சைக்கிறை வன்றிடுக் கங்கொள
மன்றி லாடி. வயங்கிய வள்ளலே. 46

வள்ள னீஎன மாமறை நூல்வலோர்
விள்ள லாலுனையே மிக வேண்டினேன்
புள்ள லம்பு பொழிற்றிருத் தில்லையா
யெள்ள நீர்நல மீகுவ தெற்றையே. 47

எற்றை வந்தெனக் கின்னரு ளீவையோ
வற்றை நாளை யறிகில னையகோ
பொற்றை யென்னப் பொலிந்தபொன் மன்றில்வாழ்
கற்றை வார்சடைக் கண்ணுதற் றெய்வமே. 48

வம்ப றாத மலர்ப்பொழிற் றில்லையூர்
ரம்ப லத்தினின் றாடிய வண்ணலே
நம்ப வல்ல நலத்தினர் தம்பெருங்
கும்ப லூடு குலாவலென் விச்சையே. 49

இச்சை வாரி யிடைப்படு வேனுநின்
னச்சை யெய்து மவரொடு சேர்வனோ
செச்சை மேனி திகழ்தரத் தில்லையிற்
பச்சை மாதெதி ராடிய பண்பனே. 50

வேறு

பண்பாடும் வரிவண்டு மலிகின்ற
மலர்கொன்றை பனிமாமதி
தண்பாவு நதிமங்கை யுடுவாதி
யவைதுன்று சடையண்ணலே
விண்பாய தனிமன்ற மவிர்தில்லை
யிடைகண்ட மேலோர்களைத்
திண்பாரி லுளமைந்த ரறியார்க
ளுணர்வார்கள் சிவலோகரே. 51

சிவசாத னஞ்சற்று மணியாம
லுயிருண்டு திரிவோர்களாம்
பவசாக ரக்குப்பை யனையார்மு
னிதமிங்கு பகராதுகாத்

துவமான மறுமின்ப நெறியோரொ
டெனைவைக்க யுன்னாய்கொலோ
தவயோகர் மலிதில்லை நடராய
னேயீடில் சபைநாதனே. 52

சபையூடு புலியூரி னடமாடி
யரன்நின்ற தகையெண்ணியே
செபமைந்தெ மூத்தாலு முயல்வார்வி
ருப்பங்கள் சித்திக்கும்மால்
வபையோம முழுமூடர் மதியென்கொல்
விதிஎன்கொல் வானத்தில்வாழ்
சுபமாத ருடனீடு கனவென்ன
வயில்கின்ற சுகமென்கொலோ. 53

சுகம்மாதர் தருபோக மெனநாடி
மருள்கின்ற துர்ப்புத்திபோ
யகமூடுன் வடிவைக்கு றிக்கின்ற
சிவயோக மதைநல்குவாய்
ககமூரு நெடுமாய னறியாத
படிநின்ற கழலாடலாற்
புகழாயி ரங்கோடி கொடுபாரின்
மிளிரீடில் புலியூரனே. 54

ஊரனந் தங்கண்டு பொருடேடி
மருள்வேனு ளத்தூடருட்
சீரனந் தம்பெற்று மகிழ்வார்க
ளுறுமாசை செறிவித்ததார்
சூரனந் தம்கொன்று புவனேசர்
பலர்வாழ்வு தோயச்செய்வேல்
வீரனந் தந்தந்தை யெனமன்றி
னடமாடு மெய்ச்சோதியே. 55

சோதித்த பின்னன்ப ரைக்கைக்கொள்
வாயென்று சொல்லுஞ்சொனின்
னீதிக்கொ ருக்காலு மொவ்வாதெ
னக்கண்டு நெஞ்சஞ்சினேன்
மாதிக்கொ ரெட்டுங்கை யாகக்கொள்
வாய்செம்பொன் மன்றத்தினின்
றாதித்தொ ழிற்றொட்டொ ரைந்துஞ்செய்
தெத்தேவு மாமையனே. 56

ஐயைந்து பேதத்த தேநின்றி
ருக்கோல மாமென்றசொன்
மெய்யென்று நானம்பி டேனெங்கு
நீயாவி ளங்குற்றதான்
மையொன்று கண்டத்து மாதேவ
னேதில்லை மன்றாடுவாய்
வையம்பு ரக்குந்து ணைச்செல்வர்
கையிந்தமதி தந்தவே. 57

மதியுந்து ணர்க்கொன்றை யுஞ்சூடி
னானைப்பொன் மன்றத்தினிற்
கதியும்பெ ருங்காமி யப்பேறு
நல்குங்க ழற்காரனைத்
துதியன்பி லாமற்பு ரிந்தாலு
நன்றேது ணிந்தண்டமுற்
றதிரும் படிக்கன் றடித்தாரு
மெய்வீட டைந்தார்களே. 58

தாரார்ச டைக்கற்றை மீதேவி
ளங்கும்த னிச்சந்திரன்
போரார் குலத்தோர்க ளேயங்கை
வில்லைப்பி ரம்பைக்கொடன்
றாராரு மோதப்பு டைத்தார்
சினந்தங்க தைத்தள்ளிலா
வீரார்வ யற்றில்லை மன்றத்த
னேநன்னெ றிக்காரனே. 59

காராதி யாயேகொ டைச்சீர்பெ
றும்பல்க ணத்தியாதுநற்
சிரார்த னித்தில்லை மன்றத்தி
லாடுஞ்செ ழுஞ்சோதியிற்
றாராள மாகத்த னைத்தந்தி
டாதென்கை தமிழ்வாதவூர்ப்
பேராள னேயன்ன மேலோர்க
ணெஞ்சிற்பி றங்குற்றதே. 60

பிறங்குபொற் புகர்வே ழத்தைப்
பிழைபடா வடிவே லானை
யறங்களுக் குயிரா வாள்பா
லருளிய வமல மூர்த்தி

நிறங்கன லனைய மன்றி
னித்தமு நடிக்கும் பெம்மான்
மறங்கெழு தமியே னெஞ்சின்
மலரடி பதித்த துண்டே. 61

பதியுடன் பசுக்க ளாகிப்
பாசமு மாகி னானை
விதிமகம் பகர்ந்த சென்னி
வேரறக் களைந்தான் றன்னை
நதிவளர் சடிலத் தானை
நால்வரிற் தமிய னேனுந்
துதிபுரிந் துய்கை வேட்டுத்
துணிந்தமை நிசங்கண் டீரே. 62

கண்டிகை யணிந்து நீறுங்
கவினுடன் முழுதும் பூசி
வண்டியல் கடுக்கை யென்ன
வயங்குசெந் தமிழாற் போற்றித்
தெண்டிரைப் புவியோர் காணத்
திரிதரு மென்னை நீகைக்
கொண்டிடி லிளப்பங் கொல்லோ
குலவுபொற் பொதுவுள் ளானே. 63

ஆனையைப் புலியைப் பாம்பை
யரியினைச் சிலந்தி தன்னைப்
பூனையை யெலியை மற்றும்
புகல்பவற் றினைமுன் னாண்டாய்
தேனைநேர் தமிழ்கொண் டேத்துஞ்
சிறியனேற் கிரங்காய் கொல்லோ
மேனையார் மகள்கண் காண
விளங்குமம் பலத்துற் றோனே. 64

உற்றவ ருறவ ராதி
யுலகரைப் பொருளென் றுன்னி
நற்றவ மிழந்தி டாத
ஞானவாழ் வெனக்கென் றீவாய்
பற்றலர் புரங்க ணீற்றும்
பவளவாய்த் தவள மூரற்
கொற்றவா கனக மன்றிற்
குலவுமெண் குணப்பெம் மானே. 65

குணப்பெருங் கடலன் னானே
குஞ்சரத் துரிவை யானே
மணப்பசுங் கொன்றை யானே
வரநதிச் சடிலத் தானே
தணப்பரும் பெருமை சான்ற
தமநிய மன்றத் தானே
கணப்பொழு தினுநீங் காதென்
கருத்தினின் றிலங்கு வாயே. 66

இலங்கெழிற் றரள மூர
லேந்திழை மடவார் கொங்கை
நலங்குறித் துழலும் பொல்லா
நாயினேற் கருள்செய் வாயோ
விலங்குரித் துடுத்துக் காள
விடமுமிழ் மணிப்பூ ணாரந்
துலங்கிட மன்றி லோர்காற்
றூக்கிநின் றாடு வானே. 67

ஆடகம் பொதிந்த மன்றத்
தரவொடு புலியும் பார்க்கச்
சூடகக் கையான் முற்றத்
தொம்மென நடிக்கின் றானைப்
பாடவல் லவர்க ளெல்லாம்
பழவினை வழக்கை வென்று
வீடதிற் புகுவா ரென்கை
விரகுளா ருணர்தற் பாற்றே. 68

பாற்கட லதனை யன்றோர்
பாலனுக் களித்த நாதன்
மேற்கவி தொடுத்துத் தில்லை
வெளியினிற் கலந்தோற் கேட்டு
மாற்கனங் கனுக்கு நேரா
மனிதரைப் பாடிப் பாடி
யேற்கவுஞ் சிலர்தஞ் சென்னி
யிடத்தய னெழுத லென்னே. 69

எழுதரு மறைவல் லான்ற
னீரிரு சிரத்து மோது
முழுதுணர் புலமைச் சேயை
மொய்குழ லுமையாட் கீந்த

செழுமணிச் சோதி தன்னைத்
  தில்லையம் பலத்திற் கண்டு
தொழுதெழப் பிறந்தோ ரெல்லாந்
  தொல்வினைத் தொடர்பில் லாரே. 70

வேறு

ஆர ணிந்தசடை நம்பனைநி னைந்துளா
  ராகு லங்களையு மந்தணனை வென்றிவேல்
வீர னும்பொருவி லைங்கரமி யைந்ததோர்
  வேழ மும்பரவு தந்தையைம டந்தைமார்
சேர நங்கடவு ளென்றிடவி ளங்குமா
  தேவி பங்கினனை மன்றிடைவ ணங்குவீர்
பார ளந்தமுகில் கண்டிடவ ருந்துசீர்
  பாத மென்றுமும்ம னந்தனிலி லங்குமே. 71

இலவெ னத்தகும லோபியரை நாடலா
  லெனது சித்தமெலி வானதறி யாய்கொலோ
குலவு சத்தியணி சேயனைய னாகவே
  கொடுநி னைத்தபடி யாடுநல மீகுவா
யலகி லுத்தமர்ப ராவியம யேசனே
  யரும றைக்குமமை யாவெகுவி னோதனே
புலவ னற்றைவிடு தூதெனவு மேவினாய்
  பொருவிற் சிற்சபையில் வாழுநட ராயனே. 72

நடன மிடுஞ்சரண பங்கயம தாலெனூழ்
  நலிய வென்றுனது தொண்டரொடு கூடும்வாழ்
வுடல ழிந்திடுமு னிங்கருள்செய் தாலலா
  லுளம கிழ்ந்திடுவ தின்றறிகி லாய்கொலோ
படம்வி ரிந்தபணி யும்புனையு மார்வனே
  பணில மொன்றியசை கின்றவிரு காதனே
யிடர்த விர்ந்தசுப மங்கலைம ணாளனே
  யெழில்வி ளங்கியபொ னம்பலவி லாசனே. 73

விலகி டாதுநிறை வுற்றுளவ கண்டமா
  மிளிரு நீயெனது சிற்றுயிரி லொன்றிடா
துலக மியாவினுமி ருத்தியென வம்பிலியா
  னுரைசெய் தாலுமன நக்கதரு டந்திடாய்

சலச மாமலர்வ னத்தனையை யென்றதோர்
தவசி யாவியொடு டற்பருகு சங்கரா
கலக நாடிவரு புத்தரும்வ ணங்குசீர்
கவினு மாடகமு தற்சபைவி டங்கனே. 74

விடம யின்றுளபெ ருங்கணை யாடலே
மிகமொ ழிந்துருகு மன்பர்பலர் வாழ்வதா
மிடமெ னும்பலசி லம்புதொறு மேகிநீ
யினிது தந்தமக வென்றபுகழ் தோய்வனோ
கடக மும்பெரிய கங்கணம தாணிநேர்
கலன னந்தமுமெ லும்பொடர வாகவா
லடலை யங்கமுழு தும்பொலிய மாதுநே
ரவிர்பொ னம்பலந டம்பயிலு மாதியே. 75

ஆதி வித்தகன நாதிபர மாகினா
னாட கச்சபையி னாடலக லாதகோன்
மேதி யிற்றிரிகு வானையடு தாளுளான்
மேனி லத்தமரர் வாதனைபொ றாமையா
னீதி தப்புமவு ணேசருயிர் கோறுவா
னீணி லத்துதவு பாலர்பல ரேயெனா
வோதி டத்தகுவி லாசவுணர் வாளரே
யூழ்வி னைத்தொடர்பி லாதமுனி வோர்களே. 76

ஓர மெள்ளளவு மின்றிவர நாடுவா
ரோகை கொள்ளும்வரை யுந்தரும யேசனார்
மாரன் வில்லொடுபொ டிந்துவிழ நாடினார்
வானி லுள்ளவரெ லும்பணியு மார்பினா
ரீரம் நல்கியெம னந்தனில்வ ராமுனா
னீடிற் றில்லையைநி னைந்தறிகி லேனிதால்
வாரம் மல்குமனை மைந்தனொடு சேவின்மேல்
வாற நல்லதின முண்டெனலு மாகுமே. 77

ஆகு விற்றிரியு மண்ணனொடு கந்தவே
ளாழி சுற்றுமுல கின்மிசைவி ளங்கல்போன்
மாகு ணத்திருவர் நின்னருள்பொ லிந்ததால்
வாழு நற்றினமு மென்னெதிர்வ ருங்கொலோ
வேகு மக்கினியை யன்னபல வம்பர்தாம்
வேறொ டற்றளவி னன்மைகடு லங்குமோ

பாகு ரைக்கவுரி கண்மகிழ்ந டஞ்செய்வாய்
பாவு சிற்சபையின் மன்னுமக ளங்கனே. 78

களவு நெஞ்சமுடை யேன்சிறிய வஞ்சிநேர்
கபட மங்கையர்கள் வாஞ்சையின னண்டரு
ரளவு மிஞ்சுபல தீங்கனுன தன்பரோ
டமைய வுங்கருணை கூர்ந்தொருசொல் விண்டிடாய்
தளவு தந்தமுகை போன்றநகை துன்றுமா
தரியி ருந்துமகிழ் பாங்குறுதி கம்பரா
விளவு குன்றவெறி வான்சுவச மின்றியே
விழுபொன் மன்றதனை யாண்டசிவ சம்புவே. 79

சம்பு வம்பலக் கூத்துமுய லீசனோர்
தண்டு கொண்டகைக் கூற்றையடு தாளுளான்
வெம்பு செம்புலித் தோற்புனையு நாதனியான்
விண்ட தண்டமிழ்ப் பாட்டிலளி கூர்வனேல்
வம்பு மிஞ்சுபொய்ச் சேட்டையுறு பாவியோர்
வங்கி சங்களுக் கேக்கமுறு மூனுணார்
தெம்பு டன்சுகத் தாற்றலமை வார்விணோர்
சிந்தை பொங்கும்மற் றோர்க்கழிவு நேருமே. 80

வேறு

நேரலர்க் கொதுங்கி யளவில்பல் விதமா
நித்தமும் படுந்துயர் நீக்கிப்
பாரளந் தவனும் வியப்புறத் தகுமோர்
பரிசளித் தென்னையென் றருள்வா
யாரண முடிவு மளவிடற் கரிய
தாயசிற் றம்பலத் தாடிப்
பூரவா கனத்துக் கலைமக ளனைய
புலவர்தந் துதிபுனை வானே. 81

புனையிழைக் ககன வனிதையர் வலிதிற்
போற்றியும் புந்திசற் றிளையா
னனையரே யடைதற் குரியநின் றிருத்தா
ளகிலமங் கையர்க்குமால் கொள்ளும்
வினையினேன் றானும் விரும்பினே னந்தோ
வெறுத்தெனை யிகழ்ந்திட வேண்டா

நனைமலர்க் கடுக்கை யுடனிற கணிந்தாய்
நளிர்பொழில் தில்லைநா யகனே. 82

நாயினுங் கடையே னெனச்சில பெரியோர்
நவின்றபொய்க் கிரங்கினை நலந்தீர்
பேயினுங் கொடியே னெனவொரு தமியேன்
பேசுமெய்க் கருள்செயாய் கொல்லோ
தீயினுஞ் சிவந்த திருவுரு வானே
தில்லையிற் றினநடம் புரிவாய்
தாயினு மினிய கருணையங் கடலே
தமிழ்வலார்க் கெளியசங் கரனே. 83

சங்கர முனிவன் போன்றுநின் னருட்சீர்
தழைத்தசட் சமயமுந் தாங்கி
யிங்கவிர் தரல்வேட் டிளைப்புறுந் தமியேற்
கினியபே றளிப்பதென் றியம்பா
யெங்கணு நிறைவுற் றியாதும்வே றின்றி
யிலங்கிய வெம்பெரு மானே
செங்கன லேந்தித் தில்லையி னடித்தாய்
தெளிவிலார்க் கரியசிற் பரனே. 84

சிற்றுயி ரொன்றே கதிபெற வேண்டித்
திருவெழுத் தைந்துமோ தினர்க்கு
முற்றுபே றளித்தாய் மனிதர்பற் பலரு
முதற்பெரு நோன்புறப் புரிவான்
பற்றுமென் றனையாண் டருளிடாய் கொல்லோ
பரவுமென் மனத்துநீ யிலையோ
சுற்றுசெஞ் சடைக்கா டவிழ்தர மன்றிற்
றொம்மென நடித்தசுந் தரனே. 85

தரளமு முருந்து மனையவெண் ணகைச்சீர்ச்
சங்கிலி யார்மயற் றயக்கம்
வரவழைத் தொருவன் றனைபடுத் தியவா
மனத்திடை நினைத்துமிக் கயர்வேன்
பரவுசொற் றொடைவேட் டருள்புரிந் தனையேற்
பாவமோ பனிவரைக் குமரி
கரமலர் பிடித்தாய் கனகமன் றிடைவாழ்
காரணா கருணைமா கடலே. 86

கடனிறத் தொருவ னாழியங் காவல்
கடையெனக் காண்டரப் புவிமா
திடர்படல் காலி யினம்வதை யுண்ட
லெனன்முதற் பிழைபல மிகுத்த
வடல்வடி வேலு மயிலுமென் றனக்கீந்
தத்தொழிற் றிருத்துமாண் பருளாய்
நடமிடச் சலியாய் கனகமன் றுடையாய்
நால்வருக் கெளியவா னவனே. 87

வானகத் தமர ரீட்டமு மிந்நாள்
வலிகெழு தானவர் தம்மா
லீனமுற் றிடைந்த வாறெண துளத்தூ
டியம்பிட வந்தவ னெவனோ
வேனதென் றன்பா லிசைத்தனன் கொல்லோ
யாவுநீ யறிகுவா யன்றோ
மானவிர் மழுவோ டணிந்தகைப் பரனே
வயங்குசிற் றம்பல வாழ்வே. 88

வாழிய மறைநூற் பொருளுணர்ந் தவர்போன்
மறித்திரள் வதைத்தயில் வாரும்
பாழினைக் கருது வாருநின் றிருத்தாள்
பணிந்துபோற் றிசைத்திடப் பார்ப்பேன்
கோழிகே தனத்துக் குகன்கலை யென்னுட்
குலவவொன் றாயினுங் கொடுத்தா
ளாழியங் கையான் முதற்பலர் வணங்க
வம்பலத் தாடிய வரனே. 89

அரநிகர் விழியார் மயற்பெருங் கடலூ
டமிழ்ந்திடு மாதனேன் றனக்கு
மரகத மயிலும் வடித்தவேற் படையும்
வாரணக் கொடியுநீ வழங்கிற்
சரவண பவனுக் கிழிவுறா தவன்போல்
றயங்குரு வினர்பல ரன்றோ
புரமொரு மூன்று மெரித்தெழிற் றில்லைப்
பொதுவினின் றாடுமெய்ப் பொருளே. 90

வேறு

பொருளு மன்றொரு புலவனுக் கீந்தாய்
போக மேமிகும் பொலிவுறப் புசித்தா
னருளி லோர்சிறி தென்றனக் களித்தா
லகில முற்றுநல் லருளுறக் காண்பேன்
சுருளு மாசுணப் பணியணி வானே
துடிமு ழங்கிய தோளுடை யானே
தெருளு மேலவ ரனைவரும் போற்றுந்
தில்லை யம்பலத் தினில்வளர் சிவனே. 91

சிவந்த மேனியு முழுதணி நீறுந்
திங்கள் வார்சடைச் சீர்முதற் பிறவு
நிவந்த மால்விடைப் பரிமிசை யொருக்கா
னிலவும் வாழ்வுறி னீணிலத் துள்ளா
ரவந்த ருங்கலி யறுப்பதின் முயல்வே
னதைவி டென்னநீ யறையினு மமையேன்
பவந்தர் நாடருந் தில்லையம் பலத்திற்
பரத நாடகம் பயிலவல் லானே. 92

வல்லை நேர்முலைப் பார்ப்பதி கணவா
மலையை வில்லென வளைத்தகை யானே
தில்லை யம்பலத் தாடிய முதல்வா
சிறிது நின்னருட் சீர்வழங் கிலையே
சொல்லை மாலிகை யாமெனத் தொடுத்துன்
றோளி லிட்டுள தொண்டர்க ளெல்லா
மல்லை வென்றன ரென்கைமெய் யலவோ
வடிய னேன்றுய ராற்றுகில் லேனே. 93

ஏன மொன்றொடு தொடர்ந்துபோய்ப் பார்த்த
னெடுத்த வில்லடி யேற்றருள் புரிந்தாய்
நான வின்றிடுந் தமிழ்கொடு சிறிதோர்
நலஞ்செய் தாற்புவி நகைத்திடுங் கொல்லோ
கான வேட்டுவ னுருவமுங் கொண்டாய்
கனக மன்றிலோர் காலினு நின்றாய்
ஞான தேசிக னெனக்கலா னிழலி
னால்வ ருய்வது நயந்திருந் தோனே. 94

இருந்தை யேநிகர் சாரணர் பல்லோ
ரிலங்கும் வன்கழு வேறிய நலத்தாற்
றிருந்து நீற்றணி குன்றிடா வண்ணஞ்
சிறிது மெய்யருட் செய்யநின் னுள்ளம்
பொருந்தி டாவித மியாதுகொ லறியேன்
போதன் சென்னியிற் புதிதுகொண் டனையோ
வருந்து வார்வினை முழுதறத் தில்லை
மன்றி லாடியென் மனங்கவர் வானே. 95

கவலை வாரிதித் திரையிலெற் றுண்டு
கலங்கு மென்னைநின் கண்ணருட் பெருக்கா
லவமெ லாமறத் தொடைத்தெடுத் தாண்டா
லலதுய் யேனெனல் சத்திய மன்றே
தவள வாரணத் தினருட லென்புந்
தறைதந் தார்தலை மாலையும் பூண்டா
யவல நெஞ்சினர்க் கறிவரி யானா
வம்ப லத்தினின் றாடுமுன் னவனே. 96

முன்னை நாளைமெய் யடியவர் தஞ்சீர்
மொழியின் வம்பெனு மூடர்தங் கண்முன்
னென்னை யேனுமற் றெவரையா னாலு
மினிய மெய்யரு ளிசைவுறச் செய்வா
யுன்னை நாடலி னுனதரு ளடைந்தோர்க்
குரிமை கொள்வதுத் தமமென லுணர்வேன்
றென்னை வார்பொழிற் றில்லையம் பலத்திற்
றினமு மாடிய செழுமணி விளக்கே. 97

விளக்கு நின்னரு ளொளிவழி யல்லால்
வேறு தாரகம் விளம்புதற் குளதோ
துளக்கு சென்னியொ டன்றொரு குறிப்புத்
தோற்றச் செய்ததுஞ் சோர்வுற லாமோ
குளக்க ணான்முன நீதரும் புதல்வன்
கொடுத்த வன்றுயர் கூறிடற் பாற்றோ
வளக்கொ ணாப்பெரும் புகழ்கொடு குலவு
மாடகத்தனி யம்பலத் தானே. 98

தான மால்களிற் றுரியுடை யானைத்
        தவள நீற்றணிச் சங்கரன் றன்னை
யேன வான்மருப் பாமையோ டாதி
        யிலங்கு மார்பகத் தெந்தையை யன்பா
னான வாவிய திலையிலை யவனே
        நலங்கொ டில்லையின் ஞானமே வடிவ
மான தோர்சிவ கங்கையி னருகி
        லாட்கொண் டானரு ளாண்மைதந் திலனே. 99

தந்தி மாமுகக் கணபதி தன்னைச்
        சகள நிட்களச் சமரசக் குகனை
முந்தி யீன்றுபல் வீரரைப் பயந்து
        முதிரு மின்சுவை முத்தமிழ் விரகற்
பிந்தி யேற்றரு ளம்பலக் கூத்தன்
        பிள்ளை யொன்றினும் பிறங்கிடச் செயினே
சிந்தி யாவறு சமயமும் பொதுவுஞ்
        செப்பு நான்மறை சீர்பெரு மன்றே. 100

முற்றிற்று

30

தில்லையிதழகலந்தாதி

30

தில்லையிதழகலந்தாதி

காப்பு

நடரா சனையகரட் டணங்காரை நயந்திட் டன்னார்
நடரா சதாநினை யென்னெஞ் சத்தைங்கர நாதனடி
நடரா சனியன்ன தீங்கின நீங்கலி னல்லதில்லை
நடரா சனாடி தழகலந் தாதிநடை தந்ததே.

நூல்

சங்கர சங்கரத் திற்றரித் தானயன் றாழ்தகைசால்
சங்கர சங்கரத் தாய்ந்தயின் றாய்தங் கடாயிகல
சங்கர சங்கர கஞ்செற்ற தேசிகன் சார்ந்ததில்லைச்
சங்கர சங்கர தாதனத் தேற்றந்தரத் தக்கதே. 1

தரத்தக் கனத்திய தாளனங் கந்தன்றன் றாதையெரி
தரத்தக் கனங்கந்த டிந்தான் றரக்கங்க தந்தெரியந்
தரத்தக் கனகத்தரங் காடலாதி யஞ்சக்க ரஞ்சீர்
தரத்தக் கனநனெஞ் சேயறை யாய்ச்சஞ்ச லந்தணந்தே. 2

சலந்தர னஞ்சடஞ் சக்கரத் தாற்செற்ற சங்கரன்சஞ்
சலந்தர னஞ்சயின் றண்டரைக் காத்ததயை யினன்றண்
சலந்தர னஞ்சனஞ் சேர்தில்லை யானெஞ்சிற்றி னங்கினனஞ்
சலந்தர னஞ்சரியா ரென்றநாத னிற்சார் கையென்றே. 3

சாரந்த ரித்தநெல் விற்றளர்ந்தேங் கத்தறை யினிற்சஞ்
சாரந்த ரித்தயக் கந்தணந்தாள் செந்தனத் தணிக்கச்
சாரந்த ரித்தனி கெஞ்சிநின்றாய் தில்லைச்சங் கத்தன்றின்
சாரந்த ரித்தநல் லாயிரங் கேட்டடங்ன் சாற்றினையே. 4

சாற்றணி யானனத் திற்றிதி நாட்கண்ட யங்க நின்றான்
சாற்றணியான டத்தெந்தை நற்றில்லைத் தலத்திறையஞ்
சாற்றணி யான டியாரிடை சேரத்தயை செய்திக்கஞ்
சாற்றணி யானந்தந்தந் தாலித்தே கஞ்சழக் கதன்றே. 5

கதத்தானை யானனத்தன் றாதை செய்யகண் காதணையங்
கதத்தானை யானயன் சென்னியங் கையினன் கார்நிறத்தாள்
கதத்தானை யானணித் தில்லைக் கினியன் கழனினையி
கதத்தானை யானச் செற்றார் தீயராக்கங் கழியநெஞ்சே. 6

கழியஞ்சனக் கண்ணி சேயிடங் காண்டரக் காளையினிற்
கழியஞ்சனக் கண்ணி லாத்தகைகாட் டியகாரணன்
கழியஞ்சனக் கண்ணிய தில்லையான் கழற்காத லெய்திற்
கழியஞ்சனக் கண்ணி யாடகக் கண்ணியிற் கட்டியதே. 7

கட்டியக் காரனை கண்கண்ட நாடகர் கண்ணிடில
கட்டியக் காரனையார் தில்லைச் சங்கத்திற் கற்கலிங்கங்
கட்டியக் காரனைய நீறணிந்தெழிற் காளைச் சென்னிக்
கட்டியக் காரனை நாடார் கட்கில்லைக் களிக்கடலே. 8

கடங்காட்டிய கரியைச் செற்ற கையினர் கார்நிறச்ச
கடங்காட்டிய லத்தடிந் தாற்கரியர் களத்தி யைந்த
கடங்காட்டியக் கந்தணந் தெண்ணி யண்டர் கலசதண்டர்
கடங்காட்டியங் கணித்தில் லையை நேர்தலங் காணரிதே. 9

காணக் கதியடி யெய்திலி னெய்திக்க லங்கியதாற்
காணக் கதிய டின்னற்றீர் நற்றில்லைக் கங்காளற்கண்டக்
காணக் கதியடி யார்க்கெளி யாயெங்கட் காத்திடென்னக்
காணக் கதியடி கண்ணே நடநடகால் கதித்தே. 10

காலனஞ் சக்கழ லாற்சினந் தாரைக்கட்கா ததந்நாள்
காலனஞ் சக்கழ லாற்சினந் தாரையைக் கையகலாக்
காலனஞ் சக்கழ லாற்சினந் தாரையர்க் காத்தறில்லைக்
காலனஞ் சக்கழ லாற்சினந் தாரை கணத்திரளே. 11

கணங்களை யாண்ட கடைக்க ணெந்தாயிகற் கையரக்கர்
கணங்களை யாண்டலை யானிற் களைதரக் காண்டியங்கிக்
கணங்களை யாண்டகை யாத்தில் லையாளத்த காதலிந்தக்
கணங்களை யாண்டனந் தந்திரிந் தேனினைக் கண்ணலற்றே. 12

கண்ணா ரியனையந் தேராதிகழக் கலங்கி னன்கைக்
கண்ணா ரியனைய னாங்கரி யாற்கிளங் காலளித்தாய்
கண்ணா ரியனையனத் தாரிற் சேர்தில்லைக் காரணகற்
கண்ணா ரியனை யச்செய்தா னையீன்றசெங் கட்சித்தனே. 13

சித்தத்தரி யங்கணிட் டேத்தச்சக் கரஞ்சிட்டி செய்த
சித்தத்தரி யக்கனார்க் கினியார்தில்லைச் சீலர் நெஞ்சஞ்
சித்தத்தரி யலினாள் கலராக லைச்சீரி யர்நே
சித்தத்தரி யடர்கண்ணன் னநேரெ ழிற்சிற் றணங்கே. **14**

சிற்றரங் காடகத்தாற் றிகழ்தில்லை யிற்சென்றி றைக்கெஞ்
சிற்றரங் காடகத்தார் கெஞ்செண் சித்தெய்திச் சிந்தையினா
சிற்றரங் காடகச்சிந் தென்கண்ணா ரிச்சைதீர்ந் தெண்ணிலாச்
சிற்றரங் காடகங்கற்ற ரந்தேர்தலிற் றேர்கை யன்றே. **15**

தேரத்தகா ததிங்கியா தில்லைத் தில்லையிற் றில்லைச்செய்த
தேரத்தகா தகர்க்கா காய்சிலைச் சிலைச்சித் தசிலைத்
தேரத்தகா தற்கண்ணார் கண்ணாயிரச் சிந்தை கண்ணாத்
தேரத்தகா தசங்கஞ்சங் ககாத்தி யென்சீர்ச் சங்கர்க்கே. **16**

சீரணங் கானநலஞ் செய் திலாளிஙன் சிந்தைநைந்தேன்
சீரணங் கானத்தலங் கலன்றேற்ற னைதென் சங்கத்திற்
சீரணங் கானற்ற லையான் களிக்கச் சிறந்ததன்றா
சீரணங் கானத்தடையத் தள்ளே லென்னைத் தில்லையனே. **17**

தில்லைய னையனையங் காட்டங் கண்டிகழ் தேசிகன்செந்
தில்லைய னையனைஞ் சாயகத்தான் கெடச்சீற்ற னன்சிந்
தில்லைய னையனைதங் கிடத்தான டஞ்செய் யத்தக்க
தில்லைய னையனைநங் காயின்னே தஞ்சேர்க்கை நன்றே. **18**

சேராரை யட்டநற்சீ ராரெழிற் றில்லைச் சித்தர்சடை
சேராரை யட்டடஞ்சிந் தாலந்தின் றண்டர்சிந் தைநின்றார்
சேராரை யட்டநகை யார்சிலை தந்தசே யிழைசநச்
சேராரை யட்டகனல்காலி லாரெனைத் தேடினரே. **19**

தேடியங் கங்கடியார்க் காக்கின்றார் தனித்தில் லையினைத்
தேடியங்கங் கன்னியாகச் செய்தான்றி றற்சிந் திக்கிலேந்
தேடியங்கங் கரத்தானி கராடல் செயநண் ணினேந்
தேடியங்கங் கனையார் சத்திரச் சகச்சிக் கறற்கே. **20**

சிக்கச்சிகிக் கந்தனைத் தந்த யானையைச் செய்தில்லையான்
சிக்கச்சிகிக் கந்தனைத் தந்தத் தாளிடன் செங்கதிர்ச
சிக்கச்சிகிக் கந்தனைத் தந்தச் சீர்செய்திரி கண்ணனா
சிக்கச்சிகிக் கந்தனைத் தந்தகையிற் செறிந்திலனே. **21**

செறிந்த தந்தச் சங்கிலிகலி யாணநற்சீ ரெய்தற்காச்
செறிந்த தந்தத் தெய்யநாட கத்தாளினர் தீயழிநாள்
செறிந்த தந்தச் சென்னியே றிடக்காத்தனர் சேர்ந்ததில்லைச்
செறிந்த தந்தங் கசன்கைச் சிலையேநனி செய்கின்றதே. 22

செய்யசர ணத்தரஞ் சக்கரத் தின்றிறன் றெரியார்
செய்யசர ணத்ததாந் தீக்கிரி யையிற்சிக் கினர்காள்
செய்யசர ணத்தத் தந்தணர்த் தில்லையிற் றெண்டனிட்டஞ்
செய்யசர ணத்தகை ஞானக்கண் ணெய்திடீர் திடத்தே. 23

திடத்தசந் தேகத்த தென்றறி யாரெனச் செற்றயிறீ
திடத்தசந் தேகலில்லார் தில்லைச் சங்கத் திற்சீர் நனிசேர்த்
திடத்தசந் தேகந்தணந் தாணல் லாடகஞ் செங்கலிற்செய்
திடத்தசந் தேகடியா யென்கின் றாரதென் சிற்சிலரே. 24

சிலராக்கத ரையன்றாண் டாயின் றெங்களைத் தீதடர்நெஞ்
சிலராக்கத ரையர்ந் தேகா தளித்தி சினந்திரியாச்
சிலராக்கத ரையதில் லையெந் தாயறச் சேகரநச்
சிலராக்கத ரையழறீர்க் கையெண்ணித் தியங்கல் கண்டே. 25

தியங்கத்தி யங்கக் கலியடர்ந் திட்டதிற் சிந்தைநைசத்
தியங்கத்தி யங்கந் தளர்த்தே னிரங்கண்டர் சித்தர்கணத்
தியங்கத்தி யங்கண்ணியத் தியிற்காட்டினற் சேர்த்த விற்சேர்த்
தியங்கத்தி யங்கண்ண லேதில்லை யானந்தத் தேசிகனே. 26

சிகராசலா தில்லைச் சங்கத் தெந்தாய் நின்னைச் சிந்தித்ததே
சிகராசலா நெறிநா யேறகின் றீதிநற்சீர் நிறையா
சிகராசலாந் தகர்சேய்நல் கச்செய்தலிற் செய்யச் செய்யேச்
சிகராசலா டங்கள் கான கத்தாரத் திரிதரற்கே. 27

தரக்கஞ் சனக்கரி யங்கதந் தாழரன் சாத்திரத்தா
தரக்கஞ் சனக்கரி யேத்தணித் தில்லையின் றங்கச்சித்தந்
தரக்கஞ் சனக்கரி யாரெயிற் காய்ந்தசர தனத்தி
தரக்கஞ் சனக்கரிக் கத்தாங்கி னான்சில தந்தனனே. 28

தந்தனத் தந்தனத் தாளத்தி லாடினன் றாக்கழலார்
தந்தனத் தந்தனத் தார்க்கரி யான்றில்லைச் சங்கத்தினித்
தந்தனத் தந்தனத் தாட்கறைந் தான்கதி தானடங்கத்
தந்தனத் தந்தனத் தாலடை யாதயில் சத்தியனே. 29

சத்தியத் தானக்கரிக் கிளையானெய் தத்தான் சிட்டித்த
சத்தியத் தானல்கெனக் கெஞ்செனக் கென்றர நினைத்தாய்
சத்தியத் தானதண்டே னிதழார்ந்த சரசகெடாச்
சத்தியத் தானத்தனித் தில்லை யாடிய சங்கரனே. *30*

நூற்பயன்

சாதியை நாட்டை நகரத்தை யாடகந்தன் னைநல்லா
ராதியை நாடியயர்ந்த யர்ந்தேங் கென்னையந் தகனெண்
ணேதியையா தளிக்கின் றானற் றில்லை யிதழகலந்
தாதியைச் சந்ததஞ் சாற்றடி யாரடிதாழ் கைநன்றே.

முற்றிற்று

31

திருச்சிரகிரித் திரிவந்தாதி

31

திருச்சிரகிரித் திரிவந்தாதி

காப்பு

விரகிரிக்குப் புரையுண்மை யிற்றன் மத்தின் மேவவிட்டு
நரகிரிக்குந் துணைத்தாட் கணநாதனை நாடுகின்றேன்
வரகிரிக்குந் தம்பொரு கோடும் பூணில்வயங் கக்கொண்டோன்
சிரகிரிக்குத் திரிவந்தா திப்பாடல் சிறக்க வென்றே.

நூல்

திங்கள ணியணிச் செஞ்சடை யாரொண் சிரகிரியார்
செங்கள ணியமலர்க் கொன்றை யார்திதி சிட்டிசெய்வார்
தங்கள ணியனந் தம்புனைந் தாரென் றமிழ்விழைந்தா
ரெங்கள ணியரென வாழுநா ளுமினி வருமே. 1

இனியவரை யரெலும்பணிந் தார்செங்கை யேம வில்லாந்
தனியவரை யர்மணநா றுங்கூந்தற் றலைவி கொண்கா
கனியவரை யவலாதி யுண்டா டுங்களி றளித்தா
ரனியவரை யர்ச்செகுப்பார் சிரகிரியா சைநன்றே. 2

ஆசை யனந்தம் படைத்தேங் குமென்னைய ணிக்குழல்வே
யோசை யனந்தம் பெறச்செய் யவேண்டுமுயர் பவளத்
தேசை யனந்தம் புனைகா துளாய்தண்சி ரகிரியாய்
பேசை யனந்தம் பலகோ டிகண்ட பெருந்தெய்வமே. 3

பெருந்தந்த நாக மொன்றட் டுரித்தானொர் பிழையுமெய்தா
வருந்தந்த னாக மஞ்சொன்னான் சிரகிரி யாதிபன்முன்
வருந்தந்த னாகத் தொடுய்யவுஞ் செய்தனன் வாழ்த்துமன்பாற்
றிருந்தந்த நாக முங்கைத் தேற்கொர்சற் றருள்செய்கிலனே. 4

செய்ய கலாபச் சிகியா ணின்சேய்சொன் னசெஞ்சொனம்பி
வைய கலாபங் கருதிநொந்தே னென்னைமாய்த் தொழியேன்
மெய்ய கலாபத்து ளார்வாழ் வுங்கண்டு வெதும்பினன்காண்
டுய்ய கலாபர் பணிசால் சிரகிரித் தொல்பரனே. 5

தொல்லை யிராணிகர் பேறுங் கருதித்தொ ழுமெனெஞ்சில்
வல்லை யிராணி பொருநீர ளித்தும்வ ருத்தனன்றோ
முல்லை யிராணி கழ்த்துஞ்சீ ர்ச்சிரகிரி முன்னவவோர்
நல்லை யிராணி மணவாள ரென்பணிநா யகனே. 6

நாயகனா னங்கமழுஞ் சிரகிரி நம்ப னும்பா
தாயகனா னவிர்கேத னத்தானெ னைத்தாங் குவனே
லாயகனா நலமெல்லா மெய்யா கும்கம யக்காம
பேயகனா னகிலத் தொருமா விற்பிறங் குவனே. 7

பிறங்கற்கு வடுறுங் கோயிற் சிராப்பள்ளிப் பிஞ்ஞகனல்
லறங்கற்கு வடுலங் கும்பாதி யானென் னையாட் கொள்ளின்மா
லுறங்கற்கு வடுயரெய் தற்ற விரப்பனுயர் பொதுப்பா
லிறங்கற்கு வடுப்பகர் வார்புன் னாக்களு மீரவனன்றே. 8

ஈரங்க மான வணியான் சிராப்பள்ளி யீசன்குன்றா
நீரங்க மான வனென்ற மிழ்வேட்ட வின்றேனற் காச்
சீரங்க மான வஞ்செய்ய வொட்டாது செயலுணர்ந்து
பூரங்க மானவள போல்வீர மற்றோர்தெய் வம்போற்றன்மினே. 9

போற்றப் படாதகி நீங்காச் சடாடவிப்புங் கவனென்
மேற்றப் படாதபடி யாள நாடினன்வீ ணரிட
மேற்றப் படாதருகின் றிலரென்னவிளைத் துமிகச்
சாற்றப் படாத விட்டுச்சி ராப்பள்ளி சார்ந்தனனே. 10

சாரங் கலந்த துதிபாடி டாமற் சளப்பட் டெய்ததுள்
ளீரங் கலந்தன வெல்லாங் கொடுக்குமி றையுளனெந்
நேரங் கலந்தணர் வாழுஞ் சிராப்பள்ளி நின்றவிரு
மோரங் கலந்தத் தவன்பாற் சென்றேன்ற மட்டோதுமினே. 11

ஓதருமன் னையுந்தந் தையுமானவொ ருவனடன்
மாதருமன் னையச்செற் றபொற்றாட்சிவன் வானதன்மேற்
போதருமன் னையச்சோ லைச்சிரகிரிப் புங்கவனன்
பேதருமன் னைமதியா வுற்சாகம் பினெய்துநர்க்கே. 12

எய்ய வந்தானைப்பொடியாக் குந்தீக்கண் ணிறைவிரிக்கும்
பைய வந்தானைப்பணியா ன்சிராப்பள் ளிபாடுமன்பா
லுய்ய வந்தா னையன்போல் வானெனினு முணர்விலனே
மெய்ய வந்தா னையற்றே வர்தஞ்சீர்த் திவிளம்புவதே. 13

விளக்கன்ன தான விழியான் சிராப்பள் ளிவேண்டுநர்தம்
முளக்கன்ன தான முதலாம் பல்சீருமொ ருங்கமையுங்
களக்கன்ன தான வர்போல் வார்பகைமை கவின்றருஞ்சி
தளக்கன்ன தான வெற்பூ ரிந்திராதியர் தாமொல்கவே. 14

தாமக் கருங்குழலார் மைமைய லெய்தித் தயங்குபல
வாமக் கருங்குழலாகந் ததேனெண் ணிலா னளிக்கு
நேமக் கருங்குழலாய் னிலவாழ் வுறநீ புரப்பாய்
சேமக் கருங்குழ லார்சூழ் சிராமலைச் சுந்தரனே. 15

சுந்தர னன்றுசொலும் பாட்டொடென் சொற்றுதி யுங்கொண்டா
லுந்தர னன்றுபடாது கொல்லேர் வண்டரூ ரெள்ளுமோ
சொந்தர னன்றுவெறுப் பார்களோபகர் தூவிமலி
யந்தர னன்றுதிக்குஞ் சீர்ச்சிரா மலையாண்டவனே. 16

ஆண்டானை யஞ்சப்பெண் சேனை கொண்டார்க்கு மனங் கனங்கு
மாண்டானை யஞ்சம் பொடீந்தான் சிராமலை வாணன்மைபோ
னீண்டானை யஞ்சனல்கக் குறியார் கணினைப்ப வெல்லாம்
வீண்டானை யஞ்சற்று மில்லைசொன் னேனிது மெய்ம்மொழியே. 17

மெய்யந் தரங்க மெல்லாமறிவாய் பலவீனர் முற்போய்ப்
பொய்யந் தரங்கடுக்கும் பலமாற் றம்பு கலவிடேன்
மையந்தரங் கனையன்போல் சிலரையும் வாழ்த்தி நொந்தேன்
சையந்தரங் களின்மே லாஞ்சி ராமலைச் சங்கரனே. 18

சங்கர னாதிச யம்பு சதாசிவன் றாக்குமழுச்
செங்கர னாதிரை யானொண் சிராமலைச்சித் தனுமை
பங்கரனா திமற்றொன் றறியே னெனைப்பா வபலப்
பொங்கரனா தினம்பொல் லாவசைச் சொற்பு கல்கின்றவே. 19

புகலியி னானையன் னான்வருமாறு புலரெனைப்பா
வகலியி னானைப்பக் கண்டனையேயென் றுவாழ்விப்பையோ
விகலியி னானையத்தா னென்றெள் வாருமிக்கீந் தனையே
சகலியி னானை பெற்றாய் தண்சிராமலை தங்கினனே. 20

தங்கவில் லாருந்தடங் கைசிரா மலைத்தா னமைபோ
லங்கவில் லாருந்தரிக்குஞ் சடாட வியாதி கொண்டோன்
பங்கவில் லாருந் தவத்தோ ருநாடும் படியிருந்தான்
றுங்கவில் லாருந் தறிவா லறிந்துதுதி செய்வரே. 21

துதிக்கும் பலரைப் புரந்தான் சிராமலைத்தூ யனருண்
மதிக்கும் பலரை நொடிப்போ துநீங்கரும் வண்பதத்தான்
விதிக்கும் பலரை வென்மாற் குமெட்டானொரு வேளையில்
கதிக்கும் பலரைக் கயிலா யஞ்சேரவுங் கண்டனனே. 22

கண்டங் கறுத்தவன் கார்சூழ் சிரகிரிக் கண்ணுதலோ
னண்டங் கறுத்தவ சுரர்க்குக் கூற்றனு மன்னையுமா
மண்டங் கறுத்த வரிபகை யேயெவன் மாண்பினனோ
தொண்டங் கறுத்த வநுபூதி யாளர் துணிவதுவே. 23

துணிதந்த வர்க்கும் வெண்சோறிட்ட வர்க்குந்துதி பகர்ந்து
பணிதந்த வக்கணைச் சொற்புலவீ ரொண்படர் முகத்தி
லணிதந்த வண்களிற் றார்சூழ்சிர கிரியத்தற் சொல்வீர்
திணிதந்த வக்கிரற் செற்றான் மெச்சும்படி சேர்க்குமன்றே. 24

சேரனை யாண்டவனோர் சூலியுய் யச்சிராப் பள்ளியி
னாரனை யாண்டவிர்ந் தாங்கு சென்றானென் பர்நாடுமெற்காக்
கூரனை யாண்டலை யானைவிட வுங்குறிக்கிலனா
லோரனை யாண்டரைப் பாப்புகழ்நூற் சொல்லு றுதியெற்றே. 25

உறுகண்ட விர்ச்சிராப் பள்ளியீசனை யுன்னுகின்றேன்
பெறுகண்ட விரதப்பே றளிக்கின்றிலன் பேசியன்பான்
மறுகண்ட விரகர்வாழ் வானந்நா ளழல்வம்பு கொல்லோ
சிறுகண்ட விரசமுண்பார் தமாள்கை யுஞ்செல்கின்றதே. 26

செல்லார வாரம்பொலி பொழிற்சீர் கொள்சிர கிரியான்
கல்லார வாரம்புலி யோட விருங்கவின் சடைக்கோன்
வல்லார வாரம்பெறு பூத மொன்றை வரவிடினும்
பொல்லார வாரம்ப மெல்லாங் கெட்டேனை யர்பூரிப்பரே. 27

பூரியரோ டப்புவிமக ளார்வம் பொலிய வுண்மைச்
சீரியரோ டருட்பாவ லர்வாழ்த் தினஞ்சிந் தித்தே
னாரியரோ டவிர்கை யார்சிர கிரியாதி பாதம்
பேரியரோ டத்தர் போல்வா ரெந்நாளெனைப் பேணுவரே. 28

பேணுங் கரவுடை யார்பகைப் பான்மை பெரிதுறுமென்
னேணுங் கரவுபற்றுந் தேரை போலவு மேன்செய்துளா
யாணுங் கரவுருக் கட்பெண் ணுமாம் மலர்களத்திற்
பூணுங் கரவுல கேத்துஞ் சிராமலைப்புண் ணியனே. 29

புண்ணியஞ் செய்ய விழைந்தேங் குமென்னைப்பு லரவிட்டாய்
தண்ணியஞ் செய்ய பொற்சீரம் பலத்தன்று சாற்றுமுண்மை
யெண்ணியஞ் செய்யனங்கன் றொடரார்தரு ளீடருள்வாய்
நண்ணியஞ் செய்யசிராப் பள்ளிவாழ் முக்க ணாயகனே. 30

அகரமுன் னானபொறி யாவுந் தோய்தொனியா மரன்பொற்
சிகரமுன் னாநகு சீரார்சி ராமலைச்செய் யன்மற்றோர்
பகரமுன் னானம்புவார்க் கெளியா னெனைப்பற் றியிழுத்
திகரமுன் னானந்த மன்றெனத் தேற்றுவ தெத்தினமே. 31

எத்திசை யோருமதிக் குஞ்சிரா மலையீ சனண்டர்
நத்திசை யோரும் புலவோர்க் குவேண்டு வநல்கு மம்மான்
பத்திசை யோரும் பெறத்தக்க தேர்முன்ப யிறவத்தாற்
சித்திசையோ ரும்பல்போல் வாழ்விதி கொள்சில ரன்றியே. 32

சிலகதை யான்மருளேன் பல்லுயிர் கட்டினஞ் சிதைக்கும்
பலகதை யாற்குமஞ் சேன்றொண்டு செய்துய்ந் தபத்தர்கட
மலகதை யாருமறி யாச்சிர கிரியாதி பன்முன்
னிலகதை யாசெய்ய நாடித் தவஞ்செய்தி ருப்பனன்றே. 33

இருப்பர மன்னகண் ணார்மையல் வாரியிடைப் படினுங்
குருப்பர மன்னவன் சொல்லேமறை யெனுங்கொள் கைவிடார்
விருப்பர மன்னமர் பங்கார் சிராப்பள்ளி மேயவள்ளல்
சருப்பர மன்னரென் பெல்லாங் களத்திற்ற ரித்ததென்னே. 34

தரியலரா ணவஞ்செற் றாடனச் சித்தயங் கெனெஞ்சைப்
பொரியல ராகப்பதஞ் சூட்டியாண் மணம்பொங்கு கொன்றைத்
தெரியல ராவொட ணிந்தாய் சிரகிரித் தேவமிக
விரியலராலு மிடியா லும்வாட் டன்மிகக் கொடிதே. 35

கொடிய விரோத குணத்தொருங் கூடியென்கொள் கைமெச்சும்
படியவிரோ தனமுண்ணா விரதப் பயன ருள்வெண்
பொடிய விரோத நிலையீந்துளா யண்டர் போற்றிமையா
நெடிய விரோதக் கண்ணார் வாழ்சிராமலை நின்றவனே. 36

நின்றலங் கோடியுண் மேலாஞ் சிராமலை நேடிவந்தே
னின்றலங் கோடி யமெல்லாந் தணத்தி யிணையிலருள்
குன்றலங் கோடிப்பா வைக்கித மிகக்கூ றினையேன
மன்றலங் கோடிவழுத் தீர்ந்த தென்றுன்ம கன்சொன்னதே. 37

சொன்னக் களஞ்சியம் போல்வாரை நாடிச் சூழலுமெனக்
கென்னக் களஞ்சியவின் றமிழீந்தனை யேற்றமிக
மன்னக் களஞ்சிய ருணகிலாய் வம்பின் மாய்த்திடல்கார்
வன்னக் களஞ்சிய வானார்சிரா மலைவா சத்தனே. 38

வாசவனென் பணிந்தானண் டமுண்டு மிழ்வாய் படைத்த
கேசவனென் பவன்றோ லென்புகண் ணுங்கிளர்த் தொட்டான்
றேசவனென் படவோ பற்கொண்டான் றென்சிராப் பள்ளியர்
னேசவனென் பரமற் றோர்பொரு ளில்லை நிச்சயமே. 39

நிச்சலங்கை யதிலேற் றுண்டுனா தருணெஞ் சிலுன்னிப்
பொச்சலங்கை யனைச்செற் றானனை யர்புகழ்ப் பெருக்குங்
கச்சலங்கை யம்பன் போர்கடவே னெனைக் காத்தியரு
விச்சலங் கையவிர் சீரார் சிராமலை வேதியனே. 40

வேதிக்கு மார்வமுத லாம்பல் பேறும் விரும்பெனெஞ்சி
லாதிக்கு மார்வம் பலாது பஃறீங்கு மடர்தலற
வாதிக்கு மார்வண் புகழீதி பாட்டென் வாய்திறந்தியா
னோதிக் குமார்வள மோங்குஞ் சிராமலை யுத்தமனே. 41

உத்தமச் சிந்தையுடை யாரிற்கூட்டி யுலகறிய
நித்தமச் சிந்தைநிகர வெண்ணீ றணிநீர் துலக்கா
யத்தமச் சிந்தைய மாற்கரியாய் வெள்ள ருவிகள்வேய்
முத்தமச் சிந்தையல் வாய்ந்த சிராமலை முன்னவனே. 42

நவந்தரு கோலமு மானான்சிரா மலைநா தன்மெய்யன்
புவந்தரு கோலமிடு வார்க்க ருளுமொருவ னென்பா
னிவந்தரு கோலங்கள் போல்வினைக் கூட்டற நீக்கலினுஞ்
சிவந்தருகோ லண்ணல் செலபொது வாற்றிற் செலவுய்ப்பதே. 43

உய்ப்பகட் டானனியென் வினைசெய்ய வுழன்று ளன்முன்
கைப்பகட் டானன வந்தோர் கனாவிற் கழறல்வம்போ
பொய்ப்பகட் டானந்தம் வேண்டாமெய் யாமருட்போதந் தந்தாண்
மைப்பகட் டானஞ்ச வென்றாய் சிராமலைமா னத்தனே. 44

மானத்தனா னந்த மீறிச்சபை தொறுமா துமைமுற்
றானத்தனா னவென்றா டும்பிரான் வென்றிதந் தொளிர்வெண்
பானத்தனா னவிடையான் சிரகிரிப் பத்தி யின்றேல்
வானத்தனா னலடைவான சுரர்வலி மிஞ்சியே. 45

வலிய வராகமுமாகிக் குருளைகள் வாழ வைத்தாய்
மெலிய வராகத் திருவடி நீழல்வி ரும்பெனையேன்
கலிய வராகவங் கண்டேங் கவிட்டனைகா ரணங்கு
புலிய வராகவின் காட்டுஞ் சிராமலைப் புங்கவனே. 46

கவலைக் கடலை விட்டேறு கிலேன்புலைக் கள்வரெள்ளு
முவலைக் கடலைமிகப் பூசினே னருளூற் றநல்காய்
திவலைக் கடலைப்பெய் கொன்றையு மாத்தியுஞ் சேர்த்தணிந்த
சிவலைக் கடலைய மில்லாய் சிராமலைச் சீரினனே. 47

சீரகங்கா ரம்புளியுப் பனையன தின்று தின்று
பேரகங்கா ரமுறு மென்னை நீயென்று பேணிக்கொள்வாய்
கோரகங்கா ரமிக்குஞ் சடையாய் கரங்கூப்பு மன்பர்
வாரகங்கா ரப்பொழி லார்சிரா மலைவாழ் சிவனே. 48

சிவராச யோகமறி யேன்கண்ணா விளஞ்சிந்தை முற்றுங்
கவராச யோகந்தரு மாதரே வலெக்காலுஞ் செய்வே
னிவராச யோகனமெங் ஙனுய்வேன்வந் திறைஞ்சு முண்மைத்
தவராச யோகந்தணப் பாய்சிரா மலைத்தா னத்தனே. 49

நத்தனை யங்குபுணர்ந் தோர்மத லையுநல் குமம்மான்
சித்தனை யங்குல வுந்தொண்டர் வாழ்தென் சிராப்பள்ளியா
னத்தனை யங்குசக் கைப்பாலனா லன்றறைந் துநெஞ்சஞ்
செத்தனை யங்குட் சிசேர்வோங் கொலென்னத்தி யங்கியதே. 50

தியங்காத வாறருள் செய்கெனப் போற்றித் தினம்பணிந்தும்
வயங்காத வாதி யாசான் றெனத்தேர்ந்தும் வரநல்கிலாய்
நயங்காத வாவுமெந்தாய் தென்சிரா மலைநாத கண்மு
னியங்காத வரநல மீவதற் காவினி யென்செய்வனே. 51

என்செய லாவதிலை யென்றவர் கதியெய் தல்கண்டும்
புன்செய லாவகுக்கும் போகத்தாசை பொலிய நொந்தே
னன்செய லாவகைநெற் செய்துந் தொண்டன் றனாரிக்கிட்டாய்
பொன்செய லாவள நீடுஞ் சிராமலைப் பூரணனே. 52

பூரத்தி வருமவள் போலுஞ் சிற்சில புலவர்களுஞ்
சாரத்தி வருங்கொடி யோரில் வாடற விர்ப்பதென்றோ
சீரத்தி வருந்த மாயற் செற்றாண்ட சிரகிரியா
னீரத்தி வருந்த குவற்கொ லாழிசெய் நின்மலனே. 53

நின்னய மானவஞ் சக்கரத் தான்முழு நீலவுண்க
ணன்னய மானவன் றான்வாழ் சிராமலை நாடெனக்குட்
டுன்னய மானவந் தானந்த வாறெதிர் தோற்றிநின்றாற்
பின்னய மானவந் தோய்வேன் கலியன் பெரிதஞ்சவே. 54

பெரிதான வம்புவி யின்புற நாடொறும் பேணத்தக்கா
னரிதான வனிந்த நாடுயின் மூழ்கின னாலெனக்கச்
சரிதான வப்பொலி வெய்துஞ் சிராமலைத் தாணுவப்பா
வெரிதான வப்பகைச் செவ்வேளைக் கண்வழி யீன்றவனே. 55

ஈன்றவ ரில்லவனீ டார்சிராமலை யீசனறந்
தோன்ற வரில்லவள் பங்கினன் பேரருட்டொந் தமுற்றால்
வான்ற வரில்லவ னிவாழ்க்கை மாயும் வகைவிளங்கு
மேன்ற வரில்லவ மாமுண்மை ஞானமி லங்குமன்றே. 56

இலங்கை யனஞ்சக் கடற்சேது செய்தவ னேய்ப்பனெனத்
துலங்கை யனஞ்சனங் கட்கீந்து வாழ்கை யிற்றோன்றிலனா
னிலங்கை யனஞ்சறந் தாண்டருள்வாய் தொன்னிக மன்றலைக்
கலங்கை யனஞ்ச முதுண்டாய் சிரகிரிக் காவலனே. 57

காவல ராசைமுழு தாள்நாட லிற்கற் றபல
பாவல ராசைநின் னால்வர்தம் பேற்றிற் படாததென்னோ
மாவல ராசைவர் போற்றுஞ் சிராமலை வாண்தொண்ட
ரேவல ராசையறுப் பாயெல் லோர்க்கு மிறையவனே. 58

இறைக்கடங் காவிறு மாப்பெய் திவாழ்சித் தரியாரு மின்றோ
மறைக்கடங் காடுறையக் கண்டுளே மதில்வாஞ் சையுற்றார்
துறைக்கடங் காட்டிடல் சற்றி ரங்கின்னமுஞ் சோதித்திடேல்
கறைக்கடங் கான்றருகர் வார்சிரா மலைக்காட் சியனே. 59

காட்சிக் கரியவராகிய நீதிகனக்கச் செய்வா
ராட்சிக் கரிய கஞ்சம் மதியாவண்ண மாணையிட்டு
நீட்சிக் கரியமலை போற்கிடந் தனனீ யருள்வாய்
மாட்சிக் கரியணி குன்றாச் சிராமலைவாழ் பரனே. 60

பரத்தையவா வினர்தாமு முன்னாளாய்ந் தபாரி லிந்நாள்
சிரத்தையவா வியன்றான் வடலூரிற் சிதையச் செய்தாய்
வரத்தையவா வின்மீது விட்டா யிதும்வம் பல்லவோ
திரத்தையவா விச்சிரா மலைமேல் வளர்செங் கொண்டலே. 61

கொண்டலைக் காட்டுங் கரத்தா ரென்றீனரைக் கூறிமலர்த்
தண்டலைக் காட்டுறழ் கூந்தன்மின் னார்க்கிட்டுத் தாழ்வடையேன்
விண்டலைக் காட்டுன் னுபாகா சிராமலைவித் தகநீர்
வண்டலைக் காட்டுப்பணி யுமிட்டா யென்னை வாழ்வித்திடே. 62

வித்தனந் தத்திற்கு மானான் சிரகிரிமே வியசெஞ்
சித்தனந் தத்திற்கு மாறுசெய் தாட்கொளிற்றே வர்தம்மூர்
கைத்தனந் தத்திற்குழு முழுதோட் டிக்களி மலிந்து
புத்தனந் தத்திற் குருச்சென் றவீட்டிற்பு குவனன்னறே. 63

புகுவித்த மோக முழுதுங்களை யிலென்புந்தி யின்பம்
வெகுவித்த மோகன் னியோசெய்கொலோ வென்னவேட்டல்விடுந்
தகுவித்த மோக விளையாட லாதியத் தாணுவின்பா
னகுவித்த மோக வியஞ்சுஞ்சிராப் பள்ளி நாட்டினரே. 64

நாட்டத்த னல்லலவன் பானு வுற்றவ னாகமொன்றைக்
கோட்டத்த னல்லலழிப் பான்சிராப் பள்ளிக் கோயிலென்னும்
வீட்டத்த னல்லலரிப் பூவுங்கொன் றையில்வேட் டவன்பல்
கூட்டத்த னல்லலம் பத்தனியோ னென்றுங் கூறுவமே. 65

கூறு வருடம் பன்றன்னை யுந்தாழ்தலைக் கொற்றவன்போல்
பேறு வருடம் பனங்காட்டுமன் னேனும்பிறங் கச்செய்வாய்
தேறு வருடம் பமென்ன நின்றாய்தண் சிராப்பள்ளியாய்
நூறு வருடம் பணிந்தார்கொள் பேருணோக் கத்தனே. 66

நோக்கத்த வந்தரவா வெனப்போற்றி நுடங்கெனைநின்
னாக்கத்த வந்தரவா ணருநாணவ மைப்ப தென்றோ
சேக்கத்த வந்தரவா தொண்டர்சூழ் தென்சிர கிரியா
தேக்கத்த வந்தர வாச்சிவா வதிசீ தளனே. 67

சீதரனா டுந்திரு வடியா ளன்சிலைத் தகைப்பொற்
பூதரனா டுகைப்போன் றந்தை யாதி புராதனன்பல்
கோதரனா டுஞ்சவன் கழுவேற்றல் கொடுமை யென்பா
ராதரனா டுபுகுவார் சிராம லைக்கன் பிலரே. 68

அன்பா வைக்குருவா வருவா னையருந் தமிழ்க்கா
முன்பா வைக்குநய மொழிகோடி மொழிந் தவனைப்
பொன்பா வைக்குன்று நீடுஞ் சிராப்பள்ளிப் புங்கவனை
யின்பா வைக்குண் மெள்ள வல்லார்மிக விச்சிப்பரே. 69

இச்சித்த வாற்றை முடித்தென் முனிற்கவென் றெண்ணுவையோ
நச்சித்த வாற்றைய நால்வர்க்கு ஞான நவின்றிலையோ
மெய்ச்சித்த வாற்றைச் சடையாய் சிராமலை மேலவபோ
தச்சித்த வாற்றை யல்கேள் வனதோர்வெண் டலைக்கையனே. 70

தலைக்கல் முற்றுவிர் மார்பன் சிராமலைச்சா ரலிற்போய்
நிலைக்கல முற்றறி வெய்துகிலே முண்மை நீதிசொல்பல
கலைக்கல முற்றலைச் சாரணர் நூல்கொள் கவிஞர்பகர்
சொலைக்கல முற்றவப் பேற்றால் வெல்வாரிற் றுலங்குதுமே. 71

துலங்கடி யாரை யிகழாது போற்றில்விண் டோய்புகழ்ச்சி
நலங்கடி யாரைமலர் போற்குலா வுறநல் கும்பிரான்
பலங்கடி யாரை பொடியாக நக்கவன்பார்த் தன்முற்போம்
விலங்கடி யாரையல் போய்மீள் சிராமலை வேட்டுவனே. 72

வேட்டு வனாகியுந் தோற்றுஞ் சிரகிரிவேந் தனுண்மை
நாட்டு வனாகியல் கேதனத்தான் சொல்லை நம்புவம்பிற்
கேட்டு வனாகியனை யாரைக்கெஞ் சல்கிளர் வமுற்று
மாட்டு வனாகிளத் தாகமந்தோ தியவல் நெஞ்சே. 73

அவலப் பிறவியறு மாறுநா டவறந் தழைப்பான்
கவலப் பிறவினை யெல்லாந் தவிரக்கடாட் சஞ்செய்தா
னுவலப் பிறவிர நீக்கான் சிராமலை நோக்கமுள்ளான்
வெவலப் பிறவிரு நால்வர்க் கருளும் வினோதத்தனே. 74

தத்தத் தனந்தன வென்றாடும் பற்பல் சபையுடையா
னத்தத் தனந்தன ழியாச்சி ராமலை யாதியன்பர்
சித்தத் தனந்தனச் சீர்மிக் குளானன் றுசெப்பியவா
றித்தத் தனந்தன மீடாதி நல்கியிறுப் பதென்றே. 75

இறுமையா ரண்மை யுமென்று ணர்ந்தேனெவ ரென்செயினும்
பொறுமையா ரமவர் பூந்தாட்டு களும்புனைந்து கொண்டேன்
செறுமையா ரவும்புனை வாய்சிரா மலைச்சென் னியில்வாழ்
வுறுமையா ரத்தெய்வமே சற்றின் றீதியுன தருளே. 76

உனலரு மாரம்பல புனைந்தார் தவர்க்கூறு செய்யுங்
கனலரு மாரனுரு வழித்தார தினங்கை யில்வைக்கு
மனலரு மார மிப்பார் தென்சிராப்பள் ளியார்பலர்வாய்
பனலரு மாரவெனைப் படுத்தாது கண்பார்க் கினன்றே. 77

பாரணங் குக்குத வாவல் கொள்ளாவஞ் சப்பாழ்ந்தவருஞ்
சூரணங்குக் குறைபேசு கின்றாரன்று சொன்னபடி
வாரணங்குக் குகுவென்றார்க் குந்தோட்கந் தன்வாழ் வருள்வாய்
சீரணங்குக் குழுத்தீர்க்குஞ் சிராமலைச் சித்தர் மன்னே. 78

சித்தரை நாடித் தினந்தினம் வாடித்தியங் குமெனக்
கித்தரை நாடியம் பத்தகு பேறொன்றுமில் லைகொல்லோ
தத்தரை நாடியுந் தேறா வயித்தியர்தம் மையொத்தேன்
சத்தரை நாடிறம் பாய்தண் சிராமலைச்சவ் வியனே. 79

சவ்விய மன்றிய வேனையர் வாழ்வுந் தகுமுலகி
லிவ்விய மன்றியம்பச் செய்து மேன்றுயரிட் டொளித்தாய்
வெவ்விய மன்றிறஞ் செற்றாய் சிராமலை மேல்வளருஞ்
செவ்விய மன்றிங்கள் சூடுஞ் சடில திவாகரனே. 80

கரவில் வரமிகக் கொள்ளுமென் னெஞ்சின்கன விற்பன்னா
ளிரவில் வரறிசைத் திட்டபொல் லாக்கள்வனி யாவனவன்
மரவில்வர தரிக்குங்கிள் ளைமானச் செய்வான் கொலந்தோ
திரவில் வரதமிழ்ச் சீர்சால் சிரகிரித்திண் ணியனே. 81

திண்ணனை யங்குதடுத் தாண்டுதன் பணிசெய் யச்செய்து
கண்ணனை யங்குறை வெய்தும் வைராகனென் காமரிட்டாய்
வண்ணனை யங்குலவுந் துதிக்கியாது வழங்கு வையோ
பெண்ணனை யங்குறித்தாள் வாய்சிரா மலைப்பிஞ் ஞகனே. 82

பிஞ்சல வன்றனை வாய்ந்த சடிலப்பி ரான்களத்தி
னஞ்சல வன்றனை நேருஞ் சிராமலைநா தன்முன்போய்க்
கெஞ்சல வன்றனை யர்ப்போ லும்வாழ்விற் கிளர்ந்துபொல்லா
வெஞ்சல வன்றனை தீர்ந்தா ரனேகரைவெல் வதற்கே. 83

வெல்லங் கசப்புறத்தித் திப்புக்காட் டுஞ்சொன் மெல்லியர்சூ
ழல்லங் கசப்புற்கை வேட்டுளேனை யென்றாட் கொள்வையோ
வல்லங் கசப்புற மூர்ந்தா னையீன்ற மலர்க்கணப்பா
நல்லங் கசப்புற வந்தோய் சிரகிரிநண் ணினனே. 84

நண்ணலர் சிந்திற் பெரிதுளாரன் மிகநான் வெருண்டேன்
றண்ணலர் சிந்திவழி பாடுசெய் தறவமல் லவோ
கண்ணலர் சிந்தில் வளருஞ் சிரகிரிக்கா வலவா
விண்ணலர் சிந்திக்கத் தக்க மெய்ப்பேறு விரைந்தருளே 85

விரையாரஞ் சந்தம் புனைவா ரெல்லாமொல்கும் வெண்பொடியுந்
தரையாரஞ் சந்தம்பெறு மக்கமாலை யுந்தாங்கல் வம்போ
விரையாரஞ் சந்தம்பவா விச்சிராப் பள்ளியிற் சிவனே
திரையாரஞ் சந்தம் பழுதாகிடா தருள்சித் திகளே. 86

சித்திக்கு வித்தன்ன பஞ்சாக் கரத்தைத் தினஞ்செபித்துப்
பத்திக்கு வித்தன்ன தானஞ் செய்வார்கள் பலருமன்பா
லத்திக்கு வித்தன் னருளாடல் வேட்டிளைத் தாரிரங்கா
யுத்திக்கு வித்தன் னற்றோழா சிராப்பள்ளி யூரவனே. 87

ஊரகந் தஞ்சமென வாழ்தவர் முற்றுல கினுக்காஞ்
சீரகந் தஞ்சம்பவி யார்களாகத் திருத்தி யிட்டு
வீரகந்தஞ் சம்பளமாக் கொண்டி யானிங ன்வெம்ப விட்டாய்
தீரகந்தஞ் சமருவார் சிராப்பள் ளித்தெள்ளியனே. 88

தெள்ளிய முத்துச் சிவிகை யும்பந்தருஞ் சேய்க்களித்தா
யொள்ளிய முத்துங் கமாப்பகர் வார்மற் றொருவரின்றோ
வள்ளிய முத்துலை யிட்டே விழற்கிறையா தெனையாள்
வெள்ளிய முத்துமை பங்கா சிராப்பள்ளி வெற்பினனே. 89

வெற்பணங் காதர வேனார் சிராமலைமே யவள்ளா
லெற்பணங்கா தரங்கப் புனற்சென்னி யிறைவவென்னைப்
பொற்பணங்கா தரல்லார்க்கு தவாரி டம்போ கவிடே
னற்பணங்கா தரங்கா நீகொளத் தினநான் சொல்வனே. 90

நானந்தரங் கமெல்லா முனக்கோதின னாட்டிற் பல்லோர்
மானந் தரங்கரு தாதே சுகின்றனர்வாழ் வித்தந்த
வானந் தரங்கழறும் படிகாண் டிவள ரிமயத்
தானந் தரங்கனை பாகா சிராமலைத்தத் துவனே. 91

தத்து விலக்கத்தருந் துணைநீ யெனச்சார்ந்த வென்னை
யெத்து விலக்கரு மெள்ளவிட் டாயின்னமென் செய்வையோ
பத்து விலக்காற் செற்றானில் வாழ்வு றப்பார்க்கின ன்றாஞ்
சித்து விலக்க சிராப்பள்ளி வெற்பின்சிக ரத்தனே. 92

சிகர விலாசச் சிராமலைக் கோயிற்சிவ னைச்செம்பொற்
பகர விலாசகருங் காண வீணீற்கொள் பண்ணவனை
நகர விலாசனத் தான்றலை யோட்டுண் டநாயகனை
நிகரவிலா சரதந்தேர் கின்றார்க் கில்லை நீள்பிறப்பே. 93

நீளக் கணம்பு டையார் பணியொன்று நிகழ்த்திடிலந்
நாளக் கணம்பு ரிவார்தம்மை நாடி நலியவிடேல்
கோளக் கணம்புகழ் கோயிற் சிராமலைக்கொற் றவநற்
றாளக் கணம்புயத் தாள்சூட் டித்தொண்டர் தளத்துள்வையே. 94

தளவ முகைப்பந்தி போனகைப் பார்மயற்சா கரம்வீழ
களவ முகைக்களிக் கஞ்சாதவாறு கடைக்கணிப்பாய்
துளவ முகையமுடி கோடி தாழுந்துணைப் பதத்தோய்
வளவ முகைக்குஞ்சி ராமலைக் கோயிற்குள் வாய்ந்தவனே. 95

வாயசக் காரனிகர் கோளவருத் தவருந்து கின்றேன்
பாயசக் காரன் பலவாச் சொல்சொல்லும் பலிக்கவில்லை
நீயசக் காரம்முறை செய்வரோர் கண்மு னேர்ந்தருள்வா
யேயசக் காரம் பொலியுஞ் சிராப்பள்ளி யிற்சிவனே. 96

இற்றவிடை யினர்மால் கொண்டு வாடுறுமே மைமையாற்
புற்றவிடை யினராபா லுமேற் கும்புரைத் தவிர்த்தாள்
செற்றவிடை யினல்லா ளோடுலா வுஞ்சி ரகிரியா
பற்றவிடை யினகுஞ் சேய்சொன் முற்றும் பலிப்புறவே. 97

உறவரனே கருளா ரெனநா டியுளந் தளர்வேன்
மறவரனே கடுப்பக் கொலைவேள் வியுமாற் றுவனோ
வறவரனே கயிலா யம்புரை யுஞ்சிரா மலையா
துறவரனே கரியோன் முதற்றே வர்தொழுந் தெய்வமே. 98

தொழுந்த கையாளரை யுஞ்சிலகான் மிகத்தூடணிப்பே
னழுந்தகையா ளர்க்குரித் தெனத்தேர் கிலனொண் டருள்வா
யெழுந்தகையா ளரியட்டாய்மெய் யன்பர்முனென் றுஞ்சினக்
கொழுந்த கையாளமர் பங்கா சிராப்பள்ளிக் குன்றத்தனே. 99

குன்றலுங் கந்தவிதஞ் செய்பொல்லாற் குங்கொடை கொடுத்தோ
னென்றலுங்கந் தவழ்வெற்பார் சிராப்பள்ளி யெண்ணு நெஞ்சே
மன்றலுங்கந் தரமாரியுஞ் செந்தமிழ் வாரி யுந்தண்
டென்றலுங்கந் தமலர்க் காவும் பூரணத் திங்களுமே. 100

நூற்பயன்

கராமலை யான்ற புகழோ னில்வாழுங் களிப்படைவார்
தராமலை யான்ற வனியா னென்றுளார்தமைத் தாக்கற்கஞ்சார்
குராமலை யான்றள நன்னீர் முன்னாம்வளங் கோடிகொண்ட
சிராமலை யான்றடந் தாளசூடந் தாதி தெளிபவரே.

முற்றிற்று

32

திருவாமாத்தூர் திரிவந்தாதி

32

திருவாமாத்தூர் திரிவந்தாதி

பாயிரம்
கட்டளைக் கலித்துறைகள்

வெள்ளி மலையைச் சிலையாம் பொன்மேருவை விற்றனையோ
வொள்ளிய செல்வக் குபேரன் சினேகமொழிந் ததுவோ
தெள்ளிய பாவலர்க் கஞ்சிப் பதுங்கித்தி யங்குவதேன்
கள்ளியல் கொன்றைச் சடையாய் தென்மாதை
யின்காவலனே. 1

பொதுவாய வென்னத் தனதாக்கிக் கொண்ட புகழ்பெறுநீ
யிதுகாறுஞ் சித்தி யொன்றே னுநல்காம விருப்பதென்னோ
பதுமாதன் னபொறி தீதர பின்மாற்றும் பலமில்லையோ
விதுவாழ்சடைக் கிழவர் மாதை மாநகர் மேயவனே. 2

சீதைத்திரி புணர்கோமான் முனெய்துஞ் சிறப்படையப்
பேதைத்திரி புந்தியேன் வெஃகி முக்கட்பி ரானைநம்பி
மாதைத்திரி புகவிதை யந்தாதி வகுக்கச் செயவோ
னோதைத் திரிபுர சங்கரர்த் தேரச்சொ டித்தவனே. 3

பாயிரம் முற்றிற்று

நூல்

நீர்மலி பம்பைநதி சூழு மாதைநி மலனெடுங்
கார்மலிபம் பையந் தேங்கச் செற்றோன்பல காலிகுலாஞ்
சீர்மலிபம் பைத்தொனி சரலு முல்லையின் செல்வமுற்று
மார்மலிபம் பைத்தலை மாண்பென சென்னிக்
கருளினன்றே. 1

அருளானந் தத்தைமதி யாது லகத்தவர் கொளும்பொய்ப்
பொருளானந் தத்தையலார் படைக்கா மன்பொர லொழித்தா
டெருளானந் தத்தையை யான்மருப்பீந் தசிவாமுன் னைநா
ளருளானந் தத்தை யனேமாதை வாழு மிறையவனே. 2

இறையள வாயினு நின்னருட் பேற்றுறவின் றிநெஞ்சக்
கறையள வாய்சொரி பாலபோற் றவஞ்செற்ற கண்டுநொந்தேன்
மறையள வாவுடையார் பலர்வாழ் வுறுமா தையப்பா
பிறையள வார்சடை யாய்விடை மேற்றிகழ் பிஞ்ஞகனே 3

பிஞ்சுமதி யணிசெஞ் சடையாய் மிகப்பேணி யன்பிற்
கெஞ்சுமதி யணியார்க் கெளியாய் நின்கிருபை யொன்றே
தஞ்சுமதி யணிற்காவார் தென்மாதை யிற்சார்ந் தனன்காண்
கொஞ்சுமதி யணித்தொண்டர் குழாத்தொ டெற்கூட்
டுதியே. 4

கூட்டுக் களபமுலைச் சீர்முத் தாம்பிகை கோலமிக
வேட்டுக் களபத் தொடுசே யதந்தானை விளக்கும்விளை
யாட்டுக் களம்மென்னார் மாதை வாழு மழகனைச்சொற்
பாட்டுக் களபமைக்கும் புலவோர் துதிபா டலரே. 5

பாடலனே கம்பெறு மாதை யாளும் பரன்பிறரை
நாடலனே கம்பம்விட் டுவந்தார் முன்ன வில்பனுவற்
சூடலனே கம்பொரு ளென்றுணர்த் துந்துணைப் பதத்தான்
வீடலனே கம்பியர் ரெண்ணம் போன்றுவி ளங்கன்மெய்யே. 6

விளங்கனி யென்றுறு கொங்கை மின்னார்தரும் வேட்கைமிஞ்சி
யுளங்கனி யென்றுயர் தீர்த்தாளு நாளொன்று ளதுகொல்லோ
நளங்கனி யென்றும் மாபாக மாதைந கரதிபர்
களங்கனி யென்றுறழத் தகிப்பார் துணைக்கா ரணனே. 7

காரண காரிய மானார் தென்மாதைக் கடவுள்பரி
பூரண காரிய மற்கெ மன்முக்கட் புராரியிகற்
சீரண காரியன் னார்நீ ரமைக்கோர் விதைத்தேற னையா
னாரண காரியற் பாக்கொன் றைபோல நயப்பதுண்டே. 8

நயந்தந்த வாரண மாகம் மாதிய நற்சுருதி
பயந்தந்த வாரணம் பூசிப்ப மாதைப் பதியினின்றோன்
வியந்தந்த வாரணகார் மூவர் போற்றும் விமலனருண்
மயந்தந்த வாரண மூதிய மாதிவ கைமுற்றுமே. 9

வகையனந் தம்படப் பேராசை கொண்டு வருந்தெனக்குத்
தகையனந் தம்புனை கையான் பெருமைதர வல்லையோ
திகையனந் தம்பமென வாரவ யன்மாதைச் சிவாசெழுந்தீ
நகையனந் தம்புணை யானாயெந் நாளு நடிப்பவனே. 10

நடிப்ப வனாதிரை நாளுடை யான்றிகழ் ஞாலமுற்று
முடிப்ப வனாதி முதலாகி நின்றவன்மொய்த் ததுகிற்
கொடிப்ப வனாதிக மார்மாதை யூரனென் கோதனைத்தும்
பொடிப்ப வனாதியுண்ணா நோன்பு நோற்றுப்பு
லர்ந்தன்னே. 11

புலவரை யன்று துயர்கூர்ப் பார்த்தபுனி தர்சென்னி
நிலவரை யன்றுங்க மோகினி பாலவர்நேர்ந் தவள்ளல்
பலவரை யன்றுதி சான்மா தைநாதர் பகடுவிண்ணோர்
குலவரை யன்றும் பிக்கேற்றமென சாட்சிவெண்
கோட்டினமே. 12

கோட்டிய தாள்வொல்கா தானை மாதையின் கோயில்வள
நாட்டிய தாளழ கேசனைக் கோர நமனடுங்க
நீட்டிய தாளனை நம்பி நின்றாலந் நெறிவினையை
வீட்டிய தாளாக்கும் வீடருண் மாட்சி மிகநல்குமே. 13

மிகல ருக்குள் ளங்களி கூரநாம் மெலிவுறுநா
னகல ருக்குத் தலையிற் றிகழ்பே ரின்பமாரவ தென்றோ
விகலருக் கும்புகழோர் நம்பு மாதையி னெம்பெருமான்
சகலருக் குங்குரு வாவரு வாய்சிவ சங்கரனே. 14

சங்கரனா ரையொருமூன் றொடொன்ன லர்சரம் பாபடப்
பொங்கா னாரை மலிநீர்த் தென்மாதைப் புனிதப்பிரான்
வெங்கானா ரையருயவா னன்றுண் டமைவிண் டிறைஞ்சு
மங்கானா ரையும்போற் றவல்லார்க் கெய்துமா னந்தமே. 15

ஆனந்தக் கண்ணியம் பெற்றோர் தமுள்ள மறிபாமன
மானந்தக் கண்ணிய மர்பாகன் சீர்மலிமா தைப்பிரானி
யானந்தக் கண்ணி யருளோர் சற்றீயினிகத் தான்றி
வானந்தக் கண்ணியதே வருஞ் சோர்வின் றிவாழ்குவரே. 16

வாழாவி ரகசியந் தேறநாடி வருந்து மென்னைத்
தாழாவி ரகத்தழ லால்வெதுப் பறரு மங்கொலோ
வாழாவி ரகர்பலர் போற்று மாதைய ழகவன்பா
தோழாவி ரகமுள் ளார்கரு தாவருட் டூயவனே. 17

தூயவெண்ணீ றுமுழுதணி வேற்கு நின்றொந் தமின்றே
லாயவெண்ணீ றுபெறாத்தகு வாக்கு மருளல் பொய்யோ

தீயவெண் ணீறுந்திரு நல்குமாதைச் சிவாமகா
மேயவெண் ணீறுன்னு கோட்ப கைதீர விரைந்தருளே. 18

விரைத்த வன்கமட வார்தம் மாசைவெ றுத்துன்னபிற
கரைத்தவன் கமனதாள ரோடெனைக் காப்ப தென்றோ
திரைத்தவன் கஞ்செற் றோன்றொழு மாதைச்செஞ் சித்தபன்னூ
லுரைத்த வன்கவிற் கொண்டு மண்டேரன் றுகைத்தவனே. 19

உகைத்த வல்லேறு டையான்மட வார்படை யோடுவந்து
பகைத்த வல்லேறு மதனையட் டான்பலப சுக்களுமுன்
றிகைத்த வல்லேறு யர்தீர்த்தாண் டமாதைச்சி வனருள்சூழ்
தகைத்த வல்லேறு மஞ்சத்தி னங்காக்குந் தரத்தினதே. 20

தரந்தரமா விச்சை பலகோடி வந்தென் றனிமனத்தி
னிரந்தரமாக் கமுறச் செய்கின்றா யென்று நீக்குவையோ
வரந்தரமால் விடைமேற் பலர்பான் முன்வயங் கில்லையோ
வொரந்தர மாதைப் பதித்தி ருக்கோயிலு டையவனே. 21

உடைய விழன்புபல மாதர்கொள் ளவெள்ளோட் டொடுசெ
னடைய விழவுமலி மாதை யூர்த்தநற்கு ணங்க
ளடைய விழந்தலை யுந்தமி யேனைநன் காதரித்துக்
கடையவிழ லனையா னென்னு நிந்தைக ழித்தருளே. 22

கழியவந்தா னைமடவார் விளைப்பக்க லங்கி யுள்ளீ
டொழியவந்தா னைந்த நெல்லாயி னேனையென் றுய்யக்
கொள்வா யழியவந்தானை யெரித்த ளித்தாயர் வஞ்சநிலங்
குழியவந்தா னைசெலும் வீதி மாதைக்கு
ணக்கொண்டலே. 23

குணக்கஞ் சமங்கை யரையரும விட்டுக் குணஞ்செயற்கா
மணக்கஞ் சமங்கை யரைவேட்டு ளேற்கருள் வாழ்வளிப்பா
யிணக்கஞ் சமங்கை யரையா கொண்மாதை யிறைவன்பா
லுணக்கஞ் சமங்கை யரைத்திருக் கூத்தொன் றுஞற்றின்னே. 24

இனங்கண்ட வசமுறத் தக்கசித் தியியற் றந்தசென்
மனங்கண்ட வப்பயன்பெற் றுய்யு நோம்வரு விப்பையோ
கனங்கண்ட வங்கரு துஞ்சிவ மாதைக் கங்காள
தினந்தினங் கண்டவ கண்டமா விளையா டொருசிற்பரனே. 25

சிற்பரதத் துவமானார் தென்மாதை யின்செல் வாகனற்
பொற்பாதத் துவருந்தா துகாப்பவர் போற்றி சைக்கி
லற்பாதத் துவழியில்வி டாரென் றடுத்து ளன்காண்
புற்பாதத் துவர்கொண் டூரு மாண்புடைப் பூங்கொடியே. 26

பூங்கொடியன் னமடவா ரொடெய்திப் பொருதுன் கண்ணாற்
சாங்கொடியன் னலரெய் யாதென் மீதுதயை புரிவாய்
பாங்கொடியன் னவிலவார்க் கெளியாய் வன்ப கட்டிருகோ
டாங்கொடியன் னமுவந் தாய்தென் மாதை யழகியனே. 27

அழகிய நாதனணி மாதை யூரனரி யதமிழ்க்
கழகிய நாதாஞ் செய்த லுஞ்சீறற் கனல்விழியான்
முழகிய நாதவன் பற்கவர்ந்தா னென்கண்முன் னிற்கவே
பழகிய நாதரு பாடல னேகம்ப கர்ந்துளனே. 28

பகர விலாசறு பாணங்கொண் டோர்கள்பல ரின்மிக்கோன்
சிகர விலாசப் பொற்கோ புரமாதைச் சிவனொருப
துகர விலாசங் காரசம் புவேயெனச் சொல்லுமென்க
கிகர விலாசந்த திமனை யின்றொடர் பீந்தன்னே. 29

தனவரதத் தையாவீ ரதர்நாடித் தவிக்கு மென்னைக்
கனவரகத் தையென்றோ துநின்சேய் மொழிகற் பனையோ
பனவரதத் தையு வந்தாய் தென்மாதைப் பதியில்வள
ரனவரதத் தைய னேம திக்கூட்டு றழைம்முகனே. 30

முகந்தந்த வானைகள் பெய்ந்நீர் முழுக்குறு முண்டகத்தா
ளிகந்தந்த வானையு மீந்தாலு நெஞ்சகத் தின்பமுறேன்
வகந்தந்த வானைய மாதையில் வேண்டி யவாற ருள்வாய்
திகந்தந்த வானை யின்மாது டனேறித் திரிபவனே. 31

திரியங்க மானவொரு தேவன்மா தைச்சிவன்பு கர்ச்சீர்க்
கரியங்க மானப்பன வேற்படை சேந்தன் காத்தளித்தோ
னரியங்க மானநலங் காட்டவுய்த் தோன்பதநாடு மென்பிற்
குரியங்க மானமனாற் றோன்றிமாய்த லொழிப்ப துண்டே. 32

ஒழியாதவாரு வள்ளமீற லினொந்திங் குழலு மென்னை
விழியாத வாதியிற்றோ யருளாலென் றுமீட்டுக் கொள்வாய்
செழியாதவர் பரிப்பாகா வென்றேத் தினுந் தீர்விலருள்
பொழியாதவர் முத்தி யீவாய் தென்மாதைப் புரவலனே. 33

புரவல வாக்கமுந் தீதென வெள்ளிநிற போற்றுமெனக்
கிரவல வாதனை யுந்தீர்க் கிலாயினியென் றருள்வாய்
பரவல வாவுல வாப்பு கழ்மாதைப் பதிநடுவா
முரவல வாமத னீறா கமாய்த்திட் டளித்தவனே. 34

அளியார் வார மலிசோலை மாதையழ கன்னபிற
குளியார் வார ணத்தின்பொரு ளியாவையுங் கூறிடினுந்
தெளியார் வாரத்த மவற்றி வெய்தித்தி யங்கிமிகு
மிளியார் வாரமில்லார் மனைதோ றுமிரப்ப ரன்றே. 35

இரப்பவ ராகுலமுற்ற றத்தீர்ப் பதற்கிச் சைகொண்டுங்
கரப்பவ ராகத்தொடுற் றாரைக் கெஞ்சிக் கலங்குவனோ
சுரப்பவ ராவும்பர் சூழதரத் தோற்கழற் றொட்டுஞ்சென்றாய்
சிரப்பவ ராமன் பணிசெய் யுமாதைத்தி கம்பரனே. 36

திகம்பர நாமன் புலித்தோ லுடுத்துத்திரி யும்பிரா
னகம்பர நாமகள் கோன்ற லையோட்டுண் டிநச்சுமம்மான்
சகம்பர நாமலதில்லை யென்பார்களைச் சாரவொட்டா
தகம்பர நாமமுறாமா தைவாயென் னையாண் டனனே. 37

ஆண்டள வற்றபல கோடி யர்நிகழா யுளுள்ளார்
மாண்டள வற்றம றிந்த ருளீசனை மாதையினில்
வேண்டள வற்றவிர் பொற்கா சுஞ்சிந்திடும் வீறெய்தலர்
நாண்டள வற்றரும் பேரருணீர் கொளுநன் மனமே. 38

நன்மை யினாசை பலவாக் கொளுமொரு நாதன்வந்து
புன்மை யினாசை வரெய்தா தற்செய் திறம்பூப்ப தென்றோ
சென்மையி னாசைமுற் றாய்வாய்தென் மாதையின் சீர்வளர்க்கு
மன்மையி னாசையநேர் நிலையீந்தருண் மாமணியே. 39

மாமனை யாட்டின் றலைதோ யச்செற்றவன் மாறிலுமை
யாமனை யாட்டி களிவேட்டுச் செய்திடுமைந் தொழிலோன்
காமனை யாட்டின்ன மாதைப் பதியிலெற் காத்தலர்வெண்
பூமனை யாட்டி ன்மேவிப் பலபாடற் புனைந்துள னே. 40

புனைய தளாடைய னைமா தையானைப் பொருப்பிமயத்
தனைய தளாடைய கோலங் கொண்டானை யடற்றுர்க்கையாம்
பனைய தளாடை யார்வணம் போற்றிப்ப ணிதலுன்னி
வினைய தளாடைய லார்ப டையானை யும்வென்றுய்யுமே. 41

வென்றண்ட வாணரைத் தக்கனை வேள்வியில் வீறழித்தோன்
வன்றண்ட வாணன்முத லோர்க்கும் பேறருள் வள்ளல்கனற்
குன்றண்ட வாணவமா லயன்றீர கைசெய் கோன்று ணையென்
னென்றண்ட வாணமிம்மா தைப்பதி யினிடத் துய்த்ததே. 42

இடங்கரையன் றுமக வீயச்செய் தருளீ சனெழிற்
குடங்கரையன் றலையோட் டிரந் தான்றுதிகூறு பண்பான
மடங்கரையன் பர்க்கெளி யான்றென் மாதை வான்மனுநூன்
முடங்கரையன் பகையா னாரனேகர்க் கொர்முன்
னிலையே. 43

முன்ன வனானந்த வாரிதி யீந்தருண்முக் கட்பிரான்
றுன்னவ னான்முலை யொருபா கன்மெய்த்தொண் டருய்வான்
றென்னவ னானச் செகுத்த பொற்றாளிடை சேர்ப்பதுண்டுண்
டென்னவ னானடி யேமா தையிற் பணிந்தேத்துதுமே. 44

ஏத்துங்க பாடச் சாக்கொல்கு நீற்ற னையின்சுருதி
சாத்துங்க பாடந் திறந்தடைத் தாருணர் சங்கரனை
மாத்துங்க பாடற் புலவோர் பராவிய மாதையினின்
மூத்துங்க பாடமெய் தாச்சித்த ராக மொழிவதுண்டே. 45

மொழியந் தரங்கம் பலகூறி யாண்டமுரு கனின்னன்
புழியந் தரங்கடற் பார்முழு தோரதாவு யத்திலனோ
வழியந் தரங்கனென் வாழக் காட்டுதி மாதையினிற்
கழியந் தரங்கச் சடைச்சித் தனாவளர் கண்ணுதலே. 46

கண்ணப்ப நாயனை யாண்டவ னெச்சிற் களித்துண்டநீ
விண்ணப்ப நாயனை யேன்சொல் லல்கேட் கவிரும் பலென்னோ
தண்ணப்ப நாயனை யச்செற்று மாதைத்த லத்திலுற்றா
யண்ணப்ப நாயனைப் பனில்லா யென்ற றிந்துளனே. 47

அறியணியத் தமயன் மேலிட நொந்த யருமென்முன்
மறியணியத் தமுதலாய் கோலம் வயங்க வந்தாள்
வெறியணியத் தவியன் மாதை யூரப் பாவெண்ணெய்தயி
ருறியணியத் தனையுங்கவர்ந் தானொத்தொளிர்தரவே. 48

ஒளிக்கஞ்ச நாண்மலர் வாவிகொண் மாதை யிலுற்றவள்ளல்
களிக்கஞ்ச நாண்மலர் பாவை நல்லார் பலர்கற்பழித் தோன்

விளிக்கஞ்ச னாண்மலர் கூற்றிற் றந்தாற் கிருவில்லிகளை
நளிக்கஞ்ச நாண்மலர்த் தந்தானுங் காட்டுமுன்
னலகின்னே. 49

நல்குர வார்வயன் விதித்தா லுநறைக்க டம்பிற்
புல்குர வார்த்தினா னென்ன வாழிச்சை பூண்டுளன்காண்
செல்குர வாரண மாத்தேர் கொண்மாதை யின்செல்வவுண்மை
சொல்குர வாரங்க னோவாழ லேனுமெற் றோய்த்தருளே. 50

தோயங் கருதிக் கற்றொட் டுநொந்தேற்குப் பஃறுன்பமிட்டு
வாயங் கருதின மாறவு விஞ்செய்திடல் வம்பல்லவோ
நீயங் கருதிருக் கோலத் தோடெய்தனி னைகிலனோ
சேயங் கருதிக் கச்செய் வாய்தென்மா தைச்சிவலிங்கமே. 51

சிவந்த கமல மலர்க்காடொப் பாயெனச்செப் பின்னசேர்
நவந்த கமல முத்திக்கிச் சித்தேனிங் ஙனைதன்னறோ
வுவந்த கமலச் சடையாய்தென் மாதையு டையவள்ளால்
வெவந்த கமல றத்தாளொன் றினாற்செற்ற விண்ணவனே. 52

விண்ண டங்கத் திருகத்துச் செய்வோன்பல விரகாவைக்
கண்ண டங்கத் திருக்கோலி டுமாதைக்கட வுளுமைப்
பெண்ண டங்கத் திருகூறா யவுண்மைபி றங்ககற்று
மண்ண டங்கத் திருங்கோரமு மூடமுமாறி லனே. 53

மாறிலனா திரையான் முகமா யிரம்வாய்ந் தபுன
லாறிலனா திலுமை பாகன் மக்கள னேகனிசை
கூறிலனா தியளிப்போன் றென்மாதை யின்கோயில்
கொண்டோ
னூறில னாதி பரமர்க்கு முண்மை யுணர்வரிதே. 54

உணரத் தகாத நிலைகாட்டி யாண்டுமிக்குள் ளுடைந்
துணரத் தகாத லும்விட்டிருந் தேனருட் டோற் றநல்கா
யெணரத் தகாத காசோர்த்தென் மாதையிறை வவுமை
புணரத் தகாத சைக்குங்குழை யாவளைபூண் டவனே. 55

பூண்டலை யாய்புனி தனைமுக் கட்புராந்த கனை
யேண்டலை யாய்வல் லார்புகழ் மாதைக்கி றைவனையான்
வேண்டலை யாய்மண் பொன்வேட் டனறன்றன் றுவென்றிமவி
யாண்டலை யாயர்குடி வாழ்க்கை நண்ணு மவரொக்கவே. 56

அவலமனத் தனையம் புலவேட்கை யசட னைப்பொய்
நுவலமனத் தனையூக் கங்கொள் வேனைக் கண்ணோக்
குவையோ
கவலமனத் தனையந்தாய் தென்மாதை யின்கா வலவர்
குவலமனத் தனையன் றீர்வெற் புருக்கொண் டவனே. 57

கொண்டலை யன்னவன் கங்கா ளந்தோண்மி சைகொண்டுவிதி
வெண்டலை யன்னமு வந்தான் றென்மாதை யின்மேயபிரா
னண்டலை யன்னருள் வாரித் திவலையணு கப்பெற்றால்
விண்டலை யன்னணி மாவாதி செய்திகல வீட்டுவனே. 58

வீட்டுமன ன்றுரைத் திட்ட சொற்காத்து வெகுண்டெழுந்த
காட்டுமன ன்றுசெய்தாங் கேமுயன்று கதியடைய
வேட்டுமன ன்றுளன் கண்பார் தென்மாதை விமலதமிழ்ப்
பாட்டுமன ன்றுணி வீரமுந்தோய்ந் தவர்பக் கத்தனே. 59

பக்க மிரட்டிய வெண்காற் பறவைப்படி வெடுத்துச்
சொக்க மிரட்டி யரியடாத் தானைத்தொ மூல்விடுத்து
வக்க மிரட்டியற் காதா னும்பூசிக்கு மாதைவிடேஞ்
சிக்க மிரட்டி யடைவீ ரெமக்குடற் செய்யன்மினே. 60

செய்ய விசாலத்திரு மாதையூர் வளர்சித்தன் முன்னாள்
பொய்ய விசாலப் பெயும்வேள் வித்தக்கனைப்
பொன்றவென்றோ
னெய்ய விசால மிரண்டுங் கொள்வானரு ணோப்பெற்றா
லையவிசா லனைத்தா மண்டமோர்கடு காகுமன்றே. 61

ஆகுலந் தீர்த்தடி யாரோ டெற்கூட்டி யொரைங்கவிய
மாகுலந் தீர்த்த முறக்காட் டச்சோம்பல வண்மாதையிலெ
னியோகுலந் தீர்த்தம யற்பேய் பின்சென்றிட வுய்யலபத்து
வாகுலந் தீர்த்தத் தலையெமன் மாய்பதம் வாய்ந்தவனே. 62

வாய சக்காரனை வென்று யகைவேட்டு வருந்துமென்பன்
நீய சக்காரனை யன்முத லோர்பின்னி றுவவென்றோ
பாய சக்காரனை யாகா தென்மாதைப் பதித்தலைவர்
சேய சக்காரனை யக்கனி பானையிற் செய்தவனே. 63

செய்த வசுக்குக் கெடத்தீ நெறியிற்செ லுத்தன்மலர்
பெய்த வசுக்குல முய்ந்தாங் குயச்செய்பிணித் திரடோய்

கைதவ சுக்கு மிளகை நம்பார்வா கருதரியா
யைதவ சுக்குணர் வாழ்மா தைக்கோயி லமரத்தனே. 64

அமர்பயங் காத்திற் கொள்பஃறே வர்க்கருள் புரிந்து
சமர்பயங் காத்தா னவர்முப் புரஞ்சாம் பர்செய்தோ
னெமர்பயங் காந்தாள் வகன்ற னவத்தை பயத்திலுய்க்கை
தமர்பயங் கரனே கருந்தே றுந்தாத்த தன்றே. 65

தரத்தாத் தின்றுந் திருத்தி யெய்தாதவர் தம்மையென்று
வரத்தாத் தின்றுதி பற்பல கேட்டுமகிழ் கிலையே
யுரத்தாத் தின்றுணைக் கண்ணுமை பாகவிண் ணூரினைந்து
மரத்தாத் தின்றும் தென்மாதை வாயென்முன் வந்தருளே. 66

வந்தனப் பாட்டுவிரும்புந் தொல்பான்மை மறந்தனையோ
செந்தனப் பாட்டுக் கிலக்காக்கி யென்னைத் தியக்குவதே
னந்தனப் பாட்டுவயன் மாதை யூர்த்த நாகனது
மைந்தனப் பாட்டு மெச்சிற்றசை யூணுங்கொள்
வண்மையனே. 67

வண்ணம் பலபல பாடியும் வேண்டுமவர் நல்கிலர்
யெண்ணம் பலபலப் புன்றொழில் சூழ்தலி னெய்த்துளன்காண்
விண்ணம் பலபல வார்சோ லைமாதை விமலமின்னார்
கண்ணம் பலபலம் வாட்டா மலேனுமெற் காத்தருளே. 68

காத்தவ லாரிடர் செய்தகு வேசரைக் காய்ந்தமர்
ரேத்தவ லாரிக்கர சீந்துளா ருடனென் னைவைத்தாண்
மூத்தவ லாரிசைக்கும் புகழ்மாதை யின்முன் னவவெண்
ணீத்தவ லாரிமைப்பிற் பொடியாய் விழநீற் றினனே. 69

நீற்றணியா னந்தமுற்றா ரிற்றோய்ந்து நிகரில் பம்பை
யாற்றணியா னந்தண்மா தைப்பிரானென் றறைந்து
தொண்டர்
பாற்றணியா னந்தமாறொ ழில்செய்யப் பதைக்கு மென்னை
வேற்றணியா னந்தாகூற் றாக்கு ஞான்றுவிடி யினன்றே. 70

நன்றியலர் வினையேசெய் யுமூர்க்க நாரை யெல்லாம்
வென்றியலர் விழிசொன் னார்நெறி யில்விடல் விழைந்தேன்
கன்றியலர் வின்முற்றுய்ந் தமாதை யினகத்த வென்று
ளொன்றியலர் விகன்ட தல்தறச் செய்திட் டுரமருளே. 71

உரத்த கலாபாணச் சிறுதே வர்களொல் கவணி
சிரத்த கலாப மயிற்சேந் தனைத்தரு சித்தவன்றன
வரத்த கலாப மென்றேமதித் துன்றிருமா தையுற்றேன்
றிரத்த கலாபத் துறப்பெ யர்த்தானிலுந் தீயனன்றே. 72

தீயத்தத் தானை போற்றிய மாதை சிவனடியார்
மாயத்தத் தானைய வொட்டான் மதனை மறையவட்டான்
சேயத்தத் தானைய ணிமோகினிக் கருள்செய் தபிரான்
வாயத்தத் தானைவில் வீடு பெற்றாரயன் மக்களன்றே. 73

மக்கட லைக்கடை தோற லைந்தேங்கி வருந்துறுநா
னக்கட லைக்கடைந் தோனி கர்பேறிங் கடைகுவனோ
திக்கட லைக்கடைக் கண்டம் வைத்தாய்மந் தாதின்னருமெஃ
குக்கட லைக்கடை நேர்பா டன்மாதைக் குருச்சிவனே. 74

குருச்சிவனைத் திருமாதை யின்வாய் கண்டுகும் பிட்டன்பா
லருச்சிவனைந் துகவிமாலை சூட்டுதி யாற்ற னெஞ்சே
திருச்சிவனை யமுமெண் வகையாம் பெருஞ்சித் துமெய்தி
யுருச்சிவனை லின்றிச் சேர்ந்திட லாம்பல ருற்றனரே. 75

உற்ற வராக நிறத்தா ன்றென்மாதை யுடையவள்ள
னற்ற வராகர் முதல்வேண் டுமானையை நல்குமம்மான்
செற்ற வராக மருப்பொ சித்தீந்தசெஞ் சேய்பயந்தான்
கற்ற வராகப் புனைந்தேகு மந்தக்க தையினிதே. 76

கதையணி யையனைப் பெற்றானம் மாதைக்கட வுள்வின்னாண்
குதையணி யையதிண் டேருறவைத் துள்ளகொள் கையென்னோ
சுதையணி யையமில கலவியொடெய் தியதோ கைநல்லா
யிதையணி யையறி வுங்கடந் தோரு மியம்பினரே. 77

இயமானனா தியவரப் பெரியோர் நுவலெண் வடிவான்
கயமானனா தியவர மாதை மாநகர்க் கண்ணுதலோன்
குயமானனா தியவாயார் பராவினுங் கொள்வ னென்கை
யயமானனா தியவான வர்த்தான வராள்வ துண்டே. 78

ஆள வந்தாரை யணிமா தையூரரை யங்கசவேண்
மாள வந்தாரை யாமுன் னெரித்தாரை வணங்குவது
கோள வந்தாரை கண்பெய் திடச்செய்யுங் கொடுந்துயர்க
ணீள வந்தாரை களேயெ னச்சூழ்தா னீங்கவென்றே. 79

நீங்காவியங் குயில்பைங் கிள்ளை யாதி விதம்விளைக்கும்
பூங்காவியங் குநன்மாதை யப்பா முப்புராந் தகநிற்
றாங்காவியங் குசத்தான்கு கன்போலத் தழைக்கு மென்றுள
வேங்காவியங் குறைவெய் தாத வண்ணம்வி ரைந்தருளே. 80

விரைக்கடங் காலுமயி ராவணத்தின் மிசையிவர்வாய்
கரைக்கடங் காப்பம்பை சூழ்மாதை யூர்வளர் காவலவா
தரைக்கடங் காதசெய் கின்றதாற் றுயர்சா ரதனன்றோ
விரைக்கடங் காதலித் தான்மெச்சு மாடலெனக் கருளே. 81

எனக்கந் தாங்க நின்பாலில் லையேலென் றுமிவ்வுலகோ
ருனக்கந் தாங்கன்ன புள்ளா னென்றோதுவ துண்மைகொல்லோ
சினக்கந் தாங்கஞ் செற்றனை யர்க்காப்பச் சிந்திக்கிலனோ
வனக்கந் தாங்களிக் குஞ்சோ லைமாதை யில்வாழ்சிவனே. 82

வாழ்வார் வாரமத முஞ்சின மும்வழக்கு மிஞ்சித்
தாழ்வார் வாரமிப்புங் காட்டுநீ யெனைத்தள் ளுவையோ
சூழ்வார் வாரணிச் செயசா லுமாதைக்கு மூகவன்பி
லாழ்வார் வாரண வாகம கோடியறைந் தவனே. 83

அறையத்த குந்தவர மொன்றெனக் கன்றளித்த வுண்மை
நிறையத்த குந்தத் தெய்யென் றாடுஞ் சேவையை நீயருள்வாய்
மறையத்த குந்தனப் பூணார் கண்டொல் கமகிழ்ந் தணிவெண்
பிறையத்த குந்தயங் கும்பொழின் மாதைப்பெருந் தெய்வமே. 84

தெய்வ சகாயம் விழையாத தந்திரச்சித் தரெள்ளும்
வைவ சகாயமுண் பாரிறு மாப்பொடுமாய் வதென்றோ
மெய்வ சகாயத் தார்க்கரி யாய்வெள்வி டைப்பரியூர்
சைவ சகாய மனாடா தமாதைத்தனி யண்ணலே. 85

அண்ணலந் தாமரை யானகைப் பொறியை யணுவளவு
மெண்ணலந் தாமரையன்னா ரைக்கெஞ்சி யிளைக்கலமுக்
கண்ணலந் தாமரை யாங்கோ லமெய்துங்க டவுளெம்மை
விண்ணலந் தாமரை தோய்மா தைவாய்வைக
விட்டபின்னே. 86

விட்ட மயலைத் திருப்பியென் னெஞ்சம்வெரு ளச்செய்தாய்
நட்ட மயலைக் கடல்போல டைந்தன்னன் மைதந்தாள்
சட்ட மயலை யாசில்லோ ருஞ்செய்யச் சமைத்தளித்தாய்
நெட்டமயலை யுங்காவார் தென்மாதை யினின்றவனே. 87

நின்றனத் தத்தையி லாதி பெற்றாரிடை நிற்கையவா
வென்றனத் தத்தை யிலாதற நீக்குவதென் றுகொலோ
வன்றனத் தத்தை யிலான்ற முத்தாம்பிகை வௌவுதிண்டோட்
குன்றனத் தத்தை யிலாபங் கொண்மாதைக் குடிக்கரசே. 88

குடிக்கர சேவின் மானை மகவோடிவர் கோலவன்பே
ரிடிக்கர சேங்க வென்றார்செ குத்தாய்மல ரேந்தியெதிர்த்
தடிக்கர சேக்கணிற் செற்றாய் தென்மாதை யழகவொன்னார்
வெடிக்கர சேவகர்க் கோரெ மனாமவன்மே வச்செய்யே. 89

மேவலங் கையர் பதமேயென் றோர்ந்துபல வேள்விசெய்வீர்
சேவலங்கை யனைப்பெற்றான் முன்மாதை யிற்றெண்ட
னிட்டுப்
பாவலங்கை யபணிசெய் மின்ன றாம்பைக் கொடியைக்
கோவலங் கையாசீர்த் தமைநாடி லக்கோ ளெளிதே. 90

கோளங் கடந்து வரும்பேறுஞ் சிற்சிலர் கொள்ளவிட்டாய்
தாளங் கடந்துள சீர்முலை மாவிலெற் றள்ளிவிடேல்
காளங் கடந்துன்று வேழமட்டாய் திருக்கண் டந்தன்னை
யாளங் கடந்து மத்தர்மாதை யூர்க்கர சாஞ்சிவனே. 91

ஆஞ்ச மனந்தனைத் தேற்றிலன் னறொரருந்த வன்மேற்
போஞ்ச மனந்தனைந் தக்காங் கூறிலன்புண் ணியரைக்
காஞ்ச மனந்தனை யந்தோ ரினமாதை யின்கண்ணுற் றுளே
னாஞ்ச மனந்தனை தீரின் பவாழ்வொடுநண் ணலென்றே. 92

நண்ண லாஞ்சவுற வோர்களிப் பநயந் துதவம்
பண்ண லாஞ்சக்காஞ் சொல்லி மாதைப்பான் பதத்திட்
டெண்ண லாஞ்ச மன்னாற்பாற் கொள்ளேல்வெறி
யேற்றிறைச்சி
யுண்ண லாஞ்ச கத்தின்றி நைவாரென் னுரிமைநெஞ்சே. 93

நெஞ்சஞ்சி னந்துநம தூது வரெதிர் நேர்தலற
வஞ்சஞ்சி னந்துன்றி டர்தோட மாதை யின்வள்ளலுரு
வஞ்சஞ்சி னந்துலவுஞ் செவிகாட்டு மதனை நம்பிக்
கெஞ்சஞ்சி னந்துயரெய் தாயென்பார் மொழி கேட்கை நன்றே. 94

கேட்டுக் குளஞ்சினர் வந்துறு மாதைக்கிரீ சவிண்ணோ
ராட்டுக் குளஞ்சித்தர் போற்றியபம் பையரு கமைத்தாய்

நாட்டுக் குளஞ்சிறியே னாயினுமுன் னைநண் ணிநவில்
பாட்டுக் குளஞ்சித்தி முத்தியினிப் புப்பயப் பச்செய்யே. 95

பயந்த மனத்தைய லார்பேரருட் பண்பி லுய்த்துச்
செயந்த மனத்தை யலாரிடங் கொண்டுயச்செய் குவையோ
நயந்த மனத்தை யலாட்கோ துமாதையி னாதபொல்லார்
வயந்த மனத்தை யலாடத் தில்வாழ்நந்தி வாகனனே. 96

வாகனக் காரனைஞ் சென்னியிலொன் றுகொண்மா தைபிரான்
மாகனக் காரனை பாகத்தினான் வெள்ளை மால்விடையான்
மோகனக் காரனையான் விழித்தாளனென் முன்ன விர்ந்தாற்
சாகனக் காரனையப் பாடல் கோடியுஞ் சாற்றுவனே. 97

சாற்றரு மந்தணஞ் சொன்ன நின்சேயெனைத் தள்ளிவிட்டாற்
போற்றரு மந்தனக் கந்திய மாந்தகைபூண் டொளித்தான்
மாற்றரு மந்தனத் தார்மை யலாழ்ந்துளன் மாதையப்பா
நீற்றரு மந்தரத் தாரும் வியக்குநெறி யருளே. 98

நெறியனந்தங் கண்டயர் வேனின் றன்னரு ணேடுமன்பைக்
குறியனந்தங் கண்டர் போகமெள்ளே னெற்கைக்கொ
ரளாவையோ
மறியனந்தங் கண்ட கோடரியாதி கொண்மா தையப்பா
சிறியனந்தங் கண்ட னுண்மணி யாயுந்தி கழ்பவனே. 99

திகழணி மாமகள் கேள்வனைப் போலுஞ்செய லுமுண்மைப்
புகழணி மாமுதற் சித்தி யுமுத்தியும் போதநல்கு
மகழணி மால்படர் சீர்ம தின்மாதை யானருள்போ
னிகழணி மான்மி யந்தோய்பம் பையாற்றின்
னனீர்முழுக்கே. 100

நூற்பயன்

அவன றனந்தாதி யர்நல் கற்குருகும் சடனெண்ண
பவனற னந்தாதி னமாம்பொய் யனென்னுமப் பான்மையறுந்
தவனற னந்தாதித் தெய்த்தாளத் தன்மாதைத் தலத்திறையாஞ்
சிவனற னந்தாதித் திரிவொரு நூறுந் தெளிதரினே. 101

முற்றிற்று

33

திருவாமாத்தூர் யமகவந்தாதி

33

திருவாமாத்தூர் யமகவந்தாதி

பாயிரம்

தெய்வீகம்

மூவாயிரங் கவிமுன் கேட்டதன் பயன்முற்றச் செய்யாத
தேவாய மாதைப் பிரான்விழையா மைதெரித்து மின்சொற்
பாவாலி யமகவந்தா தியொன்றோ தப்படுத் துகின்றா
ணாவாணி யென்பதன் சாட்சியென் னெஞ்சுவிண் ணாடருமே. *1*

தேற்றம்

சிவனுமை யோடுவிடை மீது வானிற் றிகழ்வதுண்டே
லவன்வளர் மாதையைப் போற்றுமென் வேட்கை யனைத்துமெய்து
மெவளவு பேருந் தருகிலனேன் முன்னி றைஞ்சியமெய்த்
தவர்பலர் சித்தியு முத்தியுந் தோய்கை சரத மன்றே. *2*

ஞாயம்

மலவிரு ணீக்கியருள் வானென்றா சித்துமா தையில்வெண்
ணிலவணி வானைத் துதிக்கலுற் றேனவ னேசிக்கிலா
னிலவிதழ் மங்கையர் மால்வெறுத் தாலுமிக் கேறலெண்ணிக்
கலவியற் கல்வி யிழியா நிமித்தங் கழறுவதோ. *3*

வினா

தான்றூது சென்றதுந் தன்மனை யன்னஞ் சமைத்திட்டது
மீன்றூறு தீரமக்கள் பாவல ராற்கொள்ளி சைப்பெருக்கு
மேன்றூள ளவுநினை யாதென்பா டலிகழ் கின்றையோ
வான்றூயா போற்றெழி லாமாதைக் கோயிலில் வாழ்சிவனே. *4*

காப்பு

மாதையந் தாதிரி வெய்தாது தேற்றுநன் மாசறுகம
மாதையந் தாதி தழியாதி சேர்சடை வானவன்வாழ்
மாதையந் தாதி வழங்குவ தோர்வெண் மருப்புடைக்கை
மாதையந் தாதின தாதிய கோள்கண் மறுக்கரிதே.

பாயிர முற்றிற்று

நூல்

மலையாய வில்லிடை மாலாய் வாளியை வைத்தண்டோண்
மலையாய வில்லியங் கச்செய பொல்லானை மடித்தவன்
மலையாய வில்லிற்கொண் டோன்மாதை மாநகர் வாய்ந்தபுகழ்
மலையாய வில்லிக் குடநோ மனத்தினர் வல்லரன்றே. 1

வல்ல வனம்பரன் முத்தாம் பிகைதுணை மாமுலையாம்
வல்ல வனம்பரன் பாட்டாசைக் கள்வன்பொய் வஞ்சகநு
வல்ல வனம்பரன் புங்கைக்கொள் வோனிற மாற்றரிய
வல்ல வனம்பரன் மாதையி லாண்டென்னை வைத்தனனே 2

வைத்த பரசு மறியும் புனைந்தகை வள்ளறன்சே
வைத்த பரசுப மெய்தாது காப்பவன் மாலறத்து
வைத்த பரசுக மீவானென் னாவிடை மல்கிமிக
வைத்த பரசு தொழின்மாதை யூரில் வயங்கினன்றே. 3

வயவீர பத்திர னாத்தக்கற் செற்றருண் மாதைப்பிரான்
வயவீர பத்திர மாற்கரி யானெனவாழ்த் தல்கைக்கும்
வயவீர பத்திர வரவ மீதலின்மாற் றிப்பலசெவ்
வயவீர பத்திர மிட்டே னுமன்பில் வணங்குமினே. 4

வணங்கத் தலைதந்தவா றோதினா னன்று வாய்ந்துவந்த
வணங்கத் தலைவின்றி யானுங் குலாவுற வைக்குதியெண்
வணங்கத் தலையிகழேல் பம்பை சூழ்தருமா தையின்வாழ்
வணங்கத் தலையமில்லாய் நீசொன் மாற்ற மறக்கிலனே. 5

மறவாத வித்தை முதலாய் தீவினை மாறவுன்னை
மறவாத வித்தை விழைவேனை வீணின் மடிந்தொழியேன்

மறவாத வித்தை யனையா யருச்சுனன் மாட்டமர்செய்
மறவாத வித்தை யரார்சேரு மாதை வரோதயனே. 6

வரந்தர வாவென் றுனைநாடி யேத்தி வணங்குமெய்த்த
வரந்தர வாசர் முதலோர் களென்னை மதிப்பதென்ற
வரந்தர வாழ்வெனைச் சேர்வதென் றோதுதி மாதைபுக்க
வரந்தர வாணனி ராவணன் பேறும் வழங்கினனே. 7

இனஞ்சன மாதர வாமென்னு மூடருமென் னையெள்ள
லினஞ்சன மாதியா தம்பகை யோடற வீர்திகட
லினஞ்சன மாறுகர்ந் தாய்மாதை வாழ ழகேசபக்க
லினஞ்சன மாது மகரொடு பூசித்திடுந் தெய்வமே. 8

இடுகவித் தாரகாரம் புன்மைத் தேவரை யெண்ணலர்சொ
லிடுகவித் தாரணி வாய்மாதை யூரினி றைவவரு
ளிடுகவித் தார கவிநால்வர் தம்மொட னைக்கொள்கத
விடுகவித் தாரணியின் வேட்கை தானுமி வாதுசெய்யே. 9

இலவச மாவொன்று நீதர வேட்டில னென்கவிக
ளிலவச மாயன்று சொல்லியவா றின்னமேன் செய்கில்லா
யிலவச மான்மழுக்கை யாயதென் மாதை யெழிற்றளியா
மிலவச மாதிகொல்வேள் விப்பொல்லார் சிந்தைக் கெட்டலனே. 10

எட்டான மூர்த்தல மெங்கும் விடாதுற்று மியாவையுமா
யெட்டான மூர்த்தங் களாயுந் தென்மாதை யிடைமுளைத்து
மெட்டான மூர்த்த நடனஞ்செய் யாமலிளைக் கின்மின்னா
ரெட்டான மூர்த்தரல்லாத் தேவரி யாவரு மெய்துவரே. 11

எய்தவில் லானையைங் கோலோட்ட டானறத் தின்பெருஞ்சீ
ரெய்தவில் லானையர் சூழ்தரு மாதைக் கிறைநடத்தி
லெய்தவில் லானைக்கு மாற்கும் பெருநல மீந்தவனோ
ரெய்தவில் லானையன் னார்பல ரோடுபன் னேகலென்னே. 12

ஏகவ கண்ட பரத்துவனீ யென்றி னிதுணர்ந்தே
னேகவ கண்டத் தாதம்மோ டுமாய வெனைவிட்டிடே
லேகவ கண்டங் கள்வேட்டார்க் குமங்ஙன மீந்தசிவ
னேகவ கண்ட முமானாய்தென் மாதை யிடத்தண்ணலே. 13

இடங்கரை யன்றுமக வீயச் செய்தவ னீடிலம்பை
யிடங்கரை யன்றுகடீர் மாதை யூர்ச்சிவ னேற்பவெல்லா
மிடங்கரை யன்றுன்ப நோய்தீர்த் தெமைக்கொள் ளிலெய்த்தஞ்சியோ
லிடங்கரை யன்றுஞ்சல் கூற்றுவன் வேண்மை யலீகலரே. 14

ஈகை யினாசை யளவறக் கொண்டிங் கிளைக்குமென்னை
யீகை யினாசை யெனிந்தை யொடெய்தச்செய் யேல்விழைவ
வீகை யினாசைவர் வாழ்மாதை யாளு மிறைவமல
ரீகை யினாசை தொறுமன்பர் கூட்டு மிசையண்ணலே. 15

இசையத் தகுந்தவை யெல்லாம் விரைவிலெற் கீந்துவென்றி
யிசையத் தகுந்தவை வேல்கொணின் சேயிற் கொளெண்ணுநர்பா
லிசையத் தகுந்தவை சேராதென் மாதை யிடத்தர்வே
ழிசையத் தகுந்தவை கானீட்ட லேற்றரு னிட்டத்தனே. 16

இட்டம் பலவகைப் பேற்றினுங் கொண்டுழன் றேனருண்மே
லிட்டம் பலவகைம்மை தோய்ந்திடா வண்ணமி யாவையுநீ
யிட்டம் பலவகைப் பூசைக்கொள் வாய்சடை யிற்புனைதெ
விட்டம் பலவகைச் சீர்தோய தென்மா தைக்கிறைவனே. 17

இறையவள வாயினு நின்னருட் பேறின்றி யெய்த்துவர்நீ
ரிறையவள வாய்ப்புதற்போல் வாடினேன் பல்கணே யந்துவின்வா
ழிறையவள வாசிக்குஞ் சீர்மாதை யாய்பண் டனீடழிய
விறையவள வாவொழி யாய்விடை மீதிவ ரேற்றதனே. 18

ஏற்றணி யார்கொடிச் சீர்மாதை மாணுவ லென்னைநள்ளா
யேற்றணி யார்கொடி யாரேனை யோர்நனி யெய்ப்பரிச்சொ
லேற்றணி யார்கொடி ருத்தோளப் பர்வைந் தெழுத்தினுரு
வேற்றணி யார்கொடிக் கறகஞ் சிடாதரு ளின்பத்தனே. 19

இன்பக் குவடு புரைவானை நல்லறமியா வுஞ்செய்கை
யின்பக் குவடு வளபாகப் பிரானைமிக் கெண்ணகவ
யின்பக் குவடுத் தவிர்ப்பானை மாதை யினிற்றுதிசெய்
யின்பக் குவடு கன்சேயா தியரெ னிகலெய்துமே. 20

இகல வரஞ்ச வுறவோர் மகிழ வியற்றிடும்பே
ரிகல வரஞ்சடக் கென்றருள் வாய்நல் லிரசிதம

லிகல வரஞ்சக் கெனுமா துபாக விமப்பெருக்க
மிகல வரஞ்சன் னவரன்ன மாதை யிலேய்ந்தவனே. 21

தவராச ராசனென் மாதைக் கோயிலிற் றங்குபுவாழ்ந்
தவராச ராசர மீன்றமுத் தாம்பிகை தன்கணவர்
தவராச ராசர சம்பந்தத் தாற்றணந்திகற் றாக்கியமா
தவராச ராசஞ் சலப்பணி தீர்த்தெனைத் தாங்குதியே. 22

தாங்காத பார்த்தலை மாலை பூண்டவ சங்கணிந்த
தாங்காத பாரழத் தீயோர் பெருகித் தருமமழிந்
தாங்காத பார மடர்ந்தன மாதையிற் சார்ந்ததொண்டர்
தாங்காத பாரதம் போல்போர்வென் றார்க்குஞ் சயமருளே. 23

சயம தனாந்தக மாதிபொல் லார்க்குந் தரத்தகுநிச்
சயம தனாந்தக மாதைப் பதியின் றலைவசமு
சயம தனாந்தகர்த் தாள்குரு வாகித் தகையறுநெஞ்
சயம தனாந்தக வெய்திடற் காநிலை தந்தருளே. 24

தந்தவெள் ளானை யிடபத்தொ டூர்தரு சங்கரவி
தந்தவெள் ளானை முதலோர்க்கஞ் சாருணர் தற்பரமோ
தந்தவெள் ளானைய மாதைப் பதியினிற் சார்ந்தும்வினை
தந்தவெள் ளானைகின் றேன்புகழ்ப் பேறு தருதியின்னே. 25

தருக்கனந் தம்பொருந் திக்கொடு வேள்வித் தழல் வளர்த்த
தருக்கனந் தம்புரிந் தாள்சிவ னேவிண் டலத்துறுமைந்
தருக்கனந் தம்பண்பிற் றோய்வார்தென் மாதையிற் றாழெனக்கத்
தருக்கனந் தம்புனை கையான் வியக்குந் தகுதிநல்கே. 26

தகுவரை யட்ட நகையானைக் குன்றருந் தண்ணிமந்தோய்ந்
தகுவரை யட்டனி கெஞ்சவொல் கானைச் சரதவிதி
தகுவரை யட்டசித் துஞ்செயக் காட்டுந் தலைவனைம
தகுவரை யட்டகைச் சேலேறு மாதையிற் சார்கைநன்றே. 27

சாரங் கனிந்த கனிபோலு நின்றுதி சாற்றுநரைச்
சாரங் கனிந்தனை யாகச்செய் தென்னைத் தளர்தல்வென்றிச்
சாரங் கனிந்த வுலகிலி ராம தனுக்கொடுப
சாரங் கனிந்தன் னவனாச்செய் மாதைச் சதாசிவனே. 28

சதமக னாணவஞ் செற்றானைப் போலுந் தவர்பெறுநே
சதமக னாணங்கக் கூற்றையட் டாய்முத்தித் தாவிர்
சதமக னாணர வாஞ்சிலை மாதைத் தலங்கொடுவாழ்
சதமக னாணம் புலவார்க்கரு ணீர்மை தனைவிளக்கே. 29

தனையர வாம்பொறி யாற்றளர்ந்தே னைந்தருக் கொள்விண்ண
தனையர வாழ்க்கையுங் கைப்பவெண் சித்தியுந் தந்தருள்வாய்
தனையர வாமிக்கு ளாய்மாதை வாழ்சிவ சங்கரநிந்
தனையர வாதனை தீர்க்கவல் லாய்சச்சி தானந்தனே. 30

தானந் தருமம் பொறையா தியகுண சாரமருந்
தானந் தருமம் புயத்தானு மாயனுஞ் சாற்றவொண்ணா
தானந் தருமம் பொலிமாதைக் காவலன் றாடுதிக்கை
தானந் தருமம் பலபேறும் வேண்டுதுந் தாழ்வறவே. 31

தாழைக் கனியன்ன மாமூடர் தங்களைச் சந்ததமுந்
தாழைக் கனியன்ன வின்றாலுந் தாங்குந் தயாபரன்கார்
தாழைக் கனியன்ன மன்னாண் மணாளன் றலத்துயர்ந்த
தாழைக் கனியன்ன லான்போற்று மாதைத் தளியிடமே. 32

தளியலங் கார மலிமா தையூர் தரித்திடும்
தளியலங் காரக மேனியப்பா வென்னுட் டான்சிலவ
தளியலங் கார முலையா ளொடெய்துஞ்சா தம்பொய்ப்பத்
தளியலங் காரந் தகன்செய் திடாமனின் றாளருளே. 33

தாளணி யாகமந் தேறி யிமயத் தடத்திலுதித்
தாளணி யாகத் தமுதுண்டுய் வானென்முற் சந்ததம்வந்து
தாளணி யாக வரவணிந் தாயரி தானறியாத்
தாளணி யாகவின் குன்றாத மாதைத் தலத்தையனே. 34

ஐயம் புகுந்தம வில்வாளா திகொள்ளும் வாக்குமஞ்சே
னையம் புகுந்தருந் தத்துணிந் தேனென்னை யாதரிப்பா
யையம் புகுந்தகண் ணார்க்கருண மாதை யழகவினை
யையம் புகுந்தணப் பாய்கவு மாரியு மாபங்கனே. 35

அமரரை யாண்டவு ணருக்கும் வேட்கைநல் கண்ணலுமை
யமரரை யாண்டவத் தோர்புகழ் மாதை யழகனரா

வமரரை யாண்ட தளும்புனைந் தோன்கை யயில்காடொன்னா
ரமரரை யாண்டலை யான்சீர்சற் றென்றற்க ருளினன்றே. 36

அருளந் தணர்மலி மாதை யிலன்பர வாமுழுது
மருளந் தணப்பரி யானாநின் றாய்பிற ராலறியா
வருளந் தணலனை யார்விழை யாத வழகபெரி
யருளந் தணவு நிலையீந் தெனையினி தாண்டுகொள்ளே. 37

ஆண்டனந் தந்தரப் பூசைசெய் தானிக லட்டுரையா
லாண்டனந் தந்தரச் சென்றாய்தென் மாதை யமர்சிவனே
யாண்டனந் தந்தர வாஞ்சினந் தோய்மன் னரஞ்சவென்னை
யாண்டனந் தந்தர விந்தமுள் ளான்கை யலுப்பொழியே. 38

அலுத்த மனத்தைக் களிக்கூரத் தேற்றி யறமிலதா
யலுத்த மனத்தை யலார்செறும் பேறு மளித்தருள்வா
யலுத்த மனத்தை விளையாத்தென் மாதை யினாத்தியணி
யலுத்த மனத்தையன் றாழ்சர ணாம்புய வற்புதனே. 39

அற்புத வத்தகு பஞ்சாக் கரத்தை யறைகிலன்செல்
லற்புத வத்தகுற் றந்தோய்ந் துளேனென்னை யாள்குவையோ
வற்புத வத்த குடிலாஞ் சடிலநன் கஞ்சனல்கு
மற்புத வத்தகுன் றாவள மாதைக் கழகியனே. 40

அழலன்ன வாகனன் றோய்ச்செய சேய்நல்கு மண்ணல்கெடா
வழலன்ன வாகன்றென் மாதையிற் சற்றின் னருள்புரிந்தா
லழலன்ன வாவெள்ளத் தாழேனொன் னார்களுக் கச்சமுறே
னழலன்ன வாங்கிசத் துஞ்சீர் கொளாற்ற லடைகுவனே. 41

அடையல ராதிய கொண்டுனைப் பூசிக்குமா சையுற்றே
னடையல ராவெனச் சீறலிற் சோர்வத றிகிலையோ
வடையல ராள்புர மூன்றுஞ்சுட் டாயிமை யார்க்கெளியா
யடையல ரார்க்கெண் புகழீயு மாதைமன் னாமரனே. 42

ஆமனத் தார்வமு றக்கோ டளித்தவ னந்தணரி
லாமனத் தார்வழி பாடுகொள் வோனகிலாண் டஞ்செய்தோ
ராமனத் தார்வந்து போற்றிய மாதையழ கன்வம்ப
னாமனத் தார்வழங் கத்துணி வானஞ்ச லஞ்சனெஞ்சே. 43

அஞ்சனக் கண்ட முறச்சினந் தோன்கட லாலமுண்ட
வஞ்சனக் கண்ட னணிமாதை யூரன் விரவதன
மஞ்சனக் கண்ட லரூர்ச்செகுத் தோனென்னை யாண்டுகொண்டா
லஞ்சனக் கண்டவத் தோர்குழுக் கூடிச்சித் தாடிடுமே. 44

சூடர வப்பணி பூணும் பிரான்மனை யாயவுமை
யாடர வப்பணி யுஞ்சடை யான்முறுக் கார்மருப்ப
னாடர வப்பணி யுந்தவ மாக்குநனம் பொன்மின்னை
யாடர வப்பணி னான்மாதை யேநமக் காந்தகைத்தே. 45

ஆந்தரங் கண்டு றழச்செய்திட் டானையட் டானனைய
ராந்தரங் கண்டு சிலர்க்கருள் கூருமம் மான்பலச
லாந்தரங் கண்டுயில் கார்வெஃகு மாதை யழகன்வச
னாந்தரங் கண்டுந் தொறும்வெருள் வானொத்த விர்வதென்னே. 46

அவியா விளக்குப் புரைவானைப் புற்றின்னு மாட்டிறைச்சி
யவியா விளக்குழு வார்க்கிரங் கானைக்கல் லாமெனெஞ்சை
யவியா விளக்கு மருளானை மாதையா னைநம்பி
யவியா விளக்கும் புகழோர்ந்துய்ந் தாரண் டராதியரே. 47

ஆதிரை யானை யணிமாதை யூரில டைந்துபணி
யாதிரை யானைந்து நாட்கழிப் பீருங் களாயுள்சத
மாதிரை யானை யிவிரவார்க் குந்தோய் வதன்றாவியம
னாதிரை யானையந் தோதா விடினு மறிவதுவே. 48

அறிவா கரம்பெறுவார்க் கின்ப மியாவு மருளவல்லா
யறிவா கரன்றன்முன் மாய்ந்தாங்கு மாயை யறச்செறுவா
யறிவா கரங்கங்கொள் வாய்மாதை வாழ்வுறு மத்தவென்மா
லறிவா கரத்த மிகச்சிந்த வீழ்ந்துய்ந்து மாய்ந்துளனே. 49

ஆயப் படாத மறையார்க்கு மாதை யழகமனை
யாயப் படாதகிச் செஞ்சடையா யென்னை யாண்டுமுன்னி
லாயப் படாதறு கட்கூற்றுக் கஞ்ச லறிகிலேயோ
வாயப் படாதரன் சீர்வேட்டு நெஞ்ச மலைகிறதே. 50

அலையங்க மாலை முதலாம்பல் பூண்புனை யண்ணலைக்கா
ரலையங்க மாலை யராதருண் மாதை யழகனைக்கை

யலையங்க மாலையத்தார் வாழ்வு மென்னவறிதி நெஞ்சே
யலையங்க மாலைந்து வாதனை தோய்த லறவெய்துமே. 51

அறத்தானை யரவுதைத் தானைச் சிந்தை யகமுழுது
மறத்தானை யன்சென்னி கொய்தகை யானை யனங்கனிவ
ரறத்தானை யஞ்சுமுக் கண்ணானை மாதை யதிற்றுதித்தா
லறத்தானை யஞ்செய் மறைச்சென்னி ஞானம்வந் தார்தருமே. 52

ஆரணச் சென்னி தயத்துஞ்சில் கால்வந் தவிர்பெருமா
னாரணச் சென்னி முதலோர்க்கும் பேறளித் தாருலவா
வாரணச் சென்னி நிகர்மாதை யூரர்பொய் யாம்பரியா
லாரணச் சென்னிகழ்த் தச்செல் வினோத மதில்சயமே. 53

திசையா முகனைத் திருமாலைச் சூலச் சிரங்கொளும்
திசையா முகனை தொடைசோர்ந்த பாடலுஞ் சேர்த்தணிய
திசையா முகனையும் போற்றிய மாதையின் றேசிகவா
திசையா முகனைவுந் தீர்தவப் பேறுறச் செய்தருளே. 54

செய்ய சடிலதிவா கரமாதைச் சிவர்வ கந்தோய்
செய்ய சடில திவாகரஞ் சப்பொரு சித்தசனஞ்
செய்ய சடில திவாகரத் தோடுயச் சேர்த்தெ னையாட்
செய்ய சடில திவாகரன் மேலன்சொற் சீர்பெறவே. 55

சீரா வளித்தகுல வேந்தர்கா ணத்தன்றே கத்தொன்றுஞ்
சீரா வளித்தவன் வெள்கீகை வேண்டெனைத்தேற் றல்விட்டுச்
சீரா வளித்தகை தோய்ந்தார் முனேங்குறச் செய்தனன்றோ
சீரா வளித்தகைக் கூட்டார்ந்த மாதைச் சிவசித்தனே. 56

சிவசங் கராபம்பை சூழ்மாதை யூர்வரு சீரியரா
சிவசங் கராணவந் தீர்நிலை காட்டுமெய்த் தேசிகவஞ்
சிவசங் கராவு மணிந்தாய் தொழுமெனைச் சீற்றிகழேல்
சிவசங் கராய்வருஞ் சந்த மொரெட்டுந் தெளித்தனையே. 57

தெரியல ராகவ ளந்தோ யுமாதைச் சிவபலவாந்
தெரியல ராவென் புடனணிந் தாய்தமிழ்ச் சீர்சிறிதுந்
தெரியல ரான்மிக வாடா தவாறெனைத் தேற்றலென்றோ
தெரியல ராயிரஞ் சூழ்தலி னெஞ்சந் திகைக்கின்றதே. 58

திகையானை யெட்டுமொல் கப்பொரு தோர்வெண் சிலம்புகொள்
திகையானை யெட்டுணை யேனுமெண் ணாதட்ட சேவகனை
திகையானை யெட்டுளத் தாதிதன் மாதையிற் செய்கடமை
திகையானை யெட்டுன்ப நோய்முற்று மாறிடத் தீர்கிலனே. 59

தீராத காதலைங் கோதையர் நல்கத் தியங்கெனைநத்
தீராத காதலை யந்தோற் றமென்றறிந்தே னன்பற்காத்
தீராத காதலை நீத்தாடென் மாதையிற்சித் தர்மன்னாந்
தீராத காதலை மேற்பிறை சூடித் திகழ்பவனே. 60

திகந்தந் துதித்த புகழ்மாதை யானருட் சீரன்பர்க்க
திகந்தந் துதித்தத்தெய் யென்றாடு வான்றண் சிலம்பருள்சத்
திகந்தந் துதித்தக வோனென்னை யாளுந் தினம்வரின்வா
திகந்தந் துதித்தநெற் போன்றிகல் குன்றச் செயிப்பதுண்டே. 61

செயம்பொலி யக்கமும் வெண்ணீறும் பூண்டு செறிந்தசெந்நெற்
செயம்பொலி யந்தண் வளமாதை யீசனைச்சிந் தித்தன்பு
செயம்பொலி யகைமதன் போர்செய் யானயன் றீவிதிதுய்ச்
செயம்பொலி யமன்கொலா னம்புவா யென்றன் சிற்றுநெஞ்சே. 62

சிற்றர மன்ன விழியார்க் குருகிச் செகமிகழெச்
சிற்றர மன்னர் முதலோரைக் கெஞ்சி திரிந்தெனெஞ்சொஞ்
சிற்றர மன்னணி யாரமா தையூர் சிலம்பறைநச்
சிற்றர மன்னணிக் கொங்கையின் பாலொர் சிறிதருளே. 63

சிறிய வராக மருப்பணிந் தானைவெந் தீவினைமா
சிறிய வராகப் பெருமானை மாதைச் சிவனைநம்புஞ்
சிறிய வராகம வேதப் பகையறத்தேர் வர்பொய்வி
சிறிய வராகத் தழுந்தாது முத்தியிற் சேர்குவரே. 64

சேரலர் மாயன் முதலோரிட் டேத்துந்தொல் சித்தர்களஞ்
சேரலர் மாயமற் செற்றார்தென் மாதையின் செல்வரந்நாள்
சேரலர் மாய மறநா வலூரர் சினேகமிட்டார்
சேரலர் மாயச் செறுமாண்மை யீந்தெனைத் தேற்றினன்றே. 65

தேற்றா னனையவிழ் பூவாற்றன் பூசை செயச்செய்தினி
தேற்றா னனையது போல்சிந்தை நல்கித்தெளிக் கும்வித்துத்

தேற்றா னனைய ரொடுகூட்டி யுட்கொளுந்தெய் வங்கொற்றத்
தேற்றா னனையத் தமிழ்மாதை காக்குந் திருக்கையனே. 66

திருக்கயி லாயதுமுத் தாம்பிகை தோள்புணர் செய்யனையோ
திருக்கயி லாயன் மனைவேட்கை தீர்ந்தவர் தேவைநம்பத்
திருக்கயி லாய மகரரா திப்பற்றத் தேர்ந்தவர்க்குத்
திருக்கயி லாய மலைமாதை யூரிற் சிறந்ததன்றே. 67

சிறந்த விவேக மகாமாயைக் கஞ்சித் தியங்குகின்றேன்
சிறந்த விவேக மெனும்புணை யீந்தருள் செப்புபன்மா
சிறந்த விவேகலிங் கத்துற்று மாதையின் சீர்புரந்தாய்
சிறந்த விவேகழ லஞ்சருட் பேரணி சித்திக்கவே. 68

சித்திக்கு முத்திக்கு மாசித்து மாதவஞ் செய்தகவீர்
சித்திக்கு முத்திக்குட் பட்டதன் றேயரன் சீர்மிகப்பே
சித்திக்கு முத்திக்கு மூாம்போற்று மாதையிற் சேர்மின்றஞ்
சித்திக்கு முத்திக்கு கனிற்கொள் வாண்மலைச் சேயிழையே. 69

சேய கமலத் திருவைகு மாதைச் சிவன்விழியாற்
சேய கமலத் திருவைகு லையச் செயும்பரமன்
சேய கமலத் திருவைகுன்றா தருளசித் தன்வெண்மைச்
சேய கமலத் திருவைகு வார்க்குஞ் செறிப்பவனே. 70

பவசா கரத்தைக் கடத்துந்தொன் மாதைமெய்பத் தர்தஞ்செ
பவசா கரத்தையர் மாயாது காத்துப் பரிந்தருள்வை
பவசா கரத்தை யலார்க்கிறை நீறு படும்படிபார்ப்
பவசா கரத்தைக் குறியாற் றணந்து பதமருளே. 71

பதந்தர வாவென் றுனைக்கூவி யுய்ந்த பரம்பரைவேட்
பதந்தர வாழ்வன்று கொல்லோவெற் றுன்பப் படுத்துவதேன்
பதந்தர வார்திசை யும்போற்று மாதைப் பரவவரைச்சர்
பதந்தர வாமுற்று மீந்தருள் பேரருட் பான்மையனே. 72

பானந் தணிந்த செவியான்றென் மாதைப் பரனமுத
பானந் தணிந்தண்ட ரேங்கவொட் டான்மெய்ப் பயன்றாச்சோம
பானந் தணிந்தவிர் செஞ்சடை யான்பணப் பாந்தள்விருப்
பானந் தணிந்தனை தீர்புகழ் தோய்தரப் பார்க்கினன்றே. 73

பாரா தவரைத்தன் பண்பின ராக்குநன் பல்கதிர்வெப்
பாரா தவரையன் மாலா தியர்பணிபா தத்தம்மான்
பாரா தவரையர் மாய்பயன் மாதைப் பதியிலிச்சிப்
பாரா தவரையில் வாளா திகட்கும் பலநல்குமே. 74

பலவகை யாயதெய் வங்களு நீயெனப் பற்றெனையம்
பலவகை யாய மயலாதி சூழ்தரப் பண்ணலென்மென்
பலவகை யார்புரி பூசையு மேற்றவிர் பாதவைந்தம்
பலவகை யான்னன் போற்றிய மாதைப் பரம்பரனே. 75

பரம சிவாமுக்கண் மாதேவ மாதைப் பதியரவம்
பரம சிவாரணத் தோடுவெள் ளேறிவா பண்ணவநின்
பரம சிவாக்கியப் பேறளித் தென்னைப் பரிந்தருளியனே
பரம சிவாயினர்க் கோரிலக் காகிப் பதைத்துளனே. 76

பதத்தா மரைவிழைந் தைந்தெழுத் தோதுநாப் பற்றுமொரு
பதத்தா மரையனை யாரெள்ளல் வேட்கும் பகவசிவ
பதத்தா மரையுரு வர்மாதை வாழுமை பாகதமிழ்ப்
பதத்தா மரைவரென் றெற்சேர்த் துலகம் பகரச்செய்யே. 77

பகரவொண் ணாதன வாஞ்செயல் வாய்ந்த பரத்துவசு
பகரவொண் ணாதனன் மாதையில் வாழ்சிவன் பத்தியுண்மைப்
பகரவொண் ணாதன் தரத்தந்து மியான்செய் படிற்றுவெம்பா
பகரவொண் ணாதனம் வேட்டுஞ்சில் பாடல்கள் பாடினனே. 78

பாடியின் மாலை பலசூட்டி னேனின்னும் பாடல்விடேன்
பாடியின் மாலை நிகர்வாழ்வெற் கிங்கெய்தப் பாலிகதுப்
பாடியின் மாலைந் தொழிலாற்கொண் டங்கத்திற் பாதியிட்ட
பாடியின் மாலை மிளிர்வீதி மாதைப் பதியண்ணலே. 79

பதிபசு பாச நிலைதேறி மாதையிற் பத்திசெய்தப்
பதிபசு பாச மருப்பெய்த நல்கற் பகர்ந்துளன்மூப்
பதிபசு பாசங் கராவிரண் டாயிரம் பார்மருப்
பதிபசு பாச மிவர்வாற்றந் தாயெனைப் பாலித்திடே. 80

பாலிக்கு மாயனைத் தாய்தொல் கங்கையென பம்பைசுற்றிப்
பாலிக்கு மாயனை யாண்டதென் மாதைப் பரமன்விழிப்

பாலிக்கு மாயனைக் கொன்றுவை வேற்படைப் பாலற்றந்து
பாலிக்கு மாயனை யச்சொல் லியானதி பத்துய்த்ததே. 81

பத்தான னத்தனைத் தாள்விர லாலடர பண்பின்னா
பத்தான னத்தன யஞ்செய்ய வாண்டவன் பாழிவெள்ளி
பத்தான னத்தன யர்வீர்ந்த மாதைப் பதியெனுஞ்சு
பத்தான னத்தனை ஞாயந் தெரித்தும் பயத்துளனே. 82

பயந்த மகவுடற் கூறுசெய் தானன்னர் பத்தியெண்ணிப்
பயந்த மகவுறு திக்குமோர் பேறுறப் பாலிப்பையோ
பயந்த மகவுரிப் பார்ப்பனச் சேய்க்கிடப் பண்ணினையே
பயந்த மகவுரஞ் செற்றாய்தென் மாதைப் பழங்கள்வனே. 83

கள்ளக் கருணைசெய் தாள்வார்தென் மாதைக் கடவுளரெங்
கள்ளக் கருணையிற் கண்ணுமை கேள்வர் கரியனயன்
கள்ளக் கருணைவெற் பானார்தொண் டெய்தினர் காய்வினைத்தீங்
கள்ளக் கருணைய மாட்டாரென் பாருண்மை கண்டவரே. 84

கண்ட கனாவின் பயனியாது மின்றிக் கழிவுறிற்கற்
கண்ட கனாவி யறமென் றிடும்வன் கலியஞ்சுமோ
கண்ட கனாவின் புறச்சேவித் தேத்தினற் காத்தெமனாங்
கண்ட கனாவியுண் டாய்மாதை மேயகங் காதரனே. 85

காத கரஞ்சச் செயலே கருதிக் கதறு மென்னைக்
காத கரஞ்சரி யுங்குழ லார்த்தொழக் கைவிட்டிடேல்
காத கரஞ்சனத் தான வரஞ்சுகங் கரள்வல்வி
காத கரஞ்சதித் தாய்மாதை மாநகர்க் கண்ணுதலே. 86

கண்ண கலம்புவி யுண்டுமிழ்ந் தானம்பக் கைதொழுமுக்
கண்ண கலம்புவிட மயின்றா யசமர்கற் றுச்செய்வோர்
கண்ண கலம்புவிற் குன்றுவந் தாய்நிற் கழறுமெம்மைக்
கண்ண கலம்புவி னர்போற்றுன் மாதைக் கவின்பதியே. 87

கவியலங் கார மலிமாதை யூர்த்தனிக் காவல்மி
கவியலங் காரக மேனியத் தாவென் கருத்தின்விளக்
கவியலங் காரன்ன வீகைசெய் வான்மிகக் காதலித்தேன்
கவியலங் கார சுரராற்செய் தாங்கு கலிமொய்த்ததே. 88

கலிக்கா மனைய கவிநா வலூரற் கறுவியிகழ்
கலிக்கா மனையும் புரந்தாய்மிக் கேத்துமேற் கைவிடலி
கலிக்கா மனைங்கணை பெய்தான்றென் மாதையின் கண்ணந்தநாள்
கலிக்கா மனைக்களித் தான்மெச்சாம் வாழ்வுறக் காத்தருளே. 89

காத்தகை யானைக் கொடியாதி கொண்டு கனகநகர்
காத்தகை யானைய ரெய்தரும் பேறிக் கணத்தளித்தொல்
காத்தகை யானைய மில்லா துறச்செய் திகற்றவர்வெஃ
காத்தகை யானையச் சொல்லார்தம் மாதைமுக் கட்பரனே. 90

கட்டடந் தவிரதப் பொய்ச்சொன்மின் னார்முலைக் காதனல்குங்
கட்டடந் தவிரருட் பேறுதந் தாண்மலர்க் கான்சடிலங்
கட்டடந் தவிரகா சூழ்மாதை யூர்முதற் காரணசெங்
கட்டடந் தவிரசி தக்குன்ற நேர்திண் களிற்றினனே. 91

களிக்கடங் காதசை வார்மாவிற் காரிருட்கைக் கொள்பொல்லான்
களிக்கடங் காதனல் கச்சிறு மாதர் கல்விநுகர்
களிக்கடங் காத பரானந்த மீந்தருள்கண் டத்துற்றோங்
களிக்கடங் காதவர் சூழ்மாதை வாழ்ந்தண்டர்க் காப்பவனே. 92

காப்பவ னாகத் துயில்கூ ரறியுங் களித்தணிவெண்
காப்பவ னாகத மாகிய மூன்றுடைக் கத்தவன்னிக்
காப்பவ னாகலி தீர்மாதை நாத கடுவுணவங்
காப்பவ னாகவிப் பாடலின் கூலி கனிந்தருளே. 93

கனியக் கனியக் கவியாற் றுதித்துக் கருதலரக்
கனியக் கனியமத் துந்தாழ்ச் சியாங்கொல் கருப்புவின்மூர்க்
கனியக் கனிய நெறியுய்த் திடாதெனைக் காத்தியணி
கனியக் கனியதி தீர்ப்பாய்தென் மாதைக் கலாதரனே. 94

கலையணி யத்தனை யுந்தேர் முனிவர் கருதமதிக்
கலையணி யத்தனை மாதைப் பதிநடுக் காணுபுவெஃ
கலையணி யத்தனைய கூத்தைப் போற்றலை கள்ளநெஞ்சே
கலையணி யத்தனையத் தாழ்த்துந் தாளின் கதிபெறவே. 95

கதியாசை யாதிபன் றன்மகள் காந்த கறையில்விடைக்
கதியாசை யாவினு முய்க்கும காரத காதணிசங்

கதியாசை யாழ்த்துநின் மாதையின் மாட்சி கருதெனெஞ்சின்
கதியாசை யாமதன் மேற்சித்தி யாசை கவற்றியதே. 96

வற்றாத பம்பை நதியுந் தமிழுணர் மாதையிற்சி
வற்றாத பம்பை யொடெந்நேர மெண்ணி மனத்தினலை
வற்றாத பம்பையன் பெற்றமை கூறிடில் வன்றுயர்க
வற்றாத பம்பையந் தோடுஞ்சித் தோரெட்டும் வந்துறுமே. 97

வந்தனஞ் செய்யகந் தோறுந் துயில்வள மாதைப்பிரான்
வந்தனஞ் செய்யத் துணிந்தேற் கஞ்சாது மலையமலை
வந்தனஞ் செய்யமர் செய்கின்ற தேன்கடன் மாட்டிலன்று
வந்தனஞ் செய்யருள செய்யவ னாலுய்ந்த வானவரே. 98

வானகத் தையர் குலமஞ் சரக்கன் வருந்துறந்தாள்
வானகத் தைய மறவொறுத் தானணி மாதையில்வாழ்
வானகத் தையன் மணவாள னென்னைப்புன் மாந்தர்பல
வானகத் தையனை விட்டின்ன லீந்துமயக் கல்வம்பே. 99

மயக்க மறம்பெருக் குஞ்சீர்முத் தாம்பிகை வாமத்தில்
மயக்க மறன்மகட் டாங்கநம் மாதை வயிற்குலவு
மயக்க மறபுவெண் ணீறணிந் தைம்பொறி மாட்சிகண்டு
மயக்க மறத்தெளிந் தோர்கணெஞ் சம்பொன் மலையொக்குமே. 100

நூற்பயன்

யமகவந் தாதிப் பகையா வுமஞ்சுமிக் கெய்துநல்லி
யமகவந் தாதிறும் சித்திமுத் தித்தவ மேறுநல்கி
யமகவந் தாதிடு வார்க்கருண் மாதை யிறைவனணி
யமகவந் தாதிக் கவிநூறு நன்குணர்ந் தேத்திடினே.

தெய்வீகம்

வேண்டாந் துதியென்ற மாதைப் பிரானருள் வேட்டடியே
னாண்டாலுந் கைவிடுத் தாலுநன் றென்றிவந் தாதிசொன்னே
னீண்டார்வ முற்றன மென்னுங் குறிப்பொன் றியக்குவித்தான்
றூண்டா விளக்கன்ன சாட்சியென் னெஞ்சுஞ் சுரர்முற்றுமே.

முற்றிற்று

34

திருவானைக்கா வியமகவந்தாதி

34

திருவானைக்கா வியமகவந்தாதி

காப்பு

திருவானைக் காப்பொன்னி யாறளித் தானைத் திகழொளிமு
திருவானைக் கார்க்கரு ணல்குசெவ் வானையைச் சிந்திக்கின்றாந்
திருவானைக் காவற்றொழி லீந்தன் றாண்டமெய்த் தேவுறையுந்
திருவானைக் காவியம கவந்தா கிசெயல் குறித்தே.

நூல்

பரிதியனை யற்றிரு வானைக்கா வுடைப்பண் ணவற்கைப்
பரிதியனை யற்கரி யாற்பல பல்பருப் பதத்திற்
பரிதியனை யவெங்கூத் தனென்பார் சிலபா வலரும்
பரிதியனை யமர்பா கத்தம் மானெனப் பாடுதுமே. 1

பாடப்ப டிக்கறி யத்தலைக் கேறும் படிபரித்துப்
பாடப்ப டிக்கற் செகுத்தா னைக்காவிற் பரையொடுற்றாய்
பாடப்ப டிக்கன தொண்டரி லீண்டு படவறியேன்
பாடப்ப டிக்கவல் லார்போன்று ளேனெனைப் பற்றிக்கொள்ளே 2

பற்றலரஞ் சக்கரங் கூறி மால்பணிபா தத்திடன்
பற்றலரஞ் சன்விதி யாற்றுய்ப் பேனைக்கண் பார்த்தருளிப்
பற்றலரஞ் சடனல் குவரோ மதிள்பற் றநகும்
பற்றலரஞ் சகம்போற்றா னைக்காவு டைப்பண் ணவரே. 3

பண்ண வரைய நகரோடு நீர்புனைபார் புரப்பான்
பண்ண வரையன் றிறல்வேட் டுளேனெனைப் பார்த்தருணாப்
பண்ண வரையர் பணியானைக் காவிற் பரபலபாம்
பண்ண வரையதி னும்புனைந் தாயுமை பங்கினனே. 4

பங்கயனங் கம்பல கேட்டு நொந்துநிற் பற்றிடுநட்
பங்கயனங் கம்பெறு வாற்கஞ்சா தென்று பாலிப்பையோ
பங்கயனங் கம்புகா வானைக் காவபலி கவர்வான்
பங்கயனங் கம்பரித் தாய்வன் காலப யங்கரனே. 5

பயந்த விரதமொழி யார்க்குருகிப் பகலிரவாப்
பயந்த விரல்குறித் தேங்குகின் றேனைமுன் பார்ப்பதிபாற்
பயந்த விரகரிற் கூட்டுவையோ பல்பணி விரிக்கும்
பயந்த விரப்ப வொல்காயா னைக்காவிற் பரம்பரனே. 6

பரதத்துவா நந்திரு வானைக் காவினப் பாவொருதாட்
பரதத்துவா மதிபோல் வாய்பல் பாவமும் பண்ணுமுவப்
பரதத்துவா ரகையான் மெச்சும் வாழ்வருள் பாசவினைப்
பரதத்துவாய்ந் ததனானெஞ் சமீறப் பதைக்கின்றதே. 7

பதசாரந் தாவெனக் கெஞ்சாத வன்பரும் பங்கயப்பூம்
பதசாரந் தார்வங் கொடுக்குமம் மான்வெண் பணிச்செவியோர்
பதசாரந் தாரகன்றென் னானைக் காவன் பசும்பொனல்கின்
பதசாரந் தானெனத் தேறாவெற் கோர்பெரும் பாட்டனன்றே. 8

பாட்டந்த சந்தம் பகுத்தோர் கிலாரருட் பாங்கிகழ்மேம்
பாட்டந்த சந்தம்பு கல்வா ரொல்கார்வம் படைப்பதென்றோ
பாட்டந்த சந்தம்புக் கண்ணி தன்பாலுஞ் செல்பாதவெழு
பாட்டந்த சந்தம் பொலியா னைக்காவிற்பர சத்தனே. 9

பரசத்தனா நந்தம் வார்கா திலாடப் பழிப்பிலன்பர்
பரசத்தனா நந்தந் தாவெனும் பாட்டொலிப் பத்திகழ்ந்தாள்
பரசத்த நாநந் தம்பாம் பாரண பழமறையின்
பரசத்த நானந்தந் தோங்கானைக் காவம்மை பாகத்தனே. 10

பாக மதுரக்கவி யாற்று திக்கும் பழவடியார்
பாக மதுர மழித்தாற் கரியபதாம் புயத்தப்
பாக மதுரகங் கண்டு மிக்கொல்குறப் பாயும்விடைப்
பாக மதுரசஞ் சூழானைக் காவிலெற் பார்த்தருளே. 11

பாரதந்திக் குறக்கண் டுநொந்தேற் கன்று பாண்டவராற்
பாரதந்திக் குணரச்செய் வித்தானிகர் பான்மை யெய்தப்
பாரதந்திக் குளிரா முன்கொல் லேல்வன் பனைக்கையுடைப்
பாரதந்திக் குலம்வாழ் காவை யூரிற் பதிந்தவனே. 12

தவளக் கரியிரண் டாயிரங் கோட்டது தாங்கியநா
தவளக் கரினஞ்ச முண்டு வந்தாய் பஃறருமமும்போ
தவளக் கரிய செய்வார் காவையீசநின் றன்னிடந்தோய்ந்
தவளக் கரிபுவெனு மானைச் செங்கை தரித்ததென்னே. 13

தரியலர் காலந் தொறுமிட்டு வாழ்த்திலன் றக்கன்சொன்மா
தரியலர் காலவு மஞ்சார் களாகித் தரைமிசைவாழ்
தரியலர் காலனென வாழல் வேட்டுளன் றள்ளல்பச்சந்
தரியலர் காலணிந் தாள்காவை மாநகர்ச் சங்கரனே. 14

சங்கரசம் புகுதாச் செவியார் முற்றன மிரப்பேன்
சங்கரசம் புயத்தா னிகா பேறுறத் தாங்குவையோ
சங்கரசம் புநிழற் காவை யாதிப தாண்டவஞ்செய்
சங்கரசம் புவென் பார்க்கெ ளியாயருட் சத்தியனே. 15

சத்தியனந் தன்றனைச் செற்ற தாளினன் சாற்றரிய
சத்தியனந் தன்றனிக்கா வைநாதன் றடங்கை யின்வா
சத்தியனந் தன்றகை வேண்டுமாறு தரப்பெறினெஞ்
சத்தியனந் தன்பாவேட் கையெல்லா முந்துகச் செய்வனே. 16

தகர மணத்தகுழல்வா யந்தபங்க னைத்தக்கன் சென்னி
தகர மணத்தடிந் தானைத் தண்காவை தனிற்றுதித்துந்
தகர மணத்தம் பெண்வேட் டுழன்றாலுஞ் சமண்மதத்தந்
தகர மணத்தன்மை யெள்ளாதி ரேமிகச் சந்ததமே. 17

சந்தக் கவிதை யறியாப் புலவர்த மக்குமுத்தே
சந்தக் கவிதை யத்தா லருள்காவை யிற்சங்கரன்வெண்
சந்தக் கவிதை யவராச் செறுமாண்பெறத் தந்திலனச்
சந்தக் கவிதை யன்னார் முன்னுமெய்தித் தளர்ந்தனனே. 18

தளவத்தகை நகையார் மையல் வாரித னிற்றளரத்
தளவத்தகை மையறல் வேட்டுளே னெனைத்தாழ்த்தல் பல்சித்
தளவத்தகைந் தெழுத்தாதி பகர வைத்த லத்தற்றசீ
தளவத்தகைக் கரித்தோல் புனைகோ லஞ்சமைந் தவனே. 19

சமையங்க ளாறு வகையாம் பல்கோ டியுந்தன்னவெனச்
சமையங்க ளாறுணை யாக்கொண்டு காவைத்த லத்தமருஞ்
சமையங் களாறுறழ் பேரருள் வாஞ்சை தரும்பொருவில்
சமையங்க ளாறுசெல் லேமண் டர்கோனின் பஞ்சாரினுமே. 20

சாரங்கலந் தமதி ளானைக் காச்சிவசம் புவன்பாஞ்
சாரங்கலந் ததுதி யன்றி மாந்தர்முற் சாற்றுமுப
சாரங்கலந் தவமெள் ளேங்கரு மச்ச ழக்கர்களைச்
சாரங்கலந் தங்கரமாக் கொள்வார் கடமைப் பணிந்தே. 21

தமருகக் கையனைத் தென்னா னைக்காவுறை தாணுவைத்தந்
தமருகக் கையன்றி நள்ளார்க் கரியனைச்சத் தியத்துத்
தமருகக் கையற வுந்த விர்ப்பானைத் தனித்துணர்போ
தமருகக் கையா சொற்கொள் வார்க்கெய்தா துசரதமிதே. 22

சரதப்புல வரையாள் வான்பிருகு தருமகனே
சரதப்புல வரையந் தீர்த்த வெட்சன் றழைக்குமவ
சரதப்புல வரையாக் கருள்கூர் சிவன்றா பதரே
சரதப்புல வரைவெல்சீர் தண்காவை தனிற்றருமே. 23

தனியான சித்தன் றிருவா னைக்காவன் சகத்திரவ
தனியான சித்த விண்ணோரென் பெலாம்புனை தாணுவென்னா
தனியான சித்தல னென்றெனைச் சேர்க்குங் கொல்சற்றுமுள்வி
தனியான சித்தன்மை யானென்னு மேன்மை தனையளித்தே. 24

தனையல தில்லை யெனவாக மம்பலசாற் றியநா
தனையல தில்லை யிலென்பாற் பகர்ந்துளசத் தியம
தனையல தில்லை யறியேன் றண்காவையிற் றந்திடிற்போ
தனையல தில்லை யமின்றோங் கக்கண்டு தவிரதருமே. 25

தவிரத்த காதபுகழ் வேட்டுளேன தித்தா ரணிமீ
தவிரத்த காதர மீந்தருள் வாய்குல்லைத் தாரன்வடித்
தவிரத்த காத லுற்றாய்தொண் டர்சூழ்வர தூபயம்வாய்ந்
தவிரத்த காதகாசே ராத்தண் காவைத் தலத்தையனே. 26

தலத்த திகம்புனற் சீரானைக் காவெனச் சார்ந்தனன்மூ
தலத்த திகம்பர மென்றுணர்ந் தேனின்முற் சாற்றிச்சொற்பித்
தலத்ததி கம்பலை தீர்த்தாள மாலைத் தலைக்களத்தெய்
தலத்ததிகம் பரதாமோ தரன்விழித்தா ளினனே. 27

தாளனந் தத்துமிடை யூறுகண்டுந் தயங்குகச் சார
தாளனந் தத்துரு வென்றஞ்சி நின்றொண்டாச் சார்ந்திலன்செந்
தாளனந் தத்தும் வளைவயற் காவைத்த லைவவெண்கூ
தாளனந் தத்து லவத்தகு மாசையுந் தந்தனையே. 28

தந்தனத் தானன வென்றாடுவான் கொன்றைத் தாரன்பன்றித்
தந்தனத் தானன மைந்தான் றென்காவைச் சரபனங்கித்
தந்தனத் தானனவிற் கனவூ டெனத்தான்வ ரின்மெய்த்
தந்தனத் தானனந் தான்வாழ் வுங்கைக்குந் தரத்துய்வனே. 29

தரந்தர மானதலை மாலைத் தோளினா தண்கடன்மா
தரந்தர மானலரு மானைக் காவினர் சாவறுநித்
தரந்தர மான விரகையார வரைச்சரண டைந்துந்
தரந்தர மான விலேலென் கின்றார் முற்ற விக்கலமே. 30

கலகம் படித்த மதவாதரான் மிகக்கண் கலங்கிக்
கலகம் படித்தலை நொந்தயர்ந் தேனெனைக் காத்துநின்னிற்
கலகம் படித்த புயம்பத் தொடோர்நவ்வற் காவையுற்றாய்
கலகம் படித்தன்மையா லின்பமியா தொன்றுங் காண்கிலனே. 31

காணரு மற்புத மாயிரம் வேட்டுக் கரைந்தடுத்தேன்
காணரு மற்புதகங் காரத்தோர் செயக்காட் டினைமி
காணரு மற்புத னன்னார் குலாவுதென் காவையப்பா
காணரு மற்புத வானை தந்தாய்மெய்க் கருணைசெய்யே. 32

கருமங் கடந்தந்த நெஞ்சாலருட் பெருங்கா தலுற்றுங்
கருமங் கடந்த பத்தித்துறை சேர்ந்துநின் காதலியாங்
கருமங் கடந்த மகாரொடெற் கூட்டிலை காங்கினைநி
கருமங் கடந்தக் களத்தமைத் தாய்தமிழ்க்கா வைமன்னே. 33

காவை யலங்கரி யாதிய தேவகணத் தருமவெஃ
காவை யலங்கரிக் குந்திரு மால்புகழ்கா தலித்தேற்
காவை யலங்கரிற் சேறவிடேல் கவின்கா விரிநீர்க்
காவை யலங்கரிக் கண்ண கிலாண்டமின் காதலனே. 34

காதலனந் தம்பரிக் கொலைப்பே றெனக்கைக் குமென்னுட்
காதலனந் தம்புகவுய்த் ததார்பசுக் கன்றுங் கொல்வார்க்
காதலனந் தம்பு மேற்றோ விட்டோன்றன் கடனெனநோக்
காதலனந் தம்ப லுற்றேன்றென் காவைக் கறைக்கண்டனே. 35

கறையடி யட்டதன் றோல்க வர்ந்தான்பசுங் காட்டிடைச்சி
கறையடி யட்டமனைமா யற்கீந்தவன் காலனைமுன்
கறையடியட் டமுதிட்டார்க் குங்காட்டினன் காவை யென்னுட்
கறையடி யட்டனிவாள் போன்ற றுக்குங் கனத்தினதே. 36

கனக வித்தாரம் படைத்தார் முற்கெஞ்சிக் கருத்தழியார்
கனக வித்தாரம் புயத்தாத் தியோடணிகா ரணனோங்
கனக வித்தாரம் பொலியானைக் காவிற்கட வுளைம்மு
கனக வித்தாரம் பயின்றா ரைந்தொண்டரென் கால்நன்றே. 37

காலகன் மந்தணவாப் பொய்ம்மை ஞானக் களியினர்க்கோர்
காலகன் மந்தண வாசா ரியர்தங்க ணத்திறைவ
காலகன் மந்தண வார்விழிப் பூசைகொள் காவையெந்தாய்
காலகன் மந்தண வாவறத் தீர்த்துக் கதியருளே. 38

கதியாசை யாலுனைக் கைதொழு மென்னைக் கலக்கலுள்ளிற்
கதியாசை யாணவத் தோடறத் தாக்கு வெண்கா மர்விடைக்
கதியாசை யாதிபற் பெற்றயில் வேலருள் காரணமல்
கதியாசை யாள்கொண்கன் றொண்டார் தென்காவை முக்கட்சிவனே. 39

கட்செவி மாலைப் புயனானைக் காவிற் கவின்றருதிங்
கட்செவி மாலை யனையான வனைக்க ருதகவாய்க்
கட்செவி மாலை வென்றின்புற லாம்பின்புகான் மலர்த்தீங்
கட்செவி மாலையத் தாள்பாலு மூட்டுமென் கள்ளநெஞ்சே. 40

கள்ளங்கவ லைப்படுத்து மென்றோர்ந் துங்கழிக் கிலஞ்செங்
கள்ளங்கவ லைபல தோயு மாயைக்க டலிடைமூழ்
கள்ளங்கவ லையம்பெற் றுய்வ மோதிருக் காவையடி
கள்ளங்கவ லைவறாக் களத்தார் செயல்கண் டிலமே. 41

கண்டிக் களத்தரையும் பழித்துன் னருட்கா தல்கொள்வேற்
கண்டிக் களத்தரைக் கைந்நொடிப் போதுமுய்க் காதெடுத்தாள்
கண்டிக் களத்தரைக் கைப்பெய்தத்தித் திப்புக்காட் டருண்முக்
கண்டிக் களத்தரை யாவானைக் காவளர் கற்பகமே. 42

கற்பகமங் கையது போலுமென்று கயவர் முற்சொல்
கற்பகமங் கையர் தம்பகை காட்டுமெய் கண்டொதுங்கிக்
கற்பகமங் கையமா பாகற்காவை யிற்கை தொழுதாற்
கற்பகமங் கையன் மால்பெறும் வாழ்வுங் கசக்குமன்றே. 43

கசரதமா தியகொள்வார் தம்வாழ்வை யுங்கைக்கு மென்ன
கசரதமா திரமெங்கு லாவலெக் கால மெய்ச்ச
கசரதமா தினதென்பார் பராவக் களித்த பல்லங்
கசரதமா தியல்பாகா தென்காவை யிற்கண் ணுதலே. 44

கண்ண கனானிலம் போற்றா னைக்காவிற் கவின்றருமுக்
கண்ண கனானிலம் பாடலும் வேட்ட கருணையமக்
கண்ண கனானிலம் பாடுற்றுளே னெற்கடைக் கணித்துக்
கண்ண கனானிலம் பன்னகண் ணாளொடு காட்சிநல்கே. 45

காட்டானை யானலஞ் சேர்காவை யேத்தலர் காணவருள்
காட்டானை யானனத்தான் கழனா டிடிற்கா கமிவா
காட்டானை யானஞ் சுஞ்சேட்டை யகலுங் கருமமுழுக்
காட்டானை யானமன் சிட்டித் திடான்செங் கமலத்தனே. 46

கமலக்கண் ணானைய னின்னமுந்தே டுங்கடவுள் குன்றாக்
கமலக்கண் ணானையஞ் சேரானைக் காவிறைகண் டெமுள்ள
கமலக்கண் ணானையர் வெய்தா தளிக்கிற் கரிசறுமா
கமலக்கண் ணானை யயில்வேள் சண்டேசன் கதிகொள்வமே. 47

கதிரவரைக் கொண்டு செய்தன்ன வொண்மழுக்கை யாகன
கதிரவரைச் சிலையார் காவை யூராக வின்மறிபாங்
கதிரவரை யுருக்காட்ட வல்லார் வெண்க பாலமொன்று
கதிரவரை யரென்பெல் லாம்புனை யுங்கனம் பெரிதே. 48

கனம்பலவா கவிழைந் தேங்கினேன் கலிக்கா லவஞ்ச
கனம்பலவா கலிப்பச் செய்து ளானின்கருத் தென்கொலோ
கனம்பலவா கவிர்சூழ லின்மேய் தருகா வையினே
கனம்பலவா கம்வளாக் குஞ்சடா டவிக் காரணனே. 49

காரணகத் தன்பர் வேட்கையெல் லாநல்கிக்கா வையில்வாழ்
காரணகத் தனகி லாண்ட நாயகிகாந் தனெனக்
காரணகத் தநுபூதி தந்தாற் புவிக்கன் னிதன்ம
காரணகத் தறத்தீர்ப் பேனரி மலர்க்கண் ணொல்கவே. 50

கண்ணி னனம்புலிதீ யானநாதன் கலக்கமறக்
கண்ணி னனம்புலி தீதறத்தோல் கவர்கை யன்கொன்றைக்
கண்ணி னனம்புலி தீந்தமிழ்க் காவைக் கடவுளரு
கண்ணி னனம்புலி தீயேனு மார்வக்கடல் கொள்ளுமே. 51

கடகந்த ரித்தகர மாதர் மையற் கடற்சுழியைக்
கடகந்த ரித்த கரிவேந் தர்க்கஞ்சல் கனிந்தசொற்றீங்
கடகந்த ரித்தகைபாதி கொள்வான் றொண்டு காவையிற்செய்
கடகந்த ரித்தவ மெள்ளார் நெஞ்சே யறங்கைத்திடலே. 52

திடங்கண்ட வாழ்வெனப் போராடு வேனெனைச் சீற்றிடல்சேர்
திடங்கண்ட வாநலமென் பார்பிற் போந்துந்திரி குவன்மா
திடங்கண்ட வாசதிரு வானைக்கா விற்சிவா வுனையோ
திடங்கண்ட வாந்து திப்பாடல் செய்தாரிற் றிகழ்வித்திடே. 53

திகழந்தரங் கழுணர்த்தி யுமுண் மைத்திற நல்கிலாய்
திகழந்தரங்க ணத்திற் கொடுத்தா ணின்றி ருவடிப்போ
திகழந்தரங்கப் புனற்பொன் னிக்காவை யிற்சித் தமல்க
திகழந்தரங்க ழிந்தார் சொற்கொளாத் தொண்டர் சிந்தையனே. 54

சிந்தை யறியக்க மெய்த வெய்தானிகர் சீர்கருதென்
சிந்தை யறியத் திகழநு பூதித்திறங் குன்றுமோ
சிந்தை யறியல்புளார் மலிகா வையிற் றேவவுட்க
சிந்தை யறியற் புலவோரெரோர் நால்வர்சொல் சீலத்தனே. 55

சீலத்திரு வழிப்பார்க் கரசீந் தனைசிட் டிதிதிச்
சீலத்திரு வாவெந் தீங்கிழைத் தார்சிட்டர்சிந் தைநொந்தார்
சீலத்திரு வருட்சீரா னைக்கா விற்செய சித்தமுற்
சீலத்திரு வம்பொழிப் பானொத்தன் றொர்சொற் செப்பினையே. 56

செப்பங்க மானனி கொண்டு முய்ந்தார்முன் சிலரெனினின்
செப்பங்க மானம் பைசீராதி யேத்தித் திரியுமென்னுட்
செப்பங்க மானலரிதோ விண்ணூர்வ ளர்தேவரதாச்
செப்பங்க மானம்புதா ளாதெனகா வைச்சினகரனே. 57

சினமற வேமுயல்வார் வேடமிட் டுட்செருக் கினுநின்
சினமற வேன்றிரு நீறுடன் முற்றுந் தினமணிவேன்
சினமற வேலை யோடீந்த ருள்காவைச் சிவாநனிமிஞ்
சினமற வேடனிற்போய்ப் பார்த்தற் கேவருள் செய்தவனே. 58

செய்தவஞ் சற்றுவிழை பேறனந் தமித்தீ மையினீச்
செய்தவஞ் சற்றுணைக் கையாலு மீந்தநின்சே யொளித்தான்
செய்தவஞ் சற்றுங்க நீடானைக் காவளர் சித்தவம்பஞ்
செய்தவஞ் சற்றுஞ்சக் கொன்றளித் தாயெனைத் தேற்றுதியே. 59

தேற்றத் தனாக மங்கேட் டறியேனருட் சீலஞ்சிந்தித்
தேற்றத் தனாகம் வெறுத்துத் தவஞ்செய் திலேன்றிருக்கூத்
தேற்றத் தனாக தங்கண்டோ ரையுநிந்தை செப்பிவித்துத்
தேற்றத்த னாகத்திரு வானைக்கா வந்துசேர்ந்துளனே. 60

சேரனங் கோதிய செந்தமிழ்ப் பாப்புனைதிண் புயத்திற்
சேரனங் கோதியல் பாடலுங் கொள்ளுங்கொல் செம்மலர்நச்
சேரனங் கோதியங் காவளக் காவைச்சி வன்சிரத்திற்
சேரனங் கோதியணி யிடங்காட் டுஞ்சி றப்பினனே. 61

சிறப்பின னல்லனனந் தத்தினே னருட்சித் திமுத்திச்
சிறப்பின னல்லன் பனென்னுஞ் சொல்வேட்டுளன் சோவிப்பனோ
சிறப்பின னல்லன் றிருவா னைக்காப்பரன் றின்றவெந்நஞ்
சிறப்பின னல்லன் றிரிலோ கமுந்துயர்தீ ரதரவே. 62

தீரத்தனந் தந்து ரமாதிய நலஞ்சிந் துகலி
தீரத்தனந் தந்து காத்த ருளாதுதியக் கல்பொன்னித்
தீரத்தனந் தந்துளார் போற்றுங் காவையிற் சோபல்கணத்
தீரத்தனந் தந்து சீரார்ந்த பத்துச்செவித் தெய்வமே. 63

செவிக்கவல் லாரைக்கதி சேர்க்குமைம் பொறிச்செல்வன் வில்லாஞ்
செவிக்கவல் லாரையென நீறப்பார்த்தவன் றிங்கட் சென்னிச்
செவிக்கவல் லாரைந்தலைப் பணியாதி யுஞ்சேர்த் தவன்வார
செவிக்கவல் லாரையாகா வையிற் சூழ்வர் தினந்துதித்தே. 64

தினகர னாண மிளிர்வான் றென்காவைச் சிவன்மழுவேந்
தினகர னாண ரைபெண்ண ரையாத்திகழ் தேகன்மெய்ம்முத்
தினகர னாண முள்ளார்க்கெ ளியான்மறைச் சென்னியிடத்
தினகர னாண வந்தீர்ப் பானல்லான் மற்றொர்தெய் வமின்றே. 65

தெய்யனத் தானந் தனாவென் னவாடலுஞ்செய் யுமெந்தாய்
தெய்யனத் தானந்த னாவலர்பாட் டுங்கொள் சீலசிட்டித்
தெய்யனத்தா னந்தனாட ரியாய்நற்றெ ருத்தொறிரந்
தெய்யனத் தானந் தனாவலங் காவையிற் சீரருளே. 66

சீரத்தனைக் குத்தகு பண்பி லாரிடஞ் சென்றுகடற்
சீரத்தனைக் குகனைப்போல் வல்லீரென் றுஞ்செப்பன மின்செஞ்
சீரத்தனைக் குன்ற வில்லான் றென்காவைச் சிவனருணச்
சீரத்தனைக் குந்திறம் பெற்றுய் வீர்தமிழ்ச் செல்வர்களே. 67

செல்வரை யஞ்சிலையாக் கொண்டுளார் தொண்டர் சிந்தைதொறுஞ்
செல்வரை யஞ்சியற் கோலத்தினார் கணிற்றீ மதிவெச்
செல்வரை யஞ்சிறுகா வானைக்கா வின்வண் சீர்பகர்தல்
செல்வரை யஞ்சிப்பின் சென்றிரவா மெய்த்திறம் பெறவே. 68

திறந்தந்த வாக்கொள்கி லேனே யெனினுமென்சிந் தையிற்கத்
திறந்தந்த வானவனீய லையோமற் றொர்தேவு முண்டோ
திறந்தந்த வாரணங்குன் றக்கொன்றாய் வினைத்தீக்கயிற்
திறந்தந்த வாதருள் வாய்காவை வாழ்குரு தேசிகனே. 69

தேசிகனா வந்துமாண்புறப் பெற்றுந்தி கைக்கு மென்னைத்
தேசிகனா வந்து தேற்றிக் கொள்வாய்பல தேவருமுத்
தேசிகனா வந்து லாம்பொ ழிற்காவைச் சிவாமதியா
தேசிகனா வந்து நெற்றின் னுமாறுசிதைக் கின்றதே. 70

சிதலாதி யவுங்கொலாநெறி யாளாதஞ் சிந்தைநொந்தஞ்
சிதலாதி யமன்ன னார்களி கூர்பெருந்தீங் குங்கண்டேன்
சிதலாதி யக்க மில்லார் வாழுங்கா வைச்செஞ் சித்தவுட்க
சிதலாதி யமபல்வம் பென்பா ரொல்கின்பச் செருக்கருளே. 71

செருக்களங்கா ணஞ்சுபோலக் கொண்டாருயிர் செற்றுண் கின்றார்
செருக்களங் காணச் செயம்பெற வேண்டுநர்சீர் விளக்காய்
செருக்களங் காணஞ் செயுங்கா வையூர்திருப் பொடிப்பூச்
செருக்களங் காண மொல்கப்புனைந் தூரும்வெண் சேவினனே. 72

வினவப் பகரவிசை யன்முற் செய்தவினோ தவென்றி
வினவப் பகரச் சலியேனை யெள்ளிக்கை விட்டிடல்பா
வினவப் பகர முண்டாய்கா வையூர்க்கொடி மேயவெண்சே
வினவப் பகர னைச்செற்றா னுக்கீந்த மெய்வீறருளே. 73

வீறாரவா ரணங்குன்றா துநீட நின்மெய்ச் சமயம்
வீறாரவா ரஞ்சிறிது வைப்பாய் பல்விரிஞ் சாதம்ம
வீறாரவா ரப்பொழிற் காவை யூர்த்தனி வேந்தவதி
வீறாரவா ரஞ்சிறு விதிப்பாற் செய்வல் வீரத்தனே. 74

வீரசந்தோ டத்தர்வா ழானைக்கா வின்விகிர் தகண
வீரசந்தோ டவிழ்தாள் சூட்டி யாளிற்பல் வெய்யாமிக
வீரசந்தோ டமில்சீர் பெறக் காண்பன் விரகத்தனா
வீரசந்தோ டவிடேனென் சொன்மாலை யும்வேட்ட னையே. 75

வேட்டவன் மாமனை சொற்காப் பச்சென்றங் குவெந்தழலால்
வேட்டவன் மாமனைச் செற்றண் டரியாரை யும்வென்றவன்கார்
வேட்டவன் மாமனைச் சூழலங் காவையன் வெள்ளத்திட்ட
வேட்டவன் மாமனை யிலோன்பெறநல் கல்வேண்டுதுமே. 76

வேண்டத்த குந்த தறிந்தீந் துள்ளாயென்ற மெய்ம்மறந்து
வேண்டத்த குந்த ரன்னாரை யுங்கெஞ்சியுள் வெள்கினன்மா
வேண்டத்த குந்தனைத் தந்தாயதென் காவையின் மேவியண்டா
வேண்டத்த குந்தனப்பூ ணாரொல் காக்கம் விரைந்தருளே. 77

விரையா ரிதழி யணிவான்பஃ றீயபரைவென் றுவப்ப
விரையா ரிதழிற்கவி யுங்கொள் வானுமைவெண் ணகைய
விரையா ரிதழின்பன் வாழா னைக்காவினை வெஃகலாவெவ்
விரையா ரிதழியு மீதழியா தென்விர கிலரே. 78

விரசப்பு லவரையங் கெடத்தாக்கிப் பின்மென்புற் றின்ற
விரசப்புல வரையுந் தூய வேயுண்ண விட்டமுத
விரசப்புல வரைவேள்விக் கொலையும் விலக்கி டுந்தீ
விரசப்புல வரையீ வான்றென் காவையில் விண்ணவனே. 79

விண்ணப்பங் கேட்டியல் காலமுற் றாலுநின் வேட்கையறேன்
விண்ணப்பங் கேட்டிவிய னானைக் காவின் விமலசினை
விண்ணப்பங் கேட்டிருமால் வண்மையான் கொள்ள வேண்டுமெய்த
விண்ணப்பங் கேட்டினர் தான வராதியா வேரறவே. 80

வேரிக்க மலன்விதிக் கஞ்சினேன் மதவெய் யனுஞ்செவ்
வேரிக்க மலதுசெய்து நின்றா னெற்கை விட்டிடல்கா
வேரிக்க மலத்திருவா னைக்கா வளர்வெள் ளைநௌவல்
வேரிக்கம லவிடை மீதெனுள் ளூம்விளங் கண்ணலே. 81

விளங்கனியன் னமுலைமோ கமற்றிலன் மெய்யு ணர்வில்
விளங்கனி யன்னல் முற்ற றியேன் கலைவெண்மகளா
விளங்கனி யன்ன வயற்கா வையீச னைவேண்டியிருள்
விளங்கனி யன்னவி லாவநுபூதி யுமேவலென்றே. 82

மேவல ரின்றிர ளெல்லாந் தவிர்ந்து விகற்பமுறு
மேவல ரின்றிக் களிகூர் வேட்டனன் வேள்விடுக்கு
மேவல ரின்றிறந் தீர்த்ததொர் தொண்டன் றன்மின் னிடம்போ
மேவல ரின்றித் திருவானைக் காவில் விரும்பினன்றே 83

விரும்பரை மாத்திரைப் போதுள் வந்தும்மிட மேவிநன்க
விரும்பரை மாத்திரை நீத்தென் னையாண்டருள் வீரதுயரத
விரும்பரை மாத்திரை நீர்க்கா வையீரட ல்வெண்ணிறச்சே
விரும்பரை மாத்திரை யோருங் கொள்ளாவிச் சைமிக்குற்றவே. 84

மிக்க வரந்தர ராதிய ரென்னை வியந்துபிர
மிக்க வரந்தர வேண்டுங் கண்டா யிச்சைமேலிட்டுக்கம
மிக்க வரந்தர ணந்தீர்ந்த நால்வர்சொன் மெய்த்துதியா
மிக்க வரந்தரங் கத்தாய்தெ ன்காவையின் மேயவனே. 85

மேயக்கல் லாக்கன்றுங் கொல்வார் குடையில் வெதும்பெனிட
மேயக்கல் லாக்கன்றுணை போலும்வாழ் வருள்வீ விறெய்வ
மேயக்கல் லாக்கன்றுபூண் புனையார் சொந்தமே பொதுவா
மேயக்கல் லாக்கன்று காவையி லிங்கம் விழைசிவமே. 86

விழையணி யாவன வெண்ணீ றொடக்கென்னு மெய்த்தவர்முன்
விழையணி யாவனப் போராரைக் கெஞ்சவி டேல்சமையா
விழையணி யாவனத் தேற்றயின் றாயெங்கும் வெட்குபுக
விழையணியா வனகாவா னைக்காவள் ளல்வேதியனே. 87

வேதியருக்கு மிகவேட்கை நல்கு பொன்வெள் ளிசெய்யும்
வேதியருக் குநனிநாணுஞ் சீர்ச்சித்தி மெய்ம்மை நல்காய்
வேதியருக் குமுத னூல்கள் போற்றெண்வி யன்குணத்தே
வேதியருக் குநாமே வாத்தென் காவை விழாச்செல்வனே. 88

வனசர மங்கை மணவா ளனாநின்ம கன்மிகச்சொல்
வனசர மங்கைக் கொள்வா ரஞ்சுமாண்மை வழங்கவில்லை
வனசர மங்கை யர்சோர் வும்பொறாத்துன் பவாரியுற்றேன்
வனசர மங்கைத் தெழிலா னைக்காவள ர்வல்லவனே. 89

வல்ல மணக்களை கட்ட பிரான்றுங்கவாழ் வொடொக்க
வல்ல மணக்களை தோய்ந்தா னொருவன்வரச் செய்திமா
வல்ல மணக்களைப் புற்றே நொந்தேங்கலை மானச்சுற்ற
வல்ல மணக்களை மால்போற் றுங்காவை வரோதயனே. 90

வரமாயிரம் பெறல்வேட்டு மூல்வேனை மருட்ட லந்தோ
வரமாயிரம் புவிமா விறந்தாங் குவருந்து கின்றாள்
வரமாயிரம் பன்ன கண்ணிபங் காவப்பு வாய்ந்தலிங்க
வரமாயிரம் பாவளை யானைக் காவைம்மதி ளுள்வைப்பே. 91

மதியணி யுஞ்சடை யாதிய நாடுபு வாழ்த்திடுநன்
மதியணி யுஞ்சடை யாளம் பெறாமுன்ம டித்துவிடேன்
மதியணி யுஞ்சடை யாவட வூரனைமா ய்த்தனையே
மதியணி யுஞ்சடை நூல்சொ லக்காவை வளர்சிவனே. 92

வளங்காட்டுங் கொட்டி லைக்கா னியாறுசூழிம வான்பயந்த
வளங்காட்டுங் கொட்டிலையத் தானென்சென் னியின்வாய் தினந்த
வளங்காட்டுங் கொட்டி லையந் தீரவான் மிசைவந்திலன்ப
வளங்காட்டுங் கொட்டி லையா னாவண்கா வையின்வாழ்த் தெய்தவே. 93

வாழையங் கான மலிகா வையீசனெ ன்வன்மனத்தும்
வாழையங் கான வில்வா னோரிலியாரு மதிக்கையென்றோ

வாழையங் கான மண்டீ வெளிகாலிவை வாய்ந்துமன்ன
வாழையங் கானம் பவென்றவற் போற்றலென் மாதவமே. 94

மாதவனத் தையல்லான் மற்றொவ்வா தொளிர்வண் களத்தோர்
மாதவனத் தையம்பன் சமரான்மி கவாடி நொந்து
மாதவனத் தையர்ந்தாள் காவையூர்ச் சிவன்வன் னெஞ்சனம்
மாதவனத் தையன்னார் பலர்போய்ச் சொற்றும் வந்திலனே. 95

வந்திக்கு மாசை மலியத் தந்தாய்மத வாதாதம்மார்
வந்திக்கு மாசைய மீந்தாள் கிலாயென்றுவாழ் விப்பையோ
வந்திக்கு மாசை யற்செற்றா னைக்காவில் வளரும்வள்ளால்
வந்திக்கு மாசை யறியுப காரஞ்செய் வானவனே. 96

வானவரென் பணிவார்கா வையூர்ச்சித் தர்மால் விடையூர்
வானவரென் பணிகொள்ள நட்டா ரிஙன்வாழ்த்து கின்றேன்
வானவரென் பணிசைப்பார் பிற்போம் புன்மதத் திலமிழ்
வானவரென் பணினுந் திருந்தா திகழ்வம் பறவே. 97

பறவைச் சரபவடி வாயொர் சீயப்ப கவன்றனாப்
பறவைச் சரபணி செயத்தெண் ணாதடும்பண் பனென்றூழ்ப்
பறவைச் சரபக் களிப்பை வெவ்வேள்வியிற் பார்த்தவன்வெம்
பறவைச் சரபய னீவான்றன் காவையைப் பாடினர்க்கே. 98

பாடியமா லையத்தெய் தாதுமுன் பற்பலமெயன்பர்
பாடியமா லையெல்லாம் புனையீசனென் பாட்டுங் கொண்டு
பாடியமா லையொலிநீ டுங்காவை யிற்பைந்தண் முல்லைப்
பாடியமா லைநிகர் வாழ்வளிக் கிற்பகை யறுமே. 99

பகையறவே கன்றிருவா னைக்கா வளர்பண் ணவன்பா
பகையறவே துமில்லா தொழிப்போன் மலர்ப்பாத நண்ணு
பகையறவேட் கைமிக்கேத் திக்குன்றா வருட்பான்மை யெய்திப்
பகையறவே முயல்வேற் கொருசாட் சிபரி தியதே. 100

நூற்பயன்

காவை யந்தாதி யமற்கா ணுறாது கயிலையிற்பு
காவை யந்தாதி ருக்கில் லாநிலையிற் கவினவைக்குங்
காவை யந்தாதி சைவேண் டினுநல்குமுக் கட்பெருமான்
காவை யந்தாதிக் கவிநூ றுந்தேர்ந்து கழறிடினே.

முற்றிற்று

35

திருவருணைப் பதிற்றுப்பத்தந்தாதி

35

திருவருணைப் பதிற்றுப்பத்தந்தாதி

35

திருவருணைப் பதிற்றுப்பத்தந்தாதி

காப்பு

வெண்பா

அருணைப் பதிற்றுபத் தந்தாதி பாடிக்
கருணைக் கடலமுதைக் கண்டு - தருண
மடவார் மயலுமற்று வாழ்வதற்குக் காவல்
கடவா ரணத்தின் கழல்.

நூல்

அறுசீர் ஆசிரியம்

பூவாழ் புலவன் மறைமுதலாப்
புகல்நூன் முழுதும் புகழருணைக்
கோவா மொருவ னருட்பேறே
குறித்துந் தமியேன் கொதிப்பானேன்
காவார் கரமைந் துடையானுங்
கதிர்வேற் குகனுங் கருதுதுணை
யாவான் முயலுந் தவத்தீரே
யடியே னெதிர்வந் தறையீரே. 1

அறையுங் கழற்பூண் குலவுதிரு
வடியா லியமன் றனையட்டா
ருறையு மருணா புரிக்கோயி
லுட்போய் வணங்கு முணர்வுடையார்
தறையும் பிலமுந் தருநிழலுந்
தரினும் பொருந்தார் தவம்புரியார்
மறையுங் கருதா ரொருநால்வர்
வழுத்துந் தமிழான் மகிழ்வாரே. 2

வாரார் முலையார் நடம்பயிலு
மருகின் முதிர்சூல் வளையுலவுஞ்

சீரா ரருணைப் பதியாளுஞ்
சிவனே யிமையோர் தினம்பரவு
காரார் களத்தெம் பெருமானே
கண்மூன் றுடைய காரணனே
நீரார் சடிலத் திறையோனே
நின்சே யெனும்பேர் விழைந்தேனே. 3

தேனா ரிதழித் தொடைமுடியுந்
திருக்க ணிமையாத் தெருண்முகமு
மூனார் மழுமா னுறுதோளு
முண்ணா முலையா ளுறையிடமுங்
கானார் புலித்தோல் மருங்கு மலர்க்
கழலும் குலவக் கருணைபொழிந்
தானார் மிசைவந் தருணைநக
ரறிய வொருவாக் கருளாயோ. 4

அருள்வாழ் வதனைப் பெரிதுவிழைந்
தயருந் தமியே னகிலத்திற்
பொருள்வீ றதனா லிறுமாக்கும்
பொல்லா ரிகலப் புலர்கின்றேன்
சுருள்பூங் குழலா ரணங்காடுஞ்
சோணா சலத்தெம் பெருமானே
யிருள்வே தனைதீர்த்த டியவரோ
டிருக்கும் பெருஞ்சீ ரீந்தருளே. 5

ஈந்தின் கனியு நறுந்தேனு
மிலையுங் கிழங்கு மெயினர்குழா
மாந்திக் களிக்கு நெடுஞ்சாரன்
மருவுஞ் சோண வரையானே
யேந்தி யிறுமாந் தெழுமுலையா
ரிச்சைக் கடலூ டிடைவுறுநா
வீந்திக் கரைசேர்ந் துனதிருதா
ளினையே னொருகை நீட்டாயோ. 6

நீட்டுந் துதிக்கை கயிலையென
நிலவி யிரண்டா யிரமருப்புக்
காட்டுங் களிற்றா யருணைநகர்க்
கடவு ளானே கடையேனை

யாட்டுந் தொழிலுன் றனதாமென்
    றடியார் பலரீண் டறைந்தமொழி
கேட்டுந் தளர்ந்தே னென்செய்வேன்
    கிருபைத் திவலை தெறியாயோ. 7

ஆயும் கலைமுற் றுடையாண்மூக்
    கரிந்தா யெனத்தேர்ந் தவற்றிடைபோய்
மாயும் பிழைதீர்ந் தெழுத்தைந்தால்
    வழிபட் டுயர்சீர் வழங்காயோ
காயுங் கனல்வெற் பெனநீண்டாய்
    கரியோன் மலரோ னறிவரியாய்
பேயுங் கணமும் பெரிதார்க்கும்
    பிணக்காட் டினும்வாழ் பெருமானே. 8

மானேந் தியகை யுடையானே
    மழவெள் விடைமேல் வருவானே
பானேர் மொழியா ளமர்பாகா
    பசும்பொற் சிலையா யெனக்கூவு
நானே வலிதுன் றிருவருணை
    நகர்வந் தடைந்தே னலம்புரியா
யேனே னெனமு னொருநால்வ
    ரெதிர்சென் றதுமெய் யெனுமாறே. 9

மாறு படுந்தா னவர்தமக்கும்
    வரங்க ளளித்தா யெனமுதுநூல்
கூறு மொழிகேட் டுனையடைந்தேன்
    கொல்லா நலமே குறித்துள்ளேன்
வேறு நெறியார் களிநோக்கி
    வெருளத் தகுமோ விநாயகனோ
டாறு முகத்தாற் பயந்தானே
    யண்ணா மலையென் றமர்வானே. 10

வேறு – கலிநிலைத்துறை

அமரர் தந்துயர் பொறுக்கொணா தருள்செய்தோன்
கமல வேதியன் றலையிலேற் றருந்திய கடவுள்
குமர வேட்பயந் தொருசுடர் வேற்படை கொடுத்தோ
னெமனை வென்றவ னருணையூ ரெந்தமர்க் கினிதே. 11

இனிய பாற்கடற் றுயின்றவற் காழியொன் றீந்தோன்
றனிய னாவட நீழலுற் றன்றொரு சதுரர்
கனிய மெய்ப்பொரு ளுதவிய காரணக் கடவுள்
பனிய றாப்பொழி லருணைகண் டுய்ந்துளார் பலரே. 12

பலர்மு னாள்வரம் பெறக்கொடுத் தருளிய பரமன்
றிலக வாணுதற் கவுரிபங் குடையவன் சிலம்பென்
றிலகு மூர்ப்பெயர் கழறினார் பெறுங்கதி யெய்தற்
கலகின் மாதவம் புரிவது கருதிடி னவமே. 13

அவல நெஞ்சொடு சந்ததம் போர்பொரு தயர்வேன்
தவமு டிந்துனை விடையின்மேற் காண்பதெத் ததியோ
பவள வாயுமை பங்கனே பற்றல ரெரியச்
சுவண மாமலை விற்கொளுஞ் சோணமால் வரையே. 14

மால வன்விடை யுருக்கொடு சுமக்கும்வாழ் வுறுவான்
சூல முத்திரை தரித்துநின் றேத்திய சுடராங்
கால காலனைக் கனல்வரை யாமெனக் காணுஞ்
சீலர் தாண்மலர்த் தாதுகொண் டுயர்ந்ததென் சிரமே. 15

சிரமொ ரைந்துறு சோதியை மலரவன் றிருமால்
பரவு மாதியைப் பழுதுறா வருணையம் பதியி
னரசை நாடொறும் பணிந்துயர்ந் தவன்மக வாகி
விரவ லார்குலங் களைந்திட லென்னது விருப்பே. 16

விருப்பு மேனைய வெறுப்புமற் றருணையின் மேவிப்
பொருப்பு மேனியம் பரமனைப் புகழ்நலம் பொருந்திற்
கருப்பு வில்லியும் பிரமனு மறலியுங் கலங்கி
நெருப்பு நேருறு பஞ்செனத் தொலைவது நிசமே. 17

நிசமெ லாந்திக ழருணையிற் குடிகொளும் நிமல
னசமு கத்தின னாகிடத் தக்கனை யடர்த்தோன்
பசலை யார்முலைப் பங்குறைச் சங்கரன் பழைய
குசவ னார்தலை யணிந்தவீ றுணர்ந்தவன் குருவே. 18

குருவுந் தெய்வமு மாகிய பசுபதி குறைதீ
ரருணை மாநகர்க் காவல னானினத் தாசில்
வருப ராபர னல்லது மற்றொரு தெய்வ
மொருவர் கூறினு மவனருட் செயலென லுயர்வே. 19

உயர்ந்த சோணவெற் பாமென் நிலவிய வொருவன்
வயங்கொண் மால்விடை மேன்மழு மானுடன் வருவோன்
முயங்கு பூண்முலை யாளுட னாடிய முறைதேர்ந்
தியங்கு பேரறி வுடையவ ரெங்குலத் திறையே. 20

வேறு – கலித்தாழிசை

இறைவ னேயரு ணாபுரி யீசனே
மறைய வன்றலை யிற்பலி வாங்குவாய்
முறையு னக்கென முன்னிநின் றேத்திடிற்
குறைவு றாதகு ணக்கட லெய்துமே. 21

எய்து முப்புர மன்றெரி செய்தவன்
பைதி கழ்ந்த பணியணிப் பண்ணவன்
கைதை மாமலர்க் கைத்தவெற் பாயநாள்
வைத வாமழு மானெவ னுற்றதே. 22

உற்ற தொண்ட ருறுகணெ லாமறச்
செற்ற பான்மைச் சிவன்வடி வாமெனப்
பெற்ற தாய்பி றங்கலைச் சூழுவா
ரற்ற மோர்மருப் பானையொப் பாவரே. 23

ஆவ தைக்குள மஞ்சலு றார்களாம்
பாவ மாந்தர் படுகளம் பார்ப்பவர்
தேவ தேவன் திருவரு ணாபுரி
மேவ லுண்டென மேதினி சொன்னதே. 24

சொன்ன வில்லுடைச் சோணவெற் பாதிபன்
புன்ன கைத்தழல் போய்ப்புரஞ் சுட்டதுங்
கன்னன் மாரனைக் கண்ணெரி செய்தது
மின்ன வாறென் றியம்பவொண் ணாததே. 25

ஆத வன்மதி யங்கியுங் கண்களா
நாத னாகிய நல்வரை மீதுறப்
போத னாடிப் புகழிழந் தானரி
பாதம் வேண்டிப் பரிசுபெற் றானரோ. 26

ஆனு ளானை யருணையிற் சென்றுகண்
டூனு நெஞ்சு முருகத் துதிபுரிந்

தியானு மென்னது மின்றிய சீர்பெறிற்
கூனும் வார்சிலைக் கொற்றவ னஞ்சுமே. 27

அஞ்சு பூதமு மாகியப் பாலுமாய்
நஞ்சு தின்றுயர் நாதனு மானவெற்
பெஞ்சு றாநல மென்றனக் கீயுமேல்
விஞ்சு தீயர்வெ ருண்டொழி வார்களே. 28

வாரி யிற்றுயில் வண்புகழ் மால்விடுந்
தேரி னற்கருள் செய்தவன் சேர்வதா
மூரி னத்து ளுயரரு ணாபுரிச்
சீரி யர்க்கெழிற் றேவரொவ் வார்களே. 29

ஒவ்வ லின்றி யுயரரு ணாபுரிச்
செவ்வ ழற்கிரிச் சித்தன்முன் றேவராற்
பௌவ நஞ்சைப் பருகிய தோர்கலார்
தௌவ வெல்லுஞ் சதுரரைச் சார்மினே. 30

வேறு – வெண்டளைக் கலிப்பா

மின்னிலங்கும் வேற்படையால் வெஞ்சூர னைத்தடிந்த
பன்னிருக்கைச் செவ்வேட் பயந்தா னிருக்குமிடங்
கன்னி யணங்கார் கலபமயி லோடாடுந்
தென்னிசையுஞ் சாராற் றிருவருணை மாநகரே. 31

மாநாக மென்பும் மலரிதழி பூண்டபிரா
னாநாக மோங்கு மருணையூர்க் காசைகொண்டோர்
காநாகத் தோர்திருவுங் கற்பனையா மென்றுணர்ந்து
தீநாக மன்னநெஞ்சை செற்றுவக்க வல்லாரே. 32

வல்லார் பலர்தாமும் வாழ்த்திசைக்கும் வான்மழுவார்
கல்லால நீழற் கடவுளார் கண்ணுதலா
ரல்லார் களத்தா ரருணைப் பதியடைந்தாற்
பொல்லாரு முண்மைப் புகழ்பொருந்த வாழ்வாரே. 33

வாழை நறுங்கனித்தேன் வாய்க்கான் முதிர்ந்தாறாய்த்
தாழையுறு நெய்தற் றலம்புரக்குந் தண்சாரன்
மாழைபொரு சோண வரையாய மழவிடைமே
லேழைபங்க னாவா னெமக்கினிய பெம்மானே. 34

பெம்மான் புராரி பிறைசூடும் பீடுடையா
னெம்மா னென்றேத்து மியல்புடைய மேலோரைப்
பொய்ம்மான் விழியார் புணர்முலைநேர் பொன்முடியான்
வெம்மான் மலர்க்கணைகள் வேதனைகள் செய்யாவே. 35

செய்யா ளகலாத் திருவருணை மாநகரத்
தையா னனத்தெ மரசே யருட்கடலே
மையாரும் நெஞ்சத்தால் வாடித் தளர்வேனைப்
பொய்யாளர்க் கஞ்சாப் புகழுதவி யாண்டருளே. 36

ஆண்ட குருவாகி யன்றொருவன் முற்றோன்றி
வேண்ட லெல்லாநல்கி விளையாடலுண் மையென்றான்
மாண்டழியா வண்ணமென்முன் மால்விடைமேல் வந்தருள்வாய்
நீண்டபுகழ் சோணகிரி நின்ற பெருமானே. 37

மானியார் நெஞ்ச மகிழச் சமணொழித்த
கோனி லொருவன் குலவுநலங் காட்டாயோ
வேனின் மதவேளை வெந்துவிழப் பார்த்தோனே
யானியுறாத் தொல்சீ ரருணைப் பதியானே. 38

யானிடைந்து வாட்டமுறு மிந்நாளி லென்னுடனே
நானிலத்தோர் தாமு நலியப் புரிந்தாயே
பானிறத்து வெண்ணீறும் பாம்பும் புனைந்தோனே
தேனிழியுந் தண்சாரற் றென்னருணை வெற்பானே. 39

வெற்பனைய கொங்கைநல் லாண்மேவு மிடப்பாகா
சிற்பரமாஞ் சோணவரைச் சித்தாவென் றேங்குமென்னைச்
சொற்பனத்தி லவ்வாறு சொல்லவைத்தோன் வேறுளனோ
பொற்பமைந்த சூலம் புனையும் புயத்தானே. 40

வேறு – அறுசீராசிரியம்

புயங்க மாலிகைப் பரமனை யருணைவான் பொருப்புடைப் புத்தேளைக்
கயங்கொள் வார்கடற் பிறந்துல கழவருங் கடுவமர் களத்தானை
வயங்கு லாவிய மழுவொடு சூலமும் வைத்தகைப் பெருமானை
முயங்கு பூண்முலைப் பானுகர்ந் தருந்தமிழ் மொழிபவர் பிறவாரே. 41

பிறவி வேர்களைந் தம்பலத் தாடிய பெய்கழற் பெறவேண்டி
யறவும் வாட்டமுற் றஞ்செழுத் தோதிடு மறிவுடை துறவோரைக்

குறவர் வேலனை வழிபடு மருணையங் குன்றழைத் திடலோர்ந்தும்
பறவை போன்மனஞ் சுழல்வது தவிர்க்கிலாப் பாவமென் பகர்வேனே. 42

பகலை யாயிரங் கண்ணனை வேதனைப் பாற்கடற் றுயின்றோனைத்
தகர மோதியுந் தக்கனார் வாண்முடி தழலுறப் பெய்தாரா
னிகரி லாதுய ரருணைமா நகர்ப்புகழ் நினைப்பவ ரெவரேனும்
சகள மூர்த்தியொப் பாரெனத் தெளிந்தவர் தமைத்தொழச் சலியேனே. 43

சலிக்கு நெஞ்சகத் தொருசிறு தமியனேன் றழல்வரைப் பெருமானைப்
புலிக்கும் வீடருள் புனிதனை யரவணி பொலிந்தமற் புயத்தானை
யெலிக்கும் வார்கடற் புவிமுழு துதவிடு மிறைவனைத் துதிகூறிக்
கலிக்கு மைந்தர்நேர் புலையரை யநுதினங் கறுவிடப் பெற்றேனே. 44

பெற்ற மேறிய பெருந்தகைக் கடவுளைப் பிரமன்மா லறியாத
கொற்ற மால்வரை யுருக்கொளும் பரமனைக் குறித்துநின் றெழுத்தைந்துஞ்
சொற்ற மேலவர் பெறும்பய னுணர்ந்துமென் றொடக்குறு மடநெஞ்சங்
குற்றமாயிரம் புரிந்திடத் துணிவுறு கொடியநீர் கொளலென்னே. 45

என்னை வாவெனக் கருணையா லழைத்தவ னெழில்மலி கமலப்பூப்
பொன்னை வாணியைப் பணிகொளும் மலைமகட் புணர்த்தவன் புரமூன்று
முன்னை நாளெரித் தமரரைப் புரந்தவன் முதிர்புக ழருணேசன்
றன்னை நாடிய சதுரருக் களித்தசீர் தரின்மிக நலமாமே. 46

நலஞ்செய் தாயென மகிழ்வுறாத் தாதையை நானிலத் தினர்காண
வலஞ்செய் வாள்கொடு தறித்தவற் கருளிய வரதனை மாற்றேறும்
பொலஞ்செய் மாமதி லருணையிற் றுதிசெயும் புண்ணியம் வீண்போமே
லலஞ்செய் தீயவர தட்டல்கேட் டஞ்சியு ளயர்வது மலிவாமே. 47

மலியு மூரலங் கணிகையர் நடஞ்செய் மயிலின மனநாணு
மெலிவில் சீர்திக ழருணையூர்ப் பரமநீ வியன்றமிழ்ப் புலவோர்தங்
கலியெ லாமறக் கனன்றது மெய்யெனிற் கடையனேன் மிடியாய்
புலிமு னோர்சிறு மறியெனத் தளர்ந்துளம் புலர்வது தவிர்ப்பாயே. 48

பாய லாமெனப் பணிமிசைக் கிடந்தருள் பழுத்துயிர் முழுதாளு
மாய னார்விழி சுமந்தநின் பதங்களை மறந்துநா னுய்வேனோ
தூய வாணகை யணங்கினர் நடம்பயில் சோணவெற் புடையானே
நீய லாலொரு துணையிலை வேறற நிறைந்தநீ யிரங்காயே. 49

இரங்கு நெஞ்சினர் மிடியினாற் றளரவு மேனைய குணத்தோராங்
குரங்க ரார்வமுற் றுலவவுஞ் செய்யுமிக் கொடுமையை மறவாயோ
வரங்கள் வேணமட் டரக்கரும் பெறச்செயும் வளரருட் சிவனேநன்
மரங்க ணீடிய சாரலஞ் சோணமால் வரையென வந்தோனே. 50

வேறு – கலிவிருத்தம்

வந்தூர் மலர்மா ரனைவென் றொருசேய்த்
தந்தூ ரலர்தாங் கவுணர்த் தடியச்
செந்தூ ரிலனுப் பினர்சே ரருணை
முந்தூ ரெனவே தமொழிந் திடுமே. 51

மொழியும் புகழ்மூ தருணைப் பதியிற்
கழியும் பர்கள்கண் டுதொழும் பரமன்
வழியுங் கருணைத் தனிவா ரிதியூ
டிழியுந் தவமென் றெனையெய் துவதே. 52

எய்யா மலிகழ்ந் தவர்முப் புரமும்
பொய்யா கநகைத் தருள்புண் ணியனார்
செய்யா ரருணைச் சிவனா ரவரை
மெய்யா ளர்விரும் பிவணங் குவரே. 53

குவளைத் தடவா விகுலா வருணைச்
சிவனைப் பலசித் தர்களுக் கனையா
மவளைப் புணரண் ணலைநண் ணுகிலார்
கவலைப் பிணிகொண் டுகயங் குநரே. 54

கயமா முகனைக் கடியக் களிறா
வியனார் பிடிமே விவிநா யகனைப்
பயனீள் மலிபா ரிலளித் தவர்வா
முயர்சோ ணவரைக் கெதிரோ தரிதே. 55

ஓதக் கடலோங் கலுறாது லகின்
மீதக் கினியா கிவிளங் குமலை
நாதர்க் கிருநால் வர்களெய் தியதால்
வாதச் சமயங் கண்மடங் கியதே. 56

மடமா தர்மயக் கம்மிகுந் தவர்தந்
தடமா மலர்தஞ் சமெனத் தவியேன்

படமா டியபாம் பணிவா யருணைத்
திடமால் வரைமீ துறசிற் பரனே. 57

பரவுந் தவர்பா வமறக் களைவான்
வரமிஞ் சியவாய் மலரைந் துடையா
னுரகம் புனைவா னுறுதென் னருணைக்
கிரவின் றியிலங் கியதோர் மலையே. 58

மலையா கியவிற் கொளும்வண் மையினா
னலையா றமருஞ் சடையா னருணைக்
குலைவே துமிலா துயர்சீ ருறல்கண்
டிலைவே விறையா னையொடின் புறுமே. 59

இன்புற் றிமையோர் களிருப் பதுவேட்
டன்புற் றமுதக் கமளித் தபிரான்
வன்புற் றுயர்வாண் மழுவா னருணை
முன்புற் றெவர்முத் தியுறா தவரே. 60

வேறு – கலிவிருத்தம்

தவளவா ணகைமினார் தமைநினைத் தலமரும்
பவமொழித் துன்னையே பரவுசீ ரருள்வையோ
வவமுறார் மருவுதென் னருணையங் கோயிலுட்
சிவபிரா னேநெடுஞ் செஞ்சடைச் சித்தனே. 61

சித்தர்வாழ் வெட்டும்நின் றிருவருட் டிவலையென்
றுத்தமச் சுருதியா லுணர்வதும் பிழைகொலோ
மத்தமும் புனலும்வான் மதியமும் புனைசடைப்
பித்தனே யருணையின் பெருமலைத் தலைவனே. 62

தலையில்வெண் டூவலைச் சசியுடன் புனையுநீ
மலைதரும் புதல்வியார் மக்களோ டென்னைவைத்
துலைவுறா தாளின்மற் றொருவரும் பழிசொலார்
கலைவலார் துதிசெயுங் கனல்வரைக் கடவுளே. 63

கடல்விடம் பருகுநீ கடையனே னழுதுதீர்ந்
திடலையுஞ் சிறிதயின் றினியபே றருளிடிற்
புடவியோ ரிகழ்வரோ பொருவிலா வருணையின்
றிடமதிட் கோயிலிற் றிகழ்வுறுந் தெய்வமே. 64

தெய்வமங் கையர்நடஞ் செயுமெழிற் சினகரத்
தைவகைக் கடவுளர்க் கரசனா மமலனே
மைவருஞ் சோணமால் வரையில்வந் தணுகினேன்
மெய்வழக் கினனெனா மிளிர்வுறப் புரிவையே. 65

புரிசடைப் பகவனே புலவருட் கருதல்கண்
டெரியெழும் படிநகைத் திகலறுத் திடபமா
மரிமிசைக் குலவுவா யருணைவெற் பணுகுமென்
பிரியமுற் றுதவியிப் பிழையறக் களைவையே. 66

களையெனுங் கொடியர்தங் களையறக் களைவதா
விளையநின் புதல்வனொத் திலகுவானி யாவனோ
வளையலம் புறுகையாண் மருவுபங் குடையவா
தளையதாம் வினைகெடுந் தழல்வரைக் கிழவனே. 67

கிழவனென் றருணையங் கிரியினின் றருள்செயும்
பழமைசால் பகவனே பனிவரைக் குமரிதன்
யழகுகண் டுருகுவா யறுமுகக் குழவிதன்
மழலையென் றெளியனேன் வனைதமிழ் புனைவையே. 68

புனையிழைக் கொடியனார் புணர்முலைக் குருகுபாழ்
வினையறுத் தருளமால் விடையின்மேல் வருவையோ
நனைசடைப் புனிதனே நாவலூர் நாவலன்
வனைதமிழ்க் கவிதையாய் வளரணா மலையனே. 69

மலயவெற் புடையகோன் மகிழ்வுறக் கரகமூ
டிலகுநீர் சொரியுநின் னியல்புணர்ந் தணுகினே
னலகில்சீர் பொலிய டேருணமால் வரையினிற்
குலவுமெய்க் கடவுளே குறைபொறுத் தருள்வையே. 70

வேறு – அறுசீர் விருத்தம்

அருண்மிகத் தரும்பெம் மானை யருணமால் வரையுள் ளானைப்
பொருணயக் கவிதை வேட்டுப் பூவைபா னடந்தான் றன்னை
யிருணலி குழலாள் பாகத் திறைவனை யிறைஞ்சா தாரைப்
மருணமலப் பிணிகள் மூன்றும் வருத்துமென் றுணர்ந்தேன் மன்னோ. 71

மன்னவன் முடிமேற் றாளும் வளமிகு மருணைக் காவன்
முன்னவ னடிகீழ்த் தங்கண் முடியும்வைத் துயர்ந்த மேலோர்

பொன்னவள் கணவ னென்றும் பொதுமறை புகன்றோ னென்று
மின்னவர் போலும் பஃறே வெனவுமிங் கிலங்கு வாரே. 72

இலங்கையோன் கதறத் தாளி னெழில்விர லதனா லூன்றும்
வலங்கொள்வா னருணைக் கோயில் வாயிலில் வடிவேற் சேயுந்
துலங்குசெம் புகர்க்கை யானுந் துவாரபா லகர்போ னின்றான்
மலங்கெடா வயன்மால் வாழ்வை வகுத்தெவ னுரைக்கலாமே. 73

உரைக்கரும் பசும்பொ னோங்க லொருகையிற் பிடித்த பெம்மான்
பரைக்கிடப் பாக மீந்த பசுபதி பழுதில் சோண
வரைக்குளன் றொருக்காற் றோன்றி மாலயன் வழக்குத் தீர்த்தோன்
றிரைக்கடல் விடமுண் ணானேற் றேவர்தஞ் சிறப்பென் னாமே. 74

சிறப்புறு மருணை மூதூர்ச் சிலம்பினைந் தினஞ்சூழ் வார்க்கு
மறப்பொடு நினைப்புந் தீர்ந்த மாதவம் பலிக்கு மப்பாற்
பிறப்புட னிறப்பு நீங்கும் பெருங்கதி யடைவா ரென்று
மறப்பில் வாக்குடைய வேத மாமுனி வகுத்தா னன்றே. 75

தானொடு நானு மான சமரசா னந்த வாழ்க்கை
தேனொடு பாலும் போலச் சிறியனேற் கினிக்கச் செய்தாண்
மீனொடு மிணையா முண்கண் மெல்லியல் விளங்கும் பாகா
வானொடு முரைக்கொண் ணாத வளந்திக ழருணை யானே. 76

ஆனினஞ் சொரியுந் தீம்பா லருவிசூ ழருணைக் குன்றிற்
றேனின முரலுங் கொன்றைத் திருத்தொடை முடித்த நாத
னானினந் துயருற் றேங்க நல்குர வுயர்த்து மாகி
லூனினம் புசிப்பார் தங்க ளுவகையு முயரு மன்றே. 77

மன்றிடை நடிக்குந் தாளான் வளமலி யருணை யூரிற்
குன்றினின் றருளும் பான்மை கூறினுந் தேறி டாரை
வென்றிவின் மதவேள் பூவும் வேதியன் றிரிகைதானுங்
கொன்றிடு மறலி தண்டுங் குலைவுறப் படுத்து மன்றே. 78

படுத்தபுட் குரவன் போலும் பவளவான் களிறு போலு
மடுத்தசே யிருவர் தம்மோ டருந்தமிழ் விரகன் றன்னை
யெடுத்தநின் னிடத்தா ளென்னை யிடுக்கிடி விளப்பங் கொல்லோ
கொடுத்தலே தொழிலாக் கொண்டு குலவுதென் னருணைக் கோவே. 79

கோவைவாய்க் கவுரி பாகா கொடுமழுப் படைக்கை யானே
யாவையூர்ந் துலகைச் சூழ்வா யருணைமா நகருள் ளாயேன்
பாவைநீ யிகழா துன்பொற் பதங்களிற் புனைவா யாகிற்
றேவைபோ லளவில் கோடி சித்திகள் செய்வே னின்னே. 80

வேறு – எண்சீர்

இன்னலெனும் பெருங்கடலிற் குளிக்குந் தீயே
னிகபரசா தனங்குறிப்பார்க் கினிமை கூறேன்
வன்னமுலைப் பேதைநல்லார்க் குருகு நெஞ்சேன்
மழவிடைமே லுனைநாடி மகிழ்வ தென்றோ
தென்னருணைப் பதியாளுஞ் சிவனே கற்றூண்
டிரைநீரின் மிதப்பவும்முன் செய்யுந் தேவே
நின்னருளே தஞ்சமன்றி வேறொன் றில்லே
னினைத்தபயன் பெறுமாறு நிகழ்த்தி யாளே. 81

ஆளாயே லெவ்வணுய்வே னிந்நாள் காறு
மடியனேன் படுந்துயர மறியாய் கொல்லோ
தோளாண்மை யருளாண்மை யிரண்டு நல்கித்
தொழும்பரோ டிருத்தியருட் சுகத்திற் றோய்ப்பாய்
வாளாய கண்ணியுண்ணா முலையாள் பங்கா
வாதவூ ரடிகளுக்கா மதுரை யூரில்
வேளாய வழுதியர்கோன் கரத்தி லேந்தும்
வேத்திரத்தி னடிகொண்டாய் வெறுத்தி டேலே. 82

வெறுக்கரிய நலங்காட்டு மருணை மூதூர்
வேதியனே யிருவருக்கா வெற்பாய் நின்றாய்
முறுக்கெயிற்றுச் சமனுலகி லமணர்ச் சேர்க்கு
முருந்துநகைக் குருந்துணர்ந்த முதல்வா முந்நீர்க்
குறுக்கணைதீர்ந் துயர்திருமால் பாவந் தீர்த்தாய்
குவலயத்தி லனைவோருங் குலைச்செய் வாரா
மறுக்கமுறப் பொருவானைக் காணா முன்ன
மலரடிநீ யளித்தாலு மருவி டேனே. 83

மருமலியும் கொன்றைதும்பை கரந்தை யாத்தி
மத்திமதி கொக்கிறகு மருவுஞ் சென்னிக்
குருமணியே முதலையுண்ட மதலை யீந்த
கோமானே யென்னளவுங் கொடுமை செய்யே

லருமறையோ டாகமமு முழங்குந் தொல்சீ
ரருணையூ ரணுகியுநா னயர லாமோ
கருமமுத லாயமல மூன்றும் போக்கிக்
கழலிணைகட் காளாக்கிக் காத்தி டாயே. 84

காத்தகில முண்டுமிழ்ந்த நெடியோன் காணாக்
கமலமலர்ப் பதம்நோவக் காட்டிலேகிப்
பாத்தனுடன் போர்புரிந்து கணையொன் றீந்த
பசுபதியே யமரர்குழாம் பயந்த கால
நீத்தநெடுங் கடல்விடமார்ந் தபய மீந்த
நிமலனே யருணவெற்பா நின்ற தேவே
பூத்தமல ரேந்தியுனக் கான பூசை
புரிந்துவக்கு மாசைவிஞ்சிப் புலர்கின் றேனே. 85

தேனமருங் கொன்றையுட னெருக்கும் பூண்டாய்
தேவருக்கு மவுணருக்குந் திறலீந் தாள்வாய்
கானமலி பூஞ்சோலை நிலவுஞ் சாரற்
கனகவெற்பி லிருந்துநெடுங் கனலா நின்றாய்
போனகத்துக் கலையாதுன் னடியார் கூட்டம்
பொலிவது கண்டிறு மாக்கும் புகழ்ச்சி வேண்டி
நானருணைப் பதியில்வந்தேன் கண்டா யின்னே
நரையேற்றிற் றுலங்கியுண்மை நவின்றி டாயே. 86

நவிலருஞ்சீ ரீசானத் தொருவற் போற்றி
நமச்சிவாய னைப்புகழ்ந்து நால்வாய் வேழங்
கவின்மலியுங் குகவேள்பாங் கொளிரும் வாயிற்
கனசிகரி வாழ்த்தெடுத்துங் கவன்றேன் கண்டாய்
துவிதநலந் தெரித்தருளாற் கலந்து கொள்ளுஞ்
சோதியே யருணைநகர்ச் சுயம்பே முன்னா
ளவிமறுத்தோன் றலைகொய்தா யிரங்கி யாட்கொண்
டடியார்தம் பெருங்கூட்டத் தமைத்தி டாயே. 87

அமையனைய தோளியுண்ணா முலையாள் பங்கா
யாயிரத்தெண் கலையானே யருணை யீசா
சமையமெங்கும் புகுந்தவற்றி னடியார்க் கெல்லாந்
தண்ணருட்சீ ருதவியநீ தமிய னேனை
யிமையவரின் மேலாக்கி யாள்வாய் கொல்லோ
வீனரினுங் கடையாக்கி யிகழ்வாய் கொல்லோ

தமையலது பொருள்வேறொன் றிலையென் பாருந்
    தடுத்தெதிர்த்து வாதமிடத் தவிக்கின் றேனே. 88

கின்னரிதாங் கியகரமுஞ் சிறகுங் கொண்ட
    கிளிமொழியா ரிசைபாடக் கிளருங் கோயிற்
றென்னருணைப் பெருமானே புலவ னேவத்
    திருவாரூர் வீதியிற்போய்த் திரும்புந் தூதா
கன்னல்வில்லி பொடியாக விழித்த கண்ணா
    கவிகோடி புனைந்தோனே கனிவில் லாதேன்
சொன்னதுதிக் கிரங்கியருள் புரிந்தா யானாற்
    றூயபுகழ்க் கணியாகித் துலங்கு வேனே. 89

துலங்கியவா ளெயிற் றலகைக் கணங்கள் சூழச்
    சுடுகாட்டி லொருபாதந் தூக்கி யாடி
யிலங்கிழையாண் மனநாணக் களிக்கு மெந்தா
    யெழிலருணைக் கிரியானே யிமையோர் போற்று
நலங்கிளர்வெண் ணீற்றரசே யென்று கூவு
    நானவமாப் போகாமே நலஞ்சற் றீந்தாள்
விலங்கினமூர்வனம் பறவை யாதி யுண்டு
    வீங்குமுட லோர்பலரும் வெருளு மாறே. 90

சந்தக்கவி – தனிநிலைத்துறை

தானதன தானதன தானதன தானதன தனதானா
மாறுபடும் வேள்விமுயன் மாதவர்க டாமருவு மடவாரோ
டூறுபட மோகினியொ டேகிவரு சோணவரை யுயர்வோதார்
கீறுபடு பாதிமதி போலுமென மூவரைகள் கிளர்சீரா
னீறுபடர் மேனியில ராதியரை யாமணுவு நினையேமே. 91

தானனத் தந்ததன தானனத் தந்ததன தானனா
ஏமனுக் குங்கொடிய வேதனு குங்கிளியி லேறீடார்
காமனுக் கும்பயமு றாதளிக் கும்கடவுள் காணீரே
தாமரைக் கண்கொளுமு ராரியொத் திங்கொளிர்கை சார்வானே
நாமடுக் கும்பொருவில் சோணவெற் பொன்றுதின நாடீரே. 92

தானனத் தத்தான தானனத் தத்தான தத்தானா
நாடனைத் திற்சோண மால்வரைக் கொப்பேது நத்தாதே
பாடல்செப் பித்தேறு நாவலர்க் குட்சேறல் பற்றேனோ

சூடகக் கைப்பாவை பாகமுற் றுத்தோலு டுத்தோனே
வேடனெச் சிற்கான மாறெனச் சிற்போகம் விற்றோனே. 93

தத்தந்த தானதன தத்தந்த தானதன தன்னானா
விற்கொண்ட சோணகிரி யிற்றங்கி யாளுமுயர் விண்ணோனே
பொற்கொண்ட பாவலவ னுக்கின்ப மீயவொரு பொன்னேர்வா
ளிற்கொண்ட தாள்கருதி நிற்கின்ற மாதவரை யெண்ணாதே
சொற்கொண்டு நாளுமிகழ் தற்கஞ்சி டார்களொடு துன்னேனே. 94

தன்னதன தனனதன தன்னதன தனனதன - தன்னா
துன்னரிய திருவருணை யென்னுமுயர் தலமுடைய தொல்லோனே
யென்னளவு மிகநினையு நன்னலம துதவும்வலி யில்லாயோ
முன்னறிஞர் பலர்கவிதை சொன்னபடி யருளினைகொன் மொய்யார்பூ
வுன்னடியி லிடுமுவகை தன்னையுத வினிய வுயிருய்மாறே. 95

தய்யத் தனத்தனன தய்யத் தனத்தனன தானத்தா
உய்யும் படிக்குரிமை சொல்லுந்தொ ழிற்புரியு மோர்மெய்த்தே
வையும்ப யத்தொடுள மொல்குந் திறத்தையரு ளார்வத்தான்
மையுஞ் சிகிக்குலமு மல்குங் குவட்டருண மால்வெற்போ
னெய்யுங் கணைக்குணவு வையம்கு டிக்குமற லேழுப்பே. 96

தத்தனத் தானதன தத்தனத் தானதன - தாந்தானா
உப்புடைச் சீர்ப்பொழிலில் விப்பிரக் கூட்டமதி லோங்கூர்சூழ்
மெய்ப்புகழ்க் காட்டருண வெற்பினைப் போற்றுதவம் வீணேபோமோ
மைப்புயற் போற்குலவு மொய்த்துமட் டார்த்தகுழன் மான்பாகா
முப்புரத் தார்ப்பொடிசெ யத்தமற் றோட்குகனை மோந்தோனே. 97

தாந்த தனதன தாந்த தனதன தாந்தானா
மோந்த கரமுறு தூங்கன் முகமுள் முத்தோன்மே
லேய்ந்த பகைகொடு காய்ந்த குமரனை யேற்றேயோர்
கூந்த லுமையிடை யேன்கொள் வதுபகர் கோட்கூறா
மாந்தர் வளர்பதி யாந்தெ னருணையில் வாய்த்தோனே. 98

தாத்த தனதன தாத்த தனதன - தந்தானா
வாய்த்த வருணையை ரேற்றி லநுதினம் வந்தாள்வார்
சாத்த னனைபுணர் தோட்கொள் பாருமை தன்பாலார்
பார்த்தன் வழிபடு மூர்த்தி யவரருள் பண்பாலே
தூர்த்தர் குலமற மாய்க்க முயல்பவர் துஞ்சாரே. 99

தந்தத் தனத்ததன தந்தத் தனத்ததன தத்தானா

துஞ்சற் றவிர்த்தருளை மிஞ்சக் கொடுத்தமுது சொற்கேளா
வஞ்சர்ச் செகுக்கும்வலி துன்றித் திருத்தியுற வைக்காதோ
வஞ்சத் தினுக்கிணையில் பன்றிக் களப்பரிய ரத்தாவார்
நஞ்சக் களத்தரவர் தம்பொற் கழற்சரண நற்பூவே. *100*

நூற்பயன் – வெண்பா

பாடு மருணைப் பதிற்றுப்பத் தந்தாதி
யூடு கவியொன் றுணர்ந்தோர்க்கு - நாடுநலங்
கைகூடு முக்கட் கடவுளார் காட்சிதரு
மெய்கூடும் பொய்தவிரு மே.

முற்றிற்று

36

வில்லிப்பாக்கம் பதிற்றுப்பத்தந்தாதி

36

வில்லிப்பாக்கம் பதிற்றுப்பத்தந்தாதி

காப்பு

அறுசீர் விருத்தம்

பரவுநர்க் கருள்வான் வில்லிப் பாக்கமா நகரில் வாழு
மரன்மகிழ் பதிற்றுப் பத்தந் தாதியொன் றறைதற் கைந்து
கரமுடைப் பவள மேனிக் களிறுமொண் கதிர்வேற் செங்கைக்
குரவனு மதுரச் செஞ்சொற் கொடுக்குநற் றுணையா மன்றே.

நூல்

ஈற்றில் ஓரசை நின்ற எழுசீர் விருத்தம்

திருநி லாவுபைந் துளவணி மார்பனுந் திசைமுகப் பிரமாவு
மருவொ ணாதநின் னடிமுடி யுணர்ந்தவர் மாட்டுறப் புரிந்தாள்வாய்
வெருவு றாமனத் தினர்பலர் போற்றிசெய் வில்லியம் பதிக்கோயிற்
கருணை நாயக னேகதிர் மதிகனல் கவின்றரு கண்ணானே. 1

கண்ண னாதிய மெய்யடி யவரெனக் காசினி யிடைவாழ்கை
நண்ண வல்லபே றறிவெனக் களித்துள நாதனீ யலைகொல்லோ
பெண்ண ளாவிய மருங்குடைப் பிஞ்ஞகப் பெருமவில் லியம்பாக்கத்
தண்ண லேயொரு பாவல னேவுமொற் றாகியுந் திகழ்வானே. 2

திகழும் வார்சடைச் செங்கனற் பொருப்பெனச் சினவிடைப் பரிமீது
நிகழு நின்றிருக் கோலமுன் னாரென நீணிலத் துழல்வேனோ
வகழும் வாரியி லரவுமிழ் விடமயின் றமரரைப் புரந்தாய்மெய்ப்
புகழு ளார்மலி வில்லியம் பதியிலோர் பூவைபங் கமர்வானே. 3

அமரர் கோனெனத் தகும்பெரு வாழ்வினு மருவருப் புறுமென்பாற்
குமர னென்னுநின் மதலை யன்றோதிய குளிர்மொழி பிழையாமோ
தமர வாரண முரித்தணிந் தம்பலந் தனினடம் பயின்றப்பாற்
பமர மார்த்தபைம் பொழின்மலி வில்லியம் பாக்கம்வந் துறைவானே. 4

வான நாடரு மதித்திடத் தகுஞ்செயன் மண்டலத் தினிற்செய்தற்
கான வாஞ்சையுற் றடியனேன் படுந்துய ரறிகிலா யெனலாமோ
கான மார்த்தபொற் கடுக்கையுந் தும்பையுங் கரந்தையும் புனைந்தாடு
ஞான நாயக வில்லியம் பாக்கமா நகருடைப் பெருமானே. 5

பெருகு முத்தமிழ்ச் சுவைநய மறிகிலாப் பிணக்கரை மதித்தன்னோ
ரருகு சென்றவர்க் கினியவா றொழுகுமென் னசத்திய மழியாதோ
செருகு கொக்கிற கவிர்தலை யெயினனாச் சென்றொரு சிறுவன்பாற்
பொருகு ணத்தினுக் கிசையவில் லியம்பதி புரந்தருள்புரிவானே. 6

புரிகு லாமருப் புறுதலை யொருவன்முன் பொருந்திடப் புரிந்தாயிங்
கெரிகு லாமகக் கொலைமுத லொழிக்குமாண் பெனக்களித் தினிதாள்வாய்
கிரிகு லாஞ்சிலைத் திண்கையெய் தியபெருங் கிழவவில் லியம்பாக்கத்
தரிகு லாங்கருங் கண்மயி லொருபுற மவிர்தர வமைவானே. 7

அமையு மென்றலை விதிபொலா தாயினு மவைமுழு தழித்தாண்டு
சிமைய மாமுனி யாதிய ரெய்திய சீர்தர வல்லாயோ
கமையில் சாரணர் தமையொரு மதலையின் கவிகொடு தடிந்தாய்நம்
முமைமி னாளொடு வில்லிமா நகரிடத் துறைதரு மொருதேவே. 8

தேவ ராலுநன் கறிவரு நின்புகழ்ச் சிறப்பினை மறந்தந்தோ
பாவ லார்சில ரெனப்படிற் றுரைபல பயிற்றிடற் கிசைவேனோ
காவ லாரிய ரெலும்பணிந் தந்தணர் கவின்றலை வடம்பூண்டு
மூவ ரீர்தரு வில்லியம் பதியிடை முளைத்தெழும் முதியோனே. 9

முதிய ராய்ப்புகுந் தொருமகள் காணுற மூவகை யுருக்காட்டு
மதிச யத்தனிப் பரம்பொருள் வாழ்பதி யனந்தமுண் டானாலும்
பொதியை நாயகன் பூசைகொண் டொருசிறு பூசையு முயக்கண்டு
விதிநி டேதமி லென்னையும் விழைந்தது வில்லியம் பதியொன்றே. 10

வேறு

ஒன்றுபடு மனமில்லே னுணர்வில்லே னுனைநாடி
நின்றுயர்வார் தமையெள்ளு நினைவுள்ளே னுய்வேனோ
மன்றுதொறு நடிப்போனே வளம்பொலியும் வில்லிநகர்க்
கென்றுமிறை யாவானே யெனையெவ்வா றருள்வாயே. 11

அருள்சிறிது மருவாதா ரளிகூரு மதுகண்டு
மருள்படுமென் மனத்தின்பம் வருத்திடவும் வல்லாயோ
சுருள்குழலம் பிகைபாகா துணர்க்கொன்றைத் தொடையானே
யிருள்பொழில்சூழ் வில்லிநக ரிடத்திலினி தியல்வானே. 12

இயல்வாய்ந்த நால்வர்களுக் கீந்தருளும் பெரும்பேற்றி
னயல்வேண்டித் தளர்கில்லே னதுவுமுன தருளன்றோ
வயல்சூழ்ந்த வில்லிநகர் வாழ்வனையா யுமையுண்ணும்
கயல்போன்ற கண்ணுடையாள் கலந்திருக்கு மிடத்தானே. 13

இடங்கரயின் றுளபால னியற்றமிழ்ப்பா வழியங்கோர்
தடங்கரையில் வரச்செய்தாய் தமியேன்சொற் கிரங்காயோ
மடங்கலுரித் தணிந்தாடு மணிக்குன்றே மையனைய
விடங்கவினு மிடற்றெந்தாய் வில்லிநக ருடையானே. 14

உடையானை வில்லிநக ருற்றானை யொளிர்சூலப்
படையானை யாகமங்கள் பகர்ந்தானைப் பவளநெடுஞ்
சடையானைக் கருதாமற் றாரணியிற் றேவர்பல
ரடையாள நினைத்துநினைத் தலமருத லவமன்றே. 15

அன்றேயென் னுடல்பொருளு மாவியுநின் றனதாக
நின்றேனை யிவ்வாறு நீவருத்தன் முறையாமோ
மன்றேயு மாமணியே மயிலாடும் வில்லிநகர்க்
குன்றேயெண் குணக்கடலே குறைவிலருட் கோமானே. 16

மானோடு மழுவேந்தி மலைமகள்பங் குறவெள்ளை
யானோடு நீவரல்கண் டடியேனு மகிழ்வேனோ
தேனோடு நறுங்கொன்றைச் செழுந்தொடையற் சிவனேயொண்
மீனோடும் புனற்கழனி வில்லிநகர் வேதியனே. 17

வேதித்துப் பொன்னன்றோர் விலைமகட்கு மிகத்தந்தாய்
சோதித்துத் தமியேனைத் துயர்ப்படுத்தன் முறையேயோ
வாதித்தன் புகுஞ்சோலை யணிவில்லி நகர்க்கோயி
னீதித்தண் ணொளியேயுண் ணினைப்பவருக் கெளியானே. 18

யானேநின் னருள்வேட்ட திலையெனினு மெளியேன்சொற்
றேனேர்செந் தமிழ்விழையுந் திருவுளநின் றனதன்றோ

ஊனேயு மூவிலைவே லுடையானே யும்பர்கடங்
கோனேவில் லியம்பதியிற் குலவுமுதற் குரவோனே. 19

குரவினையுந் தழுவாத கோல்வளைக்கை யாளொடுனைப்
பரவுநகரி லொருவனெனப் படிறேனு மிளிர்வேனோ
வரவணியு மரையானே யாலமிடற் றாரமுதே
கரவறியார் வில்லிநகர்க் காவல்புரி காரணனே. 20

வேறு – கலித்தாழிசை

கார ணன்றனைக் காமர்வண் டோலிடுஞ்
சீர விர்ந்த செழுமலர்க் கொன்றைதோய்
வீர னைத்திகழ் வில்லியம் பாக்கமா
மூர கத்தனென் றுள்ளுமென் னுள்ளமே. 21

உள்ள முற்று மொருப்பட வுன்னலும்
வள்ள மென்முலை யாரிடை மாழ்கலும்
விள்ள ரும்புகழ் வில்லியம் பாக்கம்வாழ்
கள்ள னாடற் கணக்கெனக் காண்மினே. 22

காணம் வெளவிக் கழிவுறு மென்றமிழ்க்
கான மெய்தி யருள்கொடு பெற்றுள்ளான்
பாணர் வில்லியம் பாக்கத்து மேவிய
கோணல் வெண்பிறைச் சென்னியங் கோலனே. 23

கோல மாகிக் குருளைக ளுண்டுயுப்
பால ருத்தும் பரம்பரன் பற்றிடஞ்
சீல மில்லவர் சீர்கெடச் சென்றடும்
வேல னன்னவர் வில்லியம் பாக்கமே. 24

பாக்க ளஞ்சிய மன்னவர் பற்பலர்
மோக்க மெய்துற முன்றுதித் துள்ளகோன்
வீக்க ளார்க்கும் விரைமலர்ச் சோலைசூ
ழாக்க மார்வில்லி யம்பதி யீசனே. 25

ஈசனே வில்லி யம்பதி யெந்தையே
பாச நாசம் பரிந்தருள் பண்பனே

யாச கன்ற வடியவர் தம்மொடும்
பேச லான பெரும்புகழ் நல்கிடே. 26

நல்கி டாத நரர்தமை நாடுறும்
பல்கி லேசமும் பாறிடச் செய்குவாய்
மல்கு சீர்வில்லி மாநகர் வள்ளலென்
றொல்கி டாதிரந் துண்டவுல் லாசனே. 27

ஆசு பாட லளவறச் சொற்றவை
பேசு மாறு பிறங்கிடக் காண்பனோ
வீசு நீர்த்தட வில்லியம் பாக்கம்வாழ்
தேசு டைச்சிவ னேபர தெய்வமே. 28

தெய்வ நான்முகன் சென்னியிற் றேர்பலிக்
கைவ லானைக் கருணையங் கார்நிகர்
சைவர் கோனைத் தமிழ்வில்லிப் பாக்கம் வாழ்
மெய்வ ரோதயனைத் தொழன் மேன்மையே. 29

மேனை யார்மரு கன்றனை விண்ணுளார்
கோனை மாலய னைப்பணி கொண்டருள்
வானை வில்லி வளம்பதி யூடுகண்
டேனை வானவ ரின்றெனத் தேர்மினே. 30

வேறு – அறுசீர் விருத்தம்

தேரனைய கடிதடத்தார் மய னோயுந்
துயர்விளைக்குஞ் செம்பொற் பேயும்
வீரருக்கோ ரெமனனைய நிலவழக்கு
மெனைத்தொடரா விதஞ்செய் தாள்வாய்
காரணசற் குருவாகி வொருநால்வர்க்
கருள்புரிந்த கருணை வாழ்வே
பூரமிவர் வாள்வழுத்தும் புகழ்வில்லிப்
பாக்கநகர் புரக்கின் றோனே. 31

புரமெரியச் சிரித்ததினும் புனிதநான்
மறைவிளக்கும் போதன் சென்னி
கரமிசைக்கொண் டிரந்ததினும் கனகனிகற்
றடிந்ததினுங் கடையேன் வேண்டும்

வரமளிக்கை யரிதன்றே யாதலிற்சற்
றிரங்கியருள் வைத்தா ளையா
பரவுநருக் கெளியானே பழுதறுஞ்சீர்
குலவும்வில்லிப் பாக்கத் தானே. 32

தானான தத்துவனைத் தலைவர்கடந்
தலைவனைத்தன் சயிலம் போலு
மானான பரியானை யணிநீற்றுப்
பவளமலை யனையான் றன்னைத்
தேனார்தண் பொழில்சூழத் திகழும்வில்லிப்
பாக்கநகர் சிவனை நம்பார்
மானார்கண் வலைகடந்தோ ரானாலும்
பரகதியின் மன்னி டாரே. 33

மன்னுதகைக் குறுமுனிவன் பெறும்பேறு
கருதிமிக வழுத்து மென்னைப்
பொன்னுடையார் கடைவாயிற் புறந்தோறு
மலையவிட்டுப் புழுக்க வேண்டா
முன்னுனது திருவுளத்தி லிருந்தவருள்
குறைந்ததென மொழியப் போமோ
பன்னுதமிழ் வளமலியும் வில்லிநகர்க்
கோயிலில்வாழ் பழமை யானே. 34

பழகியநூற் பொருள்கவர்ந்து பலநாட்சென்
றொருபனுவல் பாடு வாருந்
தழனிகர்சொற் சொலவினவித் தவிக்குமெனக்
கருள்வாக்குஞ் சங்கங் கூட்டு
மழகியபொற் பலகையுந்தந் தருளாயோ
வினிச்சகியே னந்தோ வெள்ளை
மழவிடையிற் றிரிவானே வளம்பெருகும்
வில்லிநகர் வாழ்வன் னானே. 35

வாழைநறுங் கனியினைப்பா கினிற்குழைத்தாங்
கினித்தசெஞ்சொல் வனைந்து போற்று
மேழையன்ப னொருவனைப்பா ழிருட்டறையி
னிடைவிடுத்தா யென்செய் தாயோ

வூழைமதி யாவிருமாப் புன் னடியார்க்
கின்றேயோ வுதவல் பொய்யோ
கோழைமனத் தேன்கொதிப்ப தறியாயோ
வில்லிநகர்க் கோயி லானே. 36

கோயினலம் பெருக்கிமுன்னைக் குலநெறியா
தியநிறுவிக் கொன்றூ னுண்ணும்
வாயினருக் கெமனாவான் வருந்துமன
மெனக்களித்த வம்ப னாரோ
தாயினுமிக் கினியானே சடைத்தலையிற்
பிறைமுடித்த சங்க ராநீ
யாயினின்ன மருள்செய்யா திருப்பாயோ
வில்லிநகர் கண்ட வாழ்வே. 37

அகம்புறமென் றுழல்வாருஞ் சிறிதருட்பே
றடைந்துளவிவ் வகிலந் தன்னி
லிகபரமுஞ் சமமெனத்தேர்ந் துளதமியே
னிவண்வருந்த லியல்பாங் கொல்லோ
திகம்பரதத் துவமாயுஞ் சினவிடைமேல்
லொவ்வொருக்காற் றிகழ வல்லாய்
சகம்பரவும் வில்லிநகர்த் தலைமைகொண்டா
யாதிடத்துந் தழைக்கின் றோனே. 38

தழைக்கொடுங்கைச் சாரணரைக் கழுவேற்றும்
பெருங்கருணை தணந்திந் நாளிற்
பிழைக்கரசாங் கொலைமுயன்று வள்ளூரமு
நுகர்வாரைப் பெருக்க லேனோ
வுழைக்கருங்க ணுமைபாகா வொள்ளியமு
விலைவேலொன் றுறுங்கை யானே
கழைக்கைமத னுடல்பொடித்த கண்ணுதலே
வில்லிநகர்க் கடவு ளானே. 39

கடங்கலுழ்மால் களிறனையார் பலரிறுமாப்
பழிக்குமியற் கவிக ளுன்ற
னிடங்கடொறும் பெரிதிசைத்தற் கிச்சைகொள்ளுந்
தமியேனுக் கிரங்கொண் ணாதோ

மடங்கலுரி யணிவானே மலைமகள்கண்
களிகூரும் வடிவத் தெந்தாய்
தடங்கடற்பார் மகண்முகம்போற் றகைவிளக்கும்
வில்லிநகர் தனையாள் வானே. 40

வேறு – கலிவிருத்தம்

ஆளிக் கிணையா மடல்வீ ரர்களுந்
தாளிற் பணியுந் தவவாழ் வருள்வோன்
வேளிற் கிகல்வில் லிநகர்ப் பெருமான்
காளிக் கெதிரா டியகா லினனே. 41

காலங் கள்கடந் தொளிர்கா ரணனைச்
சீலந் திகழ்வில் லிநகர்ச் சிவனைச்
சாலன் பொடுசந் ததமும் பணிவோர்
வேலங்கை விசாகனை யொப்பவரே. 42

ஒப்பா ருமிலா தொளிருத் தமனை
மெய்ப்பார் புகழ்வில் லிநகர்க் கரசைத்
துப்பார் திருமே னிகொள்சுந் தரனைக்
கைப்பார் கள்கடுந் துயரெய் துநரே. 43

எய்யுஞ் சிலைமா ரனெரிந் துவிழச்
செய்யுஞ் சிவன்வில் லிநகர்த் திருவான்
மையுந் துமிடற் றிறைவண் டமிழால்
வையுங் கவிகட் கும்வரந் தருமே. 44

தருவாள் பவர்தம் முடலென் பணியும்
பெருவா னவன்வில் லிநகர்ப் பெருமை
யொருவா யுடையார்க ளுரைப் பனவோ
திருவா ணிமின்னோ டுசிறத் தலினே. 45

சிறப்பார் தருவில் லிநகர்ச் சிவனேழ்
பிறப்போ டுமிறப் புமிலா தபிரான்
மறப்போ டுநினைப் புமின்மா தவவாழ்
வுறப்பே ணிலுவக் குமெனுள் ளுணர்வே. 46

உணவின் றியுணங் குமெனுள் ளுடைவெக்
கணமிங் குகழிந் திடுமா றருள்வாய்
மணமொன் றுமலர்ப் பொழில்வா னுலகைப்
புணர்வில் லிபுரத் துறைபுண் ணியனே. 47

புண்பட் டதுபோ துமினிச் சகியேன்
றண்பட்ட மலர்க் கழறந் தருள்வாய்
விண்பட் டவியன் றிகழ்வில் லிபுரத்
தொண்பட் டவிடைப் பரியூர் பவனே. 48

ஊர்தோ றுமுழன் றுனையுன் னிலர்போ
லார்தோ மறவந் தெனையாள் கிலை
சீர்தோய் தருசெந் தகைவில் லிபுரத்
தோர்தோ கையனா ளுடனுற் றவனே. 49

உற்றா ருனையன் றியுளா ரெனவுட்
பற்றா சைபறித் தெறிகின் றிலையே
முற்றா முலைமொய் குழலுக் கொருபால
விற்றாய் திருவில் லிநகர்ச் சிவனே. 50

வேறு – கலிநிலைத்துறை

சிவனன்றி மறுதெய்வ மிலையென்று ளுணர்கின்ற சிந்தைப்பெருந்
தவமிஞ்சும் வல்லோரை யல்லாது மற்றோர் தமைத்தாழ்வரோ
புவனங்கண் முழுதுண்ட நெடுமாய னேயன்ன புகழாளரா
நவமொன்று மாறைந் தெழுத்தோதி மகிழ்வில்லி நகர்வாணரே. 51

வாணன்செ யும்பூசை வலிகண்டு களிகூரும் வள்ளற்பிரான்
றோணம்பு மென்னைக் கருங்காலன் முதலோர் தொடப்போகுமோ
நாணந் தருங்கோர மிடியொன்றி லாவில்லி நகரூடுகண்
டாணம் பொலிந்துள்ள துதிபாடி யுயர்பேறு மணுகுற்றதே. 52

குற்றம் பெருக்கிக் குணத்தைச் சுருக்குங் கொடுந்தன்மையேன்
முற்றன் புடைத்தொண்டர் புடைவாழு மாறென்று முன்னுங்கொலோ
மற்றங்கு திண்டோ ளரக்கன்ற னீரைந்து வாய்கூவிடச்
செற்றந்தண் வயல்வில்லி நகர்வாழ வரும்நபர் திருவுள்ளமே. 53

உள்ளங் கறுத்துச் செழுந்தே னெனப்பொய்மை யுரையாடுவார்
கள்ளந் தனைச்சிந்தை செயுமென்ற னதுபுன்மை கழியச்செய்வாய்
வெள்ளஞ் சுமக்குஞ் சடைத்தெய்வ மேவெள்ளை விடையேறுவாய்
நள்ளன்ப ருக்கின்பம் விளைவித்து ளாய்வில்லி நகராதியே. 54

ஆதிப்பி ரான்வில்லி நகரண்ண லேயென் றறிந்தைந்தெழுத்
தோதித்துதிக்கும் தவம்பற்றி மெய்த்தொண் டுஞற்றார்களைப்
பேதிக்கு மாயைப் பிணக்குந் தொடக்கும் பெரும்பாவமுஞ்
சாதிக்கு மூவே டணைப்பேய்க டாமுந் தறித்துண்பவே. 55

உண்டற் கனந்தம் பொருட்செய் துளாய் கண்டு முனேமிகக்
கொண்டட் டருந்துந் தொழிற்றீயர் தம்மைக்கொ லுஞ்சீரியோ
ரண்டர்க்கு மேலாகு வாரென் றறிந்தேனை யாளாய் கொலோ
வண்டர்ப் பசுஞ்சோலை சூழ்வில்லி யம்பாக்கம் வாழீசனே, 56

ஈசற் பெருக்கொத் தெழுந்தீயர் வலியற் றெறும்பன்னரா
னாசப் படக்கண்டு நானின் புறற்கான நாளில்லையோ
வாசக் கடம்பன் றனைத்தந்த வாவில்லி வளமாநகர்க்
காசற்ற செல்வந் தழைக்கச்செய் வாய்முற்று மருள்வள்ளலே. 57

வள்ளத் துணைக்கொங்கை யுமையோடு விடைமீது வந்தென்றனக்
கெள்ளப் படாவின்ப முறுமாறு செய்தற் கிரங்காய்கொலோ
வள்ளற் கடற்றீயும் வெருள்கால விடமுண்டு மழியாதவர்
புள்ளட்ட புகழ்மாய னனையார்கள் வளர்வில்லி புரநாதனே. 58

நாதத்தி னுக்கப் புறத்தே நடிக்கின்ற நலமாருநின்
பாதத் துணைக்கன்பு செய்யாத வென்னைப் பரிந்தாள்வையோ
சீதப் புனற்சென்னியானே கறுக்குந் திருக்கண்டனே
கோதற்ற சீர்வில்லி நகர்வாழ வருமென் குணக்கொண்டலே. 59

கொண்டற் குலத்தைக் கொடாதார்மு னெள்ளுங் கொடும்பாவலோர்
கண்டச்ச மெய்தத் தகும்சீ ரெனக்கென்று கற்பிப்பையோ
வண்டத்தா ரங்கம் புனைந்தாடு வாய்சச்சி தானந்தனே
தொண்டர்க்கொர் தூதாகி னாய்வில்லி நகரிற் சுயஞ்சோதியே. 60

வேறு – கலிவிருத்தம்

சோதி மூன்றையும் விழியெனக் கொடுமிகத் துலங்கு
மாதி நாயகன் வில்லியம் பாக்கமுற் றதனாற்
காதி யொன்னலர்க் கடிவது கருதினான் கண்முற்
றீதில் வேடமவ் வணங்கொடு திகழ்ந்தமை சிறப்பே. 61

சிறந்த வாழ்வெதென் றாய்ந்திடிற் றிருவருட் சீ ரோ
டறந்த ழைத்துள வில்லியம் பாக்கமு டம்பொ
னிறந்த ருஞ்சிவ னடியவர்க் கடிமையாய் நின்று
பறந்த மாமயிற் குகனென விகலடும் பண்பே. 62

பண்ண றாமறைக் கிளவியும் பாலறா வாயன்
வண்ண முத்தமிழ்ப் பனுவலுஞ் சமமென மதியார்
திண்ண னார்க்கருள் வில்லியம் பாக்கம்வாழ் சிவனை
நண்ண லாப்பிழை யினரெனத் துணிபவர் நமரே. 63

நமனை வென்றவர் வில்லியம் பதிவளர் நாதர்
குமர வேடனைக் குஞ்சர முகவனைக் கொடுத்தார்
பமர மார்த்தபொற் கடுக்கையிற் பதின்மடங் காசை
தமது தாள்விழை வார்துதி மிசையுளார் தாமே. 64

தாம நாபியங் கருமுகில் பரவிய சரண
மெம னாருயிர் கவர்ந்துவல் லரக்கனீ டழித்துக்
காமர் மன்றிடை நடித்துவில் லியம்பதி காத்தென்
றீமனத்தினுந் திகழ்தர லறிந்தவன் சிவனே. 65

சிவனை வில்லியம் பதியுடைச் செல்வனைச் செங்கட்
கவள மால்களி றுரித்தகைக் கடவுளைக் கங்கை
தவழும் வார்சடைச் சங்கரன் றனைநினை யாம
லவமெ லாமுயன் றிவ்வணம் பாழ்த்ததென் னறிவே. 66

அறிவு மாவியு மாகமும் பொருளுநின் னருளிற்
பிறிதன் றென்னுமெய் யுணர்ந்துளேன் பிழைபடத் தகுமோ
மறியுஞ் சூலமும் வைத்தகைச் சித்தனே வல்லோர்
செறியும் வில்லியம் பதிபுரந் தருளிய தேவே. 67

தேவரி யாவருந் தெரிவருந் திருவருட் சிவனைப்
பாவ லார்புகழ் வில்லியம் பதியுடைப் பரனை
மூவ ரூடுறு மொருவனென் றேமிக மொழிவீர்
காவ லான்மகன் சிலையடி கருதுமின் கடிதே. 68

கடின கோமள புளகித வனமுலைக் கவுரி
தொடிநி லாவுகை பிடித்தவன் சுந்தரத் தோழன்
படியெ லாம்புகழ் வில்லியம் பதியுடைப் பரம
னடிக ளேகதி யெனத்தெளிந் தடங்கிட லரிதே. 69

அரிய நான்மறைக் கிழவனு முகுந்தனு மறியாப்
பெரிய நாயகன் வில்லியம் பதிச்சிவ பெருமான்
கிரியை வில்லெனக் கொண்டுசென் றிமையவர் கெருவ
நரிய நக்கசீர் விளம்புந ரிணையி னாவலரே. 70

வேறு – கலிவிருத்தம்

நாவி னாற்றுதி நவில்கி லேன்மனக்
கோவி லூடுனைக் குறிக்கி லேன்மிகச்
சேவி யேனெனைத் தியங்க விட்டிடே
றாவில் வில்லிமா நகரிற் றாணுவே. 71

தாணு வேயருட் டலைமைச் சங்கரா
வாணும் பெண்ணுமா யலியு மாகினாய்
வேணு வார்பொழில் வில்லி மாநகர்
காணு மாறுளக் களிப்பன் றீந்திடே. 72

ஈந்தி டாச்சில ரிடத்துமி யாகர
மேந்தி வாடுறு மிழிவென் றீர்வையோ
வேந்தி னாடொறும் வில்லி மாநகர்க்
காந்தி றன்செயு மமல மூர்த்தியே. 73

மூர்த்தி யாவினு முதன்மை யாயவன்
பூர்த்தி யாமென நிறைந்த பூரணன்
கார்த்தி கேயனைப் பயந்த கண்ணுதல்
கீர்த்தி வில்லிமா நகர்க்கி றீசனே. 74

கிரிக டோறுநின் றாடுங் கேகயப்
பரிவ லானெனப் பகைவென் றின்புறு
மரிய பேறெனக் களிக்க வல்லையோ
விரிதண் பூம்பொழில் வில்லி யூரனே. 75

ஊர னேகமுற் றுழலு மென்னைநின்
பேரனென் பதும் பிழைகொல் பேசுவாய்
வீரர் போற்றிய வில்லி மாநகர்க்
காரணா பெருங் கருணைச் சோதியே. 76

சோதி யாய்ச்சுட ராகி னாயென்
வாதி நாளையி லறைந்து ளான்பெறுந்
தீதில் பேறுறச் செயவும் வல்லையோ
கோதில் வில்லியம் பதியிற் கூத்தனே. 77

கூத்தன் வில்லியம் பதியிற் கொற்றவன்
மாத்தண் கற்பக வனத்தும் வாஞ்சையற்
றேத்த வல்லவர்க் கினிய னென்றமிழ்
சாத்த நண்ணலென் றவளத் தையலே. 78

தைய லார்மயற் சளத்தி னூடுழல்
பொய்ய னாயினும், பொருவில் புண்ணிய
மெய்யர் போற்றிய வில்லிப் பாக்கம்வா
ழைய னைந்தெழுத் தறைவ துள்ளதே. 79

உள்ள நாடுமா றுருக்கொ டாண்டருள்
வள்ள லாரென மதித்துத் தேர்ந்திடில்
விள்ள ரும்புகழ் வில்லிப் பாக்கம்வாழ்
வெள்ள நீர்ச்சடை விருத்த வேடனே. 80

வேறு

வேட னாமென வுருக்கொடு மேனாள்
விண்ணு ளாரொடு விசயன்முன் னேகி
யாட வல்லநின் றிருவரு ளறியே
னடிய னேனையிங் கலமரச் செய்யே

லேட லர்ந்தபொற் கடுக்கையந் தொடையோ
டெலும்பு மாலையு மிசைந் தணிவானே
பாட வல்லவர்க் கெளியபி ரானே
பழுதில் வில்லியம் பாக்கமு ளானே. 81

ஆனை மாமுகத் தைங்கரத் தினனோ
வயிற்கை வேள்கொ லென் றலைகடற்பெரிய
தானை மாநிலத் தினரெலாம் புகழத்
தக்க தோர்பெருந் தவன்வரப் புரிவாய்
வானை யாதிய பூதமோ ரைந்து
வதன மாமென வயங்குமெம் பரனே
மேனை யார்தரு மகண்மண வாளா
வில்லி மாநகர் மேவிய சிவனே. 82

சிவந்த வார்சடைச் செங்கனற் பொருப்போர்
சிகிய னாளொடு சினவிடைப் பரிமே
லுவந்த வாறருட் காட்சிதந் தருளி
யுலக யாவையு முயர்வுறக் காண்பாய்
பவந்த ராத்திரு வருளுடை யானே
பரவை வாயிலிற் பலவிசை நடந்தாய்
நிவந்த பூம்பொழில் வில்லியம் பதியி
னெடிது மேவிய நிமலசிற் பரனே. 83

சிற்று யிர்க்குறு துணையுனை யல்லாற்
சிறிது மின்றெனுந் தெளிவுறப் பெற்றும்
வெற்று மானிடர் தமைப்பொருட் படுத்தும்
வினையு ளாரென மெலியவிட் டனையே
சுற்று செஞ்சடைக் கற்றையின் மதியுந்
துளைத்த வாலெயிற் றரவமுஞ் சுமந்தாய்
கற்று ளார்மலி வில்லியம் பாக்கங்
கயிலை நேர்பெறக் கருணைவைத் தோனே. 84

வைத்த மூவிலைச் சூலமு மழுவும்
வயங்கு திண்புயம் வள்ளுர மாதி
துய்த்த பாதகர் மிசைகனன் றிடுநா
டுலங்கு மாறிவண் டுடிப்பதோர்ந் திலையோ

நெய்த்த பூந்துணர்க் கடுக்கையந் தொடையாய்
நினைக்கு மாதவர் நெஞ்சுதோ றமர்வாய்
பத்தர் சேகரர் பரவுசீர் வில்லிப்
பாக்க மேவிய பரிசுடை யானே. 85

பரியெ னாநரி யினைச்செய்தாய் கருங்கற்
பரவை நீந்திடப் பண்ணினை யென்பைத்
தெரிவை யாக்கினை யிடங்கர்வாய் மகவைத்
திருப்ப னாயெனைத் தெளிக்கைநிற் கரிதோ
கரியுஞ் சீயமும் புலியுமுன் கொன்றாய்
கவின்கொள் சக்கரங் கரியமாற் களித்தாய்
விரியும் வெள்ளநீர் சடையினிற் கரந்தாய்
வில்லி மாநகர் விகிர்தவேட் டுவனே. 86

வேட்ட மாமனைத் தலையறுத் தழலில்
வேவ வீசிய வீரமிக் கிலங்கப்
பாட்ட தாற்பர விடுந்தமி யேனைப்
பலரு மேசிடப் பார்ப்பது முறையோ
கூட்ட மாந்திறற் பூதருக் கரசே
குமர வேள்பெறக் கொற்றவேல் கொடுத்தாய்
வீட்ட வாவினர்க் கொருபொதுப் பொருளே
வில்லி மாநகர் விடைக்கொடி யானே. 87

கொடியை நேரிடை யார்மயற் பேயால்
கோழை நெஞ்சகங் கொடுகுலை வேனை
யடிய ராமவர் தம்மொடு கூட்டி
யளவில் பேரரு ளளிக்கவல் லாயோ
பொடிநி லாவிய பவளவெற் பனையாய்
புரையில் வார்செவி புனைந்தசங் குடையாய்
படிறி லாதவர் பரவிய வில்லிப்
பாக்க மேவிய பழையவே தியனே. 88

பழைய தொண்டரி லொருவனென் றென்னைப்
பகர்ந்துன் சேய்தரும் பல்வித வரமும்
பிழைப டாநலஞ் செய்திடிற் போதும்
பிறிது வேண்டிலன் பெற்றிமுற் றறிவாய்

கழைகொள் வானுடற் பொடித்தகண் ணுதலே
 கால னாருயிர் கவர்ந்ததா ளுடையாய்
விழைவெ லாம்தர வல்லபெம் மானே
 வில்லி மாநகர் விட்டக லானே. 89

விட்ட வேடணைப் பேயொரு மூன்றும்
 வெருட்ட வாடுமென் வெள்ளைநெஞ் சந்தேர்
விட்ட காமிய முழுதயின் றப்பா
 விணையில் வீட்டுற வெண்ணிடன் முறையோ
வட்ட மூர்த்தியு மாய்நிறை வானே
 மகில லோகமுற் றமைத்தளித் தமிழ்ப்பாய்
துட்ட வேடனுங் கதிபெறக் கொடுத்தாய்
 துகளில் வில்லியூர் துதிக்கநின் றோனே. 90

வேறு – எண்சீர் விருத்தம்

துதிமுழங்கும் வில்லிநகர்ப் பரம னார்க்குச்
 சுடர்மூன்றும் விழி கவுரி தோயும் பாரி
யதிமதக்குஞ் சரமுகனுங் குகனும் பால
 ரகிலமுண்டோன் பரியிவற்றை யறியா மூட
மதியுடையார் வேறுநெறி யுளதென் றெண்ணி
 வாதிடுவா ரந்தவித வம்பை நம்போங்
கதிகொடுக்குந் தெய்வமவ ரன்றி யில்லை
 காரவுணர் தமக்குமருள் கருணை யாரே. 91

கருணைமலி வில்லிநகர்ச் சிவனைப் போற்றிக்
 கண்டுகொண்டா ரெவரேனுங் கருதுமாறு
பெருவரங்க ளத்தனையும் பெறுவ துண்மை
 பெற்றவர்பற் பலருளாப் பெருமை யெல்லா
மருமறைச்சீர் திருத்தியமா முனிவன் செய்யு
 மறுமூன்று காவியங்க ளறையும் வம்பிற்
றெருமரல்விட் டைந்தெழுத்தை யிடைவி டாமற்
 சிறிதேனு மையமின்றிச் செபிக்கை நன்றே. 92

நன்றியுணர்த் திடுங்கரிய கண்டங் கண்டு
 ஞானமிலாத் தக்கன்மனை நண்ணிப் பச்சூன்
றின்றிருந்த தேவர்பிழை பொறுத்து மன்னோர்
 தீவினையோ ரவுணனெனத் திரண்டு முன்னே

நின்றிகலும் துயரைந்தன் மகவாற் றீர்த்த
நெடும்கருணைப் பெருஞ்சோதி நிமல மூர்த்தி
குன்றினைவில் லெனக்கொண்டு வில்லிப் பாக்கக்
கோயிலிடத் தெந்நாளுங் குளிர்பெம் மானே. 93

மானேந்தி மழுவிலங்க விடைமேற் கொண்டு
வளங்குலவும் வில்லிநகர் வாழ்வே யன்னான்
றேனேர்சொற் சிவையொடுநேர் வருநா ளென்றன்
சிற்றுயிர்வீட் டின்பமுறுந் திறமட் டுன்னே
னானேதந் தவிர்ந் துவப்ப வந்த ணாள
ரலக்கணறத் தொண்டரினத் தாடனீட
லூனேது மனிதர்குழா மருந்தி டாமை
யொளிர்தரச்செய் திடத்தகும்பே றுதவென் பேனே. 94

என்பொருபெண் ணுருவாகப் படித்த வாயாற்
கினிதருளுந் திருவருளு மிமையோர் போற்று
மன்பொருநா ளவன்றனது சிரத்திற் சூடு
மணிமுடிவீழ் தரத்துரந்தோன் வலிமைப் பேறு
மன்பொருங்கோர் வடிவாய வாத வூர்க்கோ
னடைந்தபர கதியுமெனக் களிப்பான் கொல்லோ
பொன்பொருளென் றிருமாப்போர்க் கிரங்கான் வில்லி
புரத்துறைவா னைந்தொழிலும் புரியுந் தேவே. 95

தேவர்பிரான் வில்லிநகர்க் கோயில் வாழும்
சிவபெருமா னருள்புரியச் சிறிதெண்ணானே
லாவடியேன் பலபிறப்பிற் சுழல்கைக் கஞ்சே
னந்தகன்கைப் படைக்கஞ்சே னனங்கற் கஞ்சேன்
பூவலயத் தூனருந்தும் பொல்லா ராண்மை
பொறுக்கரியே னீறணிவார் புலர்ச்சி தாங்கே
னீவதிலார் பெருவாழ்வுஞ் சகிக்க மாட்டேன்
னென்செய்வே னொருதுணைமற் றிங்கில் லேனே. 96

இங்கனந்தந் தொண்டர்வந்து கதியிற் சேர்ந்தா
ரிந்நாளு மிருக்கின்றா ரெவரு மன்னோர்
தங்களுக்கே பாடுபட்டார் படுகின் றார்நான்
சகத்துறும்பல் லுயிர்த்துயருஞ் சகிக்கில் லேனென்

பங்கனையா னொருவனுஞ்சிற் றறையுட் போன
பரிசறியே னென்றவமெப் படியாங் கொல்லோ
திங்களணி சடைவில்லிப் பாக்கத் தம்மா
றிருவுளத்தின் குறிப்பிதெனத் தெரிகி லேனே. 97

தெரிவையுரு வென்பில்வர வழைத்தோ னாதிச்
சீரியரி லெவரேனுஞ் செஞ்சொற் பாவால்
விரிகடற்பா ருலகிலுயிர் கொன்றூ னுண்ணும்
வினையொழியப் படித்திலாரால் வெதும்பு கின்றே
னரியசுவைத் தமிழ்ப்பெருவாக் கமைந்த வண்ண
மருட்செயல்வந் துறுவதற்கே யாசை கொண்டேன்
கரியுரித்துப் போர்த்தவில்லிப் பாக்கத் தம்மான்
கருதுநருக் கெளியனெனக் கழற லுண்டே. 98

கழகமணிப் பலகைதந்து கனலும் நீருங்
கவர்ந்ததமிழ்ப் பனுவல்வரக் கருணை செய்து
மழலையின்சொற் புதல்வர்களோ டொருவ னாகி
மண்ணுலகும் வானுலகும் மதிக்க வாழ்வித்
துழல்சமயப் பகுதிமுற்றும் பரவுஞ்சீரு
மொன்றிரண்டு மல்லாத வொருமெய் வீடும்
பழவினைதீர்த் தருள்வானைப் பகரில் வில்லிப்
பாக்கநகர்க் கோயிலில்வாழ் பரமன் றானே. 99

பரமதப்பா ழிருளிடைப்பட் டுழன்றா யந்தோ
பாற்கடலிற் பிறந்தாய்க்கிப் பான்மை யாமோ
வரமுகுந்த னுனைமீட்க வலியில் லானோ
வளங்குலவும் வில்லிநகர் வாழ்பெம் மானைக்
கரமுகிழ்த்துப் போற்றுதிநான் முகவன் மேனாட்
கழறுநெறி யிடைசேரக் கருணை செய்வான்
றிரமொழியென் றிதனைநம்பக் கொள்வாய் செம்பொற்
செழுமலரிற் குடியிருக்கும் திருமின் னாளே. 100

நூற்பயன்

மோக்கமொடு காமியரு முன்னுமவர்க் கீந்துவில்லிப்
பாக்கநகர் வாழ்வான் பதிற்றுப்பத் தந்தாதி
யாக்கமும்மெய்க் கீர்த்தியுமுண் டாக்கியரு ளானந்தந்
தேக்கமுதம் போலுந் திருவாக்கும் நல்கிடுமே.

முற்றிற்று

37

சிவனேகபாதத்தந்தாதி

37

சிவனேகபாதத்தந்தாதி

காப்பு

சிவனேக பாதத்தந் தாதிக்குக் காப்பொரு சிந்துரமே
சிவனேக பாதத்தந் தாதிக்குக் காப்பொரு சிந்துரமே
சிவனேக பாதத்தந் தாதிக்குக் காப்பொரு சிந்துரமே
சிவனேக பாதத்தந் தாதிக்குக் காப்பொரு சிந்துரமே.

இதன் பொருள்

சிவன் - நன்மையுடையவரும்
ஏ - பாணத்தைப் போன்ற
கப - சேற்றுமத்தின்
அத - நாச்சம பந்தமான
தந்து - யூகத்தோடு கூடிய
ஆ - வியப்பான
தி - புத்திக்கு
கு - விளைநிலமானவரும்
காப்பு - விபூதியை
ஒரு - நீக்கிய
சிந்து - சமுத்திரம் போன்ற கூட்டத்தாருடைய
உரம் - தயிரியத்தை
ஏசு - இகழ்கின்ற

இவ - இப்படிப்பட்ட
அனேக - பலவாகிய
பா - பாடல்களை
தத்தம் - கொடுக்கத்தக்க
தா - வலிமைக்கு
திக்கு - ஆதாரமானவரும்

கா - கற்பகத்தருவை
பொரு - போன்ற
சிந்து - சிதறுதலையுடைய
உரம் - மனத்தின் வடிவமானவரும்
மே - தக்கனுடைய

சி - நெருப்பின்
வன - வலியானது
ஏக - நீங்கும்படி
பா - பரவிய
தத்து - ஆபத்து
அந்தாது - பொருந்தாமல்
இக்குக்கா - கருப்பு வில்லையுடைய உமையவளுக்காக
பொரு - யுத்தஞ் செய்த
சிந்தூரம் - சிவந்த நிறம்
மே - பொருந்திய வரும் (ஆகிய)

சிவன் - சிவபெருமானைக் குறித்துப் பாடும் ஏகபாதத் தந்தாதிக்கு. ஓரடியே நான்கடியுமாகத்தக்க பாடல்களோடு கூடிய வந்தாதிப் பிரபந்தத்திற்கு
காப்பு - காவலாயிருப்பது
ஒரு - ஒப்பற்ற
சிந்தூரமே - யானைவடிவமுடைய கணபதியே யென்றவாறு.

கருத்து:

நன்மையுடையவரும் பாணம்போன்ற கபத்தைக் கெடுக்கத்தக்க விவேகத்தை யுண்டு பண்ணத் தக்கவரும் விபூதி தரியாதவர்களை யிகழ்கின்ற பலபாடல்களைப் பாடுவதற் காதாரமானவருங் கற்பகத் தருவைப் போன்ற கொடைத் தன்மையுற்ற மனத்தின் வடிவமானவருந் தக்கனுடைய வேள்வி கெடும்படி யாபத்தில்லாத யுத்தத்தை யுமையவளுக்காகச் செய்தவருஞ் சிவந்த நிறத்தை யுடையவரு மாகிய சிவபெருமானுக்குப் பாடு மேகபாதத் தந்தாதிக்குக் காப்பு சமானமில்லாத விநாயகக் கடவுளே என்பதாம்.

ஞாயம்:

கொல்லுந் தன்மையாலு மற்றைய வாதபித்தங்களைக் கெடுக்கும் பொருட்டு வரும் விரைவினாலுங்

கபத்திற்கிணையாகப் பாணத்தைச் சொல்லியவாறும். நன்மார்க்கங்களைப் பற்றிய பாடல்கள் பதிலுபகாரம் விரும்பாது கருணையாற் பாடுவதாகையாற்றத்த மென்றவாறும். ஒவ்வொரு போதுமனேகர் விருப்பங்களைக் கொடுக்குந்தன்மையாற் சிதறுதலென்றவாறும், அப்படிப்பட்ட குணமியாவரிடத்திருந்தாலும் வாசிவாமிச மாகையாலந்த மனத்தின் வடிவமானவரென்றவாறும் மேயென்பது தக்கனது தலையடையாளமாகிய வாட்டின்றொனி யாதலாலு மல்லாமலும வன்செய்த சிவதோத்திர மாகிய சமகத்தினாதியந் தங்களி லவ்வெழுத்திருக்கின்றதாலுமதனை யேயவனுக்குப் பெயராகக் கூறியவாறும் சிகாமக்கினி பீசமாகையால தையதற்குரிய வக்கினிக்குப் பெயராகக் கொண்டமைந்த தானத்தால் வேள்வியைக் குறிப்பித்தவாறு மறிக.

இலக்கணம்:

நீக்கியவென்றுந் தயிரியமென்றும் வந்தவிரண்டுணர்ச்சித் தன் மைச்சொல்லான் மத்தியினின்ற சமுத்திரமென்ற சொல்லை யதுபோன்ற கூட்டமெனக் கொண்ட துவமைத்தொகை யாகுபெயர். உரமென்ற சொல்லிற்குத் தயிரியத்தையென்றுங் கா வென்ற சொல்லிற்குக் கற்பகத் தருவையென்றும் தக்கன் வேள்வி யென்றதற்குத் தக்கனுடைய வேள்வியென்றுங் கொண்டமை போல்வன வுருபுத்தொகை. இக்குவில்லையுடைய வுமையவளை யிக்கெனக் கூறியது பின்மொழித்தொகை. யிதனை யாகுபெயரன் மொழியென போராடுநருமுளர். இங்ஙனம் விரிப்பிற் பெருகுமன்றியு மான்றோராட்சியி வீடுபட்ட பெரும்புலவர்களுக் கலுப்புலட்சயமுங்காட்டு மாதலினிப் பகுதியை முக்கியமாகப் பாராட்ட நாணுகின்றாம்.

நூல்

1. திருவரு ளாடலைத் தாராயகள் சிதம்பரனே
திருவரு ளாடலைத் தாராயகள் சிதம்பரனே
திருவரு ளாடலைத் தாராயகள் சிதம்பரனே
திருவரு ளாடலைத் தாராயகள் சிதம்பரனே.

இதன் பொருள்:

திருவா - செல்வவான்களின்

கள் - கூட்டத்தில்
ஆள - அரசு செய்யத்தக்க
தலை - முதன்மையான
தார் - வெற்றி
ஆய - பொருந்திய
கள - இனிமையைத் தருகின்ற
அசி - ஆயுதத்தை
தம்பா - ஆதாரமாகக் கொண்டவர்களை
அன் - உடையவனும்
ஏ - திரிபுரசங்காரஞ் செய்த பாண மானவனுமாகிய விட்டுணுவும்

திரு - இலக்குமியும்
உவர் - கைப்பாக
உள - நினைக்கத்தக்க
ஆடு - நாரதர் - வேள்வியிற் பிறந்தவாட்டுக் கடாவினை
அலைத்தார் - தம் மிச்சைப்படி நடத்திய முருகக்கடவுள் வீரவாகுவென்னும் மிருவருக்கும்
ஆய - தாயாகிய பார்வதியின்
கள் - கழுத்திற்குரியவனே
சிதம் - வெண்மையின்
பரன் - மிகுதியையுடையவனே
ஏது - எல்லாவற்றிற்குங் காரணமான

இரு - விசாலமான பூமியை
அருள் - உண்டுபண்ணிய
ஆள - அடிமையாகிய பிரம்மாவின்
தலைத்தாராய் - சிரமாலையையுடையவனே (என்று)
அகள - பாவப்பெண்ணாகிய மாய சக்தியின்
அசிதம் - அஞ்ஞான சம்பந்திகளாகிய யாங்கள்
பா - துதிக்கத்தக்க
நே - பிரியத்தோடு கூடிய

திருவருளாடலை - தெய்வீகமான வருட் சத்திவிளையாட்டை
தாராய் - தரவேண்டும்
அகள - கள்ளமற்ற
சிதம்பரனே - ஞானவெளி வடிவமானவனே. *எ-று.*

கருத்து:

செல்வான்களிலரசாட்சிச் செய்கின்ற சந்தோடத்தைப் பெறும்படியான வீரர்களையுடையவருந் திரிபுர சங்காரப் பாணமானவருமாகிய விட்டுணுவு மிலக்குமி தேவியும் வெறுப்பாக நினைக்கத்தக்க வாட்டுக்கடாவை யடக்கிய முருகக் கடவுளுக்கும் வீரவாகு மூர்த்திக்கு மாதாவாகிய பார்வதியின் கழுத்திற்குரியவரே வெண்மையிற் சிறந்தோரே முதற் காரணமான பூமியைச் சிட்டித்த பிரம கபால மாலையைத் தரித்துக் கொண்டவரே யென்று மாயா சம்பந்திகளாகிய யாங்களும்மைத் தோத்திரஞ் செய்யும் விருப்பத்தோடு கூடிய திருவருள் விளையாட்டைத்தர வேண்டுங் கள்ளமற்ற ஞானாகாச வடிவாகிய சிவபெருமானே யென்பதாம்.

ஞாயம்:

அரசாட்சித்தன்மை விட்டுணு கலையாகையா லரசர்களை யுடையவரென்றுந் திரிபுரசங்காரப் பாணத்திற்கு மேற்பட்ட பாணமின்மையால். ஏ யென்று பொதுப்படச் சுட்டியுமவரைக் கூறியவாறும். அவ்வாடு வைகுந்தத்தின் வீதிவரை போய்க்கலகஞ் செய்தமையால் விட்டுணுவு மிலக்குமி தேவியுங் கைப்பாக நினைக்கத் தக்கதெனக் குறிப்பித்தவாறும். வீரவாகு வுற்பத்திக்குங் காரணமுமையவளே யாகையாலவருக்கு மாதாவென வவளைச்சொல்லியவாறும். மங்கலத்துக்குரியதானங்கள் மேயாகையாலதற் குரியரெனச் சொன்னவாறும் பூமியே பெருத்த விசாலமாதலாலுமிரு நிலமென்னும் வாய்பாடுமிகுதி யாதலாலுமிரு வெனவதனைச் சுட்டியவாறு மறிக.

இலக்கணம்:

அரரென்னு முயர்திணைப் பன்மைவிகுதியின் மீதனனென்னு மவ்வொருமைவிகுதி புணர்ந்துடைமை காட்டியதும். இருமையென்னும் பதத்தின்மை விகுதி கெட்டதும். அசிதேமென்ற பதம் சிதமென வந்தவாறும். பாவு என்ற பதம் பாவென்று நின்ற வியப்பும். நேயமென்ற சொல்லி லம்மென்னுஞ் சாரியை கெட்டு நேயென் நின்ற விகாரமு மிலக்கியங்களின் மிகப்பழகினோர்க்கியல் பின்பால வேயா மென்பது சித்தம். வாசகப் பொருண் முடிவின் பொருட்டென் றென்றொரு சொல்வருவிக்கப்பட்டது.

2. பாதத்தி லாடிய பாண்ட ரங்காவெனைப் பார்த்தருளே
பாதத்தி லாடிய பாண்ட ரங்காவெனைப் பார்த்தருளே
பாதத்தி லாடிய பாண்ட ரங்காவெனைப் பார்த்தருளே
பாதத்தி லாடிய பாண்ட ரங்காவெனைப் பார்த்தருளே.

இதன் பொருள்:

பா - மிகுதியான
தத்தில - ஆபத்தின்போது
ஆள - ஆளத்தக்கவர்களை யாள்கின்ற
தி - புத்தியையும்
அ - அந்த
பாண்ட - ததிபாண்டனுடைய மட்கலத்தையும்
ரங்க - திருவரங்கத்தையுமுடைய
ஆ- விட்டுணு வாகிய விடபத்தின்
வென - முதுகையும்
ஐ - தலைமையான
பார் - பூமியிலுள்ள
தரு - தலவிருட்சங்களின்
உள - உள்ளிடமாகிய நிழலையும்
ஏ - நிந்தை

பரு - விருத்தியடைகின்ற
அத - கீழ்மையான
தில - விருப்பத்தில்
ஆடி - மூழ்கியவராய்
அபாண்டா - காலகேயநிவாதகவச நிரனனு மசுரர்களான பொய்யர்கள்
அங்கு - ஆகாயவீதியில்
ஆவென - ஆச்சரிய மாயாவெனப் பேசிக்கொள்ளத் தக்க
ஐ - அழகிய
பார்த்தா - சிருட்டிதோறு முண்டாகின்ற வருச்சுனர் களெல்லோரும்
உள - நினைக்கும்படியான
ஏ - பாசுபதமென்னும் பாணத்தையும்

ப - விசாலமான
ரத்தது - தேர்போன்ற கடிதடத்தையுடைய

இல - மனைவியாகிய வுமையவளையும்
ஆடு - பேசுகின்ற
இய - வார்த்தையோடு கூடிய
பாண் - இசைப்பாட்டின்
தாம - உயர்ச்சியையும்
கா - கற்பகத்தருவையுடைய தேவர்களை
வெல - கற்ப காலத்திலுந் தக்கன் வேள்வியலுஞ் செயிக்கின்ற
நைப்பு - சங்காரகிருத்தியத்தையும்
ஆர்த்த - பிரசித்தமாய்த் தொனிக்கின்ற
அருள - கருணையையும்
ஏ - பொருந்தி

பாதத்தில் - பாதசாத்திரப் பிரகாரம்
ஆடிய - நடிக்கின்ற
பாண்டரங்கா - பாண்டரங்கமென்னுங் கூத்தையுடைய சிவபெருமானே
எனை - அடியேனை
பார்த்து - தேவரீர் கிருபாநேத்திரத்தாற் பார்வையிட்டு
அருள - இரட்சிக்க வேண்டும்
ஏ - ஈற்றசை. எ-று.

கருத்து:

பெருத்த வாபத்து வேளையிலாண்டு கொள்ளுமனமும். விட்டுணுவாகிய விடபவாகனமுமனேக விருட்சங்களினிழலு மசுரர்களும் வியக்கத்தக்க பலவருச்சுனர் விரும்பும் பாசுபதக் கணையும். பார்வதியாகிய மனைவியு மிசைப்பாட்டி னுயர்ச்சியுந் தேவர்களை வெல்லுஞ் செயமும் பிரசித்தமான கிருபையும் பொருந்தி நடனஞ் செய்கின்ற சிவபெருமானே யென்னைக் கண்ணாற் பார்த்திரட்சிக்க வேண்டுமென்பாதம்.

ஞாயம்:

ததிபாண்ட னென்பவனோரிடைய னவனுக்கு விட்டுணுமோட்சங் கொடுக்கும் போதவனுடைய பானைக்கு மோட்சங் கொடுத்தாரென்பது. மிடபத்தை வாகனமாகக் கொண்டமை தோற்றும் பொருட்டதன் முதுகைக் குறிப்பிக்கப் பட்டதென்பதுந் தலந்தோறும் விருட்ச பூசனை யுண்டாதலாலுள்ளன வவற்றினிழலைச் சொல்லப்பட்ட தென்பதும் பாரதம் பலதடவை நடந்தமையா லருச்சுன

ரென்னும் பன்மை பொருந்திய தென்பது. முருத்திர வீணையென்னும் பிரதாபத்தாலிசைப் பாட்டினுயர்ச்சி யமைத்த தென்பதும் பதினெண் புராணங்களுந் தேவர்களசுரர் மனிதராதியரி யாவருக்கும் வரப்பிரதான ரிடபாரூடரேயென்று சொல்கின்ற வுண்மையைத் துணைக்கொண்டு பிரசித்தமான கிருபையென வற்புறுத்தப்பட்ட தென்பது மறிக.

இலக்கணம்:

ஏ ஏயென்ற லிகழ்ச்சிக் குறிப்பென்பது பிரசித்த மாகையாலே யென் றிகழ்ச்சிக்குஞ் சேய்மை யாகாயத்தினும் வேறின்மையாலங் கென்றதற்கும். பப்பு - பாவென்னும் பதங்களின் விகாரத்தாற் ப வென விலாசத்திற்கும் பிரயோகித்தமை சொற்சுவை யுணருந்தகவுடைப் புலவோர் கொள்ளற் பாலவேயாம்.

3. அருள்வாரிதி யுடையா னெண்ணிலம் பலத்தாடரனே
அருள்வாரிதி யுடையா னெண்ணிலம் பலத்தாடரனே
அருள்வாரிதி யுடையா னெண்ணிலம் பலத்தாடரனே
அருள்வாரிதி யுடையா னெண்ணிலம் பலத்தாடரனே.

இதன் பொருள்:

அரு - தனதருமையை
உளவார் - நினைக்கின்றவர்களுக்கு
இதி - இதஞ்செய்கின்றவரும்
உடையான் - தளராதவரும்
எண் - உணர்ச்சி
நில - நிலைபெறத்தக்க
அம் - அழகிய
பல - பலப் பிரயோசனத்தைக் குறித்த
தாள - முயற்சியை
தரு - கொடுக்கின்ற
அனே - தாயையே போன்றவரும்

அருள்வார் - கொடைத்தன்மையோருக்கு
இதி - உறுதியாயிருக்கின்றவரும்
உடு - நட்சேத்திரங்களுக்கு
ஐயான - அரசாகிய சந்திரனை யுடைய வரும்

எண் - எட்டென்னுந் தொகையாகிய
இல - மனைவியரோடு கூடிய
அம்பு - விட்டுணுவாகிய பாணமும்
அல - துன்பத்தால்
தாடா - தலைமைபெற்றோர்கள்
அல - மதிளைப்போலச் சூழ்ந்த
நேயா - பிரியத்தோர்களென்னுமிரு திறத்தாரின்

உள - அந்தரங்கத்தின்
வார் - நீட்சியும்
இதி - பைசாசங்களின்
உடை - சுற்றுகலும்
ஆன - இடபமும்
எண்ணில - எளிமையினிடத்துண்டாகும்
அம்பல் - நிந்தையினது
லத்தாடு - பெருஞ்சிரமத்தைப் பொடிப்பதற்கு
அரன் - அரத்தை
ஏய - போன்ற

அருள்வாரிதி - கிருபாசமுத்திரமும்
உடையான் - உடையவரும்
எண்ணில - அளவுபடாத
அம்பலத்து - சபைகளிடத்து
ஆடு - நடனஞ்செய்கின்ற
அரன் - சிவபெருமான். எ-று.
ஏ - ஈற்றசை.

கருத்து:

தனதருமையை நினைப்பவர்களுக்கிதஞ் செய்கின்றவரு மொருக்காலுந் தளர்ச்சியடையாதவரு மனவொருமையைக் குறித்த முயற்சி தரத்தக்க தாயைப் போன்றவருங் கொடைத் தொழிலாளருறுதி வடிவமானவருஞ் சந்திரனையுடையவரு மெட்டுப் பத்தினிகளோடு கூடிய விட்டுணுவாகிய பாணமுந் துன்பத்தோரன்ப ரென்னு மிருதிறத்தார் களினந்தாங்கப் பெருக்கமும் பைசாசங்களின் சுற்றுப்புறமு மிடபவாகனமு மெளிமையோடுண்டாகு நிந்தையைப் பொடிக்குமரம் போன்ற கருணையு முடையவரு மியாவரென்றா லெண்ணிக்கை யில்லாத சபைகளிலாடுகின்ற சிவபெருமானே யென்பதாம்.

ஞாயம்:

சந்திரனைத் தரித்த வராதலானுஞ் சோமவார விரதத்திற்குரிய வராதலானுஞ் சந்திரனையுடைய வரென்றதுந் துன்பமுற்றோரு மன்பிற் பெரிய யோகிகளுமே தெய்வ சிந்தனைக்குரிய ரென்பது சுருதி யுத்திய நுபவங்களுக்கிசைந்த வாறென்பதுந் திசைகளையே வத்திரமாக வுடையவருக்குத் தம்மைச் சூழ்ந்த பைசாசங்களை யுடையாகச் சொன்னது விரோதமன்றென்பது மெளிமையைத் துணைக்கொண்டே நிந்தையுண்டா மென்பது மீசுர கிருபையடைந்தாலன்றி நிந்தைமுற்று நீங்காதென்பது மவராடுஞ்சபை பொன்னாலும் வெள்ளியாலுந் தாம்பிரத்தாலுங் கட்டப்பட்டுள்ளவை போன்றன வனந்தமுள்ள வென்பதுங் காண்க.

இலக்கணம்:

அருமையை நினைக்கின்றவர்களென்னுஞ் சொற்கிசையத் தனதென்று வருவிக்கப்பட்டது. இததனையுடையவனை யிதியென்றமை விதிவழியல்லது வேறல்ல. அனையென்ற பதத்திலே லேகாரம் புணர்ந்தனே யெனத்தொனித்து விளியாக வழங்கி வருவதுண்டாத லினதனைத் தேற்றேகாரமா யுபயோகப்படுத்தியிருக்கின்றது. அன்றியுமிச்செய்யுளில் உடு - ஐயானென்பதை - யுடையானென்று பிரயோகித்தது வழூவென்று முடுவையானென்றே சொல்லவேண்டுமென்று மயங்குகின்ற புலவர் பலருண்டென்பது தெரிந்தே சிலராகிய முதுபுலவர் சந்தோடத்தை நம்பிப் பிரயோகித்திருக்கின்றது. அல்லாமலு மிப்பிரபந்தக் காப்பின் முதலடியிற் கபவதமென்ற சொல்லைக் கபாதமென்று சொன்னது போன்ற சொற்களுக்கெல்லாம் விபரமு முதாரணமு மெழுதிப் பாடறோறு மெழுவாய் பயனிலை செயப்படுபொருள் கூட்டுந்தகை முதலியவற்றையும் விரித்தெழுதச் சோம்புநர் போன்றாமவற்றை யெல்லா நமது மரபிலுள்ள பலருள் ளொருவராற் பிந்தியெழுதப்படுமென்பது சித்தமிந்தமட்டி னூலாசிரியனுரை யெழுதல் கூடாதென்ற விதியை மறுத்தெழுதுவதற்குக் காரணங் கடினபிரபந்தமாத லினுலகிற் குபயோக மின்றிவாளா கிடக்குமென்னும் பழுதற்ற வுண்மை ஞாயத்தைக் கருதலென்றறிக.

4. ஆடக மால்வரை வில்லானுருவும சலமதே
ஆடக மால்வரை வில்லானுருவும சலமதே

ஆடக மால்வரை வில்லானுருவும சலமதே
ஆடக மால்வரை வில்லானுருவும சலமதே.

இதன் பொருள்:

ஆடு - செய்கின்ற
அக - பாவத்தின்
மால் - மயக்கத்தினது
வரைவில் - அளவில்
ஆனு - கெடுக்கின்ற
உரு - மந்திரசெபத்தின்
உம - உங்கார கொச்சிப்புக்கு
அசலம் - அந்நியர்களாகிய வெமது
அ - அகரவடிவமான
தே - தெய்வமும்

ஆடு - நடிக்கின்ற
அகம் - அகலிடத்தும்
ஆல - ஆலமரத்திலும்
வரை - மூங்கிலினும்
வில - பிரகாசத்திலும்
ஆன - பசுவினிடத்தும்
உரு - அழகிய
உ - விட்டுணுவினிடத்தும்
மசல - மோகிப்பதற்கு
அமது - அழகியதும்
ஏ - நிந்தை

ஆட - சொல்லும்படி
கமால் - பிரமாவினால்
வரைவு - எழுதப்பட்டவிதி
இல்லான் - இல்லாதவரும்
உருவும் - எல்லாவற்றிலு மூடுருவி நிற்கின்ற
அசல - சலனமற்ற
மது - தேன்போன்ற பொருளும் (ஆரென்றால்)
ஏய - பொருத்தமான

ஆடக - பொன்னாகிய
மால் - பெரிய
வரை - மலையான
வில்லான் - வில்லையுடையவர்
உருவும் - அவ்வடிவமும்
அசலமதே - மலையேயாகும். எ-று.

கருத்து:

செய்கின்ற பாவத்தினளவிற் கெகுகின்றவற்ப மந்திர கெருவமில்லாத வெங்களுக் ககார வடிவாகிய தெய்வமும். நடனசபையால் மரமூங்கில் பிரகாசம் பசு விட்டுணுவாதிகளின் மோகிக்கின்ற வழகியரும். நிந்தை யுண்டாமபப்படி பிரமா விதிக்கும் விதியில்லாதவரு மெங்கும் வியாபித்துத்தேன் போற்றித் திக்கின்றவரும் பொன்மலை வில்லையுடையவ ரவர்வடிவுமலை வடிவாயேயிருக்கின்ற தென்பதாம்.

ஞாயம்:

பாவங்களைக் கெடுத்து முத்திவரை கொடுக்கின்ற மகாமந்திரங்களேக தேசமென்பது தோற்றக் கெடுக்கின்ற மந்திர கெருவமில்லாத யாங்களென்றும் வியாபகப்பொரு டித்திப்பைக் கொடுப்பதாதலிற்றே னென்றும் அருணாசல மலை யீசுரவடிவே யென்பது பிரசித்தம் மாதலினவர் வடிவுமலையாகவே யிருக்கின்ற தென்றுங் கூறியது காண்க.

இலக்கணம்:

அயலசலென்று மருவியதற்குத் துணையாக மயலை மசலென்று பிரயோகிக்கப் பட்டது. அசலமென்ற பதமோரிடத்திற் சலனமற்ற தன்மைக்கு மற்றோரிடத்தின் மலைக்குஞ் சொல்லப் பட்டிருக்கின்றத் தன்மை யாற்றானே மலைக்கப் பெயர்வந்ததாதலிற் கூடாதென்னு மிளம் புலவரிவ் வுலகத்தின் மிக்குளராயினு மிவ்வழிச் செய்யுளிலீடுபட்டோர்க் கியல்பாகவே தோற்றும். மூங்கில் திருநெல்வேலித் தலவிருட்சமென்றும் விட்டுணுபேரின் மோகித்தது மோகினி யவதாரத்தி லென்றுஞ் சொல்வது போன்ற விபரங்க ளான்றோ ராலறியத் தக்கன.

5. சலந்தர னாவி கரந்தாயென் றீமைதனைத்தவிரே
சலந்தர னாவி கரந்தாயென் றீமைதனைத்தவிரே

சலந்தர னாவி கரந்தாயென் றீமைதனைத்தவிரே
சலந்தர னாவி கரந்தாயென் றீமைதனைத்தவிரே.

இதன் பொருள்:

சலம் - சலனத்தை
தரு - கொடுக்கின்ற
அல - பிரகிருதியிருட்டாகிய
நாவி - பாடாணத்தையும்
காம - ஆலகால விடத்தையும்
தாய் - தாய்போன்றி ரசிப்போனே
என்றீ - சூரியனை யுடையவனே
மை - கரிய
தன் - தன்மையை
நைத்து - கெடுத்து
அவிர - பிரகாசிக்கின்ற

ஏசல் - குற்றமற்ற
அந்தான - ஆகாயமானவனே
ஆ - வியப்பான
விகர - அடவாதிகள்
அந்தாய - பொருந்தத்தகாதவனே
என்று - எந்நாளும்
ஈ - கொடுக்கின்ற
மை - மேகம் போன்றவனே
தன் - எனதென்னும் மகாரத்தின்
ஐ - அரசாகிய வகங்காரத்தை
தவு - தாவுகின்ற
இரே - விசாலமானவனே

சலம் - கங்கையை
தான - தரித்துக்கொண்டவனே
நாவி - நாவின் பெருக்கமுள்ளோனை
கரு - பிறப்பின் அரித முடிவாகிய
அய - சுவாமி
என - என்று சொல்லப்படும்
தீம - தித்திப்பே
ஐது - விரைவு

அனைத்த - எல்லாவற்றையு முடைய
விர - வேகத்தோடு கூடிய
ஏ - பாணம்போன்ற

சலந்தரன் - சலந்தாரசுரனுடைய
ஆவி - பிராணனை
கரந்தாய் - மறைத்தவனாகிய சிவபெருமானே
என - அடியேனுடைய
தீமைதனை - தீங்குகளை
தவிர் - நீக்கிவிடு
ஏ - ஈற்றசை.

கருத்து:

பிரகிருதியிருட்டும் விடமும் பொல்லாதன வாயிருந்து மிரட்சிக்கப்படுகின்றமையா லவற்றின்றாய் போன்றவனே. சூரியனையுடையானே யஞ்ஞானத்தைக் கெடுக்குஞ் சிதாகாச மானவனே யடத்தோரைப் பொருந்தாதவனே யென்றுங் கொடுக்கு மேகம் போன்றவனே. யகங்காரம் மகாரத்தைக் கடந்து வியாபிக்கு மகண்ட சொரூபியே. கங்கையைத் தரித்தவனே நாவின்வலி யுள்ளோனே. பிறவியைக் கடந்த வானந்த மானவனே யதிவிரைவையுடைய சலந்தரன் பிராணனை யொழித்த சிவனெ யென்றீமைகளை யெல்லாந் தவிர்த்தருளென்பதாம்.

ஞாயம்:

பஞ்ச கிருத்தியத்தின் பொருட்டுங் கருணைதோன்றற் பொருட்டும் பிரகிருதியையும் விடத்தையும் பாதுகாப்பதனா லவற்றின்றா யென்றுஞ் சூரியப்பிரகாச மேகதேச மாகையாற் சூரியனையுடைய வனென்றும் பாவாமிச முழுமையுங் கறுப்பாகை யாலவற்றைக் கெடுக்கின்றவனென்றும் வியாபகத்தை யுணரும் போதேயகங்காரம் மகாரங்கெடு மாதலினவற்றைத் தாவுகின்ற விசாலமென்றும் வரப்பிர தாயகமான நாவையுடைவனாதலினாவின் வலியுடையா னென்றும் பிறப்பொழிப்போர் வணங்குந் தெய்வமாதலின் தன்முடிவான வானந்தமென்றுஞ் சலந்தரனதி குரூரனென்பது தோன்றப் பாணத்தைப் போன்றவனென்றுஞ் சொன்னமை காண்க.

இலக்கணம்:

தரு - அல்லைத்தாலென்று சொன்னது பழைய வாய்பாடேயாகும். என்று - ஈ என்னுஞ் சொற்கட்கிசையவும் மை வருவிக்கப்பட்டது. இருவேயென்னுஞ் சொல்லையிரே யென்றமைக்கப்பட்டது. ஐ யென்னுமொரு சொல் அய்யெனப் போலியாய் நின்றது. விர ஏ யென்றது. விர்ரென்பபோய தென்னும் வழக்கத்தைத் தழுவி நின்றது. விரைவின் பகுதியெனத் தெளிவாரு மேகதேசமுளா ரென்பது சித்தம்.

6. தனையந்த மாதியு மாக்கிய வானவன் சங்கரனே
தனையந்த மாதியு மாக்கிய வானவன் சங்கரனே
தனையந்த மாதியு மாக்கிய வானவன் சங்கரனே
தனையந்த மாதியு மாக்கிய வானவன் சங்கரனே.

இதன் பொருள்:

தனையந்தம் - புத்திரர்களாகிய வெமது
ஆதி - குற்றங்க ளெல்லாவற்றையு முடையவரும்
உமாக்கும் - உமையவளுக்கு
இ - பாதியானவரும்
அ - அந்த
ஆல - ஆலவிருட்சத்துக்கு
நவன - புதுமையாயுள்ளவரும்
சங்கர - சங்கப்புலவர்களை
அன - உடையவரும்

ஏதன - சருவகாரணமானவரும்
நயந்த - யாவருங் கெஞ்சத்தக்க
மா - இலக்குமி தேவியையும்
தி - யூகத்தையுமுடைய
உ - விட்டுணுவாகிய
மாக்கிய - மாக்கென்னுந் தொனியையுடைய
ஆனவன் - இடபத்தையுடையவரும்
சங்கர - வளையணிந்த பெண்களையும்
அல் - இருளையும்
நே - நேசிக்கின்ற மன்மதன்

தன் - தனது
ஐ - தலைமையையும்
அந்தம் - அழகையும்
மா - பொடியாக்கிய
தி - நெருப்போடு கூடிய
உம் - உங்காரத்தை
ஆக்கி - ஆக்கமாயுள்ள வரும்
அவானவன் - அகரவட்சர வடிவானவரும்
சங்கு - சங்கிடத்துப் பூட்டும்
அரன் - அரத்தையுடையவனாகிய நற்கீரன்
ஏ - சொல்லிய நிந்தையுடைய

தனை - தம்மையே
அந்தம் - முடிவும்
ஆதியும் - அடியும்
ஆக்கிய - ஆக்கச்செய்த
வானவன் - கடவுளும்
சங்கரனே - சிவனே. எ-று.

கருத்து:

சற்புத்திர பாவத்தையுடைய வெமது குற்றங்களை யுமங்கிகரிக்கின்ற வரும். பார்வதிக்குப் பாதியானவருங் கல்லால விருட்சத்துக்குப் புதுமையானவருஞ் சங்கப்புலவர்களை யுடையவருஞ் சருவகாரணரு மிலக்குமியையுந் தந்திர யூகத்தையுமுடைய விட்டுணுவாகிய போரேற்றையுடையவரும் பெண்களையு மிருட்டையும் விரும்புகின்ற மன்மதன் பொடியாகச் செய்த நெருப்போடு கூடியவுங்காரத்தை யாக்கமாகவுடையவரும் நற்கீரன்செய்த நிந்தையோடு கூடியதம்மையே யாதியாகவு மந்தமாகவுங் காட்டுகின்ற கடவுளுஞ் சிவபெருமானே யென்பதாம்.

ஞாயம்:

அகரவடி வானவரும் சற்புத்திரபாவம் பத்தகோடிகளது மார்க்க நான்கிலொன்றென்பது மால் விருட்சத்துக்குச் சனக்காதியருபாசனைக்கு பிந்தி வந்தமையாற் புதுமையானவரென்பது மாக்குத் தொனிப்போரை விரும்பிய காளையர்களின் சத்தமென்பதுஞ் சருவ சங்கார காலத்திலெல்லாவற்றையும் பொடிக்கின்ற

சுபாவமுடையவராதலா னெருப்போடு கூடியவுங் காரத்தை யாக்கமாயுடைவ ரென்பதுங் குருவா வருகின்ற வருமுத்தி வடிவான வெளியா விளங்குவாரு மவரேயாதலினந்த மாதியுமாக்கியவானவ ரென்பதுங் காண்க.

இலக்கணம்:

இகரத்தின் வடிவே யரையெண் வடிவாதலின் தனைப்பாதி யென்னும் பொருட்குபயோகப் படுத்தப்பட்டது. நேயத்தையுடைய மன்மதனை நேயென் முந்திய வழக்கின்படி பிரயோகித்திருக்கின்றது. உகரத்தை விட்டுணுவாக முன்னோரு பியாமும் பிரயோகித்ததற்குக் காரணம் பிரணவத்துள்ள மூன்றெழுத்தையு மும்மூர்த்திகளாகக் கொண்டவற்றி னடு நின்றபடி. அகரத்தைச் சிவனாகச் சொல்வதெல்லா வெழுத்திற்கு முதனின்றது பற்றி யன்றியு முற்குறித்த ஞாயப்படி தலைமாற்றிப் பார்க்கினுமிசையு மின்னுமனந்த ஞாயங்கூறுநருமுளார்.

7. சங்கங்கை யானை யளித்தாய கண்ட சதாசிவனே
சங்கங்கை யானை யளித்தாய கண்ட சதாசிவனே
சங்கங்கை யானை யளித்தாய கண்ட சதாசிவனே
சங்கங்கை யானை யளித்தாய கண்ட சதாசிவனே.

இதன் பொருள்:

சங்கம் - கடைச்சங்கமென்னும் புலவர் கூட்டத்தை
கை - கோபித்த
யானை - யானைபோன்ற திருவள்ளுவ நாயனார்
அளித்தாய் - கிருபையோடு கூடிய லோகமாதவான வெளவையார்
அ - என்னு மிருவர்களுடைய
கண் - பேரறிவும்
தச - தசவாயுக்களின்
தா - வலிமையும்
சிவநேசம் - நன்மையின் விருப்பமும்

கம - பிரமாவின்
கை - இடத்து
ஆல - நடிக்கின்ற

நயள - நயத்தினளாகிய சரசுவதியின்
இத்து - அண்மைப்பொருள்
ஆய - ஆகிய
கண்ட - சருக்கரைபோன்ற வினிமையுள்ள
சத - பலவித
ஆசி - புகழ்ச்சியும்
வன் - கடுத்தமுள்ள
ஏ - பாணங்களும்

சம - சுபகரமான
கங்கை - சலப்பெருக்கமும்
ஆன - பசுக்களை
ஐ - பாதுகாக்குந் தலைமையும்
அளி - மொத்தமாய் யள்ளி
தா - கொடுத்தருள்
ய - யகாவடசாத்தின

கண்ட - பகுதியான வாகாயத்தில்
சதா - நிலை பெற்றோனே
சிவன் - மோட்சாதிகார முள்ளவனே
ஏ - வியப்பான

சங்கு - சங்கத்தைக் கொண்ட
அங்கையானை - அழகியகையானாகிய விட்டுணுவை
அளித்தாய் - இரட்சித்தவனை
அகண்ட - ஏகமயமாகிய
சதாசிவனே - சிவபெருமானே. எ-று.

கருத்து:

கடைச்சங்கத்தை யுலைத்ததிருவள்ளுவ நாயனாரு மௌவையாரும் பெற்ற பேரறிவுந் தசவாயுக்களின் பலமு நன்மையின் விருப்பமுஞ் சரசுவதியின் பொருளாகிய பல புகழ்ச்சியும் வலிய பாணங்களுஞ் சுபகரமான கங்கையும் பசுக்காக்குந் தலைமையுஞ் சேர்த்துக் கொடுத்தருளா காயத்தினிலே பெற்றேனு மோட்சாதிகார முடையவனும் விட்டுணுவைக் காத்தவனுமாகிய சிவபெருமானே யென்பதாம்.

ஞாயம்:

அருணாட்டமில்லாத சிவபோதப் புலவர்களையடக்கும் பொருட்டவ் விருவரறிவையு மாகாயக மனமுதலியவற்றை யுத்தேசித்துத் தசவாயுக்களின் வலியையும் பாவஞ்சேராதற் பொருட்டு நன்மையின் விருப்பத்தையு மூவகையின் பொருட்டுப் புகழ்ச்சியையு மிராட்சதர் முதலோரெதிர்த்தால வாவிப்பிராயப்படி பொரும்பொருட்டுப் பாணங்களையும் பாறைக்கிணற்றா லுண்டாயிருக்கிற வருத்த நிவிர்த்திப் பொருட்டுக் கங்கையையுஞ் சதுர்வேத சித்தாந்தத்தோரனைவரு மதிக்கும் பொருட்டுப் பசுக்காக்குந் தலைமையுங் கேட்டவாறும். யகரம் - சதாசிவ பீசாட்சரமாதலுமதன் பகுப்பான பூதமாகாய மென்பதும் விட்டுணுவுக்குத் திதி கிருத்தியங் கொடுத்தவரே யென்பதுமறிக.

இலக்கணம்:

சங்கத்தைக் கோபித்த வென்னுமடையாளத்தாலவ் விருவரையும் வருவிக்கப்பட்டது. பத்து வலியென்றதற்குக் காற்றிலும் வலிய பொருளின்மையாலதனை வருவிக்கப்பட்டது. புகழ்ச்சி வேண்டற்பாலதாதலிற் சருக்கரையையுவமிக்கப்பட்டது. எனவே யிகழ்ச்சி வெறுத்தற்பாற்றாய கசப்பென்பது சொல்ல வேண்டுவதின்றா யிற்று. இத்தென்னுமண்மைச் சுட்டும். ஏயென்ன வியக்குந் திறமும் பிரசித்தமான வுலக வழக்கச் சொல்.

8. சதபத்தி ரர்தனத் தார்தலை கோடி தரித்தவனே
சதபத்தி ரர்தனத் தார்தலை கோடி தரித்தவனே
சதபத்தி ரர்தனத் தார்தலை கோடி தரித்தவனே
சதபத்தி ரர்தனத் தார்தலை கோடி தரித்தவனே.

இதன் பொருள்:

சத - நிலையான
பத்தி - பத்தியையும்
ரர் - இராத்திரியின்
தனத்தார் - தன்மையோராகிய வசுரர்களின்
தலை - முதல்வனாகிய வசுரேந்திரன்
கோடு - மாறுபடத்தக்க

இதர - சொற்களுடையோர்களையும்
இ - யான் முயல்வதா கியவிந்த
தவநேச - தவநேசத்துக்கு

தபு - கெடுதல் செய்கின்ற
அத்தி - பாவத்தை
ராதல - பொடிக்குந் தன்மையையும்
நத்து - சங்கின்
ஆர்தல் - பொருத்தமாகிய விட்டுணு கலையின்
ஐ - அரசனையும்
கோடி - தேவரீர் கொள்ளவேண்டும்
தரி - தருக்களையுடைய தேவேந்திரனுக்கு
தவன் - நாயகனானவரே
ஏசு - குற்றத்தை

அத - நாசஞ்செய்கின்றவரே
பத்திரர் - அழகிற் பெரியாரே
தன் - தம்மை
அத்தார் - வியந்து பேசுகின்றோர்களின்
தலை - இடத்தையுடையவரே
கோடி - முடிவில்
தரித்தவன் - வசிக்கின்றவரே
ஏ - வியக்கத் தக்க

சதபத்திர - தாமரை பூவாகிய
ஆதனத்தார் - ஆதனத்தையுடைய பிரமர்களின்
தலை - தலைகள்
கோடி - அனேகங்களை
தரித்தவனே - ஆபரணமாகத் தரித்துக் கொண்டவரே. எ-று.

கருத்து:

நிலைத்த பத்தியையு மரசுர்களுக்கு விரோதம் பேசுகின்றவர்களையு மெனது தவத்தை யுலைக்கும் பாவத்தைப் பொடி செய்யுந் தன்மையையும் விட்டுணு கலை தங்கிய வாசனையுந் தேவரீரங்கிகரிக்க வேண்டு மிந்திரனுக்குத் தலைவருங் குற்றங்களைக் கெடுக்கின்றவரு மழகியருந் தமை வியக்கின்றவர்களிடத்தை யுடையவரு முடிவில் வசிக்கின்ற

வருந்தாமரை யாசனத்தையுடைய பிரமாக்களின் றலையனேகங்களை யணிந்து கொண்டவருமாகிய சிவபெருமானே யென்பதாம். உபத்திரா வென்ற சொற்குப் பத்தர்களிடுமிலைகளை யுடையவரெனக் கூறினுமமையும்.

ஞாயம்:

பத்தியிற் பிரயோசன மின்றெனப் பலரிகழத்தக்க சில நிகழ்ச்சியுஞ் சீவகருணை தருமஞ் சத்திய முதலியவற்றைப் பாராட்டு கின்றவர்கள் வருத்தமுறுங்கொடுமையுந்தான் செய்யுந் தவத்திற் கிடையூறுங்கொடுங் கோலசனும் விளங்குகின்றமையாற் பத்தியையு முத்தமர்களையுமென்ற வத்துக்க நுகூலஞ் செய்யுந் தன்மையையும் விட்டுணு கலைதங்கிய செங்கோலசனையு மங்கிகரிக்க வேண்டுமெனப் பிரார்த்திக்கப்பட்ட விபரஞ்சீவே சுரசகத்தென்னு முப்பொருளிற் கடைபட்ட பிரவஞ் சலட்சணமாவதுள்ள படியறிந்தோர்க்கு விளங்கும். தேவர்களுக் கரசனிந்திரனாகையா லவனுக்குத் தலைவனென்றது பத்துவந்தோற்றற் பொருட்டென்றுங் குற்றங்களைக் கெடுத்தல் வல்லபத்தையு மழகியதன்மை சருவமோகனத்துவத்தையும் விளக்கி நின்றமை போன்ற விபகாரங்கள் பாடறோறுஞ் சொல்வார் சொல்லத்தகுமென்று மறிக.

இலக்கணம்:

இராத்திரித்தன்மை யுடையவர்களின்றலை யென்றமையால் சுரேந்திரனென்றும். இத்தவமென்ற தாற்றனறவ மென்றும். அராதலிரும்பு முதலியவற்றை யரத்தாற் பொடி செயுந்தொழிலாதலாற் பொடித்தலென்றும் விட்டுணு கலைநீதியிற் பிறழாத தாதலினதைப் பெற்ற வரசன் செங்கோற் குரியனென்றும் வருவிக்கப்பட்டன. தருவையுடையவனைத் தரியெனச் சொன்ன பதஞ்சுவையின் றென்று மிலக்கியங்களிலீடு படாதவர்களேக தேச நூல்களின் விதியையதிக்கிரமித்தென்றும். முற்றுகர மென்னும் வாய்ப்பாட்டைக்கடந்து குற்றுகரமாக்கிய துணிவுடைத்தென்று மறிவாமாயினு மஃதமைந்த தானத்தையுஞ் செய்யுட்டன்மையையு நிருவாகத்தையுங் கவனிக்கத்தக்க முழுப்புலவர் பாராட்டு மருமையை நினைத்து மகிழ்ந்திருக்கின்றாம்.

9. வனசத் தினான மைத்திட்ட விதிக்குறை மாற்றுதியே
வனசத் தினான மைத்திட்ட விதிக்குறை மாற்றுதியே
வனசத் தினான மைத்திட்ட விதிக்குறை மாற்றுதியே
வனசத் தினான மைத்திட்ட விதிக்குறை மாற்றுதியே.

இதன் பொருள்:

வன - நீரின்
சத்தி - அதிட்டான சத்தியாகிய கங்கை
நான் - கத்தூரியின்
மை - கருமையைப்போன்ற
திட்ட - நிதானத்தையுடைய
இதி - இதவாட்டியாகிய வுமையவள்
கு - என்னுமிருவருக்கும்
உறு - பொருத்தமாகிய
ஐ - சுவாமியே
மால் - விட்டுணுவாகிய
துதி - புகழ்பெற்ற
ஏவ - பாணத்தையுடையவனே

நச - சன்னமில்லாத
தினா - நித்தியனே
நம - எம்மாற் செய்யப்படும்
ஐ - அழகிய
திட்ட - நிந்தையையுமேற்றுக் கொள்கின்றவனே
இதி - பிசாசங்களின்
குல - குரவையாதியவார்த் தொனியை
தை - தழுவுகின்றவனே
மாற்று - பொன்வெள்ளிகளினிறம்
உதி - உண்டாகத்தக்க
ஏ - வியப்பான

வன - அழகையுடையவனே
சத்தி - அலறுகின்ற
நான் - அடியேன்
அமை - மூங்கிலையுடைய
திட்டு - உன்னதத்தானமான திருநெல்வேலியையும்
அவி - தேவபூசைக்குரிய நிவேதனங்களையும்

திக்கு - எல்லாத்திக்குகளிலுமுள்ள யாவற்றையும்
உறை - உறைபோற் பொதிந்து காக்கின்ற
மால் - பெருமையை
து - அநுபவிக்கும்படியான
தி - புத்தியை
ஏ - பொருந்தும்படி

வனசத்தினான் - பிரமதேவன்
அமைத்திட்ட - நியமித்த
விதி - தலையெழுத்தின்
குறை - குற்றங்களை
மாற்றுதி - மாற்றியருள். எ-று.
ஏ - ஈற்றசை.

கருத்து:

கங்கைக்கு முமையவளுக்கு நாயகனே விட்டுணுவாகிய பாணத்தை யுடையவனே சன்னமில்லாத நித்தியனே யெமது நிந்தையையுமேற்றுக் கொள்வோனே பொன்வெள்ளிகளுக்கு மாற்றுண்டாக்கும்படியான வழகையுடையவனே யலறுகின்ற நான் றிருநெல்வேலியையுந் தேவாலய பூசைகளையுமெட்டுத் திக்குகளிலுள் ளவற்றையும் பாதுகாத்தலாலுண்டாகும் பெருமையை யநுபவித்தற்கேதுவாகிய புத்தியைப் பொருந்தும்படி பிரமலபியிலுள்ள குற்றங்களை மாற்றியருளென்பதாம்.

ஞாயம்:

அழகிய நிந்தை யென்றமையா லுண்மைக்குமுரிமைக்கும் விரோத மில்லாத தெனப்பொருட்டருமாறும். மாற்றென்னு முறைமை பொன்வெள்ளிக்கே யுரியதாதலினவற்றை வருவித்தவாறும். அஃது முண்டாகத்தக்க வழக்கனென்றதாற் பொன்மையிற் சிறந்த திருமேனியும் வெண்மையிற் சிறந்த விபூதிப் பூச்சுமுடையானெனத் துலங்குமாறும். தேவபூசை நிவேதனமென்ற சொற்கொப்ப வெட்டுத்திக் கெனப் பொதுப்படச் சுட்டியுந் திருநெல்வேலி யென்றும் பிரித்துக் காட்டியதனா லவ்வூரபிமான மதிகமென்பது தோற்றியவாறும். பிரம்மா விதியிலுள்ள குற்றங்களை மாற்றென்றதாற் கரும பிரதிபந்தங்களை யீசுர கிருபையா னிவிர்த்திக்கக் கூடுமென்பதே தனது சம்மதமெனத் தெரிவித்தவாறு மறிக.

இலக்கணம்:

தையென்னுஞ் சொற்குத் தழுவியென்றே பொருடருமாயினுந் தழுவியவனே யென்றமைதியினிமித்தம் வருவிக்கப்பட்டது. ஏயவென்னுஞ் சொற்குரிய பொருந்த வென்னும் பொருளை ஏயென்னும் விகாரப்பதந்தரும்படி பிரயோகித்து மிருக்கின்றது.

10. மாற்றஞ் சிலபகார யடியே னகமாசறவே
மாற்றஞ் சிலபகார யடியே னகமாசறவே
மாற்றஞ் சிலபகார யடியே னகமாசறவே
மாற்றஞ் சிலபகார யடியே னகமாசறவே.

இதன் பொருள்:

மாற்று - பொன்னிறம்
அஞ்சு - தோல்வியடையத்தக்க
இல - மனைவியையும்
அபகா - பெண்குறியின்றிப் பேடிவடிவம் பெற்ற வருச்சுனர்களையும்
ஆய - மாதாவாகிய வசோதையடித்த
அடி - அடியையும்
ஏன - பன்றிவடிவமான
கம - சிரத்தையும்
மாசு - கருநிறத்தையும்
அற - தருமத்தையுமுடைய
ஏ - பாணமாகிய

மால் - விட்டுணுவுக்கு
தஞ்சு - தஞ்சமானவனே
இல - தேற்றாமரம் போன்றவனே
பகா - பெரியோர்கள்
ஆய - ஆராயத்தக்க
அடி - திருவடிகளையும்
ஏல - பொருந்திய
நக - கயிலையையுமுடையவனே
மா - தாருகாவனத்தாரனுப்பிய யானையின்
சல - கோபத்தை
தவு - கெடுத்த

ஏம - பெருங்களிப்பையும்
ஆற்று - ஆறுதலைச் செய்கின்ற
அஞ்சு - ஐந்தாகிய
இல - வீடுகளையுமுடையவனே
பகு - பிரிக்கப்பட்ட
அராய - பாதியானவனே
அடி - அடுதலாகிய சங்கார கிருத்தியத்தை யுடையவனே
ஏன - பிரம கபாலமாகிய பாத்திரத்தையுடையவனே
கம - ஆகாயவடிவானவனே
ஆசல - குற்றமல்லாத
தவே - தவசம்பந்தமான

மாற்றம் - வார்த்தைகள்
சில - சிலவற்றை
பகராய் - சொல்லவேண்டும்
அடியேன் - அடிமையாகிய வெனது
அக - மனத்திலுள்ள
மாசு - அழுக்குகளெல்லாம்
அற - அறும்பொருட்டு. எ-று.
ஏ - ஈற்றசை.

கருத்து:

பொன்னிறத் துயர்ச்சிபெற்ற விலக்குமி தேவியையு மருச்சுனர்களையு மசோதையடித்த வடியையும் வராக வதனத்தையுங் கரிய நிறத்தையுந் தருமத்தையுமுடைய விட்டுணுவாகிய பாணத்தைத் தஞ்சமாக வுடையவனே தேற்றா மரம் போன்றவனே பெரியோர்க ளாராயத்தக்க திருவடியையும் பொருத்தமான கயிலைமலையையு முடையவனே தாருகா வனத்தாரனுப்பிய யானையை வென்றகளிப்பு மைந்து சபைகளுமுடையவனே. அர்த்தநாரீச்சுர வடிவுள்ளவனே சருவசங்கார கரத்தனே பிரம கபாலமுடையவனே யாகாயமானவனே குற்றமற்ற சிலவார்த்தைகளைச் சொல்ல வேண்டுமடியேன் மனத்துள்ள வழுக்கெல்லாமறும் பொருட்டென்பதாம்.

ஞாயம்:

பெண்மைக் கோலத்தார்க்கக் குறியின்மையே வியப்பாதலின் பகரென்ற சொற்கருச்சுனரென முன்முறைப்படி

பன்மைகூறியதுந் தசாவதாரமு மொருவிட்டுணு விற்குரியன வாதலின் வராகவதனத்தையுஞ் சொல்லியது மாற்றஞ் சென்னுஞ் சொற்கமையு மிருவகையு மிரண்டிடத்தமைய விரித்ததும் பக்குவர்களின் கலக்கத்தைத் தெளிக்கின்ற வித்துப்போன்ற குரவர்களையுண்டு பண்ணுகின்றவ னாதலிற் றேற்றாமரம் போன்றவனென்றதும் பொருந்திய மலையென்றதாற் கயிலையெனக் கொண்டது மாணவக் கொதிப்பைத் தணிக்கின்ற தாலாறுதலைச் செய்யுஞ்சபை யென்றுரைத்தவாறும். ஏனவென்ற சொல்லிற்குத் தக பாலபாத்திரனே யென்றும் கம்மென்று சொல்லிற் காகாயமானவ னென்றுமிசைவு நோக்கி வருவித்ததுமறிக.

இலக்கணம்:

அறவென்னுஞ் சொல்லிற் புக்குடைமை காட்டி நின்ற வகரமுற் கூறியவற்றையுந் தழுவியது தஞ்சமென்னுஞ் சொல். தஞ்செனச் சாரியை கெட்டு முன்னோராட்சி வழி நின்றது. சலமென்றுங் கோபப் பெயருமங்ஙனஞ் சல்லென்றாய்யத்தன் கோளானிறுத்தப் பட்டது. அரையேயென்னுஞ்சொல்லை யராயென விதிவழி திரித்திருக்கின்றது. தவ, ஏ என்னுமிரு பதமுந்தவே யென்றாய்த் தவத்தின் சம்பந்தமானவெனெ வெச்சமாம் பொருடந்த விதமுணர்வா ரேகதேசிக ளென்பது சித்தம்.

11. மாச கனாவி னரேதம ராக வழங்குதியே
மாச கனாவி னரேதம ராக வழங்குதியே
மாச கனாவி னரேதம ராக வழங்குதியே
மாச கனாவி னரேதம ராக வழங்குதியே.

இதன் பொருள்:

மா - பெரிதான
சக - உலகத்தின்
நாவி - விடம்போன்று
நா - மனுக்கூடத்தை
ஏதம் - துன்பப்படுத்துந் தன்மை
அராக - அடங்காத
வழு - ஈனத்தை யுடையவர் வசிக்கும்

அங்கு - அவ்விடத்தில்
உதியேம் - பிறவாத வர்களாகிய யாங்கள்

மா - இலக்குமியின்
சகன் - சினேகத்திற் சிறந்த விட்டுணுவுக் கபிமானப் பொருளான்
ஆவின் - பசுக்களின்
அரு - அருமையை
ஏதம் - காரணமாகக் கொண்டவர்களாயிருக்கின்றோம்
அராக - இச்சையின்மையோடு கூடி
ஆழம் - ஆனந்தத் தாலழ மாட்டோம்
குதி - நடிக்கின்ற

ஏமா - விபூதிக்காரனே
சகனா - சுபகரமான கனத்தையுடையவனே
இனர் - சூரியர்கள்
ஏதம் - குற்றத்தை
மரு - பொருந்தத்தக்க
ஆக - திருமேனியை உடையவனே
வழங்கு - பழுதற்றதாக வழங்கிவருகிற
தி - புத்தியை
ஏ - இகழ்கின்ற

மாசு - அழுக்கானது
அகல - நீங்கிய
நாவினரே - நாவையுடையவர் கண்மாத்திரம்
தமர் - சுற்றத்தார்
ஆக - ஆம்படி
வழங்குதி - கொடுத்தருள். எ-று.
ஏ - ஈற்றசை.

கருத்து:

உலகத்திற் கொருவிடம்போன்று மனிதர்களைத் துன்பப்படுத்துமீனர்கள் வசிக்குந் தேசத்திற் பிறவாத யாங்கள் விட்டுணுவைப்போற் பசுக்களின் சவுக்கியத்தைக் குறித்திருக்கின் றோமிச்சை நிவிர்த்தியிற் பழகிக்கருணையையுந் தள்ளித் தன்களிப்பையே மதித்தானந்தக் கண்ணீர் விட மாட்டோந் திருநீறு தரித்து கொண்டாடுகின்ற சுபகரமான பெருமையையுடையவரே. சூரியர்களு நாணத்தக்க

திருமேனியையுடைய சிவபெருமானே. பழமையிகழாத சத்திய முடையோர்களெல்லோரு மதித்துச் சூழும்படி கொடுமென்பதாம்.

ஞாயம்:

ஒருவாறு பூர்வபுண்ணிய முடையராயினு மாபாச தேசங்களிற் பிறக்கில்தேச வாசனையாற் சிலகேடுண்டாமாதலி னங்ஙனம் பிறவாத யாமென்றும் பசுக்கள் சட்சமயத் தெய்வங்களுக்கு மபிமானமுள்ளன வேயாயினும் விட்டுணுவைப் போலவற்றைக் காத்தற் பொருட்டு மோர்திருவுருக் கொள்ளாமையின வரபிமானப் பொருளென்றும். தனதுமுத்தியை மாத்திரங்குறித்தவனது களிப்புலோகோ பகாரத்தை யபேட்சிப் போனது வருத்தத்தினு மிழிந்த தென்பது தோற்ற நிராசையாலானந்த மடையேமென்றும் - சூரியர்கண்மட்கும் படியான பேரொளியுடையோனென்பது தோன்றவவர்கள் குற்றமடையத்தக்க திருமேனியோனென்றும். நன்மையுந் தீமையும் வழங்குகின்றவே யாயினுந் தீமையுடையோரு நன்மையைப் புகழ்வதுண்டாதலினச் சொன்னமைக்கே தகுமென்றுஞ் சத்தியவசனத்தோரேயுயர்ந்தோராதலின வர்களைத் தமரர்க்கொடு மென்றுஞ் சொன்னவாறுணர்க.

இலக்கணம்:

நாமென்னு மனுக்கூட்டப்பொதுப்பெயர் நாரெனச் சாரியை கெட்டுநின்றது. பண்பின் பிற்பட விடத்தைச் சொன்னதாற் பண்புடையோரிடமென்றாயிற்று. புத்திக்கு தீயென்றலே பிரசித்தமாயினும். தி - யென்றலே தகுமெனக் கொண்டனேக செய்யுட்களிற் பிரயோகித்து வருகின்றாம். புத்தி யக்கினிய மிசமாதலிற்றீ யென்றலுமப்பெயரின் பிறகுறிப்பாதலிற்றி யென்றலுந்த குமெனுஞ் சமரசப்புலவரு மேகதேசமாயிருப்பார். ஒன்றன் குறுக்கல் விகார மற்றொன்றெனக் கொள்ளுமத் திமருமது கூடாதென்னு மதமரு மிது முதலங்ஙனமோர் பெயரும் வழங்கட்டுமென்னும் பெருந்துணிவுற்ற ஞானப்புலவரை யறியாரென்பது சித்தம்.

12. குதிக்குந்தடம் பதத்தப் பாவருளைக் கொடுத்தி யின்னே
குதிக்குந்தடம் பதத்தப் பாவருளைக் கொடுத்தி யின்னே

குதிக்குந்தடம் பதத்தப் பாவருளைக் கொடுத்தி யின்னே
குதிக்குந்தடம் பதத்தப் பாவருளைக் கொடுத்தி யின்னே.

இதன் பொருள்:

கு - பூமியையும்
திக்கு - எல்லாத்திசைகளையும்
உந்து - பொங்குகின்றதாயும்
அடு - அலைகள் பொருகின்றதாயுமுள்ள
அம்பு - சமுத்திரத்தையும்
அத - தாழ்த்திச் சொல்லத்தக்க
தப்பா - குற்றங்களாகவே
வரு - உதிக்கின்ற
உள - நினைவையுடைய
ஐ - அரசர்களின்
கொடு - கொடிதான
உத்தியின் - யூகத்தின்
ஏகு - நடப்பு

திக்கும் - தடுமாறுகின்ற
தடம் - மலைபோன்ற
பத்தது - காலத்தில்
அப்பு - ஒன்றியவரும்
ஆ - பசுக்களை
அருள் - பாதுகாக்கின்ற
ஐக்கு - கடவுளுமாகிய விட்டுணுவுக்கு
ஒள - பிரகாசமாயிருப்பவனே
துத்தி - படப்பொறியின்
இல - வாசத்தலமாகிய சறப்பத்தினிடத்து
நே - பிரியமுடையவரே

குதி - குதிகாலாகிய
குந்த - ஈட்டியுடையவரே
டம்ப - ஆடம்பரத்தையுடையவரே
தத்த - நிட்காமியமாகச் செய்கின்ற
பாவா - பாடல்களையுடையவர்களின்
உளை - ஒலியை
கொள் - கொள்கின்றதாகிய

து - புசிப்போடு கூடிய
தி - புத்தியின்
இன்னே - இன்பமயமாயிருப்பவரே

குதிக்கும் - நடிக்கின்ற
தடம் - பெருமைபொருந்திய
பத்தது - திருவடிகளையுடைய
அப்பா - என்னப்பனே
அருளை - உமது கிருபையை
கொடுத்தி - கொடுப்பீரா
இன்னே - இப்பொழுதே. எ-று.

கருத்து:

பெருங்குற்றங்களான சங்கற்பங்களையேயுடைய கொடுங்கோ லரசர் களினாணை தடுமாறுகின்ற வுத்தம காலத்திலொன்றி நின்று பசுக்களைப் பாதுகாக்கின்ற விட்டுணுவுக்குப் பிரகாசமானவரும், பாம்பினிடத்துப் பிரியமுள்ளவருங் குதிக்காலையு மோராயுதமாயுடையவரு மாடம்பரத்தையுடையவரும் புண்ணியப் புலவர்களின் பாடலொலியைப் புசிப்பாகவுடைய விவேகிகளினின்ப மாயிருப்பவரு நடிக்கின்ற திருவடியையுடையவரு மாகியவரும் வப்பனே யிப்போதே யுமது கிருபையைக் கொடுவென்பதாம்.

ஞாயம்:

சமானமில்லாத பெருங்குற்றங்களென்னும் பொருடரற் பொருட்டுப் பூமிதிசைகடல்களைத் தாழ்த்தத்தக்க தென்றுங் கொடுங்கோலரசர் கெடுங்காலத்தினு முயர்ந்த கால மின்மை தோற்றமலை போன்ற தென்றுஞ் சருவ பிராணிகளையுங் கொல்கின்ற நமனைக் கொன்றதனாற் குதிக்காலை ஈட்டி யென்றுஞ் சகலலோகத்துள்ள வெல்லாப் பொருள்களை யுமுடையவனாதலா லிடம்பனென்றுஞ் செவிக்குணவில்லாத போது வயிற்றுக்குஞ் சிறிதீயப்படுமென்ற வேத வாக்கியத்தா லொலியைத் துய்க்குமின்பமென்றுஞ் சொல்லியதும். அரசாட்சியைச் சீர்படுத்தலும் பசுக்காத்தலும் விட்டுணு கிருத்திய மாதலினவரென்றும் படப்பொறிக்கு வாசத்தலம் வேறின்மையாற் சற்பமென்றும் வருவித்தது மறிக.

இலக்கணம்:

பொரு கடலென்ற சொல்லலையைக் குறித்தது. உளவென்ற பதமுள்ளென்று மேகலென்னும் பதமேகென்றும் விகாரமுற்றதியல் பன்றிவேறல்ல நேயென்றுரைத்தற்கு விபரமுன்னெழுதப் பட்டிருக்கின்றது.

13. இன்னே யுதவ விசையா திருக்கையியல் பல்லவே
இன்னே யுதவ விசையா திருக்கையியல் பல்லவே
இன்னே யுதவ விசையா திருக்கையியல் பல்லவே
இன்னே யுதவ விசையா திருக்கையியல் பல்லவே.

இதன் பொருள்:

இல் - கிரகத்தில்
நேயு - நேயமுடைய வாச்சிர மத்திற்கும்
தவ - தவத்தில்
விசை - விரைவுள்ளவாச்சிரமத்திற்கும்
ஆதி - முதன்மையானவரே
ருக்கு - வேதத்தின்
ஐ - தலைவரே
இயல் - தமிழ்ப்பிரபந்தங்கள்
பல்ல - பலவற்றை
வேய - தரிக்கின்ற

இன - சந்தோடம்
ஏயு - பொருந்திய
தவ - நாயகரே
வி - விசேடமான
சையா - மலையாகிய கைலாசத்தை யுடையவரே
திருக்கை - முறுக்கான தன்மையை
இயல் - பொருந்திய
பல்லவே - தளிர்களைத் தரிக்கின்றவரே

இன - பிரியமான
ஏ - பாணம்
உதவு - சகாயமாகப்பெற்ற
அ - அந்த

விசைய - அருச்சுனனால்
ஆ - வியக்கத்தக்க
திருக்கை - உமதழகியகையினது
இயல் - குணம்
பல்ல - அம்போடுள்ள
வேய் - மூங்கிலாகியவில்லை

இன்னே - இப்போதே
உதவ - அடியேனுக்குக் கொடுக்க
இசையாதிருக்கை - சம்மதியாதிருப்பது
இயலபல்ல - ஒழுங்கல்ல. எ-று.
ஏ - ஈற்றசை.

கருத்து:

இல்லறந்துறவறமென்னு மிரண்டினு முதன்மை பெற்றோரே வேதத்தின்றலைவரேயனேகம் பிரபந்தங்கள் சூடிய சந்தோடத்தோடு கூடிய நாயகரே. கயிலையையுடையவரே முறுக்கறாத விளந்தளிர் தரிக்கின்றவரே தனக்குப் பிரியமான பாசுபதக் கணையின் சகாயத்தைப் பெற்றவருச்சுனனால் வியக்கும் படியானதேவரீர் திருக்கையின் குணமடியேனுக்குப் பாணத்தோடு கூடிய வில்லைக் கொடுக்கச் சம்மதியா திருப்ப தொழுங்கல்லவென்பதாம்.

ஞாயம்:

சீகண்டபரமேசுரராயிருக்கும்போ துமையவளோடு வசித்தலாலுந் தெட்சணா மூர்த்தியானபோது தனியா யிருத்தலாலு மிரண்டாச்சிரமத்திலுந் தலைவரென்றதும் வேதத்திலனேகந் தெய்வங்களைச் சொன்னபோதிலு மத்தியிற் சிவனையே சொல்வதால் தன்றலைவரென்றதுஞ் சிவன் சூடியபா டலவ்வளவொரு வாக்கு மின்மையாலச்சந் தோட்டத்தைக் காட்டியதுங் கயிலையிற் சிறந்த மலையின்மையால் விசேடமலையென்றதற்கதனைக் காட்டியதும் பொன்மலையதனினு முயர்வன்றோ வென்னினு மஃதும வர்வில்லே யென்பதும் பக்குவமில்லாரையு மங்கிகரிப்பது தோற்றத்தளிர் தரித்தவாறு கூறியது மருச்சுனனுக்குப் பாணங்கொடுத்தகை யெனக்கு வில்லுஞ் சேர்த்துத்தரா தலொழுங் கன்றென்ற தவனுத்தேசித்த

தருமத்தினு முயர்ந்தத் தருமத்தைத் தானுத் தேசித்திருப்பதா லென்பது மஃதென்னெனிலறி வாரறியச் சொல்லத்தக்க தென்பதும் மறிக.

இலக்கணம்:

நேயுவென்ற சொல்லிற் சுட்டுகரமும் புணர்ந்து நிற்றலிற் குறித்த பொருள் விளக்கியவாறு காண்பார் பலரலர் இன்னென்னுஞ் சொல்லோரிடத்திற் களிப்பையு மற்றோரிடத்தில் விருப்பையுங்காட்டினமை யறியார் சிலரலர். ஏய்தவவென் வரவேண்டுவதற்கு. ஏயுதவவென வந்ததிலுள்ள வுகரச்சாரியை விதி யென்றும் விகாரமென்றுஞ் சொல்லத்தக்கது. பல்லவத்தை யுடையவனைப் பல்லவேயென விளித்தமை பெண்பால் விளியேயென வற்புறுத்துநரு மங்ஙன மாண்பாற்கும் வருவதுண்டெனத் தேறு நருமுளர். தேவரீர் திருக்கையென்று மடியேனுக்கென்றும் வாசக நடைநோக்கி வருவிக்கப்பட்டன. பெறத்தக்க யாவர்க் காவதென்று மக்காலமிக்காலமென்றுஞ் சேர்ப்பினு மமையும்.

14. பல்லவச் செஞ்சடை நாதா கருணைப் பனிக்கடலே
பல்லவச் செஞ்சடை நாதா கருணைப் பனிக்கடலே
பல்லவச் செஞ்சடை நாதா கருணைப் பனிக்கடலே
பல்லவச் செஞ்சடை நாதா கருணைப் பனிக்கடலே.

இதன் பொருள்:

பல்ல - பலவாகிய
அச்சு - அச்சத்தோடு கூடிய
எம் - எமது
சடை - சலிப்புற்ற
நா - நாவானது
தா - வலிமையும்
கரு - கருப்பத்தின்
உள - உள்ளிடத்தில்
நைப்பன் - வருத்துகின்றவனாகிய பிரமாவும்
இக்கு - கரும்பினால்
அடு - பொருகின்ற
அல் - இருள்போன்ற மன்மதனும்
ஏ - நிந்தையையும்

பல்ல - பாணத்தின்
அச்சு - வடிவமும்
எஞ்சு - குறைவடையும்படி
அடு - கொலைசெய்கின்ற
ஐ - அரசனாகிய நமன்
நாது - நகரத்தினதாகிய சூனியத்தையும்
ஆகு - சேரும்படிக்கான
அருணை - பிரகாசத்தை
பன் - சொல்வீராக
இக்கு - தேன்போன்ற வினிமையோடுகூடி
அடல் - சுடுந்தன்மை
ஏ - பொருந்திய

பல்ல - தந்தங் களையுடையவரே
அச்செம் - செனியா
சடை - சடமென்னுந் திருமேனியையுடையவரே
நாத - நாதத்தத்துவத்தையே
ஆகா - சரீரமாகப்பெற்ற மாயாசத்திகள்
உண - கண்ணாலுண்டு சீவிக்கின்ற
ஐ - அழகைப்பொருந்திய
பனிக்கு - பன்னியென்னு மனைவியாகிய வுமையவளுக்கு
அள - நெருக்கமான
தலே - இடத்தையுடையவரே

பல்லவ - தளிரோடுள்ள
செம - சிவந்த
சடை - சடையோடு கூடிய
நாதா - சிவபெருமானே
கருணை - கிருபை மயமான
பனி - குளிர்ந்த
கடலே - சமுத்திரம்போன்றவரே. எ-று.

கருத்து:

பலபயங்கர முள்ள வெமது சலிப்புற்ற நாவானது வல்லபத்தைப் பொருந்தும் படிக்கும் பிரமாவு மன்மதனு நிந்தையைச் சேரும்படிக்கு மிய மனில்லாமற் போம்படிக்கும் பிரகாசத்தைச் சொல்லியருளு மினிமை யோடு கூடிச் சுடுகின்ற

தந்தங்களையுஞ் செனியாத திருமேனியையு மாயா சத்திகள் கண்டுகளித்துச் சீவிக்கு மழகையுடைய வுமையவளுக்குப் பொருத்தமான விடத்தை யுந்தளிர் சூடிய சடையையுங் குளிர்ந்த சமுத்திரம் போன்ற கிருபையையுமுடைய சிவபெருமானே யென்பதாம்.

ஞாயம்:

நாவின் வல்லப மவர்க்குச் சித்தியென்றும் பிரம்மாவு மன்மதனு நிந்தையடையதலாவது பிறவியையு மயக்கத்தையுஞ் செயித்தலென்று நமனின்மை யாதன் மரணத்தை வெல்வதென்று மினிமையோடு கூடிச்சுடுதல் சிரிப்பாற் றிரிபுரத்தைத் தகித்ததென்றுஞ் செனியாத்திருமேனி யென்றது மாதாபிதாவின் மையாலென்று மாயாசத்திகள் வாழ்க்கைக்காதார மானவுமையவளென்ற தவளே சமானமற்றவொரே திருவருட் சத்தியெனத் தோற்றற் பொருட்டென்று மாதலின் மாயைக்கு மருளே துணையென்று மறிக.

இலக்கணம்:

அச்சுறுத்தலென்னு மான்றோராட்சி வழி யச்சமச்சென நின்றது. இக்காலடென்வர வேண்டியபத மிக்கடென வுருபுத்தொகையாய் நின்றது. முற்கூறிய பண்பாலல்லென்ற சொன்மதனனெனப் பொருடந்தது. கொல்லு மரசென்றதா லெமனெனச் சொல்லப்பட்டது. இனியநகைப் பாவென்றற்குத் தேனெனக்கூறிய துவமையுருபுத் தொகையாகு பெயர். பாட்டுடைத்தலைவன் பாதிப்பெண்ணுருவுமுடைய னாதலானு மடுத்தஃதே கூறலானுஞ் சடையென்னும் விளி தக்கதாயிற்று. கடலென்ற சொல்லை யுவமைத்தொகை யென்று கொள்க.

15. கடலால முண்டகத் தன்றான மதுகருத் தினனே
கடலால முண்டகத் தன்றான மதுகருத் தினனே
கடலால முண்டகத் தன்றான மதுகருத் தினனே
கடலால முண்டகத் தன்றான மதுகருத் தினனே.

இதன் பொருள்:

கடல் - கள்ளுதலென்னுங்களவுத் தொழிலின் முழுமையும்

ஆல - நிலைகெடவும்
முண்டகத்தன் - தாமரையையுடைய பிரம்மாவின்
தானம் - பதத்தை
மதுகா - இனிமையாகக் கொண்டவர்களின்
உத்தி - யூகமும்
நன் - நன்மையும்
ஏகு - நடப்பும்

அடல் - வெற்றியும்
ஆல- தொனிக்கவும்
முண்ட - மொட்டையாகிய
கத்து - தலையுள்ளவரும்
அன்று - திருஞானசம்பந்த மூர்த்தியுடன் வாது செய்தவந்நாளில்
ஆனு - கெடுதலடைந்தோரும்
அமதுகா - இன்குணமற்றவர்களுமாகிய சமணமுனிவரும்
உ - அவர்களைச் சார்ந்து பின்னிற்கு மற்றைப் புறச்சமயத் தோர்களும்
தில - கொண்ட விருப்பங்கள்
ந - இல்லாமற் போம்படி வைத்த
நே - அன்பின்

கடு - விரைவினாலுண்டாகிய
அல - சஞ்சலமே
அலம - மதிளாகச் சூழப்பட்டிருக்கின்றோம்
முண்ட - முண்டமென்னும் பெயர் பொருந்தியவுபநிடதத்தின்
கத்தன் - தொனியை யுடையவரும்
தான - கொடையாகிய
மது - தேனை
உகு - சொரிகின்ற
அரு - அருமைப்பொருந்திய
தின்ன - நித்தியரும்
ஏ - தமது பாணமாகிய விட்டுணு வசிக்கும்

கடல் - பாற்கடலிலுண்டான
ஆலம் - விடத்தை
உண்ட - அருந்தியவருமாகிய
கத்தன் - சிவபெருமானுமான

தான் - அவரே
நமது - எங்களுடைய
கருத்தினன் - அந்தரங்கத்தையுடையவர். எ-று.
ஏ - ஈற்றசை.

கருத்து:

உலகத்திலுள்ள கள்ளத் தொழின் முழுமையு நிலைகெட்டுப் போவதற்கும் பிரமாவுக்குச்சமானமான மகாவித்வான்க ளவிப்பிராயமு நன்மையு நடையும் வெற்றியும் பிரசித்தமாம் படிக்குஞ் சமணர் முதலான புறச்சமயத்தோர் கொள்கையைக் கெடுக்க வேண்டுமெனக் கொண்ட பேரன்பினாத்திரத்தினா லுண்டான சஞ்சலத்தாற் சூழப்பட்டிருக்கின்றோ மெங்கள் கருத்திலிருப்பவனு பநிடத்தாற் றுதிக்கப்பட்டவனும் பெருங்கொடைத் தன்மை யுடையவனுந் தனது பாணத்தினிடமாகிய கடலிலுண்டான விடத்தை யுண்டவனுமாகிய சிவபெருமானே யென்பதாம்.

ஞாயம்:

கள்ளத்தனத்தினிலே கெடவெனப் பொதுப்படச் சொன்னமையா லெங்குள்ளனவும் மெனக்கொள்ள வேண்டுவதுஞ் சரசுவதி சம்பந்தமுள்ள பிரமபதத்தை யினிதாகக் கொண்டோர் வித்துவான்களே யென்பதுஞ் சமணரைப் போற் பறிக்கப்படு முண்டி தமற்றோர்க் கின்மையாலதை யவர்க்குச் சிறப்பாகச் சொல்லியது மந்நாள் கெட்டது முன்வாதிற் றோற்றமையைக் குறித்தது மவர்க்குப் பின்னுள்ளோரே மற்றைப்புறச் சமயத் தோரனை வருமென்றற்குக் காரணமவரைப்போற் சிவவேடத்தைக் காணினுங் கேட்பினும் பட்டினியே யிருப்போர் வேறின்மையே யென்பதுமவர்மேற் கொண்டபகைத் தன்மை மற்றோர் வழியிற் செல்லவொட்டாமற்றடுப்ப தனாலதுவே மதிளாகச் சூழப்பட்டிருக்கின்றோ மென்றது முபநிடதத் தொனியைப் பரத்துவந் தோற்றற பொருட்கிங் கொடைத் தன்மையைத் தனக்குந் திருத்தியடையுந் தினமுண்டென்றற் பொருட்டு மந்தத்தன்மைக்குத் தேனைச்சொன்னது கற்பகத் தருவைப் போன்றுருவகப்படும் பொருட்டும் விடத்தை யுண்டவரென்றது குற்றங்களையு மங்கிகரிப்பரென விளங்கும் பொருட்டு மென்றுங்காண்க.

இலக்கணம்:

கள்ளுதலென்ற பதத்தினடு நின்றவுகரச் சாரியை கெட்டுக் கள்ளென்ற பகுதியுந் தல்லென்ற வினை விகுதியுஞ் சேர்ந்து கடலென நின்றது. நன்மை யென்னும் பத மைவிகுதி கெட்டு நன்னெனப் பிரயோகிக்கப்பட்டது. உ - என்ற வோரெழுத்துப் பின்னிற்போர் பெருங்கூட்டத்தைக் காட்டியதும் ந என்ற பதஞ்சூனியத் திற்கே பிரசித்தமாயினு முற்கூறிய விருப்பத்தினின்மையெனப் பொருடரல் போல்வன பிறவுந் தெய்வ கிருபையாற் சுதந்தர ஞானம் பெற்ற புலவரே யறியத் தக்கனவாதலின் விரித்திலம்.

16. தினகர னாதிய மூன்று கண்ணான்னறித் தெய்வமின்றே
தினகர னாதிய மூன்று கண்ணான்னறித் தெய்வமின்றே
தினகர னாதிய மூன்று கண்ணான்னறித் தெய்வமின்றே
தினகர னாதிய மூன்று கண்ணான்னறித் தெய்வமின்றே.

இதன் பொருள்:

தின் - எல்லாவற்றையும் விழுங்கிக் கொண்டிருக்கிற
அகரன் - அகாரட்சர வடிவமாயிருப்பவரும்
ஆதி - ஆதியென்னு நாமத்தையுடையவரும்
அம - சல சமூகமாகிய கங்கை
ஊன்று - நிலைபெற்றுவசிக்கும்
கண் - இடமானவரும்
ஆனன் - இடபத்தைக் கொண்டவரும்
தித்தெய் - தித்தெய்யென்னுந் தாளத்தோடு கூடிய பாதத்தையும்
வ - வகராட்சரத்தையுடைய
மின் - பராசத்தியாகிய பெண்ணையும்
தே - கிருபையையு முடையவராய்

தில் - விருப்பமான
நகரன் - ஊர்களில் வசிக்கின்றவரும்
நாது - சூனிய சம்பந்தமான
இயம் - வார்த்தையையும்
உளன் - மாமிசத்தை
து - அருந்துந் தன்மையையும்
கண்ணான் - கருதாதவரும்

நன்று - நன்மையே வடிவானவரும்
இ - இப்படிப்பட்ட
தெய்வம் - ஊழ்ச்சம்பந்தம்
இன்று - இல்லாமல்

ஏதில - நேரிட்ட வேதுப்படி
நகர - சாந்தமாநடக்கின்ற
அநாதி - பரத்துவ முள்ளவரும்
அம் - அழகையும்
ஊன்று - தள்ளத்தக்க
கள - களவையும்
நானன் - கத்தூரித் திலகத்தையுமுடைய விட்டுணுவுக்கு
தித்து - கசப்பாவுள்ள வசுரர்களின்
எய் - இளைப்பை
வம் - வருத்துகின்ற
இன் - இனிமையானவரும்
தே - கடவுட்டன்மை வாய்ந்த

தினகரன் - சூரியன்
ஆதிய - முதலான
மூன்று கண்ணான் - திரிநேத்திர முடையவருமாகிய சிவபெருமான்
அன்றி - அல்லாமல்
தெய்வம் - மற்றொரு தெய்வமும்
இன்று - இல்லை. எ-று.
ஏ - ஈற்றசை.

கருத்து:

அகர வெழுத்து மாதியென்னும் பெயருங் கங்கைக்கு வாசத்தலமான சடையோடு கூடி நடிக்குந் தன்மையு மிடப வாகனமும் பராசத்தி சம்பந்தமுங் கிருபையும் பிரியமான நகரங்களுமில்லை யென்னும் வார்த்தையையு மாமிச பட்சணத்தையு நினைத்தற்கும் பொருந்தாத குணநலமுஞ் சீவர்களுக்குரிய வூழின்றி யிட்டப்படி யிதமா நடக்கின்ற பரத்துவ முமழகு களவுகத்தூரித்திலக மென்பவற்றை யுடைய விட்டுணுவுக்கு விரோதிகளாகிய வசுரர்களுக்கவ செயத்தையுண்டு பண்ணும் பிரியமும் சூரியன் சந்திர

னக்கினியென்னு மூன்று கண்களுமுடைய சிவபெருமானை யல்லாமல் வேறொரு தெய்வமுமில்லவே யில்லையென்பதாம்.

ஞாயம்:

தின்ற வெனப்பொதுப்படச் சொன்னமையா லெல்லாவற்றையு மென்றதுமனேகந் திருக்கோயிலுடைமை தோன்றப் பிரியமான நகரமுடையாரென்றதும் பொய்ம்மையும் புலையுமே பெரும்பாவ மாதலினவற்றைக் கருதா ரென்றதுந் தனக்குப் பிரசன்னமாதலி னிவ்வூழென்றது மாத்திரஞ் சீவத்துவ மாதலிற் சாந்தமா நடக்கின்றவ ரென்றது மசுரர்களுக்கும் வரங் கொடுக்கின்றவராயினும் விட்டுணு மூர்த்தியாலவர்களைக் கெடுக்கின்றமையால வருக்கினிமையானவ ரென்றது மறிக. அவரைத் தவிர வேறு தெய்வமின்றெனற் பாடலிற்றானே விட்டுணு பராசத்தி சூரியனாதியரைச் சொல்வானே னென்னிலவர்கள் பிராணிகட்குத் தெய்வங்களாயு மீசுர சந்நிதானத்திற் பிரபல பத்தர்களாயு மிருக்கின்றார்களெனக் காண்க.

இலக்கணம்:

வகரஞ் சத்தி யீசமென்பது மகான்கள னைவருமறியத்தக்கது. கத்தூரியென்ற சொல்லோடு திலகமென வருவிக்கப்பட்டது. தித்தமென்னுங் கசப்பின் பெயர்தித் தெனச்சாரியை கெட்டது. விட்டுணுவின் கசப்பென்றதைய சுரரெனவுள்ளப்படி கூட்டப்பட்டது.

17. இன்றடி யாரிடை சேரா யெனையு மிகமுய்யவே
இன்றடி யாரிடை சேரா யெனையு மிகமுய்யவே
இன்றடி யாரிடை சேரா யெனையு மிகமுய்யவே
இன்றடி யாரிடை சேரா யெனையு மிகமுய்யவே.

இதன் பொருள்:

இன் - பிரியமான
தடி - மின் போன்ற பெண்ணையும்
ஆர் - ஆத்தி மாலையையும்
இடு - தரித்துக்கொண்ட
ஐ - தலைவரே
சோ - எல்லாவற்றையும்

ஆய - ஆராய்ந்தறிகின்ற
எல் - சூரியன்
நையும் - வருந்தும்படியாக
மிகு - அதிகரித்த
அம் - அழகை
உ - உடையவரே
ய - யகரவட்சரம் போன்று

வேயின் - மூங்கிலாற் செய்யப்பட்ட
தடியார் - வில்லாளிகளையும்
இடை - அயிராவண மென்ற யானையையும்
சேராய - பல மாலைகளையு முடையவரே
எனை - எமது மாதாவாகிய வுமையவளால்
உமி - இகழப்பட்ட
கம - பிரமாவுக்கு
உயவு - வருத்தத்தை
ஏ - பாணமுதலிய பிரயோகவாயுதங்களை

இன்று - இல்லாமல்
அடி - செய்தவரே
ஆர் - நிறைந்த
இடை - இடத்தையுடையவரே
சேராய - ஒன்றினுங்கலவாதவரே
எனையும் - எப்படிப்பட்டவற்றையும்
இகு - தனக்குள்ளிழுக்கின்ற
அழு - வியாபகத்தை
உய - செலுத்துகின்ற
அ - அப்படிப்பட்டவரே
ஏய - பொருத்தமான

இன்று - இன்றே
அடியார் - உமது பத்தர்களின்
இடை - நடுவில்
சேராய - சேர்த்த வேண்டும்
எனையும் - தகுதியில்லாத வென்னையும்
இகம் - பூலோகம்
உய்யவே - பிழைக்கும் பொருட்டே. எ-று.

கருத்து:

கங்கையாகிய பெண்ணையு மாத்திமாலையையுந் தரித்துக் கொண்ட தலைவரே யெல்லாவற்றையு மறிகின்ற சூரிய னாணும் படியான வழகையுடைவரே யகரம் போலம்பு பூட்டி போது தோற்றுகின்ற வில்லிகளையு மானையையு மாலைகளையு முடையவரே யெமது மாதாவாகிய வுமையவளா லிகழப்பட்ட பிரமாவுக் காயுதமின்றி வருத்தத்தைச் செய்தவரே யெவ்விடத்து நிறைந்தவரே யொன்றினுங் கலவாதவரே யெல்லாவற்றையும் வியாபகத் தாற்றன்னுட் கொள்கின்றவரே யிந்தவுலகம் பிழைக்கும் பொருட்டடியேனையு மின்றைக்கே யுமது பத்தர்கள் கூட்டத்திற் சேர்க்க வேண்டுமென்பதாம்.

ஞாயம்:

ஆத்திமாலையோடு தரித்த பெண்ணென்றமையாற் கங்கையென்று வருவித்ததுமவளை வாலயகரம் போன்ற வில்லென்றதும் ஒன்றினுங் கலவாமையு மெல்லாவற்றினும் வியாபிப்பதும் பரத்துவத்துக்கு முக்கியலட்சண மென்பது மெனையு மென்ற சொல்லிலுள்ள விழிவும் மையாற்றகு தியின்மை வருவித்தது மாலையென்றும் பாணமென்றுந் சொல்லிய சொல்லான் மாலைகளென்றும் பிரயோக வாயுதங்களென்று மினமென்பது பற்றி வருவித்து மறிக.

இலக்கணம்:

சேர - ஆய என்றது சேராயென வந்தது போன்ற பிரயோகம் வடமொழிக்கே யுரியதெனப் போராடு மிளம்புலவர்க்கிச் செய்யுளுபயோகப்படாதென்பது சித்தம். முதலடியினீற்றிலுள்ள வுய்யவென்னுஞ் சொற்குய வென்றே பொருள் கூறப்பட்டிருக்கின்ற தாதலின் யகரவொற்று லோபித்ததெனப் பகர்வாரனந்த வில்லிற்கு வமையாதலானு மஃதும் யகரத்திற் கயலுருவுடைய தன்றாதலானும் பொருந்தியதெனக் கொள்க. இரண்டா மடியினீற்றிலங்ஙனமுள்ள பதத்திற்கு மங்ஙனமே கொண்டது மெலித்தல் விகாரப் பகுதியாயினு மெழுத்தின் பிறப்பை யோசிக்கி லியல்பின்பாற்றேயாம். உ, அ - சுட்டுக்கள். அம் மென்னும் பொருட்பெயர்ப்பின்னும் உய் யென்னுந் தொழிற் பெயர்ப்பின்னும் வந்துடைமை காட்டியவாற்றிவாறு முளர். இங்ஙனம் பதந்தோறு முள்ள சாரங்களை விரிப்பதுரை

யாசிரியனது கடமையாதறிற் சுருக்கமாய் முக்கிய ஞாயங்களை யொருவாறு கூறுகின்றாம்.

18. இகபாசா தனந்தா ராயவினை யினிட ரறுத்தே
இகபாசா தனந்தா ராயவினை யினிட ரறுத்தே
இகபாசா தனந்தா ராயவினை யினிட ரறுத்தே
இகபாசா தனந்தா ராயவினை யினிட ரறுத்தே.

இதன் பொருள்:

இ - பாதியும்
க - முழுமையுமாகிய
பா - கடவுளே
சாத - பரிசுத்த முடையவரே
நந்தா - கெடாதவர்களாகிய சித்தர்களுக்கு
ஆய - தாய் போன்றவரே
வில் - எல்லாப் பிரகாசங்களுக்கும்
நை - இகழ்ச்சியைத் தருகின்றவரே
இன் - இன்ப சம்பந்தமான
இடர் - ஆகாயவாசிகளாகிய தேவர்களுக்கு
அல - மதிள் போன்ற தன்மையை
துத்து - அநுபவிக்கின்ற
ஏ - பாணமும்

இக - எல்லாவற்றையுஞ் செயிக்கத்தக்க
பாசா - மழுவாயுதமுடையவரே
தன் - தமது
அம் - பொன்மை நிறம் பொருந்திய
தாராய - கொன்றை மாலையுடையவரே
வினையின் - வஞ்சகத்தினும் பெருத்த
இடர் - ஆபத்தாகிய
அல் - இருண்டவிடத்தை
து - புசித்த
தே - தெய்வமே

இகு - உயிர்களை யழைக்கின்ற
அபா - மாயை நரகமாதியவற்றின்

சா - நாசமாகிய
தனம் - தன்மையையும்
தார் - வெற்றியையும்
ஆய்வின் - ஆராய்ச்சி யாலுண்டாகும்
ஐ - அலங்காரத்தையும்
இன் - எவர்க்கும் பிரியத்தைத் தருகின்ற
இடர் - தலமாகிய பூலோகத்தார்களின்
அறு - ஆறுவித
உ - சுட்டுதலாகிய சமயங்களையுடைய
தே - கிருபையையும்

இக - இம்மைக்கும்
பா - மறுமைக்கும்
சாதனம் - வேண்டிய வுறுதிகளையும்
தாராய் - கொடுத்தருள்வீராக
வினையின் - எனது கருமபந்தத்தாலுள்ள
இடர் - தடைகளை
அறுத்து - நிவிர்த்தி செய்து. எ-று.
ஏ - ஈற்றசை.

கருத்து:

பாதியாயு முழுமையாயுமிருக்கின்ற பரிசுத்தக் கடவுளே நித்தியர்களிற் றலைமையானவரே சிறந்த பிரகாசத்தை யுடையவரே தேவர்களையி ரட்சிக்கின்ற விட்டுணுவாகிய பாணத்தையுஞ் செயம் பொருந்திய மழுவையுமுடையவரே பொன்போன்ற கொன்றைமாலை தரித்துக் கொண்டவரே வஞ்சகத்தினுங் கொடிய விடத்தை யுண்ட தெய்வமே யடியேனுக்கு மாயை முதலியவற்றைக் கெடுக்கும் வெற்றித் தன்மையையுங் கல்வியலங்காரத்தையும் பூலோகத்தில் விளங்குகின்ற சட்சமயங்களிலும் வியாபிக்கின்ற கிருபையையு மிக பரங்களுக்கு வேண்டிய சாதனங்களையும் பழவினையாலுள்ள விக்கினங்களைத் தவிர்த்துத்தர வேண்டுமென்பதாம்.

ஞாயம்:

அர்த்த நாரீசுர மூர்த்தியாயிருந்தவ ரென்று தோற்றப் பாதியென்றுஞ் சீகண்ட பரமேசுர மூர்த்தியாதியாயிருந்தான் முழுமையுமென்று மெல்லாப்பிரகாசங்களு மட்கும்படியான

பெருஞ்சோதி வடிவாரதலி னவற்றிற் கிகழ்ச்சியைத் தருகின்றவரென்று மசுரர்களைக் கெடுக்குந் தன்மை தோற்றத் தேவர்களைக் காக்கின்ற பாணமென்றுஞ் சொன்னதன்றி இகத்தலைப் பொதுப்படச் சொன்னமை பற்றி யெல்லாவற்றையுஞ் செயிக்கின்ற பரசென்றும் உண்டமை பற்றி யல்லென்ற சொல்லில் விடமென்றும் நிறம் பற்றித் தாரென்ற சொல்லிற் கொன்றை யென்று மாறுவிதச் சுட்டுள்ள கிருபை யென்றதாற் சமயங்களென்றும் வருவித்தவாறும் பிறவுமறிக. இவற்று ளாறு விதச் சமயத்தும் வியாபித்த கிருபை யென்ற சொல்லிளம் பக்குவிகளாயுள்ள பலருக்கிசை யாதாயினு மட்டமூர்த்தி நிலைவரை யுணர்ந்த பெரியோர்க்கா மென்பதுங் காண்க.

இலக்கணம்:

முதலில் இகவென்ற சொல்லை யல கெழுத்தாகக் கொண்ட தான்றோராட்சியேயாம் நை யென்னு மிகழ்ச்சிக் குறிப்புச் சொல்லை கொண்டிடத் தாலதைத் தருகின்றவரென வருவிக்கப்பட்டது. இன்னென்னு மைந்தா முருபினிலை நன்குணராராய்ப் பல புலவர் மயங்கறீர் - விரண்டாமடியில் வினையினிட ரெனவஞ்சகத்தினுஞ் சிறந்த வாபத்தெனப் பொருடரும்படி பிரயோகித்திருக்கின்றது. அவ்வுருபே சாரியையாய் வந்து நான்கினு மூன்றினுமாறினும் பழகிய வழக்கத்தாலொவ்வோருழியாறை மாத்திரந் தனதாகக் கொண்டு தொகலியாதுமின்றி வழங்கலுண்டதை நான்காமடியிலங்ஙனம் வினையினிடரெனக் கருமத்தினது தடையெனப் பொருடரும்படி யமைத்திருக்கின்றது. யதனையேழிற்கு முபயோகிக்கின்ற வர்களுமுள்ள வுலகத்திலி யாவரென சொல்லிற்றான் றகாதென்னுந்தம்பு முற்றிருக்கின்றாம்.

19. அறுகால வாவு மிதழியம் மானையடை மனமே
அறுகால வாவு மிதழியம் மானையடை மனமே
அறுகால வாவு மிதழியம் மானையடை மனமே
அறுகால வாவு மிதழியம் மானையடை மனமே.

இதன் பொருள்:

அல் - இருண்ட பாவமானது
து - விழுங்கிக்கொண்ட

கால - காலத்தின்
வாவு - புண்ணியத்தை நீக்குந் தன்மையும்
உமி - உமியையும்
தழு - தன்னதென்றே யேற்றுக்கொள்ளும்
இயம் - வார்த்தையோடு கூடிய
மால - ஆசையும்
நை - இகழ்ச்சியும்
அடு - கொல்லும்
ஐ - அரசாகிய நமனது
மல - போரும்
ந - சூனியத்தில்
மேய - போய்

அறு - கெடுகின்ற
கால - மக்களின்
ஆ - வியப்பைத்தருகின்ற
உம் - உங்காரத் தொனியும்
இதழ் - அதரத்தினிடத்து
இ - இகரம் பிறக்கும் போதுண்டாம்
அம் - தோற்றம் போன்ற குறுநகையழகுள்ள
ஆனை - பெட்டையானைக் கொப்பான பெண்கள்
அடு - வெதுப்புகின்றதால் வரும்
ஐ - சேற்றுமரோகமும்
மனமே - சேரப்பெறவே மாட்டோம்

அறுகு - அறுகம் புல்லும்
ஆல - கல்லால் விருட்சமும்
அ - அகர வெழுத்தும்
ஆ - இடப வாகனமும்
உம் - மவுன நிச்சயத்தைச் சொல்லும்
இதழ் - ஓலையேடும்
இயம் - உடுக்கை வாச்சியமும்
மான் - மானும்
ஐ - தகட்டு வடிவான
அடை - ஆலிலையில் வசிக்கும்
மன - அரசாகிய விட்டுணுவும்
அம் - கங்கையும்
ஏய் - பொருந்திய

அறுகால் - வண்டுகள்
அவாவும் - விரும்புகின்ற
இதழி - கொன்றை மாலையைத் தரித்த
அம்மானை - சகலருக்கும் பிதாவாகிய சிவபெருமானை
அடை - அடைக்கலமாகச் சேரக்கடவாய்
மனமே - நெஞ்சமே. எ-று.

அன்றியும் ஏட்டிற்கடையாய்வந்த. உம்மென்னும் பதத்திற் கெண்வடிவாக் கொண்டபடியிரண்டுமெனக் குறித்து வேதாகம சித்தாந்தத்தை யுள்ளவெனக் கூறினுமமையு மங்ஙனமாயினும் விகாதமற்ற மவுனமேயாம்.

கருத்து:

புண்ணியத்தை விலக்குகின்ற காலவிரோதமும் பேராசையு நிந்தையுமெம வாதனையுஞ் சூனியவாதிகளின் கெருவமும் பெண்களாலுண்டர முட்டின் சென்னியமான கயரோகமாதியு நம்மைச் சேரவே மாட்டாதனவர் மறுகம் புல் கல்லால விருட்சமகாவெழுத் திட பவாகனஞ் சிவஞான போதமென்று மகா வாக்கிய சாரமென்றுஞ் சித்தாந்தவேதாந்தக் கட்சிக்காரர்கள் போராடுகின்ற சுவடி யுடுக்கை மத்தளமாதிய வாச்சியங்கள் மானவிட்டுணு கங்கையென்னு மிவற்றை யுடையவராய்க் கொன்றை மாலையோடு விளங்குகின்ற பிதாவாகிய சிவபெருமானை யடைக்கலமாகச் சேரக்கடவாய் மனமே யென்பதாம்.

ஞாயம்:

பாவத்தைக் கறுப்பாகச் சொல்வதான்றோர் வழக்காதலினல் லுண்டகால மென்றதைப் பாவசம்பந்தமாகவு மதுவிலக்குவது புண்ணியத்தையே யாதலினத் தன்மையென்றுஞ் சொன்னதும் சூனியத்திற் போய்க்கெடுக்கின்றவர்களென்றது சகுணப்பிரம தூடண மதப்பிரவேசிகளைக் குறித்தும் அவரது கெருவத் தொனியதனால வருறுங்கேட்டை யறிந்தோர்க்கு வியப்பா மாதலின் தன்னைத்தருகின்ற தென்றும் இகரத்தை யுச்சரிக்கும்போது சிறிது பல்வரிசை தோற்று மாதலிற் குறுஞ்சிரிப்பிற் கதனைச் சொன்னதென்று மிலையில் வசிக்குமனனென்றதற் காலிலை யெனவருவித்தது முதலியனவுமறிக. அல்லாமலும் பேராசையாலு லோபம் பிறந்த தனானிந்தை யுண்டாமாதலின் தன் பின்னதனைச்

சொல்லப்பட்டதென்றும் வாச்சியமெனப் பொதுப்படச் சொற்றலினடனத்திற் குபயோகமான மத்தள முதலியவற்றைக்கூட்டிச் சொல்லப்படுமென்று மிடபவாகன மாதன முதலிய விபகாரத்தால் விட்டுணுவை யுடையாரென்றும் பலவாறு விரிக்கில மாயினு மறியத்தக்கோர் சொல்வது கடனேயாம்.

இலக்கணம்:

தழுவிய மெனவரவேண்டிய முற்றுகரந்தழிய மெனக்குற்று கரமானது மியமாலென வரவேண்டு மிடத்தியம்மா லென மகரமிரட்டலு நவினமே யென்பதற்கு நமே யெனவந்தவுருபுத் தொகையாதியு மியல்பான செய்யுள் விகாரங்கள். கால ஆனை என்று மொருமையைப் பன்மைப் பொருட்குபயோகப் படுத்தியிருக்கின்றதும். மன்னமே யென்றலை மனமேயென மெலித்தது மான்றோ ரட்சியே யன்றி வேறல்ல.

20. மனமடங்கத் தக்க சீர்த்தரு வாய்விடை வாகனனே
மனமடங்கத் தக்க சீர்த்தரு வாய்விடை வாகனனே
மனமடங்கத் தக்க சீர்த்தரு வாய்விடை வாகனனே
மனமடங்கத் தக்க சீர்த்தரு வாய்விடை வாகனனே.

இதன் பொருள்:

மன - பெரிதான
அமடு - ஆபத்தாற் கிடைத்த
அங்க - அடையாளத்தையுடைய
தக்க - தக்கனுடைய
சீர் - செல்வமும்
தரு - கற்பக விருட்சத்தின்
வாய் - இடமும்
விடை - வினாவுக்கெதிர் மொழி கூறும்
வாகு - அழகிய தன்மையைப் பொருந்திய
அன்ன - அன்ன பட்சியை யுடைய பிரமாவின்
நேமனம் - விதியும்

அடம் - பொல்லாங்கும்
க - முழுமையான

தக்க - தக்கத்திற்குரிய
சீர் - சொற்சீர்களும்
தரு - இராகத்தின் சுதியை
வாய் - வாயினால்
விடு - மூங்கிற்குழல்வழி விடுகின்ற
ஐ - கடவுளாகிய விட்டுணுவுக்கு
வாகு - தோளை
அன்ன - போன்றனவாகிய வருச்சுனன்
ஏ - பாணத்தாற் செய்யும்

மல் - போரும்
ந - சூனிய சம்பந்தமான
மடம் -பேதையும்
கத்து - குரைக்கின்ற
அக்க - நாயினது
சீர் - சுபாவம் பொருந்தியதால்
தகு - உண்டாகின்ற
ஆய்வு - வருத்தமும்
இடை - ஆகியவிவற்றிலெல்லாம்
வா - தாவுகின்ற
கன - மிகுதியான
நே - பிரியமுள்ள

மனம் - அடியேனது நெஞ்சம்
அடங்க - சலனமற்றிருத்தற்கு
தக்க - தகுதியான
சீர் - சிறப்பை
தருவாய் - கொடுத்தருள்
விடை - இடபத்தை
வாகனனே - வாகனமாகக் கொண்ட சிவபெருமானே.

கருத்து:

தக்கனடைந்திருந்த செல்வத்திலுஞ் சுவர்க்கபோகத்திலும் பிரமா விதித்த விதியிலுங் குரூரத்திலும் வித்துவான்கண் முற்றிலு மறுத்தற் கேதுவான சொற்களிலுங் கண்ணபிரானுக்குத் தோள்போன்ற வருச்சுனன் பாணத்தாற் செய்த சண்டையிலுஞ் சூனிய வாதத்தைக் குறிக்கின்ற மடமையிலு நாய்போன்றலைந்து பொறாமைப்படுகின்ற

குணத்தாலுண்டாகுந் துன்பத்திலுந் தாவுகின்ற பெரும்பிரியமுள்ள வெனது மனமே காக்கிரப் படும்படிக்கான வுபாயத்தைத் தந்தருள வேண்டுமிட பாரூடரான சிவபெருமானே யென்பதாம்.

ஞாயம்:

தக்கன் பெற்ற வடையாளமாவ தாட்டுத்தலை யென்றும் பிரமா வெந்நேர முனிவர்களுக்கு விடை கூறுகின்ற வராதலின் தனிலழகிய ரெனக் கூறியதென்று மான்றோராட்சிக்கு விரோதமான சொற்பிரயோகத்தாற் றக்கத்து கேதுவெனச் சொன்னதென்றுஞ் சகல தேவர்களையுங் கைவசப்படுத்திக் கொண்டீசுரத் தன்மையடைய விரும்பு மரசுத் தன்மையு மொருக்கால் வருவதுண்டாதலிற்றக் கனையெடுத்துக் காட்டிய தென்பது போலொவ்வொருசொல்லிற்கு ஞாயமெழுதிற் பெருக்கு மறிவாரறியத்தக்கனவே யெனவிடுத்த தென்று மறிக. உறுத்திப் பார்க்கின்னறித் தோற்றற் கரிய விரண்டொன்றைக் காட்டியிருக்கின்ற தென்றுங் காண்க.

இலக்கணம்:

அன்னத்தை யுடையவனென்றும் போன்றோனென்றும் பொருடரு மொருபதத்தை யிரண்டிடத்திலன் னென மேலித்துக் கூறியிருக்கின்றது. ஒருக்கரத்தை யெண்வடிவாக கொண்டு முழுமைக்குபயோகப் படுத்தியிருக்கின்றது. தக்கன் சீரையுந் தக்கச் சீரென்றும். அக்கன சீரை யக்க சீரென்றும் பிரயோகித்தமை முறையென்றும் விகார மென்றும் போராடுநருள ராயினும் விகாரமென்றலே யுத்தம பாக மென்றொப்புகின்றாம். உரையின் மூங்கிற் குழலை வருவித்ததுங்கத் தென்னும் பெயரெச்சத்தின் பின்னாயினது பெயர் வந்தமையாற் குரைக்கின்றவெனப் பொருள் கூறியது மாதிய வியல்பிற் கெல்லாம் விதியு ஞாயமு மெழுதியேட்டை வீணே செலவு செய்கின்றிலமாதலிற் றக்கோர் விரித்துரைப்பது கடனேயாம்.

21. வாகனந் தத்தா னாரணற கான வரோதயனே
வாகனந் தத்தா னாரணற கான வரோதயனே
வாகனந் தத்தா னாரணற கான வரோதயனே
வாகனந் தத்தா னாரணற கான வரோதயனே.

இதன் பொருள்:

வாகன் - அழகியரும்
நம் - எமது
தத்து - ஆபத்தாகிய விரும்பை
அரண - பொடிக்கின்ற வரம்போன்றவரும்
நார் - அன்பு
அண - பொருந்திய
அல் - இருண்ட நிறமுள்ள
கானவர் - வேடர்களின்
ஓதையன் - ஆரவாரத்தொனியை யுடையவரும்
ஏ - தமது பாணத்தையே

வாகனம் - வாகனமாகவுங்கொண்ட
தத்தான - மிகுதி விரைவை யுடையவரும்
ஆரணன் - பிரமாவை
கால் - இகழ்கின்ற
நவர் - புதுமையோர்
ஓது - துதிக்கின்ற
அயன் - ஐயரும்

ஏவா - தூண்டிச் செலுத்தி
கனம் - மேகத்தின்மீது
தத்தா - தவழ்கின்றவர்களாகிய விந்திரர்களும்
அனார் - அவரைப் போன்றோர்களும்
அணற - அடைந்திருக்கிற பெருமையின்
கான் - வாசமாயிருப்பவரும்
அவர் - அந்தத் தேவர்கள்
ஓ - வியக்கத்தக்க
தையல் - உமையவளின்
நே - பிரியமுற்ற

வாகு - தோள்கள்
அனந்தத்து - அனேகத்தையுடைய வருமாகிய
அரன் - சிவபெருமான்
நாரணற்கு - மகாவிட்டுணுவுக்கு
ஆன - வேண்டிய

வர - வரப்பிரசாதங்கள்
உதையன - உதித்தற்கிடமாயிருக்கின்றார். எ-று.
ஏ - ஈற்றசை.

கருத்து:

அழகிற் சிறந்தோரு நமதாபத்துக்களைப் பொடிக்கின்ற வரும் வேடர்களி னாரவாரத்தை யுடையவரும் விரைவாகச் செல்லும் பொருட்டுத் தமது பாணத்தை வாகனமாகக் கொண்டவரும் பிரமாவை மதியாதவர்களாற் றுதிக்கப்பட்டவை யரு மேகவாகனத்தைக் கொண்ட விந்திரர்களு மற்றைத் தேவர்களும் பெற்றிருக்கிற பெருமைக்கொரு மணமாயிருப்பவரும். அவர்களால் வியக்கத்தக்க வுமையவள் விரும்பும் பல தோளுள்ளவருமான சிவபெருமான் விட்டுணுக்கு வேண்டிய வரங்கொடுப்ப ரென்பதாம்.

ஞாயம்:

அரமென்ற நிமித்த மிரும்பென்ற வுவமையையும் பொடிக்குந் தொழிலையும் வருவித்தது மருச்சுனனுக்குப் பாணங்கொடுக்கப் போம்போது நிகழ்ந்தமை கருதி வேடராரவாரமுடையா ரென்றதும் பாணமும் வாகனமு மோரமிசமாதலின் விரைவின் பொருட்டங்ஙனஞ் செய்தாரென்றதுங் கருமபந்தத்தை நிவிர்த்திப்போனே யீசுரனென்னுந் துணிவுடையோரே துதிப்பாராதலிற் பிரமாவை யிகழ்கின்றோ ரென்றதுமப் பிரமா கருமப்படி விதிப்பா னென்பது மெத்தேவர் வாழ்வு மீசுரப் பிரசாத மென்பனவற்றின் மணமென்றதுந் தனது விளையாடற்கு முக்கியக் கருவி விட்டுணுவாதலினவர்க்கே விருப்பின்படி யருள்வார் ரென்றது மறிக.

இலக்கணம்:

வாகனத்தினறத் தானெனப் பொருடரும்படி வாகனந்தத் தானென்றதுங் கனத்திற்றத் தரென்பதற்குக் கனந்தத்த ரென்றதும் பிறவு முருபுத்தொகை. ஐகாரமும் போலியுந் திரிசொற்கவிகளிற் பிறழும் பெருத்த வாய்பாடு பற்றி. ஒதையன். என்னும் பதத்தைத் திரித்தவாறுணராது மருளு மிளம் புலவரைத் திருத்தி செய்தற்குரியர் சிலரிருப்பா ரென்பது சித்தம்.

கொப்பளிக்கின்றவெனப் பெயரெச்சப் பொருட்டருங் காலென்ற பதத்தை யிகழ்ச்சிக் குபயோகப்படுத்தியது பெரிதிகழ்வாரு மிழுந்தன்மை பற்றியெனக் காண்க. அஃதேயுமிதலென் வழங்குதலுமுண்டு. அங்ஙன முன்பிரயோகித்து மிருக்கின்றா மனச்சாட்சியறியத் தெய்வ கிருபை பெற்ற பொருட்டுப் பாடலென்றறி யாரை யெங்ஙனந் தேற்றினும் பயன்படா தென்பது மறிவாம்.

22. வரந்தந் தடியரிடைக் கூட்டி யானு மகிழவையே
வரந்தந் தடியரிடைக் கூட்டி யானு மகிழவையே
வரந்தந் தடியரிடைக் கூட்டி யானு மகிழவையே
வரந்தந் தடியரிடைக் கூட்டி யானு மகிழவையே.

இதன் பொருள்:

வரம் - மேலான
தந்து - நூலாகிய வேதத்தை
அடு - உண்டுபண்ணிய
இயர் - வார்த்தை யுடையாராகிய பிரமாக்களையும்
இடை - இடைச்சாதியின்
கூட்டி - கூட்டத்தையுடையவரான விட்டுணுவையும்
ஆன - இடபவாகனத்தையும்
உ - பிற்புறத்தில்
ம - மகா வடிவு போலுங் கூனையுடைய
கிழ - முதுமையின்
ஐ - தலைமையுற்ற பிட்டுவாணிச்சியின்

ஏவு - ஏவற்பணியையும்
அரம - சங்கார கிருத்தியத்தையும்
தந்து - நூலை
அடி - செயிக்கத்தக்கதாய்
அரு - உருவின்றி விளங்கும்
இடை - இடையினது
கூட்டி - பொருத்தத்தைக் கொண்ட வுமையவளையும்
ஆனு - கெட்டுப்போன
மகிழ் - மகிழம்பூ மாலைத் தரிப்பவனாகிய மன்மதனது
ஐ - ஐந்தாகிய

ஏவு - பாணங்களை
அரம் - பொடிக்குமரம் போன்ற தன்மையையும்
தம் - சொந்தமாக
தடியா - தண்டத்தைக் கொண்டுள்ள பூதர்களுக்கும்
இடைக்கு - அயிராவண யானைக்கும்
ஊட்டி - உணவு கொடுக்குமாயுதங்களையும்
ஆன - உடைவரான சிவபெருமானே
உ - இருவிதச் சமபந்தத்ததான
ம - மவுனமந்திரத்துக்கு
கிழ - உரிய
ஐயே - அழகிய தன்மையையே

வரம் - வரப்பிரசாதமாய்
தந்து - கொடுத்து
அடியர் - உமதடியார்களின்
இடை - மத்தியில்
கூட்டி - சேர்த்து
யானும் - இழிந்தோனாகிய நானும்
மகிழ் - சந்தோட முறுபடி
வை - வைத்தருள்வீராக. எ-று.
ஏ - ஈற்றசை.

கருத்து:

பிரமர்களையும் விட்டுணுவையும் பிட்டு வாணிச்சியின் குற்றேவலையுஞ் சங்காரத் தொழிலையு முமாதேவியையு மன்மதனதுபஞ் சபாணங்களைப் பொடிக்குந் தன்மையையும் பூதர்களுக்குமயிராவண யானைக்கு முணவூட்டு மாயுதங்களையுமுடைய சிவபெருமானே சமரச நிச்சயமான மகாமவுனத்தாலுண்டாகு மலங்காரத்தையே பிரசாதமாகக் கொடுத்தென்னையு முமதடியார்களிற் சேர்த்துப் பரமானந்தத்தை யநுபவிக்கும்படி வைத்தருள வேண்டு மென்பதாம்.

ஞாயம்:

சாவுயிர்களின் களேபரங்களைப் பூதர்களுண்பதாலு மேனைய வசரங்களை யவ்வானை துய்ப்பதாலுமிருவகையையு முடிவிற் சங்கரிக்கின்ற கடவுளை யவற்றிற் கிரையூட்டுமாயுத

முடையாரென்றதும் வேதாந்த சித்தாந்த சம்பந்தமென்பா னிரண்டெனக் குறித்தது மங்ஙனம் பொருந்தின்னறி மவுனநிச்சயந் தோன்றா தென்பது மிதனை முன்னும் விரித்துள்ளவாறு மற்றவை வெளிப்படையாதலின் விரித்தில மென்பது மறிக. பிரமர்களென்றும் விட்டுணுவென்றும் பிட்டுவாணிச்சியென்று முமையவளென்றும் வருவித்துள்ளனவு மனைய பிறவும் பண்பாலமைக்கப்பட்டன.

இலக்கணம்:

இகரவீறு பெண்பாற் பொருத்தமாயினு மேகதேச மாண்பாற்கும் வருதல்பற்றிக் கூட்டத்தை யுடையவனைக் கூட்டி யென்று சொல்லப்பட்டது. கிழவையென்ற சொல்லைக் கிழத்தலைமையெனக் கொண்டு வலிந்து பெண்பாற் பொருத்தமாக்கியதை யைகாரமதன் விகுதி யாதலினம் மொழியே கிழவியெனப்படுமென்பார் சிலரவரே சுதந்தர யூகப் புலவராவார். ஒரு கரத்தையெண்வடிவாக கொள்ளப்பட்டது. யானும் என்ற தினின்றவும்மையிழிவைப் பொறுத்தது மேவற்றொழியே வென்ற தாதிய வியல்பு விகாரங்களுந் தொகைகளு மறியத்தக்கவே யாதலின் விரித்திலம்.

23. வையத் தொருகுரு வாவடியே னெதிர்வா சிவனே
வையத் தொருகுரு வாவடியே னெதிர்வா சிவனே
வையத் தொருகுரு வாவடியே னெதிர்வா சிவனே
வையத் தொருகுரு வாவடியே னெதிர்வா சிவனே.

இதன் பொருள்:

வை - இகழப்படுகின்ற
அத்து - சம்பந்தங்களை
ஒரு - நீக்கத்தக்கதும்
குரு - நிறத்தில்
உவா - பௌரணைச் சந்திரனைப் போன்றதுமாகிய
அடியேன் - சுடப்பட்ட வெண்ணீற்றையு டையவனியான்
எதிர் - அஃதின்மை யாகிய வேனைத்தன்மை
வாசி - அதிகரித்த
வன் - கடின
நே - நேயத்தை

வை - வைத்திருக்கிற
அத்தொர் - சிவப்பாகியார் சத்குணத்தோர்
உகு - அதினின்று விடுபடும்படி செய்யத்தக்க
உரு - மந்திரசெபத்தின்
ஆ - வியப்பை
அடி - உண்டுபண்ணும்
ஏன - பன்றியை
எதிர் - போன்று
வாசி - வசித்த கருணையையுடையவரே
வன் - துளசியைத் தரித்துக்கொண்ட
ஏவு - பாணத்தையுடைய

ஐ - தலைவரே
அத் - ஒரு
ஒரு - ஆட்டுக்கடாவால்
குரு - பெருமைபெற்ற
உவா - இளையோனாகிய முருகப்பெருமான்
அடி - உற்பத்திக்காரணமானவரே
ஏன - என்கின்ற
எதிர்வு - வரு காலத்தைக் குறித்த
ஆசி - தோத்திரத்தின்
வன் - வல்லபத்தை
ஏவ - ஏவும்

வையத்து - உலகத்தில்
ஒரு - சமானமற்ற
குருவா - ஆசாரியராய்
அடியேன் - அடிமையாகிய வெனது
எதிர் - முன்பக்கத்தில்
வா - வருவீராக
சிவனே - சிவபெருமானே. எ-று.

கருத்து:

நிந்தையெல்லா நீக்கத்தக்கதாய்ப் பௌரணையைப் போற் பிரகாசிக்கின்ற திருநீற்றை யுடையவனாக விருக்கின்றேன் தன சமபந்தமில்லாத கடின சங்கற்பத்தோடு கூடிய ரசோகுணத்தோரை யதினின்று விடுவிக்கத்தக்க மந்திர

செபத்தி னாச்சரியத்தை யுண்டுபண்ணு மொருக்காற் றாயை யிழந்த குட்டிகட்காகப் பன்றியாயு மிருந்தவரே துளவ மாலையைத் தரித்த விட்டுணுவாகிய பாணத்தைக் கொண்ட தலைவரே. யாட்டு வாகனத்திலேறு முருகக் கடவுளுற் பத்திக்கு மூல மானவரே யென்வெதிர்கால நன்மையைக் குறித்துத் தோத்திரஞ் செய்யுந்திறத்தைக் கொடுஞ் சமானமற்ற குருவடிவாகிப் பிரசன்னமா வாருஞ் சிவபெருமானே யென்பதாம்.

ஞாயம்:

இகழப்படுகின்ற வெனச்சொன்ன பொதுமையாலி யாவருமெனக் கொள்ளற் பாற்றாயினு முத்தமர்களா லெனக் கொள்ளினன்கு பொருந்தும் சிவப்பின் பெயராகிய வத்தென்ற சொல்லிற்கு முன்னமைந்த கருத்தாலிரா சத்குணம் வருவிக்கப்பட்டது. பன்றிகுட்டிகட்குப் பால்கொடுத்த திருவிளையாடலால் தாய் வசித்தவரென்ற சொற்பொருந்திற்று. ஆட்டுக் கடாவாற்றேவ லோகமழியாது காத்தமையா லதனாற் பெருமைபெற்ற முருகனெனச் சொல்லப்பட்டது.

இலக்கணம்:

அத்தோரென்ற பதம் அத்தொரெனக் குறுக்கல் விகாரமாயிற்று. ஏனெதிரென்ற பதத்திற்கேன வெதிரெனப் பொருள் கூறப்பட்டிருக்கின்ற தங்ஙனங் கூட்டுமென்பாரு மேனெனச் சாரியை கெட்டுநின்ற தென்பாருமுளார். வனேயென்ற சொல்லை வனவேயெனக் கொண்டது. முற்கூறியதேயே போலும். அத்தென வல்லொற்றீற்றுள்ள பதமுந் தமிழ்க்கியை வோவென்பா ரங்ஙனமன்ற கரத்தினுயர்ச்சி பற்றியொன்றிற்குந் தாழ்ச்சியைக் கழித்து நின்றமை பற்றிப் பாதிக்கு முவமை யுருபினத் தொன்றாகிய வத்துச்சாரியை யதனுள்ளடக்கி முன்னோராண்டமையாற் கூறப்பட்டது. என்னென்ற பதமேனென நீட்டல் விகாரமுற்றது. ஏவ - என்ற பதத்தீற்றுள்ள வகர வொற்றோடவ்வுயிர் மெய்புணர்ந்தவாறு மம்மொழி யெனக்குபயோகப்படும்படி யனுப்பெனப் பொருடந்தவாறு மறிவார் சிலரன்றிப் பலரலர். இவையன்றி யொருபத்துடனொரு பதம் புணர்ந்து பொருடந்து நின்ற விபரமுற்று மெழுதற்பாலவன்றாயினு மறிவாரறி யத்தக்கன வேயாம்.

24. வாசி யிலேறிய சேவகனார் திருவா சகமே
வாசி யிலேறிய சேவகனார் திருவா சகமே
வாசி யிலேறிய சேவகனார் திருவா சகமே
வாசி யிலேறிய சேவகனார் திருவா சகமே.

இதன் பொருள்:

வா - தாவுகின்ற
சியில் - நெருப்புப் போன்று
ஏல - ஒருமிக்கின்ற
திய - புத்தியையுடையனவான ருத்திரகணங்களை
சேவு - காக்கின்ற
அகன் - திருவுள்ளத்தையும்
ஆர் - நிறைந்த
திரு - செல்வத்தின்
வாச - மணமுள்ள
கம - சுவர்க்க பரியந்தம்

மேவு - வியாபிக்கின்ற
ஆசி - தோத்திரத்திற்கு
இறை - உறைவிடமாய்
ஏறு - இடி போன்றுள்ள
இய - வார்த்தையின்
சேவக - பணியாகிய புலமைத் தொழிலினது
நார் - அன்பையும்
திரு - இலக்குமியின்
வாச - வசிப்பிடமான
கம - மேகம் போன்ற விட்டுணுவாகிய

ஏவு - பாணத்தையும்
ஆசி - விரும்புகின்ற
இல் - மனைவியான வுமையவளையும்
ஏறு - இடபத்தையும்
இய - புகழையும்
சே - அழிஞ்சின் மரமானது
வகு - பிரித்துத்தள்ளப்பட்ட வித்தை
அனார் - போன்றோராகிய ஞானவான்களையும்

திரு - அழகிய
உவா - யானை யாகிய வயிராவணத்தையும்
சகம - பிரவஞ்சத்தையும்
மேவ - பொருந்தியவராய்
வாசியில் - குதிரையில்
ஏறிய - ஏறிக்கொண்ட
சேவகனார் - ஞானவீரமுற்ற சிவபெருமான்
திருவாசகமே - திருவாசகமென்னுந் தமிழ் வேதத்தின் வடிவாயே யிருக்கின்றார். எ-று.

கருத்து:

சஞ்சரிக்கின்ற நெருப்புப் போன்ற புத்தியோடு கூடிய ருத்திர கணங்களைக் காக்கின்ற திருவுள்ளமுஞ் சுவர்க்க பரியந்தம் வியாபிக்கின்ற தோத்திர சம்பந்தமா யிடிபோற்றொனிக்கும் வார்த்தை வடிவான புலமைப்பணியின் பிரியமும் விட்டுணு வடிவான பாணமு முமையவளாகிய பிரியநாயகியு மிடபவாகனமும் புகழுமழிஞ்சி விதைபோன்ற ஞானிகளும் பிரவஞ்சமுந் தமது சொந்தமாகக் கொண்டொருக்காற் குதிரையிலேறிய ஞானவீரனான சிவன் வடிவந் திருவாசகமாகவே விளங்குகின்ற தென்பதாம்.

ஞாயம்:

சதாசிவ சொருபத்தைக் குறிக்கும்போது ருத்திராதியர் பத்தகணங்களே யாவாராதலினவரைக்காக்கின்ற திருவுள்ளமென்றுந் தேவர்களும் வியக்கும்படி யென்பைப் பெண்ணாக்கிடன் முதலியன தோத்திரப் புலமைச் செயலாதலிற் சுவர்க்க லோக பரியந்தம் வியாபிப்பதென்றுஞ் சுந்தரமூர்த்தியிடஞ் சொல்லியபடி யதிற் பிரியரென்றும் விட்டுணுவாகிய பாணமென்றதன்றியவரேயாகிய மனையவளிடப மென்னினும் பொருந்து மென்று மழிஞ்சிலின் விதையை ஞானி கட்குவமை கூறியது தமது மூலத்தை யறிந்து பற்றிலினென்று மங்ஙனங் கூறுவ தான்றோ ராட்சியென்று மிரண்டாயிரங் கொம்புள்ள வயிராவணமிருக்க நரிக் குதிரையிலேறிய விதங்கூறிய தகத்தியாதியரை யாண்டமை யெண்ணி நம்போல்வாரைக் கைவிடாரென்னுங் கருணை தோற்றவென்றுந் திருவாசகமே சிவன்வடி வென்றதாகம விதிப்படி சிவபூசை செய்யும் வலியில்லாரதனைப் பூசித்தப்

பயனடையலா மென்னுங் குறிப்பென்று மங்ஙனங் கூறியது. புதுஞாயமன்று பிரசித்தமாகப் பலரநுட்டித்து வருமுறை யென்றுமறிக.

இலக்கணம்:

நெருப்பு ருத்திராமிசமாதலினக் கணங்கள் வருவிக்கப்பட்டன. சொல்லோசை தோற்றற் பொருட்டுப் புலமைக்கிடியை யுவமிக்கப்பட்டது. சேவலென்னுங் காவற்பெயரில்ல லென்னும் விகுதியை தள்ளிச் சேவென வெடுத்துக் காக்கின்றவெனப் பெயரெச்சப் பொருடாப் பிரயோகித்ததும். இயவென்ற புகழ்ப் பெயரினுகரச் சாரியைக் கெடுத்தவாறெடுத்துக் கூறும் போது கெடாதுதோன்றும் வியப்பும் போல்வனவு மனசாட்சிக்கு விரோதமானவாறன்று. அழிஞ்சில் வகுத்துத்தள்ளல் வித்தேயாதலினங்ஙனம் வருவிக்கப்பட்டது. கம்மென்றதற்குச் சுவர்க்கமென்றது முற்கூறிய செல்வ நிறைவாற் பொருந்தியது. இல்லெனற் சொல்லோ டுமையவளென்று முவாவென்ற சொல்லால யிராவணத்தையும் வருவித்திட வமைதியால். அன்னாரெனற் றகனாரென மெலித்தல் விகார மொன்று வந்தது. இச்செய்யுள் வண்ண விதியானு மமைந்தவாறு திருவருட் செயலன்றிச் சீவபோதமன்று ஏகபாதச் செய்யுண் முற்று மங்ஙனந்தானே வருமென்றுணரான் போலுமென்று முரணாது சீர்களைக் கருதிச் சொற்றவாறுணர்க.

25. சகவாதனை யறத்தா தாவுனா தணித்தா ளிணையே
சகவாதனை யறத்தா தாவுனா தணித்தா ளிணையே
சகவாதனை யறத்தா தாவுனா தணித்தா ளிணையே
சகவாதனை யறத்தா தாவுனா தணித்தா ளிணையே.

இதன் பொருள்:

சகவா - யாவைக்குஞ் சகாயமாயுள்ளவரே
தனை - எண்ணமைந்த
அற - தருமத்திற் காதாரமான
தாதா - ஈகையுடையவரே
உனா - நினைப்பின் மாத்திரத்தில்
தணித்து - வணங்கும்படி செய்து

ஆள - ஆளத்தக்கோரையாள்கின்ற
இணை - பிரியத்தை யுள்ளவரே

ஏசு - குற்றம் பொருந்திய
அக - மனத்தோடு செய்த
வாது - சபதத்தையுடைய
அல் - இருள்போன்ற சமணர் கூட்டத்தை
நை - கெடுத்த
அற - திருஞான சம்பந்த மூர்த்தியாற் பாடப்பட்ட வொருவிதப் பாடலின்
தாதா - சொன் மூலங்களையுடையவரே
உன் - விருத்தியடைகின்ற
நாத - நாதத்தத்துவத்தின்
அணித்தாள் - நெருக்கமுடையவளான வுமையவளின்
இணை - கூந்தலை

ஏசு - இகழ்ந்த
அக - அகங்காரமுள்ள
ஆதன் - அறிவிலானான நற்கீரன்
அயல் - அருகில்
தத்தா - உண்டான வாபத்துக்குக் காரணமானவரே
தாவு - ஒன்றைவிட்டொன்றிற் பாயுந்தன்மை
நா - இல்லாத
தணி - குளிர்ச்சி பொருந்திய
தாள் - முயற்சியாகிய சாந்தத்திற்கு
இணை - துணைச்செய்கின்றவரே
ஏ - இகழ்ச்சியுள்ள

சக - பிரவஞ்சத்தின்
வாதனை - வருத்த முழுமையும்
அற - தீரும்படி
தாதா - கொடுங்கொடும்
உனாது - உம்முடைய
அணி - அழகிய
தாள் - திருவடிகள்
இணை - இரண்டும். எ-று.
ஏ - ஈற்றசை.

கருத்து:

எல்லாவற்றிற்குஞ் சகாயமாய் முப்பத்திரண்டு தருமமும் வளர்க்கும்படி யம்பிகைக் கிரண்டுபடி நெல்லைத் தியாகமாகக் கொடுத்தவரே யடங்காதவாணவமல சம்பந்திகளாகிய சீவர்களை நினைப்பால் வணக்கி யாளும் பிரியமுள்ளவரே சமணர்களைக் கெடுக்கும்படி திருஞானசம்பந்த மூர்த்திபாடியவறப் பாட்டின் சொற்களிலுள்ள தாதுக்களையுடையவரே யம்பிகையின் கூந்தலை யிகழ்ந்த நற்கீரனுக் காபத்தைச் செய்தவரே விகற்பமற்ற சாந்தமென்னு முயற்சிக்குத் துணைச் செய்கின்றவரே யிகழ்ச்சிமயமான பிரவஞ்ச வாதனை நீங்கும்படி யுமது திருவடிகளிரண்டையுங் கொடுங்கொடு மென்பதாம்.

ஞாயம்:

சருவாந்தரியாமி யாகையா லிப்பாவைக்குஞ் சகாய ரென்றதுந் தருமஞ் செய்தற்குதவலா லறத் தாதா வென்றதும். வாதையுடைய விருளென்றதாற் சமணர் கூட்டமென வருவித்தது. மறமென்ற தொருவரைக் கெடுக்கப்பாடும் பாடற்கும் பெயரென்றது மவ்விரு காரணத்தாற் றிருஞான சம்பந்தரென வருவித்ததுங் கூந்தலை யிகழ்ந்த தன்மையாற் கீரனென வருவித்ததுங் கொடுங்கொடுமென்ற தவசரத்தைக் குறிப்பிட்டது மிரண்டு திருவடிகள் சித்திஞானங் களினுறை விடமென்பது மறிக.

இலக்கணம்:

சகர வென்ற பதஞ் சகவெனக் குறுக்கல் விகாரமாயிற்று. இணையென்னும் பிரியச்சொன் முதலிய பண்பாற் பண்பனைக் கூறப்பட்டிருக்கின்றது. நாதவணித் தாளை நாதணித் தாளெனப் பிரயோகித்திருக்கின்றது. அதனைச் சாரியை கெட்டதாகக் கொள்வாருமுளார். சூனிய பொருடரும் நகரம் நாவென நீட்டல் விகார முற்றது. கோலாகலத்தைக் கோலகால மென்றுஞ் சகட்டைச் சாகாடென்றும் நாகவணையை நாகணையென்றுஞ் செம்பாகக்கவிகளினு மான்றோர் சொற்றுள்ளன வுணர்ந்து மயங்கி நிருவாக முணரா திகல்வாரைத் திருத்தும் விதமெழுதற் பாற்றன்று.

26. தாளிரண்டுஞ் சித்தி முத்தி யென்றோருந் தவந்தக்கதே
தாளிரண்டுஞ் சித்தி முத்தி யென்றோருந் தவந்தக்கதே

தாளிரண்டுஞ் சித்தி முத்தி யென்றோருந் தவந்தக்கதே
தாளிரண்டுஞ் சித்தி முத்தி யென்றோருந் தவந்தக்கதே.

இதன் பொருள்:

தாளிர் - தவமாகிய முயற்சியை யுடையவர்களே
அண்டும் - நன்றாயழுந்துங்கள்
சித்தி - சாத்தியமேயாகும்
முத்தி - திசைகளிலும்
என்றோ - சூரியமண்டலத்திலும் வசிக்கின்றவர்கள்
உந்த - உயர்ச்சியுண்டாம்படி
அந்து - வந்துபொருந்தத்தக்க
அக்க - நேத்திரம்போன்ற
தே - கிருபையும்

தாள் - இயன்ற
இரண் - புசிப்பும்
துஞ்சு - நித்திரையும்
இத்தி - துவர்க்குந் தன்மையும்
முத்தி - மூவகைத்தீயே
என்று - போன்று
ஓர் - ஒரு
உம் - உங்காரத்தொனியும்
தவு - இறந்த
அந்த - எமனது
கது - வடுப்பட்ட விபரத்தை
ஏ - இகழ்கின்ற தெம்பும்

தாள் - கதவின்றாள் போன்று
இரு - விசாலமான பிரவஞ்சத்தில்
அண - சம்பந்தப்பட்டிருக்கிற
தும் - துகளனையவுயிர்களுக்கு நேரிட்ட
சித்தி - சித்தத்தையுடையவராய்
முத்தி - முத்தமிடுமுமையவளையும்
என்று - கால சமுதாயத்தையும்
ஓர் - ஒப்பற்ற
உம் - மவுன நிச்சயத்தையும்
த - குபேரனென்னுந் தோழனையும்

அந்த - அழகிய
அக்க - உருத்திராக்க மாலையையுங் கொண்ட
தே - தெய்வமாகிய சிவபெருமானது

தாள் - திருவடிகள்
இரண்டும் - உபயமும்
சித்தி - அணிமாதி சித்திகளும்
முத்தி - மோட்சமும்
என்று - ஆமென்பதாய்
ஒரும் - தெளிகின்ற
தவம் - தவமே
தக்கதே - தகுதியுடையது.

கருத்து:

முயற்சி வடிவான தவமுடையோரே நன்றாயழுந்துங்கள் சூரியமண்டல முதலான தலங்களிலுள்ளவர்களும் வந்து சினேகிக்கு ஞான நேத்திரக் கிருபையு மாகார நித்திரையில் வெறுப்பு மூன்று நெருப்புக்குஞ் சமானமான வோருற்சாகத் தொனியுஞ் சாத்தியமே யாமாயினும் பிராணிகளின் பந்தமுத்திக் கிடையிலுள்ள கதவின்றாள் போன்ற சித்தத்தோடு கூடி யுமையவளையுங் காலதத்துவத்தையுஞ் சமானமற்ற மவுன நிச்சயத்தையுங் குபேரனுறவையு மழகிய ருத்திராட்ச வடத்தையுங் கொண்டிருக்கிற சிவபெருமானாகிய தெய்வத்தின் றிருவடிக ளிரண்டுமே சித்திகளாயு முத்திகளாயு மிருக்கின்றன வெனத்தெரியுந்தவமே யப்படிப்பட்ட பெரும் பிரயோசனங்களைத் தரத்தக்க தென்பதாம்.

ஞாயம்:

சருவ சம்மதப்படி தவத்தினும் பெரு முயற்சி யின்மையானும் பின்னிகழு ஞாயத்தானு மதனை வருவிக்கப்பட்டதுஞ் சுத்தமாயா புவன வாசிகளோடும் வியாபிக்குஞ் சூக்கும திடமென்பான் சூரிய மண்டல வாசத்தோராதியா சினேக நேத்திர மென்றது மநுபூதி மேலீடு தோன்றவாகார நித்திரையின் வெறுப்புச் சொன்னதுஞ் சாபா நுக்கிரக சாமாத்தியத்தைப் பற்றி மூவகை நெருப்பும் போன்றவுங்காரமென்றது. மூவகை நெருப்பென்றற்கு முச்சுடர் பிராமணர் வளர்க்கு முத்தீ முதற்பலவாறு பகரப்படு மென்பது மெமபயநீங்குங் குறிப்பாலவனை யிகழுந்தெம்பென்றதும் பந்த

மோட்சங்களுக் கவரே காரணமென்பான் கதவினருள் போன்ற சித்தத்தாரென்றதுஞ் சித்தி முத்தியிரண்டையும் விரும்பலே யறிவிற் சிறந்தோர் பண்பென்பா னங்ஙனங் கூறியதுஞ் சவிகாரசகளோ பாதியுமுடையாரென்பான் சின்னங்களைக் காட்டியது மடியார்களுய்யும் பொருட்டுருத் திராக்கமணிந்தா ரென்பது போல்வன பிறவு மறிக.

இலக்கணம்:

இரணமென்ப திரணென்றுந் துஞ்ச லென்பது துஞ்சென்றுஞ் சாரியை விகுதிகெட்டு நின்றன. துவர்ப்பின் பெயரான வித்தி குறிப்பால் வெறுப்புப் பொருடந்தது. முத்தீ யென்றன் முத்தியெனக் குறுக்கல் விகாரமுற்றது. மூன்றா மடியிலென்று என வந்த சொல்லைக் கால சமுதாயத்துக் குபயோகப்படுத்திய விதமவ் வினாச்சொற்குத் தாமுக் காலத்தைப் பற்றியுங் கூறப்படுமாதலினெனக் கண்டு வியக்கும் புலவனைக் காண மிகவும் விரும்புகின்றாம். தும்மினது தாள் போன்ற சித்தியென்றலைத்தும் தாள். சித்தியென. விபத்தி யுருபும். உவமையுருபுந் தொக்கவாறும். உவமைப் பொருளை முற்கூறி யுடைமைப் பொருளை நடுக்கூறித் தாட்டாந்தப் பொருளைப் பிற்கூறியதி லங்ஙனங் கூறும் பொருள்விரித்த வாறு முணர்வாரேக தேசமேயன்றி வேறல்ல.

27. தக்கனை யட்ட வன்னபாரடி நந்தலைக் கணியே
தக்கனை யட்ட வன்னபாரடி நந்தலைக் கணியே
தக்கனை யட்ட வன்னபாரடி நந்தலைக் கணியே
தக்கனை யட்ட வன்னபாரடி நந்தலைக் கணியே.

இதன் பொருள்:

தக்க - பெருமையான
நயள - நயத்தையுடைய வுமையவளது
தவன - நாயகனும்
நன் - நல்ல
பார் - பூமியை
அடி - உண்டுபண்ணியவனான பிரமா
நந்தலை - கெடுந்தன்மையை
கணி - கருதுகின்ற வரும்
ஏத - குற்றம் பொருந்திய

கல் - மலையான கிரவுஞ்சத்தை
நை - பொடித்தவராகிய
அட்ட - எரிகின்ற நெருப்புப் போன்ற
வன்ன - நிறமுள்ள முருகக் கடவுள்
பார் - வணங்கிய
அடி - மூல புருடனான பிதாவும்
நந்து - சங்கத்தோடு கூடிய
அலை - சமுத்திரத்தை
கணி - இடமாகக் கொண்ட விட்டுணுவான
ஏ - பாணம்

தக்கன - சொந்தமாகப் பெற்றவரும்
ஐ - எல்லாவற்றிற்குந் தலைவரும்
அட்ட - எட்டுவிதமான
வன்ன - வாசத்தலத்தை யுள்ளவரும்
பார் - உரோகணிப் பெண்ணுக்கு
அடி - நெருக்கமான சந்திரன்
நந்தல - விருத்தியடைகின்ற
ஐக்கு - அலங்காரத்துக்கு
அணி - பொருத்தமானவரும்
ஏ - இகழ்ந்த

தக்கனை - தட்சப் பிரசாபதியை
அட்டவன் - சங்காரஞ்செய்தவருமான சிவபெருமானது
அன்பரர் - பத்தர்களான பெரியோர்களின்
அடி - திருவடிகள்
நம் - நமது
தலைக்கு - சிரசுக்கு
அணியே - ஆபரணமேயாகும். எ-று.

கருத்து:

பெருநயமுள்ள வுமையவளுக்குக் கணவரும் பிரமாவுக்குக் கெடுதலை நினைக்கின்றவருங் கிரவுஞ்ச மலையைப் பொடி செய் தக்கினிச் சுவாலையைப் போன்று விளங்கு முருகக் கடவுளின் பிதாவும் விட்டுணுவான பாணஞ் சித்திக்கப் பெற்றவருந் தலைவராய்பட்ட மூர்த்தியில் வசிப்பவருஞ் சந்திரன் விருத்தியடைவதற்குக் காரணமானவரு

மிகழ்ந்த தக்கனைச் சங்காரஞ் செய்தவருமான சிவபெருமானுக் கன்புற்றவடியார்களுடைய திருவடிகளெமது தலைக்குக் கிரீடமுதலிய பணிகளாயிருக்கின்றன வென்பதாம்.

ஞாயம்:

காமசல்லாபத்திற்கு விரோதமான கோலமுங் குணமுமுடையவரைத் திருமேனியிற் பாதிதரும்படி செய்ததாற் பெருநயமுடையாளென்றதும் பிரமகபாலங் கடமத லங்காரத்திற் குபயோக மாகையா லவர்களின் கெடுதலைக் கருதுகின்றவரென்றதுந் தாரகாசுரனாதியரைச் சங்கரித்ததோட நிவிர்த்தியின் பொருட்டுச் சிவாராதனஞ் செய்தாலு மவதரித்த முறையாலு முருகனால் வணங்கப்பெற்ற பிதாவென்றதுஞ் சருவரட்சகனான விட்டுணு பாணமா யமைதலரும் பேறாதலினங் கூறியதும் பரத்துவத்தாற் றலைமை சொற்றது மட்ட மூர்த்திக் கங்கியென்பது தோற்ற வாசத்தலங் களென்றதுஞ் சந்திரனுக்குச் சாபந்தீர்த்தமையாலவன் வளர்ச்சிக்குக் காரண ரென்றதும் பராக்கிரமந் தோற்றத்தக்கச் சங்காரஞ் சொற்றது மெய்யடியார்களின் றிருவடிகளைத் தரித்துக்கொள்வதே பெரும்பேறென்றறிவிப்பானந் தலைக் கணியென்றது மறிக.

இலக்கணம்:

நயடவனென வரவேண்டுவது நயட்டவனென வந்தது வலித்தலே யாயினு மாறாமுருபுத் தொகை யாதலினங்ஙனம் வரலேயழ கென்பாருமுளார். அட்டவனன் என்ற சொற்கெரித்த நிறமுளானென்றே பொருடரு மாயினுந் தன்மைபற்றி நெருப்பு வருவிக்கப்பட்டது. தக்குதலுடையானைக் தக்கனென் றியல்பின் வழியே சொல்லப்பட்டிருக்குது. கண்ணியைக் கணியென்று மண்ணியை யணியென்றுஞ் சொற்றுள்ளனவும் பிறவு மறிக. இகரவீறு பெண்பாற்கேவரு மெனுந்துணிவுறு மிளம்புலவர் பாசுபாணி யாதியிற் றேறா விடினு மூர்த்தி யாதியிற் றேறக் கடவர்.

28. தலையனந் தந்தி கழாதிய கோர சயசித்தனே
தலையனந் தந்தி கழாதிய கோர சயசித்தனே
தலையனந் தந்தி கழாதிய கோர சயசித்தனே
தலையனந் தந்தி கழாதிய கோர சயசித்தனே.

இதன் பொருள்:

தலை - முதன்மையான
அல் - ஆணவ விருளோடுள்ள
நம் - எங்களுடைய
தந்து - யூகமுற்றும்
இகழ் - இகழத்தக்க
ஆதி - குற்றத்தை யுடையனவேயாம்
அகோ - அதிசயமான
ரசை - மாதுரியத்தையுடைய மாயாசத்தியின்
அசித்து - சடத்துவம்
அன - போன்ற
ஏது - காரணங்களால்

அலையல் - அலைத்துவிட வேண்டாம்
நந்து - சங்கத்தை
அந்தி - பொருந்திய விட்டுணுவின்
கழு - கழுவியது போலும் பரிசுத்தமுள்ள
ஆ - வியப்பான
திய - புத்தியினிடத்து வசிக்கிறவரே
கோர - பயங்கரமான வடிவத்தையுடையவரே
சய - பருவத்தில் வசிக்கின்றவரே
சித்த - ஞானவடிவமானவரே
நே - பிரியமுள்ள

த - குபேரனுக்கு
லய - ஐக்கபாவமானவரே
நந்து - விருத்தியடைகின்ற
அந்தி - செக்கர்வானம் போன்றவரே
கழு - சமணர்களையேற்றிய கழுமரங்களுக்கு
ஆது - உரித்துள்ள
இய - ஒலிரூபமான பாடல்களின்
கோரு - வேண்டுகோளான்
அசைய - சொல்லசை பண்ணசைகளிற்
சித்தன் - சித்தமுள்ளவரே
ஏ - பொருந்திய

தலை - சிரங்கள்
அனந்தம் - அனேகம்
திகழ் - பிரகாசிக்கின்ற
ஆதி - சிவபெருமானே
அகோர - உக்கிரமான
சய - வெற்றியுள்ள
சித்தனே - சித்த மூர்த்தியே. எ-று.

கருத்து:

முதன்மையான வாணவ விருளிற் சம்பந்தப்பட்ட மனத்தோடிருக்கு மெங்களை மாயாசத்தியின் சடத்துவ விலாசமான வேதுக்களாற் கெடுத்துவிட வேண்டாம். விட்டுணுவி னிருதயத்தில் வசிக்குந் தன்மையும் பயங்கர கோலமுங் கயிலை மலையு ஞான வடிவுங் குபேரன் சினேகமுந் செக்கர் நிறமுந் திருஞான சம்பந்த மூர்த்தி சமணரைக் கழுவேற்றப் பாடிய பாட்டிசையுட் கலக்குந் திருவுள்ளமு மனேகந் திருமுடிகளும் பெற்ற சிவபெருமானான சித்த மூர்த்தியே யென்பதாம்.

ஞாயம்:

சீவத்துக் காதார மாணவவிருளே யாதலான் முதன்மை யென்றது மங்ஙனமுள்ளபோது மாயாசத்தி கெடுக்கு மாதலி னதனாற் கெடுக்க வேண்டாமென்றது. மஃதும் வாதுலீலை யென்றுறுத்துமாறு போன்றவென்றதுஞ் சருவாந்தரியாமித்து வந்தோற்ற விட்டுணுவி னுள்ளத் திருப்பவரென்றது. மெலும்புமாலை பாம்பாதிய தரித்ததாற் கோரரென்றது மலையுடையானென்றதைக் கயிலை யென வருவித்ததுந் தம்மை விரும்புவோரிடத் துடன்பாடுள்ளமை தோன்றக் குபேரனுறவரென்றது மந்தியில் வருஞ் செக்கரை யஃதென்றே வாய்பாட்டு வழியமைத்தது மடியார் விளையாட லெத்தன்மைத் தாயினுந் திருவுளப் பாங்கே யென்பான் சமணரைக் கழுவேற்றலை வியந்ததும் பிறவுமறிக.

இலக்கணம்:

ஆதுடையதை யாதியென்று கூறப்பட்டது. அதிசய முடையது மாயை யென்றதா லஃதற்ற தருணிலை யெனப் பொருடந்தது. சையவென்ற பதஞ் சயவென மெலித்தது. தலையவென்ற சொல் தலயவெனப் போலியாய் வந்ததுஞ்

சிறப்பு னகரம் பொது நகரமாப் பிறழ்தலுங் குற்றுகர முற்றுகர மங்ஙனமாதலுந் திரிசொற் கவிகட்கியல் பென்பதும் பிறவுந் தலையனந்தமென்றது வீரபத்திர மூர்த்தத்தை விசுவரூபத்தைப் பற்றி நின்றதென்றதுங் காண்க.

29. சித்தருக்குந் தஞ்ச மானான் கல்லாலடித் தேசிகனே
சித்தருக்குந் தஞ்ச மானான் கல்லாலடித் தேசிகனே
சித்தருக்குந் தஞ்ச மானான் கல்லாலடித் தேசிகனே
சித்தருக்குந் தஞ்ச மானான் கல்லாலடித் தேசிகனே.

இதன் பொருள்:

சித்த - ஞானமயமான
ருக்கு - வேதத்தையும்
உந்து - செலுத்துகின்ற
அஞ்சம - அன்ன வாகனத்தையும்
மால - பெருமை பொருந்திய
நான்கு - சதுரமான
அல - மதிளுள்ள வீட்டையும்
ஆலள் - சலனமற்றவளான கலைமகளையும்
தி - புத்தியின்
தேசி - பிரகாசத்தையுமுடைய பிரமாவுக்கும்
கல - மலையினிடத்து
நே - பிரியமும்

சித்து - அசுராமிசமான மாயவித்தைகளை
அருக்கும் - கெடுக்கின்ற
தஞ்சம் - பெருமையும்
ஆனான் - கெடாதவனான முருகனுக்கும்
கல்லால் - கற்களால்
அடித்து - மோதி
ஏசு - வைத
இகன - இகலோகவாசியான சாக்கிய நாயனாருக்கும்
ஏ - பாணமான விட்டுணுவுக்கும்

சி - அக்கினி தேவனுக்கும்
தரு - கற்பகத் தருவையுடைய

கும் - இருள்போன்ற விந்திரனுக்கும்
தம் - மனைவியான
சம - அழகிய
மான் - மான்போன்ற வுமையவளுக்கும்
ஆன - இடப வடிவான நந்திதேவருக்கும்
கல் - கல்லென்று
ஆல - தொனிக்கின்ற
அடி - நாத தத்துவத்தை மூலமாயுள்ள
தே - எத்தெய்வங்களுக்கும்
சிகன - தலைப்பூண் போல்வானும்
ஏ - பொருத்தமுள்ள

சித்தருக்கும் - சித்த கோடிகளுக்கும்
தஞ்சம் - துணை
ஆனான் - ஆகின்றவனும்
கல்லால - கல்லால விருட்சத்தின்
அடி - அடியில் வாசஞ்செய்கின்ற
தேசிகனே - பரமாசாரியனான சிவபெருமானே. எ-று.

கருத்து:

பிரமாவுக்கு முருகக் கடவுளுக்குஞ் சாக்கிய நாயனாருக்கும் விட்டுணுவுக்கு மக்கினிக்கு மிந்திரனுக்கு முமையவளுக்கு நந்திக்கு நாத தத்துவோறப்பவரான மற்றெந்த தெய்வங்களுக்கும் சிகாமணி யாவாரு மகா சித்தர்களுக்குஞ் சகாயமானவருங் கல்லாலடியிற் றெட்சணா மூர்த்தமா யெழுந்தருளிய சிவபெருமானே யென்பதாம்.

ஞாயம்:

வேத முண்டாதற்குக் காரண ரென்பான் பிரமாவையும் பருவத வாசத்திலுங் குருத்துவத்திலுஞ் சிறந்தோரென்பான் முருகனையுந் திருட்டன்புடை யாரையுங் காப்பாரென்பான் சாக்கியரையு மிரட்சிப்பு குரூரம். அரசாட்சி. தரும்சிந்தை. கணத்தலைமை யிவற்றினுஞ் சிறந்தோரென்பான் விட்டுணு வக்கினியாதியரையுஞ் சொல்லி யெத்தெய்வங்களையுஞ் சொன்னபின் சித்தர்களைத் தனியாக வேறுபடுத்திச் சொன்னதற்குக் காரண மவரொருவரைத் தவிர மற்றியாவருஞ் சித்தர்களே பரத்துவத்திற்குரிய பரமாசாரியாவரே யென நன்கு

விளங்கற்பொருட்டெனக் கொள்க. பிரமாவின் வீடு சதுரமென்பதுஞ் சலனமற்றவள் சரசுவதியே யென்பதும் பிறவு மான்றோரரட்சியேயாம்.

இலக்கணம்:

முற்கூறிய பண்புப் பகுதிகளைத் துணைக் கொண்டு பிரமாதியரை வருவித்தமை காண்க. முற் செய்யுள்களில் வந்த விதிபற்றிய சில பிரயோகங்கள் வந்துள்ள வாறும் மறிக. தே என்ற வொருமையை யிடத்தாற் பன்மையாகக் கொண்டிருக்கின்றது. சிகை யுடையதைச்சி கியென்றபடி யஃதுடையானைச் சிகனென்றாம். இங்ஙனம் பகருந்துணி வெல்லாங் கொம்பிற் புற்கொண்டுபோய் மேயும் பசுப் போல்வார்க் கினியா தென்பது மறிவாம்.

30. சிகர முன்னாமைந் தெழுத்தே யரியதிரு நமக்கே
சிகர முன்னாமைந் தெழுத்தே யரியதிரு நமக்கே
சிகர முன்னாமைந் தெழுத்தே யரியதிரு நமக்கே
சிகர முன்னாமைந் தெழுத்தே யரியதிரு நமக்கே.

இதன் பொருள்:

சிகர - சிகைச்சிறப்பினரான பிரமாக்களின்
அம் - அலங்காரத்தை
உன்னாம் - நினைக்கமாட்டோம்
மைந்து - பலம் பொருந்திய
எழு - தண்டத்தையேந்திய
தே - தேவனான வியமனுடைய
அரி - பகைத்தன்மையான
அதிரும் - பயமும்
ந - இல்லை
மக்கு - இற்றுப் போம்படி செய்யும்

ஏசி - குற்றத்தன்மையதான
காம - விடத்திலும்
உந்நா - இருநாவான வசத்தியத்திலும்
மைந்து - மயக்கம்
எழு - விருத்தியடையத்தக்க

உத்தேயா - உத்தேசத்தோர்களின்
இய - புகழிலும்
திரு - மேன்மையிலும்
உனம் - பிரவேசிக்கமாட்டோம்
அக்கே - உருத்திராக்கமே

சிகரம் - தலைக்கணிகலம்
முன் - மேலானபொருள்
ஆ - பசுவே
மைந்து - கருநிறம் பொருந்தியதாகிய
எழு - சத்தமேகங்களோடுள்ள
உ - பின்னடைவதான
தேயா - சுவர்க்க நாட்டினரான தேவர்களின்
இய - வார்த்தைகளுக்கும்
திரு - எவ்வகைப்பட்ட தெய்வங்களுக்கும்
நமக்கு - யாவர் செய்யும் வணக்கத்துக்கும்
ஏ - பொருத்த முள்ளவரான சிவபெருமானது

சிகரம் - சிகர வெழுத்து
முன் - முதனிறு
ஆம் - உள்ளதாகிய
ஐந்தெழுத்தே - பஞ்சாட்சரமே
அரிய - அருமையான
திரு - செல்வமாகும்
நமக்கு - எங்களுக்கு. எ-று.
ஏ - ஈற்றசை.

கருத்து:

யாங்கள் பிரமபதத்தை நினைக்கவே மாட்டோ மெமவாதனை யுண்டென் றொப்பவு மாட்டோம் கெடுதலைச் செய்யும் விடம்போன்ற குற்றங்களிலும் சத்தியத்திலு மயக்கத்தை விருத்தி செய்கிற வநாசாரி யர்களின் கீர்த்தியிலு மேன்மையிலும் பிரவேசிக்கவு மாட்டோம். எங்களுக்கு ருத்திராக்கமே கிரீடம். பசுக்களே மேலான பொருள். பிராணிகள் பிற காலத்திலடையத் தக்கதாயுஞ் சத்தமேக சஞ்சாரமுள்ள தாயு மிருக்கிற சுவர்க்க தேசத்தாரான தேவர்களின் றோத்திரத்துக்கு மெங்குள்ள தெய்வீகங்களுக்கு மியாவர் செய்யும் வணக்கத்துக்கு மிலட்சயப் பொருளான

சிவபெருமானுடைய முத்தி பஞ்சாட்சரமே யருமையான செல்வமாகு மென்பதாம்.

ஞாயம்:

பிறக்கு மிச்சையின்மையாற் பிரமபதத்தை நினையோமென்று மரணமும் பஞ்ச கிருத்தியத்தி லொன்றாதலி னெம வாதையில்லை யென்று மனப்பூருவமாய் யுத்தங்களிற் பிவேசிக்கச் சம்மதமின்மையான் மாட்டோமென்று முருத்திராக்கத்தினுஞ் சிறந்த பணியின்மையாற் கிரீடமென்றுங் யென்றுங் கிரிய மார்க்கத்திற்குரிய பஞ்சகௌவியங்களுக்கும் பத்தி மார்க்கத்திற்குரிய விபூதிக்கும் பசுவே யாதாரமாதலி னதுவே மேலான பொருளென்றுஞ் சத்தகோடி மகா மந்திரங்களி லங்ஙனமுள்ள முத்திபஞ்சாட்சரமே சிறந்ததென்பா னமக்கருமையான செல்வமென்றுஞ் சொன்னவாறு காண்க.

இலக்கணம்:

மக்குதலைச் செய்யுமே சென்றற்கு மக்கே சென்றது. பிறவினை தன்வினையா வந்தவமைதி. உந்நா வென்ற சொல்லிலுள்ளவு கரமெண் வடிவாக கொள்ளப்பட்டதிஃதே யொன்று மற்றொன்றாதலினாகு பெயரென்பாருளார். இருநாவென்றலுலக வழக்கப்படிய சத்தியச் சொல்லெனப் பொருடந்தது. எழுவென்ற பதமிரண்டும் மூன்றாமடிகளினும் பிறவு கரம்பெற்று நின்றது. மேகத்திற்கு மைந்தெனச் சொன்னது மைத்தென்ற பதத்தின் மெலித்தல் விகார மங்ஙனமாயி னம் பதங்கருமை பெற்றமையே விளக்கு மன்றோ வெனிற் பின்வருந் தொகையான மேகமெனக் குறிக்கப்பட்டது. தோத்திர முதலியவற்றின் பொருத்தமென்ற சொல்லோடு சிவபெருமானென்றற்குக் காரண முன்பின் வரும் பொருணோக்கத்தானுமாம்.

நூற்பயன்

உரகா பரணனொரு தாளந் தாதியு யிரன்னதே
உரகா பரணனொரு தாளந் தாதியு யிரன்னதே
உரகா பரணனொரு தாளந் தாதியு யிரன்னதே
உரகா பரணனொரு தாளந் தாதியு யிரன்னதே.

இதன் பொருள்:

உர - திருவுள்ளத்தில்
கா - கற்பகத் தருவை
பரணன் - தாங்குகின்றவன்
ஒரு - சமானமற்ற
தாளம் - தாளங்களின்
தாதி - தாதுக்களையுடையவன்
உய - ஈடேற்றமுற்ற
இரு - கங்கை பார்வதி யெண்ணுமிரண்டு
அன்ன - அன்னம்போன்ற பெண்களையுடைய
தே - கடவுள்

உரு - வடிவமாகிய சகளத்துவத்தையும்
அ - அதனேனையான நிட்கள சொருபத்தையும்
கா - வெறுக்காது பாதுகாக்கின்ற
பரு - பெருத்த
அணன் - நடுநிலையுடையன்
ஒரு - செம்மறியாட்டு கடாவில்
தாள - ஏறும் பொருத்தமுற்ற
அந்த - அழகியனான முருகக் கடவுளின்
ஆ - வியப்பான
தி - புத்தியை
உய - செலுத்துகின்ற
இரன் - பெருமையோன்
அதே - இரக்கமில்லாத

உரக - சமணர்களினத்தை
அபரணன் - தாங்காதவன்
ஒரு - நீக்கப்பட்ட
தாளம் - முயற்சியைக்கொண்ட வெமது
தா - வலிதான
தியு - மோட்சத்தை
உய - உண்டுபண்ணுகின்றவனான்
இரன் - பிச்சைக்காரன்
அத - கீழுலகில்
ஏ - பொருந்திய

உரக - சற்பங்களை
ஆபரணன் - ஆபரணங்களாகத் தரிக்கின்றவ னப்படிப்பட்ட சிவபெருமானுக்குரிய
ஒருதாளந்தாதி - ஏகபாதத்தந்தாதி
உயிர் - ஆன்மாவை
அன்னதே - போன்றதே.

கருத்து:

திருவுள்ளத்திற் கற்பகத்தருவைத் தாங்குகின்றவருங் கங்கை பார்வதி யென்னு மிரண்டு மனைவியரை யுடைய கடவுளுஞ் சகள நிட்கள மென்னு மிருவித வடிவுங் கொண்டவருந் தகரவாகனத்திலேறு மழகிய முருகக் கடவுளி னிருதயத்தைச் செலுத்துகின்றவரு மிரங்காத சமணர்களை வெறுத்துவிட்டவருஞ் சிறிது முயற்சியில்லாத வெங்களுக்கு மோட்சத்தை யுண்டாகச் செய்கின்றவரும் பிட்சாடனமூர்த்தங் கொண்டவரும் பாதாளத்துள்ள பாம்புகளை யாபரணமாகத் தரிப்பவருமான சிவபெருமானுக்குச் சூட்டிய வேகபாதத்தந்தாதிக் கிணை யான்மா வேயல்லது வேறில்லை யென்பதாம்.

ஞாயம்:

கற்பகத் தருவாலுங் கொடுக்கக் கூடாத வரப்பிரசாதங்கள் வேண்டுநர்க்குத் தருதலாலதனைத் தாங்குகின்றவரென்றுங் கங்கை பார்வதி முதலினருந் தவத்தாற் சிறந்தோரே யென்பது தோன்ற வீடேற்ற முற்றோ ரென்று மெந்நாளுஞ் சிலருக் குருவாயுஞ் சிலருக் கருவாயும் விளங்குகின்ற தாலிரண்டு முள்ளா ரென்றுந் தனக்குரிய குருத்துவமே தொழிலாக கொள்ளல் பற்றி முருகக்கடவுளின் புத்தியைச் செலுத்து கின்றவரென்று மனேகந்தவசிகள் சித்தமடாலயத்தி னெருப்பிட்டதாற் கொல்லா விரதிய ரென்னும் பிரசித்தமுள்ள சமணரை யிரக்கமில்லாதவ ரென்றுஞ் சுதந்தரமுற்றுள்ளவாறு தோற்ற முயற்சியற்ற வெமக்கு மோட்சமுண்டு பண்ணுகின்றவரென்று மிந்நூலரும் பொருளுடைய தாயினு மங்கிகரிப்பா ரென்பது தோற்றச் சற்பா பரணரென்று மிந்நூலுயர்ச்சி தோற்றச் சமானமற்ற வான்மாவே போலுமென்றுஞ் சொன்னவாறுணர்க.

இலக்கணம்:

உரு - பரு - இரு - வென்னும் பதங்களிலுள்ள முற்றுகரங்களைக் குற்றுகரமாகப் பிரயோகித்த திடத்தாற் றகுமென்றுணர்வார் சிலரேயாவார். இரவென்னுந் தொழிலாளனை யிரனென்று சொன்னதியல்பென்றுணர்வாரு மங்ஙனமேயாம். தாளத்தாதியென வரவேண்டுவது தாளந்தாதி யென வந்ததுந் தேயென்னுங் கருணைப் பெயரின் முன்னகரம் புணர்ந்தேனைப் பொருடந்ததும் பாணமென்னுந் தாங்குதற் பெயரு மங்ஙன மாயது தவே யென்றல் தேயென வந்ததும் பிறவு மறிக.

முற்றிற்று

25. நெல்லை யமகவந்தாதி

[பாடல் முதல் சீர் – பக்க எண்]

26. நெல்லையிதழகலந்தாதி

(பாடல் முதல் சீர் – பக்க எண்)

27. தில்லை வெண்பாவந்தாதி

[பாடல் முதல் சீர் – பக்க எண்]

28. தில்லைக் கட்டளைக் கலித்துறையந்தாதி

[பாடல் முதல் சீர் – பக்க எண்]

29. தில்லைப் பதிற்றுப்பத்தந்தாதி

[பாடல் முதல் சீர் – பக்க எண்]

30. தில்லையிதழகலந்தாதி

(பாடல் முதல் சீர் – பக்க எண்)

31. திருச்சிரகிரித் திரிவந்தாதி

(பாடல் முதல் சீர் – பக்க எண்)

32. திருவாமாத்தூர் திரிவந்தாதி

(பாடல் முதல் சீர் – பக்க எண்)

33. திருவாமாத்தூர் யமகவந்தாதி

(பாடல் முதல் சீர் – பக்க எண்)

34. திருவானைக்கா வியமகவந்தாதி

[பாடல் முதல் சீர் – பக்க எண்]

35. திருவருணைப் பதிற்றுப்பத்தந்தாதி

(பாடல் முதல் சீர் – பக்க எண்)

36. வில்லிப்பாக்கம் பதிற்றுப்பத்தந்தாதி

[பாடல் முதல் சீர் – பக்க எண்]

37. ஏகபாதத் தந்தாதி

[பாடல் முதல் சீர் – பக்க எண்]

முன் அட்டை தொடர்ச்சி -

இராமலிங்க சுவாமிகள், ஆறுமுக நாவலர், சபாபதி முதலியார், மாம்பழச் சிங்கக் கவிராயர் முதலான சமகாலத்துப் புலமையாளர்களுடன் நல்லுறவைப் பேணியுள்ளார். கொலை மறுத்தல், புலால் மறுத்தல், சமயங்களுக்கு இடையே சமரசம் பேணுதல் ஆகிய கொள்கைகளைக் கடைப்பிடித்து வாழ்ந்தவர். ஆங்கில ஆட்சிக்கு எதிராக ஆங்கிலியர் அந்தாதி பாடியுள்ளார். பெண்ணுரிமைக்காகச் சிந்தித்ததுடன் தன் மனைவி சுந்தரத்தம்மையாரை நூல் இயற்றத் தூண்டியுள்ளார். அவர் எழுதிய நூல் பெண் மாட்சி.

சுவாமிகள் எழுதிய ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட பாடல்களில் பாதியைத் தாமே அழித்து விட்டதாகக் கூறுகிறார். இன்று சுமார், 48,000 பாடல்கள் கிடைக்கின்றன. இவர் உருவாக்கிய திருவாமாத்தூர் கௌமார மடாலயத்திலும் இவரது மாணவர் உருவாக்கிய கோவை கௌமார மடாலயத்திலும் இவர் எழுதிய சுவடிகள் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

திருவாமாத்தூரில் தங்கி எல்லை தாண்டா விரதத்தை மேற்கொண்ட சுவாமிகள் 05.07.1898 இல் இவ்வுலக வாழ்வை நீத்து செந்தமிழ் முருகப் பெருமான் திருவடி அடைந்தார். இவரது மகன் வழிப் பெயரனார் தற்பொழுது திருவாமாத்தூரில் வசித்து வருகிறார்.

வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகளின் அனைத்துப் படைப்புகளையும் திருத்தமான பாடத்துடன் கூடிய ஆய்வுப் பதிப்பாகக் கொண்டு வரும் திட்டம், கடந்த 2019ம் ஆண்டு தொடங்கப்பட்டது. அதன் முதல்கட்டமாக, சென்னை தரமணியில் இயங்கி வரும் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனமும், கோவை சிரவணபுரம் கௌமார மடாலயமும் இணைந்து, முதல் இரண்டு தொகுதிகளை வெளியிட்டன.

இப்போது, 2023ம் ஆண்டில், இத்திட்டத்தின் 2ம் கட்டமாக, தாமரை பிரதர்ஸ் மீடியா பிரைவேட் லிமிடெட் நிறுவனம் வாயிலாக, அடுத்தடுத்து நூல்கள் வெளிவருகின்றன. தொகுதி 3ல் 5 கோவை நூல்கள் வெளியிடப்பட்டன. தொகுதி 4ல் அந்தாதி நூல்கள் ஐந்து பகுதிகளாக வெளிவருகின்றன.

தொகுதி - 4 அந்தாதி

பகுதி - 1 - முருகன்

1. சென்னை வெண்பாவந்தாதி
2. சென்னைக் கந்தனந்தாதி
3. சென்னைத் திரிவந்தாதி
4. சென்னைப் பதிற்றுப்பத்தந்தாதி
5. பழனி வெண்பாவந்தாதி
6. பழனி யமகவந்தாதி
7. பழனிப் பதிற்றுப்பத்தந்தாதி
8. பழனி நடுவொலியலந்தாதி
9. புதுவைக் குமரனந்தாதி
10. தேவைத் திரிவந்தாதி
11. செம்பொனந்தாதி
12. பாறைக்கிணற்றந்தாதி

பகுதி - 2 - முருகன்

13. திருச்செந்தூர் வெண்பாவந்தாதி
14. திருச்செந்தூர் யமகவந்தாதி
15. திருச்செந்தூர் திரிவந்தாதி
16. திருச்செந்தூர் பதிற்றுப்பத்தந்தாதி
17. திருவேரகம் வெண்பாவந்தாதி
18. முருகன் வெண்பாவந்தாதி
19. நிரோட்டத்தலை செய்யுளந்தாதி
20. குகன் நிரோட்டத்தொருதொடைச் செய்யுளந்தாதி
21. கலிவிடந்தாதி
22. குருநாதனந்தாதி
23. ஏகத்தாள் இதழகலந்தாதி (உரையுடன்)
24. தலையணிச் சீர் இதழகலந்தாதி

பகுதி - 3 - சிவபெருமான்

25. நெல்லை யமகவந்தாதி
26. நெல்லை இதழகலந்தாதி
27. தில்லை வெண்பாவந்தாதி
28. தில்லைப் பதிற்றுப்பத்தந்தாதி
29. தில்லை இதழகலந்தாதி
30. தில்லைக் கட்டளைக் கலித்துறையந்தாதி
31. திருச்சிரகிரித் திரிவந்தாதி
32. திருவாமாத்தூர் திரிவந்தாதி
33. திருவாமாத்தூர் யமகவந்தாதி
34. திருவானைக்காவியமகவந்தாதி
35. திருவருணைப் பதிற்றுப்பத்தந்தாதி
36. வில்லிப்பாக்கம் பதிற்றுப்பத்தந்தாதி
37. சிவனேகபாதத்தந்தாதி (உரையுடன்)

பகுதி - 4 - திருமால்

38. திருவரங்க வெண்பாவந்தாதி
39. திருவரங்கப் பதிற்றுப்பத்தந்தாதி
40. திருவரங்கத்து இதழகலந்தாதி
41. திருவரங்கக் கட்டளைக்கலித்துறையந்தாதி
42. அனந்த சயனத்தந்தாதி
43. அரியேகபாதத்தந்தாதி (உரையுடன்)
44. சைவ வைணவ பெருமானந்தாதி
45. திருமாலந்தாதி
46. பெருமாளந்தாதி
47. திருமகளந்தாதி
48. சடகோபர் சதகத்தந்தாதி

பகுதி - 5 - பொது / பிற

49. ஆங்கிலியரந்தாதி
50. எழுகூற்றந்தாதி
51. ஒலியலந்தாதி
52. கங்கையந்தாதி
53. சந்தக் கலித்துறையந்தாதி
54. சித்தரந்தாதி
55. ஞானவந்தாதி
56. பதிற்றுப்பத்தந்தாதி (தெய்வத் திருவாயிரம்)
57. பேரொலியலந்தாதி

₹ 460

ISBN: 978-93-926918-0-4

தாமரை பிரதர்ஸ் மீடியா
பிரைவேட் லிமிடெட்

www.vaasagarvattam.in